(ரு

முக்கிய அ

பதகம்

நல்ல நட

துடன் ஊறுபா

வழங்கப்படும் த

ஏற்படும்.

னக் கடு

பொறுப்பா

ற்க நிர்ப்பந்த



# ஆஷா

## ரஜனி

141
3623

வெளியீடு
வீரகேசரி
த. பெட்டி 160,
கொழும்பு.

# AASHA

by

K. V. S. VAS M. A.
(RAJANI)

***FIRST EDITION***

DECEMBER 1972.

***COPY RIGHTS***

RESERVED
WITH THE PUBLISHERS

PRICE Rs. 3/90

Published by:

VIRAKESARI
P. O. Box 160, COLOMBO.

Sole Distributors:

EXPRESS NEWSPAPERS (CEYLON) LTD.
185, GRANDPASS ROAD.
COLOMBO-14.

# ஆசிரியர் முன்னுரை

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ராகு நீங்கலாக மற்ற எட்டுக் கிரகங்களும் மகரத்தில் கூடிய பொழுது அதன் விளைவாக உலகில் பல விபரீதப் பலன்கள் ஏற்படலா மெனச் சோதிடர்கள் கருதினர். அவர்களுடைய கூற்று எந்த அளவிற்கு உண்மையாயிருக்கலாம் என்பதைக் குறித் துச் சரித்திரச் சான்றுகளைத் தேடிய பொழுது ஆஜாத் சத்ருவின் காலத்திலே வட பாரதத்தில் ஏற்பட்ட கொந் தளிப்புகள் என் நினைவுக்கு வந்தன.

கிறிஸ்துவுக்கு முந்திய இந்திய சரித்திரத்தில் ஆஜாத் சத்ருவின் காலம் ஒரு அதிமுக்கியமான கட்டத்தைக் குறிப் பதாகும். பாரத வரலாற்றில் புராண இதிகாச காலம் முடிந்து சரித்திரகாலமென்பது ஆஜாத்சத்ருவிடமிருந்து தான் ஆரம்பமாவதாகச் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். பகவான் கௌதம புத்தரும், மகா வீரரும் வாழ்ந்த பொற்காலம் இந்தக் காலம். ஆயிரமாயிரமாண்டு களாக வாய்மொழி வாயிலாக வந்த பல இலக்கியங்களும் வரலாறுகளும், சமயக் கோட்பாடுகளும் எழுத்து வடிவிலே சிரஞ்சீவியத்துவம் பெறத் தொடங்கிய காலமும் இந்தக் காலம் தான்.

சரித்திர, இலக்கியங்களில் மட்டுமல்ல. சமய, சமு தாய கலாசார வாழ்விலும் பாரதூரமான கொந்தளிப்பு களையும், மாற்றங்களையும் விளைவித்த காலம் இந்தக் காலம். இந்து சமயம் குருமார்களின் பிடியில் சிக்கித் தவிப்பதாகச் சொல்லி அதைச் சீர்திருத்தப் புறப்பட்டு புதிய சமயக் கோட்பாடுகளையே வகுத்தனர் பகவான் புத்தரும், மகா வீரரும். பழையனவற்றை வெறுத்து ஒதுக்கி புதியனவற்றைப் புகுத்த இளைஞர் சமுதாயம் இன்று உல கெங்கிலும் புரட்சி நடத்துவதைப் போலவே அன்றும் வட பாரதத்தின் தலைவிதியைத் தீர்மானிக்க இளைஞர் குழாம் பெரு முழக்கத்தோடு எழும்பியது. இந்த எழுச்சி அரசிய லிலும் இன்று போல அன்றும் பல எழுச்சிகளுக்கு வித்திட்

டன. ஓரளவு வெற்றியும் பெற்றன. இதன் விளைவாகப் பல சிறுசிறு ராஜ்யங்களாகச் சிதறியிருந்த வட பாரதம் மகதத்தின் தலைமையிலே சக்தி மிக்கதொரு மிகப் பெரிய சாம்ராஜ்யமாகத் தலையெடுத்தது. அந்த சாம்ராஜ்யத்திற்கு வித்திட்டவன் ஆஜாத்சத்ருவும், அவன் தகப்பன் பிம்பிசாரனுமாகும். இவர்களுடைய வீர வரலாற்றை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதுதான் இந்தச் சரித்திர நவீனம்.

சரித்திரக் கதைக்குச் சுவையூட்ட சில கற்பனைப் பாத்திரங்களும் இடையிடையே வலம் வருகிறார்கள். சரித்திரப் பாத்திரங்களோடு இணைந்து நடிக்கிறார்கள். அதே சமயம் சரித்திரத்தின் போக்கை அவர்கள் மாற்றவில்லை. சரித்திர உண்மைகளுக்கு மாசு கற்பிக்கவில்லை. சரளமான, சுவாரஸ்யமான கதை நுட்பத்துக்கு எந்தமட்டும் அவசியமோ அந்த மட்டோடு நின்றுவிடுகிறது அவர்களுடைய நடிப்பு.

ஆஷா ஒரு புதுமையான, துடிப்புமிக்க பாத்திரம். அரசுக்குரிய வீரம், அந்த வீரத்திலே விளைந்த ஆணவம், வட பாரதம் முழுவதையும் ஆக்கிரமித்து ஆளவேண்டுமென்ற பேராசை. அவளுடைய மயக்கும் விழிகளிலே உருண்ட தலைகள் பல. அவளது அரசியல் சூதாட்ட சதுரங்கம் எதற்கும் அஞ்சாத மாவீரன் ஆஜாத்சத்ருவையே கலங்கச் செய்ததென்றால் இக்கதையின் உயிரோட்டத்தில் ஆஷா வகிக்கும் அதிமுக்கியமான பாகத்தை வாசக நேயர்கள் ஒருவாறு ஊகிக்கலாம். அவளைச் சுற்றிச் சுழன்று பின்னிப் பிணைந்துகொண்டு கதை வளருவதினால்தான் ''ஏங்குதே என் நெஞ்சம்'' என்ற தலைப்புடன் வீரகேசரியில் தொடர் நவீனமாக வெளிவந்த இக்கதைக்கு ''ஆஷா'' என்ற தலைப்புக் கொடுத்து நூல் வடிவிலே வாசக நேயர்கள் படித்துச் சுவைக்கத் தருகிறோம்.

ரஜனி

கொழும்பு.
20-11-1972

# பதிப்புரை

புத்தக வெளியீட்டுத் துறையில் காலடி வைத்த ஓராண்டு காலத்திலே, ஒன்பது நூல்களை அடுத்தடுத்து வெளியிட்டுவிட்டதில் நாம் பெருமை கொள்ளவில்லை. வெளியிட்ட ஒவ்வொரு புத்தகமும், நாலாயிரம், ஐயாயிரம் பிரதிகள் வரை ஒரிரு மாதங்களுக்குள் துரிதமாக விற்பனையாகிவிட்டதே என்பதிலும் நாம் பெருமை கொள்ளவில்லை. ஆரம்பத்திலே எம்மை இகழ்ந்தவர்களும், ஒதுக்கியவர்களும் இன்று மனம் மாறி எமது சாதனையை ஏற்றுக்கொண்டு புகழத் தலைப்பட்டுவிட்டார்களே என்பதும் எமக்கு எவ்விதப் பெருமையையும் அளிக்கவில்லை!

அவ்வாறாயின் எமக்கு எதில்தான் பெருமையுண்டு?

இந்நாட்டுத் தமிழ் வாசகர்களின், பண்பட்ட ரசனையிலே, எதையும் குணம் நாடிக்கொள்ளும் உயர் நோக்கத்திலே, ஓராண்டுக்கு முன்னால் நம்பிக்கை வைத்தோமே, அந்த நம்பிக்கை வீண் போகவில்லை! அது விளைந்து, பொலிந்து, இந்நாட்டின் பல்வேறு பிரசுர கர்த்தாக்களுக்கும் கூட நம்பிக்கை ஒளியை ஏற்றிவைத்துள்ளதைக் கண்டுதான், பெருமைப்படுகின்றோம், பொங்கிப் பூரிக்கின்றோம்.

இதுவரை, மூன்று சமூக நாவல்கள், இரு துப்பறியும் நவீனங்கள், இரு சிறுகதைத் தொகுதிகள், ஒரு வரலாற்று நாடகப் பிரதி, ஒரு சரித்திர நவீனம் என ஒன்பது வீரகேசரி பிரசுரங்களை வெளியிட்டுள்ளோம்.

ஒவ்வொரு வீரகேசரிப் பிரசுரமும், 'கடைந்தெடுத்த முத்து' என வாசகர்கள் புகழ்ந்துள்ளார்கள்.

"9" சகல ஐசுவரியங்களையும் குறிக்கும் மங்களகரமான எண் என்பர். எழுத்தையே மூச்சாகக் கொண்ட ஒரு பண்பட்ட எழுத்தாளரின் சிறந்த சரித்திர நவீனமொன்று எமது '9'வது வெளியீடாக அமைந்துள்ளது மிகவும் பொருத்தமானதே!

—வெளியீட்டாளர்.

## முக்கிய கதாபாத்திரங்கள்

1. பிம்பிசாரன்:
   மகதப் பேரரசன். கௌதம புத்தர் காலத்தில் ராஜகிருகத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவன்.
2. அஜாத்சத்ரு:
   மகதத்தின் பட்டத்திளவரசன், பட்டமகிஷி கோசலா தேவியின் புதல்வன்.
3. ஜனகன்:
   மன்னர் பிம்பிசாரனின் இரண்டாவது மனைவி வசுமதிதேவியாரின் புதல்வன்.
4. உக்கிரசேனர்:
   மகதத்தின் பிரதம தளபதி. ஆஜாத்சத்ருவின் தாய் மாமன்.
5. பிரம்மதத்தன்:
   உக்கிரசேனர் மகன்.
6. மஞ்சு:
   உக்கிரசேனர் மகள்.
7. அனுருத்தன்:
   அங்கத்தின் சேனாதிபதி.
8. மலயத்வஜன்:
   மங்களகிரியின் சிற்றரசன்.
9. ஆஷா:
   மலயத்வஜனின் ராணி.
10. சர்வார்த்தர்:
    மலயத்வஜனின் மந்திரி.
11. விஜயகேசரி:
    மங்களகிரியிலுள்ள மகத ராஜப் பிரதிநிதி.
12. பிரசன்னஜித்:
    கோசல மன்னன்.
13. விதூர்த்தன்:
    கோசல பட்டத்திளவரசன்.
14. துன்முகி:
    எல்லைக் காவற்படைத் தலைவன்.




சக்கரவர்த்தி பிம்பிசாரன் காலத்திய
வட பாரதம்.

# வீரகேசரி வெளியீடுகள்

| | | ரூபா | சதம் |
|---|---|---|---|
| கணையாழி | (ரஜனி) | 1 — | 90 |
| பூஜைக்கு வந்த மலர் | (ந. பாலேஸ்வரி) | 2 — | 25 |
| கதைக் கனிகள் | (சிறுகதைத் தொகுதி) | 2 — | 00 |
| யுகசந்தி | (மணிவாணன்) | 2 — | 25 |
| மைதிலி | (ரஜனி) | 2 — | 90 |
| பண்டார வன்னியன் | (முல்லைமணி) | 1 — | 60 |
| தீக்குள்விரலைவைத்தால் | (கே.எஸ்.ஆனந்தன்) | 2 — | 25 |
| ஆஷா | (ரஜனி) | 3 — | 90 |
| தூரத்துப்பச்சை | (கோகிலம் சுப்பையா) | (அச்சில்) | |
| மலைக்கன்னி | — | ,, | |
| உதயகன்னி | — | ,, | |
| சொர்க்கம் எங்கே? | — | ,, | |

● வீரகேசரி வெளியீடுகளை உள்ளூர் ஏஜண்டுகள் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

வீரகேசரி விநியோக இலாகா,
த. பெ. 160,
கொழும்பு.

அத்தியாயம் — 1

# மாவீரனுக்கு மான்விழியாள் விடுத்த சவால்!

நடு மத்தியான வேளை. சித்திரை மாத உச்சி வெய்யில் அகோரமாகக் காய்ந்து கொண்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ஒரு சிறு செடி கொடி கூடத் தென்படவில்லை. பார்த்தவிடமெல்லாம் சுட்டுப் பொசுக்கும் மணல்! கதிரவனின் அகோரமான கிரணங்களிலே பளபளவென்று ரகாசிக்கும் வெள்ளை மணல்! அந்த மணற்காடு முடிவே இல்லாததைப் போல நீண்டு வியாபித்திருந்தது.

இன்பமும், துன்பமும் மாறி வரும் தன்மையுடையவை என்பார்கள். அதற்கு ஒரு உதாரணமாக விளங்கியது அந்தப் பாலைவனப் பிரதேசம். ஆறு மணி நேரத்துக்குப் பிறகு உதிக்க வேண்டிய சித்திரா பௌர்ணமி நிலவின் ஒளியைப் பூரணமாக அனுபவிக்க, உச்சி வெயிலில் காய்ந்து கருகிக் கொண்டிருந்தாள் நிலமங்கை!

அதோ, அதோ, மின்னல் வெட்டுகிறதே! உச்சி வேளையில் மின்னலா? வானத்தில் மேகக் கூட்டத்தின் சாயல்கூட

இல்லாத சமயத்தில் மின்னலா? இதென்ன புதுமை? ஒன்றல்ல, இரண்டல்ல. பூமியின் ஒரு கோடியிலே பளீர், பளீர் என்று ஏக காலத்தில் பல மின்னல்கள் அல்லவா வெட்டுகின்றன? இந்த மின்னலுக்கிடையிலே தூசு பறக்கிறது! பிரம்மாண்டமான புழுதிப் படலம் வேறு கிளம்புகிறது. இது இயற்கை விநோதமா? அல்லது செயற்கை அற்புதமா? சில நிமிட நேரமாயிற்று உண்மை விளங்க!

அந்த அகண்ட பாலைவனத்தின் ஒரு மூலையிலே, பூமியின் மறுபுறத்திலிருந்து முளைத்து வருவதைப் போல ஒரு குதிரைப் படை சீறிப் பாய்ந்து கொண்டு வந்தது. அந்தப் படைக்குச் சுமார் அரை மைல் தூரத்துக்கு முன்னால் தன்னந் தனிமையாக ஒருவன் உருவிய வாளுடன் பாய்ந்து வந்து கொண்டிருந்தான். அவன், கண்ணிமைப் பொழுதிலே பாலைவனத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடியில் சென்று மறைந்துவிட்டான். அவனையடுத்து இருவர் சற்று மெதுவாக வந்தார்கள். இவ்விருவருக்கும் பின்னால் வந்தது குதிரைப் பட்டாளம். கண்ணைப் பறிக்கும் கோர வெய்யில் அவர்சளது வாள்களிலே பிரதிபலித்து பளீர் பளீரென்று மின்வெட்டு ஒளியைக் கிளப்பிக் கொண்டிருந்தது.

முன்னால் சென்று மறைந்தவனுக்கும் பின்னால் வந்த படைக்குமிடையில் சென்ற இருவரில் ஒருவன் இளைஞன். வயது சுமார் இருபத்தைந்துக்கு மேலிருக்காது. கட்டுமஸ்தான உடல். புழுதி படிந்திருப்பினும் கவர்ச்சியான தோற்றம். வீரக் களை சொட்டும் வதனம். மிடுக்கான பார்வை. அவனது உடையலங்காரமும், அவன் ஏறிவந்த உயர்ந்த ஜாதி அரபு நாட்டுக் குதிரையும் அவன் உயர் குலத்தைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டுமென்பதைச் சொல்லாமற் சொல்லிக் காட்டுவதாயிருந்தன. அவன் பக்கத்தில் சென்றவர் நடுத்தர வயதைத் தாண்டிவிட்டவர். ஆயினும் பக்கத்திலே வரும் இளைஞனைவிட எந்த வகையிலும் சளைத்தவ

ரல்ல என்பதை அவரது எடுப்பான தோற்றமும், வாள் ஏந்தியிருந்த வஜ்ரக் கரமும் விளம்பரப்படுத்துவதாயிருந்தன.

''தம்பி! இன்னும் எவ்வளவு தூரம் இந்தப் பாலைவனம் நீண்டுகொண்டு போகுமோ தெரியவில்லையே! கொளுத்தும் வெய்யிலில் நம் குதிரைகள் தடுமாறுகின்றன. பின்னால் வரும் வீரர்கள் நெஞ்சு உலர்ந்து சொல்லமாட்டாமல் தவிக்கிறார்கள். இப்படியே போய்க் கொண்டிருந்தால் இதன் முடிவு......'' என்று கேட்டார் இடதுபுறத்தில் வந்த வயது முதிர்ந்த மனிதர்.

''முடிவு!...... முடிவு!...... முடிவைப்பற்றி நான் என்றைக்காவது கவலைப்பட்டதுண்டா, மாமா? என்றைக்கும் கவலைப்படாதவன் இன்று மட்டுமா கவலைப்படப் போகின்றேன்?'' என்று அலட்சியமாகச் சொன்னான் இளைஞன்.

''இளங் கன்று பயமறியாது'' என்று சொல்லி ஒரு நெடுமூச்செறிந்தார் முதியவர்.

''ஆமாம், மாமா, ஆமாம்! இளங் கன்று பயமறியாதுதான். பயம் அறிந்திருந்தால் இன்று அங்கம் என் காலடியில் மிதிபடுமா? வங்கம் என் பெயரைக் கேட்டாலே கிடுகிடுக்குமா? கோசலத்தின் கோமகன் தனது வாழ்நாளை விரல்விட்டு எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருப்பானா? பயந்தவர் வாழ்ந்ததில்லை, மாமா வாழ்ந்ததில்லை! வாழ விரும்புவோர் பயந்ததுமில்லை!'' என்றான் இளைஞன். இதைக் கூறுகையில் கர்வமும் இறுமாப்பும் அவன் பேச்சிலே எதிரொலித்தன.

''படித்த வித்தையைப் பெற்ற தாயிடமே காட்டுவதைப் போலிருக்கிறது உன் வீரப் பிரதாபங்களைப் பற்றி என்னிடமே நீ அளப்பது! எல்லா யுத்தங்களிலும் உன்னுடன் கூடவேயிருந்த நான் அறிவேன் உன் தோள் வலிமையை! ஆனால் உன்னைப்போல் அல்ல தம்பி, வாயில்

லாச் சிவன்களான நம் குதிரைகள்! ஒருசொட்டுத் தண்ணீர்
கூட இல்லாமல் இன்னும் அரைமணி நேரம் இப்படி நம்
மைச் சுமந்துகொண்டு கொதி மணலில் சென்றால் அவை
கைலாயத்தில் தான் போய் நிற்கும்! நீ நினைக்கும் இடத்
திற்குப் போய்ச் சேராது!'' என்று முதியவர் எச்சரித்து
வாய் மூடுவதற்குள் எதிரே ஒரு பேரிரைச்சல் கேட்டது.

எல்லோருக்கும் முன்னதாகச் சென்ற குதிரை வீரன்
''வெற்றி! வெற்றி!'' என்று முழங்கிக் கொண்டே
வானத்தை முட்டுமளவுக்குப் புழுதி மண்டலத்தைப் பின்
னால் கிளப்பிவிட்டுக் கொண்டு அவ்விருவரையும் நோக்கிப்
பாய்ந்து வந்து கொண்டிருந்தான்.

அருகில் வந்த வீரன், குதிரையிலிருந்து கீழே தாவிக்
குதித்து இளைஞனுக்கு முன்னால் கரம் கட்டி, வாய்புதைத்து
நின்றவாறு, ''பிரபு! சற்றுத் தூரத்துக்கு அப்பால் ஒரு
உயர்ந்த மணல்மேடு இருக்கிறது. மேட்டின்மீது ஏறிப்
பார்த்தால் கூப்பிடு தூரத்தில் பிரமாண்டமான தடாகம்
தெரிகிறது. தடாகத்தின் மறு கரையிலிருந்து அடர்த்தி
யான காடு ஆரம்பமாகிறது......!''

அவன் சொல்லியதை அவ்வளவு நேரமும் அலட்சிய
மாகச் செவிமடுத்துக் கொண்டிருந்த இளைஞன், காடு என்ற
சொல்லைக் கேட்டதும் அக்கறையோடு நிமிர்ந்து பார்த்
தான். ''குளத்தின் மறு கரையிலே காடு. காட்டை அடுத்து
என்ன பார்த்தாய்? சொல்லு, சீக்கிரம் சொல்லு. காட்டை
அடுத்து மலைப்பாங்கான பிரதேசமொன்றைக் கண்டாயா?''
என்று அவன் வினவினான்.

''ஆமாம் பிரபு! சமநிலக் காட்டுப் பிரதேசத்தை
அடுத்து மரங்களடர்ந்த மலைப் பிரதேசம் தொடங்குகிறது.
காட்டில் ஜன நடமாட்டம் அதிகமாயிருக்கவும் கண்டேன்''
என்றான் அவன்.

இளைஞன் முதியவரின் பக்கம் திரும்பி, ''மாமா முடிவை
எதிர்பார்க்காத எந்தக் காரியத்திலும் நான் இறங்குவ

தில்லை. நான் இறங்கும் காரியத்தின் முடிவு எப்பொழுதும் நல்ல முடிவாகத் தானிருக்குமென்று சற்று முன்னால் சொல்னேன். இப்பொழுது நம் தூதுவன் கூறுவதைக் கேட்டீர்களா? என் இலக்கு நெருங்கிவிட்டது. மங்களகிரியை நாம் சிறிது நேரத்தில் அடைந்துவிடுவோம்!'' என்றான்.

''காட்டில் சலசலப்புக்குக் காரணம்?''என்று கேட்டார் முதியவர்.

''வேட்டைப் பரிவாரங்களோடு வந்திருப்பான் மலயத்வஜன்! மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளுவானேன்! சற்றுநேரத்தில் மணல் மேட்டிலிருந்து பார்த்தால் உண்மை தெரிந்துவிடுகிறது'' என்று சொல்லியவாறு குதிரையைத் தட்டிவிட்டான் இளைஞன். அவன் புரவியைத் தொடர்ந்து முதியவரின் குதிரையும் கிளம்பியது. சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்கள் ஒரு உயர்ந்த மணல் மேட்டின் உச்சியை அடைந்தார்கள். என்ன ஆச்சரியம்! கனவிலே திடீரென மாறும் காட்சியைப்போல வரண்ட பாலைவனத்தின் முடிவிலே, மணல் மேட்டின் மறுபுறத்திலே பார்த்தவிடமெல்லாம் பச்சைப்பசேலென பசுமையான காட்சி படர்ந்து வியாபித்திருந்தது. அப் பிரதேசம் கிடுகிடு பள்ளத்திலிருப்பதைப்போலத் தாழ்ந்த பூமியிலிருந்ததுதான் அதன் பசுமைக்கும் திடீர் சீதோஷ்ண மாற்றத்துக்கும் காரணமாயிருக்க வேண்டும்.

முதியவர் அந்த மேட்டுப் பிரதேசத்தில் நின்று சுற்றுமுற்றும் கண்ணோட்டம் விட்டுக் கொண்டிருக்கையில் இளைஞன் தூரதிருஷ்டிக் கருவியைக் கொண்டு கானகத்தை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தான். காட்டின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிவரை கவனித்துக் கொண்டிருந்த அவன், குறிப்பாக ஒரு இடத்தைச் சற்று உன்னிப்பாகப் பார்த்துவிட்டு, ''மாமா! மாமா! அதோ, அதோ பாருங்கள்! சரியாகக் கவனித்துப் பாருங்கள்! நன்றாகப் பார்த்து

விட்டு என்ன தெரிகிறதென்று சொல்லுங்கள்!'' என்று மிகுந்த பரபரப்புடன் கூச்சலிட்டான்.

அவன் காட்டிய திசையில் அந்த முதியவரும் பார்த்தார். பார்த்தவர் பார்த்துக் கொணடேயிருந்தார். திறந்த வாயை மூடாமல் பல நிமிட நேரம்வரை வைத்த விழியை எடுக்காமல் அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.

எத்தனையோ போர்முனைகளில் எதிரிகளை ஆயிரமாயிரமாக வெட்டிச் சாய்த்து விழுத்தி வாகை சூடிய அவ்விரு வீரர்களும், கல்லாய்ச் சமைந்துவிட்டதைப் போல ஆடாமல் அசையாமல் தூரதரிசினியில் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வஜ்ர நெஞ்சம் படைத்த அவர்களையே இப்படி மலைப்படையச் செய்த காட்சி என்ன?

மணல் மேட்டுக்கு அப்பால் தடாகத்தை அடுத்திருந்த காடு, அந்தத் தடாகத்தை ஒட்டியதாயில்லை. குளத்தின் கரைக்கும், காட்டுக்குமிடையில் கணைக்காலளவு புதர் மண்டிய பிரதேசமொன்று இருந்தது. அதனூடே இரண்டு வெண் புரவிகள் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக ஆவேசத்துடன் காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தன. அவர்களுக்கு முன்னால் பிடரி மயிர் காற்றில் புரளப் பயங்கரத் தோற்றமுடன் இடியோசையென முழங்கியவாறு ஒரு ஆண் சிங்கம் பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தது.

பாய்ந்தோடிய சிங்கம் என்ன நினைத்துக் கொண்டதோ தெரியவில்லை, தலைதெறிக்க ஓடிய மிருகராஜன் திடீரென நின்று, தன்னைத் துரத்தி வருபவர்களை ஒருமுறை பார்த்தது. அவ்வளவுதான். நான்கு பேர்களின் தலைகளை ஓரேயடியாக விழுங்கி ஏப்பம் விடும் என்னையா விரட்டுகிறீர்கள் என்று இறுமாப்புடன் கேட்பதைப் போல, வாயைப் பிளந்து, அந்தக் கானகமே கிடுகிடுத்துப் போகும் வண்ணம் கர்ஜித்தது. அடுத்த கணம் ஒரே பாய்ச்சலாகக் குதிரைகளில் வந்த இருவரில் ஒருவர் மீது ஆக்ரோஷத்தோடு அது பாய்ந்தது. இந்தப் பயங்கரமான நெஞ்சம் பதைக்

கும்படியான காட்சியைத்தான் மணல் மேட்டின்மீது நின்ற இளைஞனும் முதியவரும் இமைகொட்டாமல் அசந்து போய் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''மாமா! என் பின்னால் வாருங்கள்!'' என்று சொல்லி விட்டு மணல் மேட்டின் மறுபுறத்தில் மளமளவென்று குதிரையை இறக்கினான் இளைஞன். சிங்கத்தோடு சமர் புரி பவர்களுக்கு உயிராபத்து ஏற்படுவதின் முன்னால் தான் அங்கு போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்று அவன் எண்ணினான் போலும்! அவனுடைய மனோ வேகத்தைக் காட்டிலும் அதிக வேகத்துடன் மேட்டிலிருந்து சம தரையை அடைந்த அவன் குதிரை, தடாகத்தின் இடது புறமாக மறு கரையை நோக்கிப் பாய்ந்தது. இந்த மின் வேகப் பிரயாணத்தின் பொழுதுகூட, எதிர்க் கரையில் வைத்த கண்களை அந்த இளம் வீரன் எடுக்கவேயில்லை.

இதற்கிடையில் மறு கரையிலே அடுத்தடுத்துப் பல அதிசயங்கள் நிகழ்ந்துவிட்டன. அங்கு தென்பட்ட இரு வரில் ஒருவர் இளைஞராகவும், மற்றொருவர் சற்று நடுத்தர வயதையடைந்தவராகவும் இருந்தார். போயும் போயும் நாடி தளர்ந்த கிழவனையா சண்டைக்கு இழுப்பதென்று மிருகராஜன் நினைத்தான் போலிருக்கிறது. முதியவரை விட்டு இளைஞன் மீதுதான் அந்தச் சிங்கம் பாய்ந்தது.

நடுத்தர வயதிலிருந்தவரை விட்டு இளைஞன்மீது ஆண் சிங்கம் ஆக்ரோஷத்தோடு பாய்ந்த பாய்ச்சலில் அந்த இளைஞன் சற்று அசந்திருந்தால் சிங்கத்துக்கு நிச்சயம் பலியாகியிருப்பான். கண்மூடித் திறப்பதற்குள் நிமிர்ந் திருந்த அவன் தலை சிங்கத்தின் வாய்க்குள் போயிருக்கும். முற்றிலும் எதிர்பாராத விதமாக ஓடிக் கொண்டிருந்த சிங்கம் திடீரெனத் திரும்பிப் பாய்ந்ததென்றாலும், நிலத்தி லிருந்து அது கிளம்புவதற்குள் அந்த இளைஞன் குதிரை யைச் சுண்டிவிட்டு லாவகமாக இடப்புறம் பாய்ந்தான்.

அதன் விளைவாக அவன்மீது பாய்ந்த சிங்கம் தரையில் போய் பொத்தென்று விழுந்தது. இந்த ஏமாற்றம், அதன் சீற்றத்தைத் தூபம் போட்டு வளர்த்திருக்க வேண்டும்.

மற்றொரு புறம் சென்ற இளைஞனைப் பார்த்து கோரைப் பற்கள் அனைத்தையும் காட்டி கர்ண கடூரமாக அது முழங்கியது. மீண்டும் அவன்மீது சிங்கம் பாயவே, இம்முறை அவன் தப்புவானென்று தோன்றவில்லை. தடாகத்தின் விளிம்பு வழியாக விரைந்து கொண்டிருந்த வீரனுக்கு குதிரையின் விலாப்புறத்தில் பலம் கொண்ட மட்டில் குத்தி, காற்றோடு காற்றாய் பறந்து போர்க்களத்தை அடைய அவன் பகீரதப் பிரயத்தனம் செய்தான்.

ஆனால்... ஆனால்...! விரைந்து வந்துகொண்டிருந்த வீரன் போர்க்களத்தை நெருங்குமுன்னரே எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.

மறுமுறையாகச் சிங்கம் பாய்ந்தபொழுது அதன் பாதையிலிருந்து அந்த இளைஞன் இம்முறை நகரவில்லை. அதற்குப் பதிலாகக் கூர்மையான ஈட்டியைக் குறி பார்த்து வைத்துக் கொண்டிருந்தான். பாய்ந்து வந்த சிங்கத்தின் வாயில் பாய்ந்த அந்த ஈட்டி அதன் பின்புற வழியாக கிழித்துக்கொண்டு வெளியே வந்தது. மரண வேதனையுடன் முழங்கிக் கொண்டு சுழன்று விழுந்த சிங்கத்துடன் அந்த இளைஞனும் குதிரையிலிருந்து கீழே தாவிக் குதித்தான். சிங்கத்தின் உடலிலிருந்து பீறிட்டுக் கொண்டு பீச்சிய இரத்தம் அவன் உடைகளை நனைத்தது. களைப்பின் அறிகுறி ஏதுமின்றி <u>காலின்றல்</u> விழுந்து கிடந்த சிங்கத்தை உதைத்து அதன் உயிர் முற்றிலும் போய் விட்டதா அல்லது உடலில் இன்னும் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கிறதா என்பதை அவன் ஆராய்ந்தான்.

இந்தப் பயங்கரமான போராட்டத்தைப் பார்த்துக் கொண்டே தடாகத்தின் விளிம்பில் வந்து கொண்டிருந்த இளைஞன், எல்லாம் நடந்து முடிந்து போய்விட்ட

தென்பதையறிந்ததும் குதிரையை இழுத்துப் பிடித்து நிறுத்தினான். சில நிமிடங்களுக்குள் அவன் பின்னால் வந்த முதியவரும் அவனருகில் வந்து சேர்ந்தார்.

''அந்த அற்புதமான காட்சியைப் பார்த்தீர்களா மாமா? மீசை முளைக்காத ஒரு சிறுவன் சிங்கத்துடன் போராடி வெற்றி பெற்ற வீரத்தைப் பார்த்தீர்களா மாமா? நமது மகதத்தையும் மிஞ்சிவிடும் போலிருக்கிறதே மங்களகிரியின் வீரப் பிரதாபம்?'' என்றான் இளைஞன்.

''ஆமாம் தம்பி! இரண்டாவது தடவையாகப் பாய்ந்த சிங்கம் அவனைத் தீர்த்துக் கட்டியிருக்குமென்று நினைத்தேன். எத்தனை அமைதியாக, சிறிதும் பரபரப்பின்றி அவன் ஈட்டியைப் பாய்ச்சினான் பார்த்தாயா? ஒரே குத்தில் ஈட்டியை ஒரு புறம் குத்தி, மறுபுறம் வெளி வரச் செய்ய எத்தனை புஜபலம் இருக்க வேண்டும்? கனவு போலிருக்கிறது தம்பி நாம் பார்த்த காட்சி'' என்று வியந்தார் முதியவர்.

இவ்விருவரும் நின்ற இடம் போர் நடந்த இடத்திலிருந்து சுமார் ஐம்பது கஜதூரம் தானிருக்கும். ஆகையால் அங்கு நின்றுகொண்டே எதிரில் நிகழ்வதை அவர்கள் தெளிவாகப் பார்க்க வேண்டியதாயிருந்தது.

சிங்கத்தை வீழ்த்திய இளைஞன் அதற்கு உயிர் இருக்கிறதா? இல்லையா என்று பார்த்துக் கொண்டிருக்கையில் அவனோடு வந்த நடுத்தர வயதுள்ள இரண்டாவது மனிதரும் குதிரையிலிருந்து இறங்கி அருகே வந்தார். இடுப்பில் சொருகியிருந்த சங்கை எடுத்து அவர் ஊதவும் புற்றீசல்கள் புறப்பட்டு வருவதைப் போல காட்டின் பல திசைகளிலிருந்தும் ஈட்டிகளும், வேல்களும் தாங்கிய குதிரைப் படை வீரர்கள் அங்கு வந்து சூழ்ந்து கொண்டார்கள். அதே சமயம் தடாகத்தின் எதிர்ப்புறத்தின் வழியாக வந்த மகத நாட்டுத் தூதுவனும் அந்த இடத்துக்கு வந்து

சேர்ந்தான். இவ்வளவும் ஒரு சில விநாடிக்குள் நிகழ்ந்து விட்டனவென்றே கூறவேண்டும்.

சிங்கத்தை வீழ்த்திய இளைஞன் அருகே வந்தனர் சில பெண்கள். அவர்களில் ஒருவள் கையிலே இரண்டு வயதுக் குழந்தை ஒன்று இருந்தது. சிங்கத்தை வீழ்த்திய இளைஞன் மேலெல்லாம் இரத்தக் கறை படிந்திருப்பதையும் பொருட்படுத்தாமல் அந்தக் குழந்தையை வாரி எடுத்து அணைத்து அதன் கன்னங்களிலே மாறி மாறி முத்தமிட்டான்.

"வாழ்க மகாராணி! வாழ்க எங்கள் மகாராணி!" என்று வானத்தை முட்டுமாறு ஜயகோஷம் எழுப்பினார்கள் அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள்.

"ராணியா... சிங்கத்துடன் போராடியது மங்களகிரியின் ராணியா...?" என்று வியப்புடன் கேட்ட மகத நாட்டு வீரன் திறந்த வாயை மூடவேயில்லை.

"கொடிய சிங்கத்தை வீழ்த்திய இளம் சிங்கம், ஒரு பெண் சிங்கம். உன்னையும், என்னையும் போலப் போர் முனையில் பல்லாயிரக் கணக்கானவர்களைக் கொன்று குவித்து அனுபவம் பெற்ற ஆண் வீரனல்ல! மலைநாடு பெற்றெடுத்த வீராங்கனை. நம்மை வரவேற்பதற்காக வென்றே நடத்திக் காட்டும் ஒரு பேரானந்தக் காட்சி, வேட்டைக்காக இளம் வீரனைப் போல உடையணிந்து வந்திருக்கிறாள். அவள் பக்கத்திலிருப்பவன்தான் மலயத்வஜனென்று நினைக்கிறேன்" என்றார் முதியவர்.

"ஒரு பெண்ணுக்கு அதிலும் இத்தனை இளம் பிராயத்திலுள்ள பெண்ணுக்கு சிங்கத்துடன் நேருக்கு நேராக நின்று போராடும் துணிச்சலா? என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை, மாமா" என்றான் இளைஞன்.

"அதோ பார்! நமது தூதன் மலயத்வஜனிடம் நமது வருகையை அறிவிக்கிறான்" என்று முதியவர் சொன்னார்.

மகத நாட்டு உளவாளி மலயத்வஜனிடம் என்ன சொல்லியிருப்பான் என்பதை நாம் விவரிக்கத் தேவையில்லை. மகதத்திலிருந்து வந்திருப்பவர்கள் யார் என்பதைத் தானே முன்னோடியாகச் சென்ற தூதுவன் அறிவித்திருக்க முடியும்? தூதுவன் தனது கடமையைச் செய்து முடித்ததும் மலயத்வஜனிடம் ஒரு பரபரப்பும் பதட்டமும் பிரதிபலித்தது.

குழந்தையிடம் கொஞ்சுவதற்காக சற்று அப்பால் சென்றிருந்த ராணியை "ஆஷா! ஆஷா! சீக்கிரம் இப்படி வா!" என்று அவன் அழைத்த பொழுது அவன் மனதில் குடிகொண்டிருந்த பரபரப்பு குரலில் தொனித்தது.

குழந்தையின் கன்னத்தைச் செல்லமாக வருடி விட்டுக் கொண்டே ஆஷாதேவி அருகில் வரவும் "ராணி! அதோ இருவர் நம்மை நோக்கி வருகிறார்கள் பார். அவர்கள் யார் தெரியுமா, ஆஷா? அங்கத்தை ஆறே ஆறுமணி நேரத்தில் வெற்றி கொண்ட மகதப் பேரரசின் இளவல் அஜாதசத்ரு. அவருடைய அருகில் வருபவர் மகத சாம்ராட் பிம்பிசாரனுக்கு வலதுகரம் போலிருக்கும் சேனாதிபதி உக்கிரசேனர். என்ன பாக்கியம், என்ன பாக்கியம்! கிடைத்தற்கரிய பாக்கியமல்லவா இது ராணி!" என்றான் மலயத்வஜன் உணர்ச்சி பரவசத்தோடு.

"எது பாக்கியம்? யாருடையது பாக்கியம்? பேரரசின் பிரதிநிதிகளுடைய வருகையா?" என்று ஆஷா அலட்சிய பாவத்தோடு வினவினாள். இதைக் கேட்கையில் அவளது கருவிழிகளிலே குறும்புத்தனம் களிநடனம் புரிந்தது.

"நம்மைச் சொல்லவில்லை ராணி! மகத நாட்டு விருந்தினர்களைச் சொல்கிறேன். அரை நாழிகை பிந்தி வந்திருந்தால் ஆள் உயரச் சிம்மத்தை ஒரே குத்தில் இரு கூறுகப் பிளந்து போட்ட உன் புஜ பலத்தை அவர்கள் பார்த்திருக்க முடியுமா? அந்த அற்புத காட்சியைக் காணும் பேறு பெற்றவர்கள் மகா பாக்கியசாலிகளல்

லவா ஆஷா?'' என்று குழைந்தான் மலயத்வஜன். பேச்சில் தான் குழைவு இருந்ததேயன்றி அது அவன் எண்ணத்தில் பிரதிபலிக்கவில்லை என்பதை ஆஷா புரிந்து கொண்டிருக்க வேண்டும். பாம்பின் கால் பாம்புக்குத் தெரியுமென்பார்கள். அதைப் போல கணவனின் பேச்சையும், மூச்சையும் அறிந்தவள் ஆஷா தேவி. கணவனின் திடீர் குழைவுக்குக் காரணத்தை அறிந்து கொண்டதுபோல 'ஓ' என்று ஒரே வார்த்தையில் தன் பதிலை முடித்துக் கொண்டாள்.

எதிரே வருபவர்கள் மீது மலயத்வஜன் வைத்த விழியை எடுக்காமலிருக்க, ஆஷாவோ வருபவர்கள் திசையைக் கூடத் திரும்பிப் பாராமல் குழந்தையிடம் முழுக் கவனத்தையும் ஈடுபடுத்தியிருந்தாள்.

ஆஜாத்சத்ரு, உக்கிரசேனன் என்று மலயத்வஜனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மகத நாட்டு இளைஞனும் சேனாதிபதியும் அருகில் வந்து தங்கள் தங்கள் புரவிகளை விட்டுக் கீழே இறங்கினார்கள்.

''வருக! வருக! மகத சாம்ராஜ்யத்தின் புதல்வரே வருக! அங்கம் கொண்ட அசகாய வீரரே வருக வருக!'' என்று வாழ்த்தி வரவேற்றான் மங்களகிரி மன்னன் மலயத்வஜன்.

''சுகம்தானே நண்பரே!'' என்று கேட்டான் ஆஜாத்சத்ரு.

''தங்கள் அன்பும் ஆதரவும் இருக்கும் பொழுது சுகத்துக்கு என்ன குறைவு இளவரசே!'' என்று பதிலிறுத்த மலயத்வஜன், உக்கிரசேனனின் பக்கம் திரும்பி ''எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தங்களை மீண்டும் சந்திக்க நேரிட்டது என் பெரும் பாக்கியம். இந்த எட்டு ஆண்டுகளுக்கிடையில் தாங்கள் உருத் தெரியாமல் மாறிவிட்டீர்களே'' என்றான்.

இவ்வளவு நேரமும் அவர்களை ஏறிட்டும் பாராமல் மறுபுறம் திரும்பி நின்றுகொண்டிருந்த ஆஷா பளிச்

சென்று திரும்பி உக்கிரசேனரை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். "வயது கூடினால் கிழடு தட்டுவது இயற்கை தானே" என்று பொருள்படும் தொனியில் "காலம் எவரி டமும் கருணைகாட்டுவது கிடையாது. காலம் விளைவிக் கும் கோலம் யாரை விட்டுவைத்தது சொல்லுங்கள் பார்க்கலாம்?" என்றாள்.

அப்பேச்சில் பொதிந்து கிடந்த விஷமத்தனத்தை யும், ஏளனத்தையும் புரிந்து கொண்ட உக்கிரசேனர் "ஆம் நண்பரே! தங்களைச் சந்தித்துச் சுமார் எட்டு வருடங்களா யின. முதன் முதலாக நாம் சந்தித்த அதே இடத்தில் திரும் பவும் நாம் சந்திக்க நேரிட்டது எனக்கு ஆச்சரியமாயிருக் கிறது" என்றார்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் இதே இடத்தில் தான் உங்கள் சேனைகளைச் சின்னாபின்னப்படுத்தி மங்கள கிரியை மகதப் பேரரசுடன் இணைத்தேன். கருணை உள்ளத் துடன் நான் உங்களுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்ததும் இந்த இடத்தில்தான். மகதத்துக்குக் கப்பம் கட்டும் குறு நில மன்னனாக உயிருள்ள மட்டும் சக்கரவர்த்திக்குச் சேவ கம் செய்வேனென்று நீங்கள் விசுவாசப் பிரமாணம் செய்த தும் வேறு இடமல்ல, இதே இடம்தான் என்பதை உக்கிர சேனர் குத்திக் காட்டுவதைப் போலிருந்தது. அவர் சொல் லிய தொனி, இதைப் பச்சையாக அவர் சொல்லவில்லையே தவிர ஆஷாவைப் பார்த்த பார்வை இதை மட்டுமல்ல. "நீயும் உன் மன்னனும் எங்கள் அடிமைகள். மறந்து விடாதே" என்று கடுமையாக எச்சரிப்பதைப் போலவும் இருந்தது.

"இப்பெண்மணி..." என்று ஆஜாத்சத்ரு கேட்க ஆரம்பித்ததும் அவன் கேள்வியைக் கேட்டு முடிப்பதற் குள் "மங்களகிரியின் ராணி! என் மனைவி" என்று சொல்லி முடித்தான் மலயத்வஜன்.

ஆஜாத்சத்ரு ராணியை நிமிர்ந்து பார்த்த அதே சமயம் அவனை விழுங்கிவிடுவதைப் போல அவளும்

வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆண்கள் நேருக்கு நேராகப் பார்க்கும் பொழுது நாணத்துடன் தலை குனியும் பெண்களையே பார்த்துப் பழக்கப் பட்ட ஆஜாத்சத்ருவுக்கு அவள் பார்வை ஒரு கணம் என்னவோ செய்வதைப் போலிருந்தது. மறுகணம் தன்னைச் சமாளித்துக் கொண்டு "ஓ! ராணியாரையா வேட்டை உடையில் இங்கு காண்கிறேன்!" என்றான் அவன்.

"உடையில் மட்டுமா காண்கிறீர்கள்? நானும் ஒருவளாகச் சிங்கத்தை வீழ்த்தியதையும் பார்த்திருப்பீர்களென்றல்லவா நினைத்தேன்" என்று சொல்லியவாறு இரத்த வெள்ளத்தில் செத்துக் கிடந்த சிங்கத்தின் பக்கமாகப் பார்வையைச் செலுத்தினாள் ஆஷா. உயிரற்றுக் கிடந்த அந்த நிலைமையிலும் பார்வைக்குப் பயங்கரமாகத் தென்பட்ட அந்தச் சிங்கம், "என்னை ஒரே குத்தில் வீழ்த்திய சிங்கங்களிலே சிங்கமப்பா இந்த ஆஷாதேவி! அவளிடம் சற்று உஷாராக நடந்துகொள்" என்று ஆஜாத்சத்ருவை எச்சரிப்பதைப் போலிருந்தது.

"ஆம், ராணி! சிங்கத்தைக் கொன்று வீழ்த்தியதையும் பார்த்தேன். தங்களது அமானுஷ்யமான வீரத்தைக் கண்டு மகதப் பேரரசு பெருமிதமடைகிறது" என்றான் ஆஜாத்சத்ரு.

"இந்தப் பெருமை மங்களகிரிக்கு உரியது இளவரசே" என்று ராணி ஆஷாதேவி கூறிவிட்டு அதன் எதிரொலியை ஆஜாத்சத்ருவின் முகத்தில் காண விரும்புவதைப் போல அவனை நிமிர்ந்து பார்க்கவும் கூர்மையான இரு ஈட்டிகள் ஒன்றோடொன்று வேகமாக மோதுவதைப் போல அவர்கள் இருவரின் கண்களும் ஒரு நிமிடம் சந்தித்து உற்று நோக்கின.

பேச்சு விபரீதமாகப் போவதைக் கவனித்த மலயத்வஜன், "ராணி சொல்லுவதும் உண்மைதான் பிரபு! இப்பெருமை மங்களகிரிக்கு உரியது. மங்களகிரி மகதத்திற்கு உரியதாகையால் அதன் பெருமைகள் அனைத்தும் முடிவில்

பேரரசைச் சார்ந்ததுதானே! ஆசையால் தாங்கள் சொல்லுவதும் சரிதான்'' என்றான்.

இந்தச் சமயம் பார்த்து ராணியின் கையிலிருந்த குழந்தை இரண்டு கரங்களையும் கொட்டி முழக்கியவாறு முத்துப்பற்கள் அவ்வளவும் வெளியே தெரிய, கல கல என்று சிரித்துக் கொண்டு ஆஜாத்சத்ருவின் பக்கம் தாவியது.

''பார்த்த மாத்திரத்தில் குழந்தைக்கு உங்களிடம் எவ்வளவு ஆசை?'' என்று மலயத்வஜன் சொல்லவும் தங்க விக்கிரகம் போலிருந்த அக்குழந்தையைத் தனது கரங்களிலே தூக்க வேண்டுமென்று ஆஜாத்சத்ருவுக்கும் அவனை அறியாமல் இனம்புரியாத ஆவல் ஏற்பட்டது. துடுக்காகப் பேசும் ஆஷா குழந்தையைத் தன்னிடம் தருவாளா என்பதையோ அல்லது சாம்ராச்சியத்தின் முடிக்குரிய இளவரசனை அவமதிக்கும் திமிர் பிடித்தவளின் குழந்தையை நாம் தீண்டலாமா என்பதையோகூட நினையாமல் ஆஜாத்சத்ரு குழந்தையை வாங்கக் கரங்களை நீட்டினான்.

எந்தப் பெண்ணிடமும் ஒரு பலவீனம் உண்டு. அகந்தையே உருவாகக் கொண்ட பெண்கள்கூட அவர்களுடைய குழந்தைகளைப் பிறர் பாராட்டும்பொழுது அகமகிழ்ந்து போய்விடுகிறார்கள். ''காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு'' என்பது பழமொழி. ஒரு குழந்தை சர்வ அவலட்சணங்களும் கூடியதாயிருக்கலாம். தொட்டால் ஒட்டிக்கொண்டுவிடுமோ என்று அஞ்சும் அளவுக்கு அழுக்கில் தோய்ந்து அசிங்கமாயிருக்கலாம். ஆயினும் ''கண்ணே என் கருமணியே! இந்திரனே, என் சந்திரனே!'' என்று அந்தக் குழந்தையையும் அதன் தாய் உள்ளன்போடு கொஞ்சிக் குலாவி அகமகிழ்ந்து போகத்தான் செய்கிறாள், அந்தக் குழந்தையை அடுத்தவர்கள் புகழும் பொழுது அவள் மெய்மறந்து போகிறாள், பெண்ணினத்திற்கே உரித்தான இந்தப் பலவீனம் ஆஷாவை மட்டும் எப்படி விட்டுப் போகும்? பயங்கரமான சிங்கத்தை வீழ்த்தியவளென்றாலும், பெண்மையும், தாய்மையும் அவள் உடன் பிறந்த தனிச்சொத்துக்களல்லவா

சாம்ராட் பிம்பிசாரனின் மகன், மகதப் பேரரசின் பட்டத்து இளவரசன். அங்கத்தை வெற்றி கொண்ட மாவீரன். ஆணழகன் என்று அகிலமே போற்றும் ஆஜாத் சத்துரு கையேந்தி தாளன்று குழந்தையைகேட்கும்பொழுது எவரிடமும் ஏந்திக் கேட்காத கரங்களை அவன் தன்னிடம் ஏந்திக் கேட்பதை ஒரு பெருமை எனக் கருதினாள் ஆஷா. குழந்தையை நேரடியாக இளவரசன் கையில் கொடுக்கா மல் கணவனிடம் கொடுத்து, இளவரசரிடம் கொடுங்கள்" என்றாள்.

குழந்தையை மலயத்வஜனிடமிருந்து வாங்கிக் கொண்ட ஆஜாத்சத்ரு "தாய் தகப்பனைப் போலவே இவ னும் ஒரு மாவீரனாக வளரவேண்டும். இவனுக்கு என்ன பெயர் வைத்திருக்கிறீர்களோ?" என்றான்.

"எங்கள் குலத்தில் தோன்றி அங்கம், வங்கம், கலிங்கம், காம்போஜம், கோசலம், மகதம் ஆகியவைகளை யெல்லாம் ஒரு கொடியின் கீழ் கட்டியாண்ட சிம்மநாதரைப் பற்றிச் சரித்திரத்தில் படித்திருப்பீர்களே! அவருடைய பெயரைத்தான் இவனுக்கும் சூட்டியிருக்கிறேன். மங்கள கிரியின் பழம்பெருமையை இவன் புனருத்தாரணம் செய்வானென்ற முழு நம்பிக்கையும் எனக்கு இருக் கிறது இளவரசே" என்றாள் ஆஷா.

"ஓ" என்று ஒரு வார்த்தையில் பதிலளித்த இளவரச னின் நெஞ்சத்தில் உணர்ச்சிகள் எரிமலையைப் போலக் குமுறிக்கொண்டிருந்தன. இதற்கு முன் என்றும் சந்தித் திராமல் முதல் சந்திப்பிலேயே ஆஷா ஏன் தன்னிடம் இவ்வளவு துடுக்காக நடந்துகொள்ள வேண்டுமென்பது அவனுக்கு விளங்காத புதிராக இருந்தது. வீரத்தைப் பாராட்டும் பண்பு இன்னொரு சுத்த வீரனுக்குத்தான் உண்டு என்பார்கள். அதைப் போல சிங்கத்தை வீழ்த் தும் மனோவலிமையும் உடல்வலிமையும் பெற்றிருந்தால் கூட தோற்றத்தில் அன்றலர்ந்த ரோஜாவின் மென்மையை வீடப் பன்மடங்கு மென்மையுடன் தோற்றமளித்த ஆஷாவின் அபாரமான துணிச்சலை ஆஜாத்சத்ரு உள்ளூர மெச்சினான் ஒருபுறம். அதேசம

திப்பது என்ற கொதிப்பும் வேதனையும் பட்ட மரத்தை அரிக்கும் பூச்சியைப் போல அவன் நெஞ்சத்தின் அடித்தளத்தை உறுத்திக்கொண்டிருந்தன.

சேனுதிபதி உக்கிரசேனரோ ராணியின் பேச்சைக் கேட்டு உருத்திரமூர்த்தியாகவே மாறியிருந்தார். தனது பேச்சுக்கு மறு பேச்சை அரைக்கணமும் சகித்துக்கொள்ள முடியாத இளவரசன் ஒரு பெண்ணின் முன்னிலையிலே அவள் சரமாரியாகப் பொழியும் அவமதிப்புகளையெல்லாம் தாங்கிக்கொண்டு பெட்டிப்பாம்பாக அடங்கிப் போயிருப்பது உக்கிரசேனருக்கு ஒரு கனவுபோலிருந்தது. வடபாரதத்திலுள்ள பல நாடுகளையும் காலடியில் போட்டு மிதித்த சிம்மநாதனின் பெயரைத் தனது குழந்தைக்கு வைத்திருப்பதாக ஆஷா கூறவும், உக்கிரசேனர் பொறுமையை இழந்துவிட்டாரென்றே சொல்லவேண்டும்.

'என் போன்றவர்கள் உயிரோடு இருக்கும் வரை உன் கனவு ஒருபோதும் நனவாகமாட்டாது' என்று சொல்லாமல் இடித்துக் காட்டுவதைப்போல அவர் உடைவாளின் மீது கையை வைத்தார். அவரை தானும் மறைமுகமாக எச்சரிக்கவேண்டுமென்று நினைத்தாளோ என்னவோ ஆஷாதேவி சற்று நகர்ந்து செத்துக்கிடந்த சிங்கத்தின் வாயிலிருந்த தனது ஈட்டியை வேகமாகப் பிடுங்கி எடுத்தாள். இதை அருகில்நின்றஒருதோழியிடம்கொடுத்து 'இந்த ஈட்டியில் படிந்திருக்கும் இரத்தக்கறையைக் கழுவ வேண்டாம் அரண்மனை வாசலில் இதைக் காட்சிப் பொருளாக வைக்கச் சொல்லு!' என்று அர்த்த புஷ்டியோடு உக்கிரசேனரைப் பார்த்தவாறு கூறினுள்.

ஆஷாதேவியின் பேச்சும் போக்கும் விபரீதமாகப் போய்க்கொண்டிருப்பதைப் பார்த்த மலயத்வஜன் இதை இனியும் வளரவிட்டால் ஆபத்தென்று நினைத்திருக்க வேண்டும். குவித்த கரங்களுடன் இளவரசன் பக்கம் திரும்பி 'ஆஷா இளம்வயதுள்ளவள். சிறுகன்று பயமறியாது. தவருக அவள் ஏதாவது சொல்லியிருந்தால் அன்புமிகக்கொண்டு மன்னிக்க வேண்டும் பிரபு. மகதத்துக்கு நாங்கள் எவ்வ

ளவோ கடமைப்பட்டிருக்கிறோம்' என்று மன்னிப்புக் கோரினன்.

இளவரசனிடமிருந்த குழந்தையை வாங்கிக்கொள் வதற்காக முன்னே வந்த ஆஷா 'எப்பொழுதும் எல்லோரி டத்திலும் சரளமாகப் பேசிப் பழகுவதைப் போல தங்க ளிடமும் பேசிவிட்டேன் இளவரசே! தவருக நான் ஏதும் பேசியிருந்தால் தயவு செய்து பொறுத்தருள வேண்டும்!' என்ருள்.

இத்தனை நேரமும் 'நான்' என்ற அகந்தையோடு பேசிய ராணி திடீரென்று மரியாதையோடு பணிந்து பேசியது ஆஜாத்சத்ருவுக்கு நியாயமாகச் சந்தோஷத் தைக் கொடுத்திருக்கவேண்டும். ஆனல் உண்மையில் அவன் மனம் திருப்தியடையாமல் இப்பொழுது வேதனை யைத்தான் அடைந்தது. சற்று முன்பு வரை வீரக்கனல் பறக்கப் பேசிய அவள் வாயிலிருந்து பணிவான வார்த் தைகளைக் கேட்க அவன் செவிகள் விரும்பவில்லை.

'அட முட்டாளே! ஆஷாவின் முடி, வணங்கா முடி யடா!' என்று இடித்துக் காட்டுவதைப்போலிருந்தது அடுத்தபடியாக அவள் கேட்ட ஒரு கேள்வி.

'மகதத்துக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டதாகச் சொல்கிறீர்களே, அது எந்த வகையில் என்பதையும் சொல்லுவீர்களா? நான் அதிகமாகச் சரித்திரம் படித்த தில்லை. ஆகையால் இந்தச் சிக்கலான அரசியலை என்னல் புரிந்துகொள்ள முடிவதில்லை. மகதத்தையும், அதை அண்டியுள்ள குட்டி நாடுகளையும் ஒரு விழுங்காக விழுங்கி ஏப்பம் விடக் காத்திருக்கும் உத்கலம், கலிங்கம், ஆந்தி ரம், விகர்ப்பம் ஆகிய வல்லரசுகளைத் தடுத்து வைத்திருக் கும் நமக்கு மகதம் கடமைப்பட்டிருக்கிறதா? அல்லது மக தத்தின் தெற்கு எல்லைக் கோட்டையாயிருக்கும் நாம் மக தத்துக்குக் கடமைப்பட்டிருக்கிறேமா? தலையைக் கிறு கிறுக்க வைக்கும் இந்த அரசியல் சர்ச்சை எனக்கு வேண் டாம். இளவரசரையும் அவரது பரிவாரங்களையும் விருந் க்கு அழைத்துவிட்டு வாருங்கள். நான் போகிறேன்'

என்று சொல்லியவாறு குழந்தையைத் தாதியிடம் கொடுத்துவிட்டு லாவகமாகக் குதிரைமீது தாவி ஏறிக் கொண்டாள் அவள்.

குதிரையைத் தட்டிவிடுவதின் முன்னால் மின்னல் வெட்டுவதைப்போல இளவரசரின்மீது அர்த்தபுஷ்டியுடன் ஒரு பார்வையைச் செலுத்திய ஆஷா 'இது நம் முதல் சந்திப்பு அல்லவா? இந்தச் சந்திப்பின் நினைவாக இளவரசருக்கு நான் ஏதாவது ஒரு காணிக்கையைக் கொடுக்க வேண்டும்' என்று கூறியவாறு குதிரை மேலிருந்தவாறே இளவரசரின் அருகில் வந்தாள். இடுப்பில் சொருகிக் கொண்டிருந்த ஒரு சிறு பட்டுப் பையைக் குனிந்து இளவரசரின் கரங்களில் திணித்தாள். குதிரையைத் தட்டிவிட்டுக்கொண்டு கணப்பொழுதில் அங்கிருந்து மறைந்துவிட்டாள் ஆஷா!

அவள் மறைந்த பிறகு அவள் என்ன கொடுத்துவிட்டுச் சென்றாளென்பதை இளவரசன் பார்ப்பதற்கு முன்னால் 'நானும் போய் முன்னேற்பாடுகள் செய்கிறேன். அரண்மனையில் இராப்போசனத்துக்குக் கண்டிப்பாய் வந்துவிடவேண்டும்' என்று அழைத்துவிட்டுச் சென்றான் மங்களகிரி குறுநில மன்னன் மலயத்வஜன்.

மலயத்வஜனும் அவனுடைய பரிவாரங்களும் அந்த இடத்தை விட்டு நகர்ந்த பிறகு தான் ஆஷாதேவி கையில் திணித்துவிட்டுப் போன பட்டுப் பையை ஆஜாத்சத்ரு பிரித்துப் பார்த்தான்.

அந்தப் பட்டுப் பைக்குள் வெள்ளிப் பட்டயங்கள் அடித்த ஒரு சிறிய முகம் பார்க்கும் கண்ணாடியும், ஒரு சிறு சீப்பும் இருந்தன.

ஆஷாதேவி கொடுத்துவிட்டுச் சென்ற கண்ணாடியையும் சீப்பையும் ஆஜாத்சத்ரு எடுத்துப் பார்த்தபொழுது நல்ல வேளையாக அவன் பக்கத்தில் உக்கிரசேனரைத் தவிர வேறு யாருமில்லை.

ராணி கொடுத்த கண்ணாடியிலே இளவரசன் ஒரு முறை தனது முகத்தைப் பார்த்துக்கொண்டான். அப்

பொழுதுதான் ஆஷாதேவி எதற்காக அந்தக் கண்ணுடியைக் கொடுத்துவிட்டுச் சென்ருள் என்பதை அவனுல் புரிந்துகொள்ள முடிந்தது. அதிகாலையிலிருந்து சுற்றிச் சுழன்று காற்றடிக்கும் பாலைவனப் பிரதேசத்தில் இடைவிடாமல் பிரயாணம் செய்து வந்த இளவரசனின் தலைமுழுவதிலும் புழுதி படிந்து சர்வ அவலட்சணமாகத் தோற்றமளித்தது. அலங்கோலமாயிருந்த அவன் முடியின் நிறமே மாறிப்போயிருந்ததுடன் களைசொட்ட வேண்டிய அவன் முகத்திலும் கரும்புள்ளி, செம்புள்ளி வைத்ததைப் போல பாலைவனப் புழுதி கருணையின்றிப் படர்ந்திருந்தது.

ராணியின் கண்ணுடியில் தனது தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்தில் கண்ணுடியைக் கொடுத்து அவமதித்துவிட்டுப் போன ஆஷாதேவியிடம் சீற்றமேற்படுவதற்குப் பதிலாக ஆஜாத்சத்ருவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவன் தனக்குள் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியாமல் வாய் விட்டுச் சிரித்துவிட்டான். அவன் சிரிப்பு உக்கிரசேனருக்கு எரியும் தீயில் எண்ணெய் வார்த்ததைப் போலிருந்தது.

'இளவரசே! நீங்கள் தானு தன்மானத்தையெல்லாம் துறந்துவிட்டு இப்படிச் சிரிக்கிறீர்களா? ஆஷாதேவியின் திமிர் பிடித்த பேச்சு ஒவ்வொன்றும் கூர்மையான ஈட்டியைக்கொண்டு என் நெஞ்சைப் பிளப்பதைப் போலிருக்கிறது! நீங்களானுல் மானம், வெட்கம், பட்டம், பதவி எல்லாவற்றையும் துறந்துவிட்டவரைப் போல கேவலம் ஒரு சிறுமியின் அகந்தை மொழிகளைக் கேட்ட பின்னரும் அமைதியாக இருக்கிறீர்கள். வெட்கம், வெட்கம்! மகத சாம்ராஜ்யத்துக்கே தாங்க முடியாத மாபெரும் வெட்கம்! என்று முழங்கினுர் உக்கிரசேனர். இதைக் கூறுகையில் அவர் கண்கள் செக்கச்செவேலென்று சிவந்து நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தன.

சாதாரணமாக தம்பி என்று அழைக்கும் சேனுதிபதி உக்கிரசேனர் 'இளவரசே' என்று அந்தஸ்தைச் சுட்டிக்

காட்டிப் பேசவாரம்பித்தால் அதன் பொருள் என்ன என்பது ஆஜாத்சத்ருவுக்குத் தெரியும். 'உன்னுடைய மரியாதையையும் கௌரவத்தையும் காப்பாற்றிக்கொள்ள உனக்குத் தெரியாவிட்டால் அவைகளைக் காப்பாற்றும் கடமை சேனதிபதியான எனக்கு இருக்கிறது. நீ மகதப் பேரரசின் பட்டத்திளவரசன் என்பது மட்டுமல்ல அந்தப் பேரரசைச் சக்கரவர்த்தியின் பெயரினல் வடபாரதத்திலே விஸ்தரித்து நிலைநிறுத்தி வரும் மாவீரனன நீ என் தங்கையின் பிள்ளையல்லவா? என் உயிர் இருக்கும் வரை உன்னை என் கண் முன்னே ஒருவர் அவமதிப்பதை நான் பார்த்துக்கொண்டிருப்பேனு? முடியாது! மங்களகிரியைச் சுட்டுப் பொசுக்கிச் சுடுகாடாக்கிவிட்டு உன்னுடன் வந்து பேசுகிறேன்' என்று உக்கிரசேனர் சொல்லத் துடிப்பதை 'இளவரசே!' என்ற ஒரு சொல்லினல் அவர் சொல்லிக் காட்டுகிருரென்பது ஆஜாத்சத்ருவுக்குத் தெரியும்.

'மாமா கேவலம் ஒரு சிறுமியிடமா உங்களுக்கு இத்தனை கோபம்? அதிலும் மங்களகிரி உங்களுக்கு ஒரு சுண்டைந்காய் மாதிரி! ஈயை அடிக்க யாராவது இரும்பு உலக்கையைத் தூக்குவார்களா? தவிர நாம் மங்களகிரிக்கு எதற்காக வந்திருக்கிறோமென்பதை மறந்துவிட்டீர்களா மாமா? ஒரு சாதாரண சிற்றெறும்புகூட மிருகங்களிலே பெரிய யானைக்கும் எமனுகிவிடுமென்பது உங்களுக்குத் தெரியாதா? நாம் வந்த காரியம் பெரிது; வீரியம் பெரிதல்ல!' என்று அவன் அமைதியாகச் சொல்லவும் அப்பொழுதுதான் உக்கிரசேனருக்கு இளவரசரின் பொறுமையின் காரணத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது.

'ஆமாம் தம்பி, ஆமாம்! நாம் வந்த காரியம்தான் பெரிது!' என்று ஆமோதித்தார் சேனுதிபதி. அவருடைய கோபமும் பதட்டமும் வந்தது தெரியாமல் போய்விட்டன. இதற்குள் அவர்களுடைய குதிரைப் படையினரும் நெருங்கி வந்துவிட்டார்கள்.

இளவரசனும் மற்றவர்களும் அருகிலிருந்த குளத்தில் இறங்கி ஸ்நானம் செய்துவிட்டு ஆயாசம் தீர மரநிழ

லில் அந்தி மயங்கும் வரை ஓய்வெடுத்துக்கொண்டனர். அவர்கள் சீவிச் சிங்காரித்துக்கொண்டு புறப்படுவதற்கும் அவர்களை அரண்மனைக்கு அழைத்துச்செல்ல ஒரு தீவட்டிப் படை வருவதற்கும் சரியாயிருந்தது.

அரண்மனையில் அன்றிரவு நடைபெற்ற விருந்தில் ராணி ஆஷாதேவி தான் எல்லோரையும் விட அளவு கடந்த உற்சாகத்துடன் இருந்தாள். மலயத்வஜனுக்கும் ஆஜாத்சத்ருவுக்கும் இடையில் உட்கார்ந்த ராணி; சிரித்துச் சிரித்துப் பேசினாள். மற்ற இருவருக்கும் பேசுவ தற்கு இடம் வைக்காமல் தானே பேசிக்கொண்டிருந்தாள்.

காட்டிலே பார்த்த ராணிக்கும் நாட்டிலே பார்க்கும் ராணிக்குமிடையில் தென்பட்ட வேற்றுமைகள் இள வசரனுக்குப் பெரும் திகைப்பை உண்டுபண்ணுவதாயிருந் தன. அகந்தையோ அல்லது அலட்சிய பாவமோ இன்றி பெண்மை பரிணமிக்க அன்பும் பண்புமாகப் பேசும் இந்த ஆஷாதேவியையா சில மணி நேரத்துக்கு முன்னால் வேட்டை உடையிலே காட்டில் சந்தித்தோம் என்று ஆஜாத்சத்ரு வியப்புடன் சிந்தனையிட்டுக்கொண்டிருந் தான்.

விருந்து முடிந்தது. மலயத்வஜன், ஆஷாதேவி, ஆஜாத்சத்ரு, உக்கிரசேனர் ஆகிய நால்வர் மாத்திரம் உப்பரிக்கையில் பால் போலப் பொழியும் சித்திரா பூரணை நிலவு ஒளியில் ஏகாந்தமாகச் சந்தித்தார்கள்,

சக்கரவர்த்தியைப் பற்றி சம்பிரதாயபூர்வமாக குச லப் பிரச்னம் செய்து தனது ராஜ விசுவாசத்தைத் தெரி வித்த பின்னர் 'இளவரசர் விஜயத்தின் காரணம் என் னவோ?' என்று விசாரித்தான் மலயத்வஜன்.

'ஒன்றுமில்லை! மகாநதியில் நீராட வேண்டுமென் பது வெகு காலமாக ஆசை. நினைத்துக்கொண்டோம். உடனே புறப்பட்டுவிட்டோம். அவ்வளவு தான்!' என் ருன் ஆஜாத்சத்ரு.

கலிங்கத்தின் எல்லையைக் காத்துக்கொண்டு ஓடும் மகாநதியை ஆஜாத்சத்ரு குறிப்பிட்டபொழுது மங்கள

கிரியின் வடகிழக்கிலிருப்பதும் மகதத்துடன் சமீபத்தில் இணைக்கப்பட்டதுமான அங்க நாட்டில் ஓடும் சம்பா நதியை ஆஷாதேவி நினைத்துக்கொண்டாள்.

'எனக்கும் சம்பா நதியைப் பார்க்க வேண்டுமென நெடுநாட்களாக ஆசை!' என்றாள்.

கலிங்கத்தின் மீது நீங்கள் கைவைக்க நினைப்பதற்குள் அங்க நாட்டை உங்களிடமிருந்து நாங்கள் பறித்துக் கொண்டுவிடுவோமென்று மறைமுகமாக அவள்எச்சரிக்கை செய்கிறாளா? அல்லது உண்மையாகவே சம்பா நதி தீரத்தைப் பார்க்க அவள் விரும்புகிறாளா? என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் 'ஓ! அதற்கென்ன? விரும்பும் போது தாராளமாக வாருங்கள். என் அரண்மனை சம்பா நதிதீரத்தில் தான் இருக்கிறது' என்றான் ஆஜாத்சத்ரு.

'நினைத்த மாத்திரத்தில் அப்படி வந்துவிட முடியுமா?' என்று அர்த்தபுஷ்டியுடன் அவள் பதிலளித்தாள்.

இது விஷமத்தனமான பதில் என்பதை உக்கிரசேனர் உணர்ந்தாரேயன்றி வெள்ளி நிலவிலோ சொர்ணப் பதுமையாகச் சோபித்த ஆஷாவை கள்ளம் கபடம் நிறைந்தவளாக அந்த சந்தர்ப்பத்தில் நினைக்க ஆஜாத் சத்ருவினால் முடியவில்லை.

வெள்ளம் தலைக்குமேல் போனபிறகு ஒரு சாண் போனாலென்ன, ஒரு முழம் போனாலென்ன என்பார்கள். அதைப்போல மகத ராஜகுமாரனை ஆஷா வேண்டிய மட்டில் அவமதித்துவிட்டாள். துடுக்கு மொழிகளினால் சொல்லக்கூடாததையெல்லாம் சொல்லித் தீர்த்துவிட்டாள். இனிப் புதிதாக அவள் என்ன சொல்லப்போகிறாளென்று மலயத்வஜன் நினைத்தான் போலும்! இளவரசன் விஜயத்தின் அந்தரங்கத்தை சேனாதிபதியிடமிருந்து சாதுர்யமாக அறிய எண்ணி உக்கிரசேனரை மேன் மாடத்தின் மறுபுறத்துக்கு அழைத்தான் அவன்.

உக்கிரசேனருக்கோ மயக்கு விழி காட்டும் ஆஷாவுடன் ஆஜாத்சத்துருவைத் தனிமையில் விட்டுச் செல்ல கட்டோடு விருப்பமில்லை. அதே சமயம் மலயத்வஜன்

அழைக்கும்பொழுது அவனுடன் போக மறுப்பதும் மரியாதையாகத் தோன்றவில்லை. வேண்டா வெறுப்புடன் அவர் செல்லவே, இருவரும் தங்களைவிட்டுத் தனித்துச் செல்லுவதை ஆஷாவும் ஆஜாத்சத்ருவும் இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தலை மறைந்த பிறகு ஆஷா ஆஜாத்சத்ருவின் பக்கம் திரும்பவே அதே சமயம் அவனும் அவளை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தான். அர்த்தமற்ற ஒரு சிரிப்பு தர்மசங்கடமான அந்நிலைமையிலிருந்து அவர்களைச் சகஜ நிலைமைக்கு கொண்டுவர உதவியது.

''ராணி! அதோ அந்த நீல வானில் மிதந்து வரும் நிலவுக்கு இருக்கும் களங்கம் கூட உங்களிடம் இல்லை! கடைந்தெடுத்த தங்கப் பதுமையாக சகல சாமுத்திரிகா லட்சணங்களுடனும் கூடிய பேரழகியை மனைவியாகப் பெறுவதற்கு மலயத்வஜன் பல ஜன்மங்களில் புண்ணியம் செய்திருக்கவேண்டும்!'' என்றான் ஆஜாத்சத்ரு.

''ஊம்!'' என்று ஒரே வார்த்தையில் பதிலளித்தாள் ஆஷா. ஆனால் அந்தக் குமுத வாயிலிருந்து வெளிவந்த இந்த ஒரு சொல்லைக் காட்டிலும் பொருள் செறிந்த வார்த்தைகளை அடுக்கடுக்காகப் பொழிந்தது அவளது குறுகுறுத்த பார்வை.

நீல வானில் உல்லாசமாகப் பவனிவரும் முழுமதியை அண்ணாந்து பார்த்தாள். அதன்மீது வைத்த விழிகளை எடுக்காமல் சில நிமிட நேரம் மௌனச் சிலையாக அவள் சமைந்துபோய் நின்றாள். அந்த சில நிமிட நேரத்துக்கிடையில் அவள் மனத் தடத்திலே என்னென்ன விதமான எண்ணங்கள் தோன்றி மறைந்துகொண்டிருந்தனவோ! அவளுடைய கண்கள் தான் சந்திரனை நோக்கியிருந்தன. சிந்தனைகள் வேறு எங்கோ ஓடிக்கொண்டிருந்தன.

வானத்தை ஊடுருவிக்கொண்டிருந்த பார்வையைப் பனிச்சென்று இளவரசன்மீது திருப்பிய ஆஷா

தேவி, ''நீங்கள் என்ன சொன்னீர்கள்?'' என்று கேட்டாள். அவன் வாயினுல் தனது எழிலுருவை திரும்ப வர்ணித்துக் கேட்கவேண்டுமென்ற ஆவலோடு இக் கேள்வியை அவள் கேட்டாளா? அல்லது உண்மையிலேயே சிந்தனையை ஓட விட்டுக்கொண்டிருந்த ராணி அவன் சொல்லியதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் ''ஊம்'' என்று பதில் கொடுத்தாளா? இதன் விடை அவள் ஒருவளுக்குத்தான் தெரியும்.

''சந்திரனுக்கு இருக்கும் களங்கம்கூட உங்களிடம் இல்லையென்றேன்'' என்ருன் ஆஜாத்சத்ரு.

''அது ஏன் தெரியுமா?'' என்று புதிர் போட்டுப் பேசினுள் ஆஷா.

''சொன்னுல் தெரிந்துகொள்கிறேன்'' என்ருன் ஆஜாத்சத்ரு.

''அதோ சந்திரனை உற்றுப்பாருங்கள். வானத்தில் என்ன ஓட்டம் ஓடுகிருன் பார்த்தீர்களா? சூரியனுக்குப் பயந்து அவன் கிளம்புவதற்கு முன்னுல் ஓடி மறைந்து விடவேண்டுமென்று பயந்தடித்துக்கொண்டு பறக்கிருன். பயங்கொள்ளிகளுக்குத்தான் களங்கம் உண்டு. பயமறியாதவர்களிடம் களங்கம் எப்பொழுதுமே கிடையாது'' என்ருள் ஆஷா தேவி.

மகதப் பேரரசு சூரியனைப் போல சக்திமிக்கதாயிருப்பினும் அதனிடம் மங்களகிரி இனி ஒரு போதும் அஞ்சாது என்று ஆஷா எச்சரிக்கிருளா? மகதத்திடம் இவளுக்கு திடீரென்று ஏன் இத்தனை வெறுப்பு? எதிரிகள் கண்டு அஞ்சும் என்னிடமே இவ்வளவு துடுக்காகவும் அகங்காரத்துடனும் பேசும் ஆஷாவுக்கு மற்றவர்கள் எம்மாத்திரம்? கணவன்தான் அவளுக்கு எம்மாத்திரம்? இந்தச் சிந்தனையில் ஆஜாத்சத்ரு சில விஞடி நேரம் மௌனமாயிருக்கவும், ''நான் சொல்லியதில் தவறு ஏதும் உண்டா? களங்கமற்ற வெள்ளை உள்ளம் படைத்தவர்களுக்கு உலகில் எதிரிகளேயில்லை. அவர்கள் எவரிடமும்

அஞ்சத் தேவையில்லை; அதேபோல அச்சமற்றவர்களைக் களங்கமற்றவர்களென்று கருதுவதும் சரிதானே? ஏன் பதில்சொல்லாமல் மௌனமாயிருக்கிறீர்கள்?... என்ருள் ஆஷா.

''களங்கம் என்ருல் அது எதைக் குறிக்கிறதென்பதைப் பொறுத்திருக்கிறது உங்கள் கேள்வியின் விடை!'' என்ருன் ஆஜாத்சத்ரு.

''ஓ!'' என்று இதற்கும் ஒரே வார்த்தையில் பதிலளித்துவிட்டு வானத்தைப் பார்க்கவாரம்பித்தாள் ஆஷாதேவி.

''ஆஷா தேவியாரிடம் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்'' என்ருன் இளவரசன்.

''தாராளமாகக் கேளுங்கள் தயங்காமல் விடை கிடைக்கும்!'' என்ருள் ஆஷா அவனைத் திரும்பிப் பாராமல்.

''மகதத்திடம் உங்களுக்கு எப்பொழுது முதல் இந்த வெறுப்பு?'' என்று இவ்வளவு நேரமும் கேட்க விரும்பாமல் மனதுக்குள் வைத்துப் புழுங்கிக்கொண்டிருந்த கேள்வியை வாய் விட்டுக் கேட்டுவிட்டான் ஆஜாத்சத்ரு.

''வெறுப்பா! யார் அப்படிச் சொன்னது? நண்பர்களுக்கிடையில் வெறுப்பும் பகையும் ஏற்படுமென்று நான் கேள்விப்பட்டதில்லை!'' என்று சொல்லிய ராணி ஆஷாதேவி நண்பர்கள் என்ற வார்த்தையைச் சற்று அழுத்திச் சொன்ஞள்.

மகதத்துக்கு மங்களகிரி நண்பன்! அடிமைப்பட்ட நாடு, வாள் முனையில் ஜயிக்கப்பட்ட நாடு, ஆட்சிபீடத்துக்கு நண்பன்!!

''நான்தான் கேட்கிறேன் ராணி! மகதத்துக்கு மங்களகிரி எந்த வகையில் கடமைப்பட்டுள்ளதென்று

கேட்டீர்களே, அதன் பொருள் என்னவோ?'' என்ருன் ஆஜாத்சத்ரு.

''அதற்கு என்ன பொருளோ அதே பொருள்தான்! மக்களகிரி கலிங்கத்துடன் சேர்ந்தால் மகதத்தின் நிலை என்னவாகுமென்பதை சற்று நினைவுறுத்த விரும்பினேன், அவ்வளவுதான். கலிங்கப் பெரு வெள்ளம் மகதத்தை மூழ்கடித்துவிடாமல் இடையே அணைபோட்டுத் தடுத்துக் கொண்டிருப்பது நாங்களல்லவா என்ருள் ஆஷா.

மங்களகிரியில் மலை மலையாக மகதம் கொண்டு வந்து குவித்திருக்கும் ஆயுதங்கள் என்று சொன்னல் பொருத்தமாயிருக்கும்'' என்ருன் ஆஜாத்சத்ரு.

''பழைய கதையை நான் ரசிப்பதில்லை இளவரசே? இன்று மங்களகிரியில் வீட்டுக்கு வீடு ஒரு ஆயுதசாலை!'' என்று ஆஷா சொல்லவும் உக்கிரசேனரும் மலயத்வஜ னும் அங்கு வந்து சேரவும் சரியாயிருந்தது.

''ராணியாருக்கு கொஞ்சம் அரசியல் பாடம் படித்துவையுங்கள் நண்பரே! மகதத்தைப் பகைத்துக் கொள்ள மனதினல் நினைப்பதே நல்லதில்லையென்பதை ராணியாருக்கு உணர்த்துவது உங்கள் பொறுப்பு!'' என்று மலயத்வஜனிடம் சொன்னன் ஆஜாத்சத்ரு.

அதற்குமேல் அங்கிருக்கவிரும்பாமல் உக்கிர சேனரை அழைத்துக்கொண்டு தங்களுக்காக ஒதுக்கப் பட்ட விடுதிக்குச் சென்றுவிட்டான் ஆஜாத்சத்ரு. அவர் கள் அங்கிருந்து தங்கள் விடுதிக்குத் திரும்பியபொழுது ஒரு வார்த்தைதானும் பேசவில்லை. இருவருடைய மனதி லும் பல்வேறு மாதிரியான விஷயங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன. இந்த ஆழ்ந்த சிந்தனையில் மலயத் வஜன் தனிமையில் அழைத்துப்போய் என்ன சொன் னென்று ஆஜாத்சத்ருவோ' அல்லது திமிர் பிடித்த ராணி ஆஷா மரியாதைக் குறைவாக வேறு ஏதும் சொன் ளை என்று உக்கிரசேனரோ இருவருமே கேட்டுக் கொள்ளவில்லை.

அவர்கள் தங்களுடைய விடுதிக்குள் பிரவேசித்த பொழுது அவர்களுக்கு அங்கே ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

விடுதியை அடைந்தபொழுது அதன் வாசற்கதவு பூட்டப்படாமல் வெறுமனே சாத்திவைக்கப்பட்டிருந்தது. கதவைத் திறந்துகொண்டு முன்னுல் உக்கிரசேனரும், அவரைத் தொடர்ந்து ஆஜாத்சத்ருவும் உள்ளே போனுர்கள். முதலாவது தாழ்வாரத்தைத் தாண்டி முன்புற மண்டபத்தில் ஒரு அடி எடுத்துவைத்த உக்கிரசேனர் பளிச்சென்று பின்னுல் நகர்ந்துகொண்டார்.

''தம்பி! சற்று நில்! அதோ மண்டபத்தின் நடுவிலே என்ன தெரிகிறது பார்!'' என்றுர் உக்கிரசேனர்' ஆஜாத்சத்ருவை உள்ளே போக விடாமல் தடுத்து நிறுத்திக்கொண்டு.

அவர் சுட்டிக்காட்டிய திசையில் இளவரசன் கவனத்தைச் செலுத்தினுன். மண்டபத்தில் விரித்திருந்த விலைமதிப்புமிக்க இரத்தினக்கம்பளத்தின் நடுவிலே காட்டு ஆனை போலத் தோற்றமளித்த ஒரு மனிதன் அனுயாசமாகப் படுத்துக் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் இரண்டு பிரம்புப் பெட்டிகள் இருந்தன. அந்தப் பெட்டிகளையும் படுத்திருந்தவனின் கோலத்தையும் கண்ட மாத்திரத்தில் அவன் ஒரு பாம்புப் பிடாரனுக இருக்கவேண்டுமென்றும், அவனருகிலுள்ள பெட்டிக்குள் கொடிய விஷப் பாம்புகள் இருக்கவேண்டுமென்றும் சுலபமாக எவரும் ஊகித்துக்கொள்வர்.

''நமக்கு என்று ஒதுக்கிய விடுதியில் பாம்பாட்டிக்கு என்ன வேலை? மங்களகிரியில் அடியெடுத்துவைத்த நிமிடம் முதல் அடுத்தடுத்து பல அதிர்ச்சிகள் நமக்கு ஏற்படுவதைக் கவனித்தால் இந் நாட்டில் மகதத்துக்கு விரோதமாக ஏதோ ஒரு பெரிய சதி உருவாவதைப் போலிருக்கிறது! ராணியாலுல் என்ன பேசுகிருேமென்று தெரியாமல் தாறுமாருகப் பேசுகிருள்!......

இவ்வாறு ஆஜாத்சத்ரு சொல்லுகையில் குறுக்கே இடைமறித்த உக்கிரசேனர், ''ராணி ஆஷா தாறுமாறுகப் பேசுகிருளென்பதை நீ உணர்ந்துகொண்ட மட்டில் எனக்குப் பரம சந்தோஷம் தம்பி! அவளுடைய மயக்கு விழிகளில் அவமதிப்பையும் மரியாதை மொழிகளாக மனம் உவந்து ஏற்றுக்கொண்டிருப்பாயோ என்று நினைத்தேன். ராணியாரின் போக்கையும் நம் விடுதியிலே நமக்கு முன்னதாக கொடிய சர்ப்பங்களுடன் பிடாரன் வந்து காத்திருப்பதையும் சேர்த்துக் கணக்குப் போட்டுப்பார்! ராணியிஞல் ஏவப்பட்டு இம் மனிதன் இங்கு வந்திருக்கவேண்டும். நம்மை எதிர்பார்த்து நீண்ட நேரம் காத்திருந்துவிட்டு தன்னையறியாமலே ஆயாசமிகுதியில் அசந்து உறங்கிப்போயிருக்கவேண்டும்!'' என்ருர் உக்கிரசேனர்.

',ராணி ஏவியவஞக இருந்தால் இப்படி நடுமண்டபத்தில் படுத்துறங்குவாஞ? பதுங்கியிருந்துவந்து காரியத்தை நிறைவேற்றவேண்டியவன் வாசற் கதவையும் தாளிடாமல் விட்டு இப்படி நம் பார்வையில் படுமாறு கிடப்பாஞ?'' என்று சந்தேகக் குரல் எழுப்பிஞன் ஆஜாத்சத்ரு.

''எப்படியும் இவன் மூலம் நமக்கு உபயோகமான சில தகவல்கள் கிடைக்கலாம்'' என்று கூறிய உக்கிரசேனர் ''டேய்! எழுந்திரு!'' என்று கூச்சலிட்டார்.

படுத்திருந்தவன் அடித்துப் புரண்டுகொண்டு எழுந்து கண்களைக் கசக்கியவாறு எதிரே நிற்பவர்களை ஏறிட்டுப் பார்த்தான். பரபரப்புடன் பாம்புப் பெட்டிகளை எடுக்க அவன் நகர்ந்தான். ஆஞல் உக்கிரசேனர் பாம்புப் பெட்டிகளினருகில் செல்ல முடியாதபடி அவனைத் தடுத்து ''உயிரிடம் உனக்கு ஆசையிருந்தால் அந்தப் பெட்டிகளில் என்ன இருக்கிறதென்று உடனே சொல்லு'' என்று மிரட்டிஞர்.

''என்ன கேள்வி கேட்கிறீங்க எசமான்! பாம்புப் பெட்டிக்குள் பாம்புகள் இல்லாமல் வேறு என்ன இருக்

கும்? நல்ல பாம்பு, நாக பாம்பு, கொம்பேறி மூக்கன், கரும் பாம்பு, சாரை எல்லா ஜாதிப் பாம்புகளும் இருக்கு எசமான்! திறந்து காட்டுகிறேன் பார்க்கிறீங்களா? காட்டிலிருந்து புத்தம் புதிதாகப் பிடித்து வந்தவை எல்லாப் பாம்புகளும்!'' என்முன் அவன்.

எதிரில் நிற்பவர்கள் யார்? என்பதைத் தெரிந்து கொண்டதைப் போலவே அவன் காட்டிக்கொள்ளவில்லை.

''இவைகளோடு இங்கு எதற்காக நீ வந்தாய்? நீ யார்?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''நான் யாரென்று எசமானுக்குச் சொல்லவேண்டியதில்லை. பார்த்தாலே தெரியலே? நான் ஒரு பாம்புப் பிடாரன். இல்லாட்டி பாம்புப் பெட்டியோடு ஏன் வரப் போறேன்? இங்கு ஏன் வந்தேனென்றுதானே கேட்கிறீங்க எசமான்! அது பெரிய ரகசியம். சொன்னுல் தலை காணுமற்போயிடும்! எசமான் காணுமற்போயிடும்'' என்று நடித்தான் அம் மனிதன்.

''அப்படியா? சொன்னுல் சற்று நேரம் கழித்து காணுமற்போகும் தலை, சொல்லாவிட்டால் இப்பொழுதே இங்கேயே காணுமற் போய்விடும்!'' என்று மிரட்டியவாறு வாளை உருவியெடுத்தார் உக்கிரசேனர்.

அவருடைய பட்டாக்கத்தி அம் மனிதனைப் பீதியில் ஆழ்த்தியிருக்கவேண்டும். இரண்டு கரங்களையும் குவித்தவாறு தரையில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியவண்ணம் ''எசமான்; என்னைக் காப்பாத்தனும்! இந்த ஏழையைக் காப்பாத்தனும்!'' என்று புலம்பவாரம்பித்தான்.

''அப்படியானுல் உண்மையைச் சொல்லு. நீ யார்? எதற்காக இங்கு வந்தாய்? உன்னை இங்கு யார் அனுப்பினுர்கள்? உன்னை நாங்கள் காட்டிக் கொடுக்கமாட்டோம். தைரியமாகச் சொல்லு!'' என்று அவனுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் நயமாகவும், குழைவாகவும் பேசினுர் உக்கிரசேனர்.

''நிசத்தை அப்படியே சொல்லிவிடுகிறேன் எசமான்! அதுக்கு முன்னாடி நீங்கள் இந்த நாட்டவர்களா அல்லது மகத நாட்டவர்களா என்பதைச் சொல்லவேண்டும் என்றான் அவன்.

உக்கிரசேனரும், ஆஜாத்சத்ருவும் ஒரு விநாடி ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். பிறகு, ''நாங்களும் இந் நாட்டவர்கள் தான். மகத நாட்டிலிருந்து வந்திருப்பவர்களுக்கு ஏவல் புரிவதற்காக மகாராணி ஆஷா தேவியார் எங்களை அமர்த்தியிருக்கிறார்கள்!'' என்றார் உக்கிரசேனர்.

''அப்ப நீங்களும் நம்ம ஆட்கள் தானென்று சொல்லுங்கள். அப்படியானால் உங்களிடம் எனக்கு என்ன பயம்? உங்கள் மாதிரி நானும் மகாராணிக்கு ஏவல் புரியும் ஆள் தானே?'' என்றான் அம் மனிதன். மனதிலிருந்த பெருங்கனம் நீங்கியவனைப் போல் அவன் முகம் இப்பொழுது மலர்ந்திருந்தது.

'ராணியார் அனுப்பியா நீ இங்கு வந்தாய்? உன்னை அனுப்பியிருப்பதாக ராணியார் எங்களிடம் சொல்லவில்லையே?' என்று ஆரம்பித்தார் உக்கிரசேனர்.

'அதெப்படிச் சொல்லுவாங்க! என்னிடம் கொடுத்திருப்பது எத்தனை பொறுப்புள்ள வேலை தெரியுமா?' என்று தற்பெருமையுடன் ஒரு வெற்றிப் புன்னகை செய்தான் அம்மனிதன்.

'இங்கு இளவரசர் வந்தால் அவர் மீது பாம்பை ஏவிவிட்டுக் கடிக்கச் செய்வது ஒருபெரிய வேலையா? இதை நான் கூடத்தான் செய்திருப்பேன்' என்றார் உக்கிரசேனர்.

'மறைந்திருந்து சமயம் பார்த்து படுக்கையறைக்குள் பாம்பை விடுவது பெரிய வேலையில்லை எசமான். அதைச் செய்ய என்மாதிரியான சாமர்த்தியசாலிகள் தேவையில்லை. பாம்பைப் படுக்கையறைக்குள் விடவும் வேண்டும். அந்தப் பாம்பு இளவரசரைக் கடிக்கவும் கூடாது. இளவரசர் இங்கு வந்து உயிரை விட்டுவைத்

தால், மகதச் சக்கரவர்த்தி சும்மாயிருப்பாரா! மங்களகிரியைச் சுட்டுப் பொசுக்கி சுடுகாடாக்கி விடமாட்டாரா? ராணியார் போடும் திட்டம் இத்தனை பெரிய முட்டாள் தனமானதில்லை எசமான்! மகதத்தை விதர்ப்பத்துடன் மோதவிட்டு அவ்விரு அரசர்களும் அழிந்தொழிவதை தூரத்தில் நின்று வேடிக்கை பார்க்க ஒரு அருமையான திட்டம் போட்டிருக்கிறார். அதன் வெற்றியும் தோல்வியும் என் கையில் தான் இருக்கிறது' என்றான் பாம்பாட்டி.

'உன் ஒருவனால் எப்படி இரு பெரிய வல்லரசுகளை மோதிக்கொள்ளச் செய்யமுடியும்? நீ சொல்லுவது ஒன்றும் புரியவில்லையே!' என்றார் உக்கிரசேனர்.

''அதுதான் எசமான் சாமர்த்தியம்! படுக்கையறையில் பாம்பை விட்டு அது இளவரசருக்கும் தெரியும்படி நான் சத்தம் செய்ய வேண்டும். என்னை உடனே அவர் பிடித்து விசாரிப்பார். பயந்துகொண்டு உண்மையைக் கூறுவது போல நான் பேசவேண்டும். இளவரசரைத் தீர்த்துக்கட்டுவதற்காக விதர்ப்பத்திலிருந்து வந்த உளவாளியாக நான் நடிக்கவேண்டும். என்னைப்போல இன்னும் பல உளவாளிகள் இளவரசரைப் பின் தொடருவதாயும் சொல்லவேண்டும். இளவரசர் என்னைக் கைது செய்து மகாராணி ஆஷாவிடம் ஒப்படைப்பார். மகாராணி என்னைச் சிறையில் இடுவதைப்போல பாவனை செய்து பெரும் சன்மானத்துடன் விட்டுவிடுவாள். விதர்ப்பத்தின் மீது இளவரசருக்கு எத்தனை வெறுப்பை உண்டு பண்ணமுடியுமோ அவ்வளவையும் செய்ய மகாராணி இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுவார். நான் திறமையாக நடிப்பதைப் பொறுத்திருக்கிறது இத் திட்டம் வெற்றி பெறுவது!'' என்று ஒரு நீண்ட பிரசங்கம் செய்தான் பாம்பாட்டி.

''இவன் சொல்லியதை எல்லாம் கேட்டாயா தம்பி!'' என்று ஆஜாத்சத்ருவிடம் உக்கிரசேனர் கேட்ட பொழுது அந்தப் பாம்பாட்டி திடீரென்று விடுதியே

கிடுகிடுத்துப் போகும்படி வாய்விட்டுக் கலகலவென்று சிரித்தான். திடீரென்று பைத்தியம் பிடித்துவிட்டவனைப் போலச் சிரித்தான். முற்றிலும் எதிர்பாராத விதமாக மூளை புரண்டு போய் விட்டவனைப்போல் சிரித்தான்.

"நிறுத்து! நிறுத்து உன் பேய்ச் சிரிப்பை!" என்று கர்ணகடூரமாக உக்கிரசேனர் முழங்கவே, "சட்டென்று சிரிப்பை அடக்கிக் கொண்ட பாம்பாட்டி, "சேனாதிபதி யாருக்கு இன்னுமா நான் யாரென்று தெரியவில்லை! இளவரசருக்குக்கூட என்னைத் தெரியவில்லையா?" என்று குரலை மாற்றிக்கொண்டு கேட்டான்.

"அடப் பாவி! நீயா?" என்று ஆச்சரியத்துடன் கேட்ட உக்கிரசேனர் வாயடைத்துப்போய் நின்றார். அவரைப் போலவே ஆஜாத்சத்ருவும் வியப்படைந்தவனைப்போலத் தென்பட்ட பொழுதிலும், அவன் கவனம் வேறு எங்கோ ஈடுபட்டிருந்தது.

"ஆம்! நான்தான் சேனாதிபதியாரே! உங்கள் ஊழியன் சிம்மநாதனேதான்!" என்று சொல்லிக் கொண்டு தலையில் கட்டியிருந்த முண்டாசையும், பொய் மீசையையும் கழற்றினான் பாம்பாட்டி வேஷத்திலிருந்த மனிதன்.

"எங்களைச் சரியாக ஏமாற்றிவிட்டாய் சிம்மநாதா! இதெல்லாம் என்ன நாடகம்? விளக்கமாகச் சொல்லு!" என்று விசாரித்தார் உக்கிரசேனர்.

"நான் போட்டிருந்ததுதான் வேஷமே தவிர, நடித்ததெல்லாம் அத்தனையும் உண்மை சேனாதிபதி? இளவரசரும் தாங்களும் அந்தி மயங்கிய பிறகு, அரண்மனைக்குப் போகலாம் என்று கானகப் பகுதியிலே ஓய்வெடுத்துக் கொண்டிருந்தீர்களல்லவா! உங்களுக்கு முன்னால் வழக்கமான என் வேலையைக் கவனிக்க இந்த வேஷத்துடன் நகரத்தில் பிரவேசித்தேன். வேடிக்கை காட்டிக் கொண்டே சனங்களுடன் நெருங்கிப் பழகினால் மகதத்தைப் பற்றி நாட்டில் நிலவும் அபிப்பிராயத்தை ஓரளவு தெரிந்து கொள்ள

லாம் என்று நினைத்தேன். ஒரு பயங்கரமான சதித் திட்டம் தற்செயலாக என்னை வந்தடைந்தது. பல வீதிகளில் பாம்பை ஆட்டிக் காட்டிவிட்டு, அரண்மனையின் அருகில் ஒரு சிறு கூட்டத்தைக் கூட்டி வேடிக்கை காட்டினேன். உப்பரிகையிலிருந்த மகாராணி ஆஷாதேவியார் என்னைப் பார்த்திருக்க வேண்டுமென்று நினைக்கின்றேன். மகாராணிக்குப் பாம்புகளை ஆட்டிக் காட்ட வேண்டுமென்று ஒரு தோழிப் பெண் வந்து என்னை அழைத்துச் சென்றாள்.

''என்னைப் பார்த்து, 'நீ இந்த நாட்டைச் சேர்ந்தவனாகத் தெரியவில்லையே' என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டு விட்டார் ராணி. நான் விதர்ப்ப நாட்டவனென்றும், பாம்பாட்டிக் காட்டுவது என் தொழிலென்றும் சொன்னேன்.''

''இந்தத் தொழிலை விட்டுப் பெரிய சீமானாக வாழ உனக்கு விருப்பமில்லையா? நான் சொல்லுகிறபடி செய்தால் ஆயிரம் பொற்காசுகள் கொடுக்கிறேன். தவறு விட்டாயோ தலை போய்விடும்! என்ன சொல்லுகிறாய்?' என்று கேட்டார். என்னைக் குடைந்து குடைந்து விசாரித்த பின்னர் இந்த வேலையை என்னிடம் ஒப்படைத்தார். நாளைக் காலை என்னை, மகாராணியாரிடம் நீங்கள் ஒப்படைத்துவிட்டால் என் வேலை வெற்றி பெற்றமாதிரி'' என்றான் சிம்மநாதன்.

சற்றுமுன் அவன் சிரித்ததைப் போல ஆஜாத்சத்ரு வாய்விட்டுச் சிரித்தான்.

''இந்த மண்டபம் எல்லோரையும் பைத்தியக்காரர்களாக்கிவிடும்போலிருக்கிறது. சற்றுமுன் சிம்மநாதன் இடி இடி என்று சிரித்தான். இப்பொழுது என்னடாவென்றால் நீ சிரிக்கிறாய். நான் ஒருவன்தான் மிகுதி!'' என்று கடிந்து கொண்டார் உக்கிரசேனர்.

''சிரிக்காமல் வேறு என்ன செய்யச் சொல்லுகிறீர்கள் மாமா? இந்த முட்டாள் சதி நாடகத்தில் மிகத் திறமையாக நடித்து ஒரு மாபெரும் வெற்றியை ஈட்டிவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறான்'' என்றான் ஆஜாத்சத்ரு.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் இளவரசே? என் நடிப்பில் என்ன குறை? நான் இந்த வேஷத்தில் கண்டறிந்த விஷயங்கள் பயனற்றவைகளா?" என்று சிம்மநாதன் வினவிய பொழுது அவன் குரலிலும், முகத்திலும் ஏமாற்றம் பிரதிபலித்தது.

"நீ அறிந்து சொல்லிய விஷயங்கள் பயனுள்ளவைதான் சிம்மநாதா! ஆனால் உன் நடிப்பை மிஞ்சிவிட்டது ஆஷாதேவியாரின் நடிப்பு என்றுதான் சொல்லுகிறேன்" என்று சொன்னான் இளவரசன்.

"அப்படியென்றால், நீ என்ன சொல்லுகிறாய் தம்பி?" என்று ஒன்றும் விளங்காமல் விசாரித்தார் உக்கிரசேனர்.

"என்ன சொல்கிறேனென்று கேட்கிறீர்கள்? சொல்லவில்லை' காட்டுகிறேன். என் பின்னால் வாருங்கள்" என்று கூறிய ஆஜாத்சத்ரு, அவ்விருவரையும் அழைத்துக் கொண்டு மண்டபத்தின் மறு புறத்துக்குச் சென்றான்.

அம் மண்டபத்தில் இரண்டு ஆட்கள் சேர்ந்தாலும் கட்டிப் பிடிக்க முடியாத அளவு பருமனுடைய பிரமாண்டமான கற்றூண்கள் பல இருந்தன. அவை ஒவ்வொன்றும் ஆலயத் தூண்களைப்போல அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடன், சிற்பங்களுக்குத் தகுந்த வர்ணப் பூச்சு மினு மினுவென்று பிரகாசிக்க பார்வைக்கு நேத்திரானந்தமான காட்சியாயிருந்தன.

மண்டபத்தின் மறு கோடியை அடைந்த ஆஜாத்சத்ரு, ஒரு தூணின் பின்னால் உதிர்ந்து கிடந்த புஷ்பங்களைக் காட்டி, "பார்த்தீர்களா மாமா! இங்கு புஷ்பங்கள் எப்படி வந்தன? ஏன் வந்தன?" என்று கேட்டான். உக்கிரசேனரிடமிருந்து இக் கேள்விக்கு ஆஜாத்சத்ரு பதிலை எதிர் பார்க்கவில்லை.

விடுதியின் பின்புறத்தை நோக்கி அவன் முன்செல்ல அவனைத் தொடர்ந்து உக்கிரசேனரும், சிம்மநாதனும் சென்றார்கள்.

விடுதியின் பின்புறக் கதவு திறந்திருந்தது. வெளியே ஆஜாத்சத்ரு குனிந்து பார்த்தான். பார்த்துவிட்டு, உக்கிரசேனரை அழைத்து, "மாமா! நீங்களும் பாருங்கள். தரையில் என்ன தெரிகிறது?" என்று கேட்டான்.

"ஒரு பெண்ணின் காலடிச் சுவடு!" என்றார் உக்கிர சேனர்.

"நன்றாகக் கவனித்துப் பாருங்கள் மாமா! அந்தப் பெண் விடுதிக்கு வரும்பொழுது ஏற்பட்ட சுவடுகளா அல்லது போகும்பொழுது ஏற்பட்ட சுவடுகளா?" என்று மீண்டும் கேட்டான் ஆஜாத்சத்ரு.

"போகும்பொழுது ஏற்பட்ட சுவடுகள்தான். குதிக்கால் விடுதியின் பக்கம் இருக்கிறது. அங்கே பார் தம்பி! அந்தப் பக்கமாக இன்னும் யாரோ விடுதியிலிருந்து வெளியேறிப் போயிருக்கிறார்கள்! அது யாராயிருக்கும்?" என்று கவலையுடன் வினா எழுப்பினார் உக்கிரசேனர்.

"அது என் மெய்ப் பாதுகாவலன். விடுதியிலிருந்து போயிருக்கிறான்; சற்று நேரத்தில் அவன் தகவல் கொண்டு வருவான். இந்த விடுதிக்கு சிம்மநாதனை ஏவிய ஆஷா தேவி, அவனிடம் நம்பிக்கை வைத்தபொழுதிலும், அவனுடைய திறமையில் பரிபூரண நம்பிக்கை வைக்கவில்லை. ஒப்படைத்த வேலையைச் சரியாக அவன் செய்து முடிக்கிறானா என்பதைக் கண்காணிக்க அவனுக்கு முன்னால் ஒரு பெண் உளவாளியையும் ஆஷாதேவி அனுப்பியிருக்கிறாள். அந்தப் பெண்மணி, சிம்மநாதனுக்கு முன்னதாகவே இங்கு வந்து தூரத்திலிருந்துகொண்டு இங்கு நடப்பதைக் கண் காணிக்க அதோ அந்தத் தூணுக்குப் பின்னால் மறைந்து கொண்டிருக்கிறாள். சிம்மநாதனுடன் நீங்கள் பேசிக் கொண்டிருக்கையில் அவளை நான் கவனித்தேன். நான் பார்ப்பதை அவள் அறியாமல் இருக்க வேண்டுமென் பதற்காக நீங்கள் பேசுவதைக் கவனித்துக் கொண்டே அவள்மீதும் ஒரு கண் வைத்திருந்தேன். அவளுக்கு சற்றுத் தூரத்துக்கப்பால் என்னுடைய மெய்ப் பாதுகாவலன்

மறைந்திருப்பதையும் தெரிந்து கொண்டேன். இப்பொழுது சொல்லு சிம்மநாதா, நானே உன்னை ஆஷா தேவியிடம் ஒப்படைக்க வேண்டுமா வேண்டாமா? இதற்குள் உன் சாயத்தை புடவை கட்டிய ஒரு பெண்மணி அரண்மனையில் வெள்ளை வெளேரென வெளுத்திருப்பாள். இராணியை ஏமாற்றி விட்டதாக நீ எண்ணிக்கொண்டிருக்கிறாய். ஆனால் இராணி உன்னை மிஞ்சிவிட்டாள். உளவு பார்த்த பெண்ணைத் தொடர்ந்து போயிருக்கும் என் மெய்ப் பாதுகாவலனும் உன்னைப்போல ஏமாந்த சோணகிரியாகத் திரும்பி வந்து சேர்ந்தால் நான் ஆச்சரியப்பட மாட்டேன்'' என்றான் ஆஜாத்சத்ரு.

இதை அவன் சொல்லி முடிக்கையில், சற்றுத் தூரத்துக்கு அப்பாலுள்ள புதரில் சலசலப்புச் சத்தம் கேட்டது. ஆஜாத்சத்ருவின் மெய்ப் பாதுகாவலனாக இருப்பின், அவன் மறைந்து கொண்டுவரத் தேவையில்லையாதலால் புதரை நோக்கி உக்கிரசேனர் உருவிய வாளுடன் பாய்ந்தார்.

''யார் உள்ளே!'' என்று அதட்டிக் கேட்டார் சேனாதிபதி.

புதருக்குள் மறைந்திருந்த மனிதன், அவர்கள் யாரென்பதை அவர்களுடைய குரலைக்கொண்டு தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.

''நான்தான்! அமரகோசன்!'' என்று அவன் உள்ளே இருந்துகொண்டே பதில் கொடுத்தான். பிறகு செடிகளை விலக்கிக்கொண்டு அவன் வெளியே வந்தான்.

இதற்குள் அவர்கள் அருகில் வந்த ஆஜாத்சத்ரு, ''அமரகோசா! நீ அந்தப் பெண்ணைப் பின்தொடர்ந்து போயிருப்பாயென்றல்லவா நினைத்தேன்! நீ புதருக்குள் மறைந்து கொண்டு என்ன செய்கிறாய்? அவளைத் தப்பிப் போகவிட்டு விட்டாயா?'' என்று ஏமாற்றத்துடன் விசாரித்தான்.

''இல்லை பிரபு! அவளைத் தொடர்ந்து போகக்கூடிய அளவு தூரம் போய்விட்டுத்தான் வருகிறேன். இதோ, இந்தப் புதருக்குள் ஒரு சுரங்கப் பாதை இருக்கிறது. சுரங்கத்தின் மறு வாசல் அரண்மனைக்குப் பின்னால் இருக்கும் காளி கோவிலின் கர்ப்பக்கிரகத்தில் முடிகிறது. காளி மாதாவின் கருணையினால் என் கையிலிருந்து நழுவி விடப் பார்த்த பெண்ணை குறுக்கு விசாரணை செய்யும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது!'' என்றான் அமரகோசன்.

''பூர்வ பீடிகை இல்லாமல் நடந்தவற்றைச் சொல்லு'' என்று இளவரசன் கேட்கவும், அமரகோசன் பின் கண்டவாறு சொன்னான்.

''இந்த விடுதியைத் தங்களுக்காக ஒதுக்கியிருப்பதை அறிந்ததும் முன்னதாகவே இதைப் பார்வையிட நான் வந்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் வாசற்புற வழியாக ஒரு பெண் வந்தாள். முதலில் நான் அவளைச் சந்தேகிக்கவில்லை. தங்களுக்குப் பணி செய்ய அமர்த்தப் பட்டவளாக இருக்குமென்று நினைத்தேன். ஆயினும் அவள் பரக்கப் பரக்க விழித்துக்கொண்டு பார்த்த பார்வை சற்றுச் சந்தேகமாயிருந்தது. மண்டபத்தின் ஒரு கோடிக்குச் சென்று தூணுக்குப் பின்னால் மறைந்து நிற்கவே என் சந்தேகம் பலப்பட்டது. மேலும் சற்று நேரம் கழிந்த பின்னர் ஒரு பாம்பாட்டி விடுதிக்குள் வந்தான். விடுதியில் யாருமில்லை என்பதைத் தெரிந்து கொண்டு கம்பளத்தில் படுத்தான். படுத்தவன் அங்கேயே தூங்கிவிட்டான். சுமார் ஒரு மணி நேரமாகியும் தூணுக்குப் பின்னால் மறைந்து நின்ற பெண் நகராமல் அங்கேயே பதுமையைப் போல நின்று கொண்டிருந்தாள். அடிக்கடி அவள் வாசற்பக்கம் நோக்கியதைக் கண்டதும், அவள் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருக்கிறாளென்று தோன்றியது. அவள்மீது கொண்ட என் சந்தேகமும் பலப்பட்டது.

''பிறகு, நீங்களும், சேனாதிபதியும் வந்தீர்கள். பாம்பாட்டி வேஷத்திலிருந்த சிம்மநாதனுடன் நீங்கள் பேசி

யதையெல்லாம் தூண் மறைவிலிருந்த பெண் காது வைத்துக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். பிறகு, சந்தடியின்றி விடுதியின் பின்புறத்தை நோக்கிச் சென்று இந்தப் புதருக்குள் மறைந்தாள். சிறிது நேரமாகியும் அவள் வெளியே வராததினால் நானும் புதருக்குள் நுழைந்து பார்த்தேன், அங்கு ஒரு சுரங்கப் பாதை இருந்தது. அதன் வழியாகவே அந்தப் பெண் போயிருக்க வேண்டுமென்று முடிவு செய்து அவளை நெருங்க வேகமாகச் சென்றேன். சுரங்கத்தின் மறு வாசலில் இலேசான வெளிச்சம் வந்தது. மெல்ல உயரே தலையை நீட்டிப் பார்த்தேன். அது ஒரு காளி கோவிலென்பதும், காளிதேவியின் சிலைக்குப் பின்னால் நான் இருப்பதையும் தெரிந்து கொண்டேன். அப்பொழுதுதான் அப் பெண் கர்ப்பக்கிரகத்தைத் தாண்டி வெளியே போய்க் கொண்டிருந்தாள். அதிர்ஷ்டவசமாக எனக்கு ஒரு யோசனை உதித்தது.''

இப்படிச் சொல்லிக்கொண்டு வந்த அமரகோசன் திடீரெனக் குரலை மாற்றிக்கொண்டு ''பெண்ணே! இங்கே வா!'' என்று பெண் குரலில் சொன்னான்.

அமரகோசன் பெண் குரலில் பேசத் தொடங்கியதின் காரணத்தைப் புரிந்துகொண்ட இளவரசன், ''ஓஹோ! காளி மாதா கூப்பிடுவதைப் போல அந்தப் பெண்ணைக் கூவியழைத்தாய் போலிருக்கிறது'' என்றான்.

''ஆமாம் பிரபு! நான் அழைக்கவே, நடு ராத்திரியில் ஜன சஞ்சாரமற்ற காளிகோவிலில், அதிக வெளிச்சம் இல்லாத பயங்கரமான சூழ்நிலையில் நான் அழைத்த குரலைக் கேட்டதும், அப் பெண் சப்த நாடிகளும் ஒடுங்கிப்போய் நின்றாள். என்னுடைய அதிர்ஷ்டம்தான் அவள் பயப்பிராந்தியில் மூர்ச்சை போட்டு விழவில்லை. 'பயப்படாதே குழந்தாய்! அருகில் வா! உன்னை ஒன்றும் செய்யமாட்டேன் அஞ்சாமல் அருகில் வா' என்றேன். காளிதேவி பேசுகிறாள் என்றே அப் பெண் நினைத்தாள். பயந்து நடுங்கிக்கொண்டு சந்நிதியின் அருகில் வந்தாள்.''

"உன்னை யார் விடுதிக்கு அனுப்பியது? உண்மையைச் சொல். என்னிடம் பொய் சொன்னால் உயிரோடு இங்கிருந்து தப்பமாட்டாய். உண்மையைச் சொன்னால் என் அருள் என்றைக்கும் உனக்கிருக்கும்!" என்றேன்.

"ராணியார் அனுப்பினார்கள் தேவி! நான் அரண்மனைச் சேவகி. சொன்னதைச் செய்ய வேண்டியவள். நான் செய்தது தவறாயிருந்தால் மன்னிக்க வேண்டும் மாதா!" என்று நாக் குழற ஒருவாறு பேசினாள் அப் பெண்.

"விசுவாசமுள்ள ஊழியர்கள் சொன்னபடி செய்ய வேண்டியவர்கள். பாவ புண்ணியங்கள் எஜமானர்களைச் சேர்ந்தது. உன்னை எதற்காக விடுதிக்கு அனுப்பினாள் ராணி?" என்று கேட்டேன்.

விடுதியில் ஒரு பாம்பாட்டி இருப்பான். அவன் என்ன செய்கிறானென்பதை ஒருவருக்கும் தெரியாமல் கவனித்துக்கொண்டு வா என்று ராணியார் உத்தரவிட்டார் ஆனால்......"

"அந்தப் பாம்பாட்டி ராணி அனுப்பியவன் என்று நினைத்துப் போய், அவன் இளவரசர் கூட்டத்தைச் சேர்ந்தவனென்று கண்டு அசந்து போய்விட்டாய். அப்படித் தானா......?" என்று நான் கேட்டேன்.

"ஜகன் மாதா! உனக்குத் தெரியாமல் உலகத்திலே ஒரு அணுகூட அசையாதே! எல்லாம் தெரிந்திருந்தும் என்னை ஏன் சோதிக்கிறாய் தாயே!" என்று புலம்பினாள் அவள்.

"பாம்பாட்டியைக் கண்காணிக்குமாறு ராணி உன்னை எதற்காக அனுப்பினாள்?" என்று விடாமல் கேட்டேன்.

அது தனக்குத் தெரியாதென்று அவள் சொன்னாள். உண்மையிலேயே அவளுக்கு மேற்கொண்டு ஒன்றும் தெரியாது என்பதை அறிந்து கொண்டவுடன், "நான் சொல்லுவதைக் கவனமாகக் கேட்டுக்கொள்! ராணியிடம் நீ பார்த்ததையும் கேட்டதையும் மறைக்காமல் அப்படியே

சொல். ஆனால் என்னுடன் பேசியதைப் பற்றி மட்டும் ஒரு வார்த்தைகூடச் சொல்லக்கூடாது. வாய் தவறிச் சொன்னாலும் உன் தலை மறுவினாடி ஆயிரம் சுக்கலாக வெடித்து விடும். போ! உனக்கு என்ன துன்பம் வந்தாலும் என்னை மனதினால் நினை. உன் துன்பங்கள் பறந்துவிடும்!'' என்றேன். தப்பினால் போதுமென்று அவள் தலைதெறிக்க ஓடிவிட்டாள்.

இவ்வாறு அமரகோசன் தான் அறிந்து வந்த வரலாற்றை ஒரு கதைபோல எடுத்துக் கூறினான்.

''காளிதேவியின் கூற்றை, அந்தப் பெண், ஆஷா தேவியிடம் சொல்ல மாட்டாளென்று நீ எதிர்பார்க்கிறாயா? சிம்மநாதனைக் கவனிக்க ஒரு பெண்ணை அமர்த்தியதைப் போல, அந்தப் பெண்ணைக் கண்காணிக்க இன்னொருவரை ஆஷா அமர்த்தியிருந்தாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன். ஆஷாவின் அழகிலே நான் சொக்கிப் போய்ச் சித்தப்பிரமை கொண்டுவிட்டதாக மாமா வேண்டுமானால் நினைக்கலாம். ஆனால் அவளுடன் பேசிய ஒவ்வொரு வினாடியும் அவளை நான் எடைபோட்டுப் பார்த்துக்கொண்டிருந்தது அவளுக்கு எப்படித் தெரியப் போகிறது!'' என்றான் ஆஜாத்சத்ரு.

அவன் இதைச் சொல்லி வாய் மூடுகையில், புதருக்குள் இருந்து பலமாக யாரோ ஒருவர் இருமும் சத்தம் கேட்டது. அமரகோசனும், சிம்மநாதனும் புதருக்குள் மறைந்தார்கள்.

ஆஜாத்சத்ருவும், உக்கிரசேனரும் மட்டும் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்துக் கொண்டு வெளியே நின்றனர்.

''ஆஷாவைப் பற்றி நான் போட்ட கணக்குத் தப்புக் கணக்கில்லை என்பதையும் பார்த்தீர்களா? உளவறிய வந்த பெண்ணுக்கும் காவலை ஏற்படுத்தியிருக்கிறாள் ராணி'' என்றான் ஆஜாத்சத்ரு.

ஆஜாத்சத்ரு போடும் கணக்கு ஒருபோதும் தப்புக் கணக்காக இருந்ததில்லை. ஆனால் யானைக்கும் அடி சறுக்கும் என்பார்கள். அந்த மாதிரி இம்முறை ஆஜாத்சத்ருவின் கணக்குத் தப்புக் கணக்காகிவிட்டது. அவன் நினைத்த தைப் போல புதரில் ராணியாரின் ஆட்கள் யாருமில்லை. மங்களகிரியில் இருக்கும் மகத சாம்ராஜ்ய ராசப் பிரதி நிதி விஜயகேசரி, புதரின் இடதுபுறத்தின் வழியாக வெளியே வந்து இளவரசனுக்கு சம்பிரதாய முறைப்படி வணக்கம் தெரிவித்து நின்றார்.

''நீங்களா? மங்களகிரிக்கு நாங்கள் வந்து ஏழெட்டு மணி நேரமாகியும் உங்களைக் காணவில்லையேயென்று ஆச்சரி யப்பட்டுக் கொண்டிருந்தோம். நீங்களானல் முற்றிலும் எதிர்பாராத இடத்திலிருந்து வருகிறீர்கள். சுரங்க வழியா கச் சென்ற பெண்ணை நீங்கள் பார்த்தீர்களா?'' என்று வினவினான் இளவரசன்.

''அவளை, அரசி ஆஷாதேவியின் அந்தப்புர வாசல் வரையில் கொண்டுபோய் விட்டுத்தான் திரும்பி வருகிறேன். இந்த விடுதியில் நடக்கப்போகும் சம்பவங்கள் எனக்கு முன்னதாகவே தெரியும் பிரபு! அரண்மனையிலுள்ள நம் ஒற்றர் மூலமாக அரசியார் செய்த ஏற்பாடுகளை அறிந் தேன். அவைகளைச் சரி பார்க்கச் சுரங்க வாசலில் காத் திருந்தேன். எனக்குக் கிடைத்த தகவலின்படியே அரசியார் அனுப்பிய பெண் விடுதியின் பின்புற வழியாகச் சுரங்கத் தில் நுழைந்து அந்தப்புரத்துக்குச் சென்றாள். காட்டில் தங்களை இராணியார் சந்தித்த நிமிடம் முதல் அவளு டைய ஒவ்வொரு அசைவையும் நம் ஒற்றர்கள் கவனித்து வருகிறார்கள். இந்த வேலையில் ஈடுபட்டிருந்தபடியினால் தான் நான் தங்களை உடனே வந்து சந்திகக முடியவில்லை. மன்னிக்க வேண்டும்'' என்றார் விஜயகேசரி.

''ஆஷாவின் திட்டம்தான் என்ன? அவள் பெரும் படை திரட்டுகிறாளென்று சக்கரவர்த்தியாருக்கு ஓலை

அனுப்பியிருந்தீர்களே, ஆஷா யாரைத் தாக்கப் பெரும் படை திரட்டுகிருள்?'' என்று விசாரித்தான் இளவரசன்.

''அந்த ஒரு ரகசியத்தை மட்டுந்தான் ராணியாரிடமிருந்து இதுவரை கிரகிக்க முடியவில்லை. மனதிலிருக்கும் திட்டத்தை இதுவரையில் அவள் யாரிடமும் வெளியிடவுமில்லை. மன்னன் மலயத்வஜனுக்குக் கூட ராணியின் அந்தரங்கம் தெரியாதென்று நினைக்கிறேன். அவளுடைய சில காரியங்கள் மலயத்வஜனுக்கே பிடிக்கவில்லை. முதல் மனைவி இறந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னுல் ஆஷாதேவி, அரண்மனையில் அடியெடுத்து வைத்த நாள் முதல் அந்தப்புரம் சதிக்கூடமாக மாறியிருக்கிறது. ஆஷாதேவியை மலயத்வஜன் மணந்துகொண்டதே முதல் தவறு'' என்ருர் விஜயகேசரி.

''உங்கள் சக்கரவர்த்தியார் இரண்டு மனைவிகள் இருக்கையில் என் தாயாரை மணக்கவில்லையா? மூன்று மனைவிகள் போதாதென்று பிறகு விதர்ப்ப நாட்டு இளவரசியை மணந்தாரே! அப்பொழுது என் தாயாரையும், நாட்டு மக்களையும் கேட்டுக்கொண்டா திருமணம் செய்துகொண்டார்? அரசர்கள், அரசியல் காரணம் சொல்லிக்கொண்டு அந்தப்புரத்தை நிரப்புவது மகத நாட்டிலேயே வழக்கமாயிருக்கையில், மங்களகிரி மன்னன், முதல் மனைவிஇறந்த பிறகு மறுமணம் செய்து கொள்வதை நாம் எப்படித் தடுத்திருக்க முடியும்? ஆஷாவைக் கட்டுப்படுத்தி வைக்க மலயத்வஜனுல் முடியவில்லையென்பது வெளிப்படையாகவே தெரிகிறது. ஆஷாவுக்கு மகதத்தின்மீது எக் காரணத்திஞலோ அசாதாரணமான வெறுப்பு இருப்பதையும் அவளுடைய ஒவ்வொரு பேச்சும் காட்டுகின்றது. இருந்தாலும் மகதத்தின்மீது படையெடுக்கும் அளவுக்கு ஆஷாவிடம் துணிச்சலிருக்குமென்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டான் இளவரசன்.

''மகதத்துடன் நேரடியாக மோதுவது பாருங்கல்லில் தலையை மோதிக் கொள்வதைப் போன்றதென்பதை ஆஷா அறிந்திருக்கிருள். ஆகையால் மகதத்தை நேரடியாக

தாக்காமல், மகதத்துக்கும் விதர்ப்பத்துக்கும் ஒரு பெரிய யுத்தத்தைக் கிளப்பிவிடச் சதி செய்கிறார்கள் என்றே தோன்றுகிறது. ஒரே கல்லில் இரண்டு பழம் விழ வேண்டும். யுத்தம் நடந்து மகதமும் விதர்ப்பமும் பலவீனம் அடைய வேண்டும். இதே நேரத்தில் மகத ராஜ்யத்திலும் உள்நாட்டுக் குழப்பங்களுக்கு விதை விதைக்க வேண்டும். தற்சமயத்திற்கு இதுதான் ஆஷாதேவியாரின் திட்டம்'' என்றார் விஜயகேசரி.

''இவை எல்லாவற்றையும்தான் சக்கரவர்த்தியாருக்கு அனுப்பிய ஓலைகளில் ஏற்கனவே தெரிவித்திருக்கிறீர்களே! இவைகளைத் தவிர, புதிதாக ஏதாவது உண்டா என்று கேட்கிறேன்'' என்றான் இளவரசன்.

''புதிதாக நிறைய உண்டு பிரபு! ஆனால் அவைகளைக் கூற மனதில் தைரியமில்லை! நாவு கூசுகிறது! எப்படிச் சொல்வதென்று புரியவில்லை. சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை. ஏனென்றால் அவை பொது விஷயங்கள் அல்ல. அரண்மனை அந்தப்புர விஷயங்கள். தங்களுடைய அரச குடும்பத்துக்குள்ளேயே ஒரு மாபெரும் சதி, ஆஷா தேவியாரின் முயற்சியினால் உருவாகிக் கொண்டிருக்கிறது'' என்று புதிர்போட்டுப் பேசினார் ராஜப் பிரதிநிதி.

இவ்வளவு நேரமும் ஆஷாவின் உளவாளியைத் தேடிக் கொண்டு சுரங்க வழியாகப் போயிருந்த சிம்மநாதனும், அமரகோசனும் ஒரு இளம் பெண்ணை, அதே சுரங்க வழியாக அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். அவளைக் கண்டதும், ''மாதுரி! நீயா? இவர்களிடம் நீ எப்படி அகப்பட்டாய்?'' என்று விசாரித்தார் ராஜப் பிரதிநிதி.

''காளி கோவிலுக்கு வெளியே இவள் நின்றாள். கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்ல மறுத்தாள். சந்தேகத்தின்மீது அழைத்து வந்தோம்'' என்றான் சிம்மநாதன்.

அவர்களை கொஞ்சமும் பொருட்படுத்தாமல், 'பாவம் அப்பாவி மனிதர்கள்! உன் நாட்டு உளவாளிகள் எல்

லோருமே இந்தப் புத்திசாலிகளைப் போலத்தான் இருப் பார்களோ!'' என்று கூறிவிட்டு அவர்களைப் பார்த்து ஏளன மாகப் புன்னகை செய்தாள் மாதுரி.

''காளி கோவிலுக்கு நீ எப்படி வந்தாய்?'' என்று கேட்டார் விஜயகேசரி.

''நீங்கள் காளி கோவில் வாசலில் இருக்கலாம் என்று சொல்லி உங்களிடம் அவசரமாகச் சேர்ப்பிக்க ஒரு ஓலை கொடுக்கப்பட்டது. காளி கோவிலுக்கு வந்து பார்த்தேன். நீங்கள் அங்கில்லை. விடுதிக்குப் போய்ப் பார்க்கலாமென்று திரும்பினேன். சுற்றிக்கொண்டு போக வேண்டாம். குறுக்கு வழி இருக்கிறது வா என்று உங்களுடைய ஆட்கள் சுரங்க வழியாக அழைத்து வந்தார்கள்'' என்று சொல்லிவிட்டு சிம்மநாதனையும் அமரகோசனையும் பார்த்து ''மிக்க நன்றி! நான் சேரவேண்டிய இடத்துக்கு சுலபமாக அழைத்து வந்துவிட்டீர்கள்!'' என்றாள் அவள்.

அவள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த இளவரச னுக்கு, 'இந் நாட்டுப் பெண்கள் எல்லோருமே வாய்த் துடுக்குக் காரிகள் போலிருக்கிறது! அவர்களிடம் நாம் சற்று எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும்' என்று தோன்றி யது. ''யார் இந்தப் பெண்? உங்களுக்கு மிகவும் பரிச்சய மானவள் போலிருக்கிறதே!'' என்று கேட்கும் பாவனையில் விஜயகேசரியைத் திரும்பிப் பார்த்தான் ஆஜாத்சத்ரு.

''இவளுடன் இங்கு பேசக்கூடாது. தயவு செய்து உள்ளே வாருங்கள்'' என்று சொல்லிய ராஜப் பிரதிநிதி, சிம்மநாதனையும், அமரகோசனையும் பார்த்து, ''மாதுரியை நீங்கள் இங்கு அழைத்து வந்தது யாருக்கும் தெரியக் கூடாது. அவள் பெயரையே மறந்துவிட வேண்டும். ஜாக் கிரதை'' என்று எச்சரித்தார்.

''இளவரசர், உக்கிரசேனர் ஆகியவர்களுடன் மாதுரி யையும் விடுதிக்கு அழைத்துச் சென்ற விஜயகேசரி சுற்று முற்றிலும் பார்த்து அருகில் ஒருவருமில்லை என்பதை உறு

திப்படுத்திக் கொண்டு, "ஓலை எங்கே மாதுரி! இந் நேரத்தில் வரும் ஓலையில் மிக முக்கியமான விஷயம் அடங்கியிருக்க வேண்டும்" என்றார்.

முத்திரையிட்ட ஒரு சிறு பட்டுப் பையை மாதுரி கொடுக்க, அதைக் கிழித்து, ஓலையை வெளியில் எடுத்து முதலில் தானே மனதுக்குள் வாசித்தார் விஜயகேசரி. வாசிக்கும்பொழுது அவர் முகம் விகாரத் தோற்றம் அடைந்ததைக் கவனித்த ஆஜாத்சத்ருவும், உக்கிரசேனரும் மிகுந்த பரபரப்படைந்திருந்தார்கள்.

"அனர்த்தம், பிரபு! மிகப் பெரிய அனர்த்தம்! எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை, ஓலையை நீங்களே வாசித்துப் பாருங்கள்!" என்று சொல்லி, ஓலையை இளவரசரிடம் கொடுத்தார் ராஜப்பிரதிநிதி.

விஜயகேசரி கொடுத்த ஓலையை உக்கிரசேனரும் கேட்கும்படி சற்று உரக்கப் படித்தான் ஆஜாத்சத்ரு. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

ஓம் சுத்த சக்தி!

இந்த ஓலையை தாஸி மாதுரி மூலம் அவசரமாக அனுப்புகிறேன். மகத ராஜ குடும்பத்துக்குள் பிளவையும் மனத்தாங்கலையும் உண்டுபண்ண ஆஷாதேவியார் சாதுரியமாகச் சதிசெய்து கொண்டிருக்கிறார். அவரது முயற்சி ஓரளவு பலன் கொடுக்க ஆரம்பித்து விட்டதைப் போலவும் தோன்றுகிறது.

இளவரசர் ஆஜாத்சத்ரு முற்றிலும் எதிர்பாராதவிதமாக மங்களகிரிக்கு விஜயம் செய்துள்ளபோதிலும் ராணியார் சம்பந்தப்பட்டவரையில் இது எதிர்பாராத விஜயமல்ல. திறமை மிக்க அவரது உளவாளிகள் மூலம் இளவரசர் இங்கு வரப் போவதைப்பற்றி பல தினங்களுக்கு முன்னரே ராணியாருக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இளவரசர் இங்கு விஜயம் செய்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னால் அவரது தம்பியாரை ராஜகிருகத்திலிருந்து விருந்

தினராக அழைத்து, மிகப் பெரிய தோரணையில் வரவேற்பு வைபவங்கள் நடத்தி ராசோபசாரம் செய்ய வேண்டுமென்பது ஆஷாதேவியாரின் திட்டம். தம்பியை உபசரித்து அண்ணனை அலட்சியம் செய்தால், அண்ணன் தம்பிகளுக்கிடையில் மனத்தாங்கல் ஏற்படுமென்றும் அதை வேண்டிய விதத்தில் சூறையாடலாமென்றும் ராணியார் எண்ணி இருக்கிறார். இந்த எண்ணத்துடன் இளவரசர் ஜனகரை அழைக்க ராணியார் ராஜகிருகத்துக்கு அனுப்பிய தூதன் நல்ல செய்தியுடன் திரும்பி வந்திருக்கிறான். நாளை பிற்பகல் ஜனகர் மங்களகிரிக்கு வந்து சேருகிறாராம். அவருடைய வருகை இரண்டு நாள் பிந்திவிட்டதில் ராணியாருக்கு வருத்தம். ஆயினும் இளவரசர் ஆஷாத்சத்ரு இங்கு இருக்கையிலேயே அவரது தம்பியார் ஜனகர் வந்து சேருவதில் சற்றுமன ஆறுதல் நாளை மங்களகிரியைத் தேவலோகம்போல அலங்கரிக்கவும் ஜனகருக்கு பிரமாதமான வரவேற்பு அளிக்கவும் உத்தரவுகள் பறந்து கொண்டிருக்கின்றன. அரண்மனையில் ஒருபகுதி ஜனகருக்காக இரவோடு இரவாக அலங்கரிக்கப் படுகிறது. ஜனகரை அழைத்துவரும் ஊர்வலம், இளவரசர் ஆஜாத்சத்ரு தங்கியிருக்கும் விடுதியின் வழியாகச் செல்ல வேண்டுமென்பதும், அதைப் பார்த்து இளவரசர் ஆஜாத் சத்ரு பொருமவேண்டுமென்பதும் ராணியாரின் ஏற்பாடு. என்னைக் கேட்டால் இந்த அவமதிப்புக்குக் காத்திராமல் இள்வரசர் ஆஜாத்சத்ரு உடனே இங்கிருந்து புறப்பட்டு விடுவதுதான் நல்லதென்று நான் சொல்லுவேன். பிறகு அவர் இஷ்டம்.

ஓம் சுத்த சக்தி.

இக் கடிதத்தை ஆஜாத்சத்ரு படித்து முடித்ததும் சில நிமிட நேரம் கற்சிலையாகச் சமைந்துபோய் நின்றான். அதற்கிடையில் இடுப்பில் சொருகியிருந்த பட்டுப் பையிலிருந்து கை நிறையப் பொற்காசுகளை அள்ளி, மாதுரியிடம் கொடுத்த விஜயகேசரி, "உன் உதவிக்கு மிக்க நன்றி மாதுரி! இனி நீ போகலாம். விடுதியின் வாசல் வழியாகப்

போக வேண்டாம்! காளி கோவில் வழியாகப் போ!'' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தார். பிறகு இளவரசன் பக்கம் திரும்பி, 'தம்பி! ஆஷாவின் போக்கு விபரீதமாக அல்லவா போய்க் கொண்டிருக்கிறது!' என்றார்.

''அந்த முட்டாள் ஜனகன் எதற்காக இங்கு வர ஒப்புக் கொண்டான்? அப்பா சொல்லித்தானே நான் இங்கு வந்தேன், அப்படியிருக்க ஜனகன், மங்களகிரிக்குப் போவதை அப்பாதான் எப்படி அனுமதித்தார்? எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது மாமா'' என்றான் ஆஜாத்சத்ரு.

''ஜனகன் சம்பந்தப்பட்ட மட்டில் நான் கொஞ்சமும் ஆச்சரியப்படவில்லை தம்பி. கொஞ்சக் காலமாக அவன் போக்கை நான் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். அங்கத்தின்மீது நீ படையெடுப்பை நடத்தினாய். ஒரு சில மணி நேரத்துக்குள்ளாக அந் நாட்டை நீ பணிய வைத்தாய். ஆகையால் அங்கத்தில் உன்னை ராஜப் பிரதிநிதியாக சக்கரவர்த்தியார் நியமித்தது எப்படிப் பார்த்தாலும் பொருத்தமானது. இல்லையா?'' என்று கேட்டார் உக்ரசேனர்.

''ஆமாம். அதற்கும், மங்களகிரிக்கு ஜனகன் வருவதற்கும் என்ன சம்பந்தம்? நான் என்னவோ கேட்டால் நீங்கள் என்னவோ சொல்லுகிறீர்களே!'' என்றான் இளவரசன்.

''அவசரப் படாமல் பொறுமையோடு கேள் தம்பி! அங்கத்துக்கு உன்னை ராஜப்பிரதிநிதியாக நியமிப்பதென்று தீர்மானித்தபொழுது அந்தப்புரத்தில் ஒரு சிறு சர்ச்சை ஏற்பட்டதாகக் கேள்வி. ஆஜாத்சத்ருதான் பட்டத்து இளவரசனாயிற்றே. இவனுக்குப் பட்டத்து இளவரசனென்ற ஒரு கௌரவம் போதாதா? அங்கத்துக்கு ஜனகனை ராஜப் பிரதிநிதியாக நியமித்தால் என்ன என்று அவன் தாய் விதர்ப்ப நாட்டு அரசகுமாரி அடம் பிடித்தார்களாம். ஆனால் சக்கரவர்த்திப் பெருமான் கேட்கவில்லை. ஆஜாத்சத்ரு எங்கே, உன் மகன் ஜனகன் எங்கே! ஆஜாத்சத்ருவைப் போல உன் மகனும் சேதி நாட்டை ஜெயித்துக்

கொண்டுவரட்டும். அதற்கு அவனையே ராஜப்பிரதி நிதியாக்குகிறேன். ஏன் உன் தகப்பனிடம் சொல்லி விதர்ப்பத்தில் ஒருபகுதியை உன் பிள்ளைக்குக் கொடுக்கச் சொல்லுவதுதானே! என்றுராம் சக்கரவர்த்தி. இந்தச் சர்ச்சை அன்றோடு முடிந்துபோயிருக்குமென்று நினைத்தேன். உன் சிற்றன்னையின் மனதிலே அன்று உதயமான களங்கம் இன்று விசுவரூபமெடுத்திருப்பதைப் பார்க்கிறேன்'' என்றுர் உக்கிரசேனர்.

'ஜனகன் மங்களகிரிக்குப் போவதை அப்பா எதற்காக அனுமதிக்க வேண்டும்? அவர் தடுத்து நிறுத்துவதற்கென்ன?' என்று கேட்டான் ஆஜாத்சத்ரு.

'இதற்கு இரண்டு மாதிரியான காரணங்கள் இருக்கலாம். ஒன்று ஜனகன் இங்கு வருவது அரசருக்குத் தெரியாமலேயே இருக்கலாம். அல்லது அரண்மனையில் உன் சிற்றன்னையின் கை இப்பொழுது கொஞ்சம் ஓங்கியிருக்கலாம். இரண்டு பெண்டாட்டிக்காரன் படும் அவதியைப் பற்றி நாம் எத்தனையோ கதைகள் கேட்டிருக்கிறோம். நான்கு பெண்டாட்டிக்காரன் எந்த மனைவியைத் திருப்திப்படுத்துவான்? உன் சிற்றன்னைக்கும் ஆஷாவுக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது தம்பி!' என்றுர் உக்கிரசேனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனகனைப் பற்றி சில விபரங்களைக் கூறுவது கதையின் போக்குக்கு அவசியமாயிருக்கிறது. மகதச் சக்கரவர்த்தி பிம்பிசாரனுக்கு நான்கு மனைவிகள். மூத்தவள் வைதேஹி நாட்டு மன்னனின் தங்கை வசந்திரா. இரண்டாமவள் குருபாஞ்சால மன்னன் மகள் கௌனந்தி. இருவருக்கும் ஆண் மகவு இல்லா

மல் போகவே கோசலை ராஜகுமாரி கோசலாதேவியை பிம்பிஸாரன் மணந்துகொண்டான். கோசலாதேவிக்குப் பிறந்தவன் தான் ஆஜாத்சத்ரு. நான்காவது மனைவியான வசுமதி விதர்ப்ப ராஜகுமாரி. அவளுக்குப் பிறந்தவன் ஜனகன். வயது சுமார் பதினெட்டு. இந்நான்கு திருமணங்களும் சுற்றியுள்ள நாட்டு மன்னர்களை மாமன்மார்களாக்கிக்கொண்டு அவர்களுடைய எதிர்ப்பு இல்லாமல் கீழ்த்திசையில் மகதத்தின் எல்லைகளை விஸ்தரிக்க வேண்டும் என்ற அரசியல் நோக்கம் கொண்டவையென்பதில் சந்தேகமில்லை. பிம்பிசாரனுக்குப் பெண் கொடுத்தவர்களும் கிட்டத்தட்ட இதைப்போன்ற அரசியல் இலட்சியங்கள் உடையவர்கள்தான்.

பிம்பிசாரனின் முதல் இரண்டு மனைவிகளுக்கும் பிள்ளை இல்லையாதலால் அவர்கள் அரசியல் தொடர்பின்றி அந்தப்புரத்தில் ராணிகளென்ற முறையிலேயே இருந்து வந்தார்கள். தன் மகனே மூத்தவனென்ற நினைப்பில் கோசலை ராஜகுமாரி எப்பொழுதும் அமைதியுடன் தான் இருந்தாள். சக்களத்தித் துவேஷம் விதர்ப்ப ராஜகுமாரியிடம் இருப்பதை சிற்சில சந்தர்ப்பங்களில் காணமுடிந்ததென்றாலும் தன் மகனுக்காக கட்டிய புருஷனுக்குத் தெரியாமல் அரசியல் சதுரங்கத்தில் விளையாடத் தலைப்படுவாளென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. நான்கு ராணிகளுக்குள் விதர்ப்ப இளவரசி இளையவள். விசேஷமான கவர்ச்சி மிக்கவள் என்ற முறையில் அவளிடம் சக்கரவர்த்தியாருக்கு ஒரு தனிப் பற்றுதல் இருந்தது. இந்த அறிமுகத்துடன் கதையை மேலே தொடங்குவோம்.

அந்தப்புரத்தில் விதர்ப்ப ராஜகுமாரியான தனது சிற்றன்னையின் கைஓங்கியிருக்கக்கூடுமென்று உக்கிரசேனர் சொல்லியபொழுது 'என்ன சொன்னீர்கள் மாமா! அதை இன்னொரு தரம் சொல்லுங்கள் கேட்கிறேன்!' என்று முழங்கினான் ஆஜாத்சத்ரு. இதைச் சொல்லியபொழுது அவனுடைய மனதில் ஒரு அதிபயங்கரமான காட்சி திரைப்

படத்தைப் போல ஓடிக்கொண்டிருந்தது. பிரகாசமாயிருந்த அவன் முகம் அரை நொடியில் சுண்டிச் சுருங்கிச் சுறுத்துப்போய் கோபக்கனல் பறந்தது கண்களிலிருந்து.

ஆஜாத்சத்ரு அங்கத்தின் ராஜப் பிரதிநிதியாக சம்பா நகரில் வசிக்க வந்த காலமுதற் கொண்டு மகதத் தலைநகருடன் அதிகத் தொடர்பு இல்லாமலிருந்தான். சக்கரவர்த்தியாரைப் பார்க்க வருடத்தில் இரண்டு மூன்று தடவை ராஜகிருகத்துக்கு அவன் வருவதுண்டென்றாலும் அப்பொழுது கூட அவன் அரண்மனையில் தங்கியிருக்கும் நேரம் மிகச் சொற்பம். அவன் தாய் கோசலாதேவியோ வருடத்தில் ஓரிரண்டு மாதங்கள் தலைநகரிலும், பாக்கிக் காலத்தில் மகனுடன் சம்பா நகரிலும் தான் இருப்பாள். இப்பொழுதெல்லாம் பிள்ளைப் பாசம் அவளை சம்பா நகரில் இழுத்து வைத்திருக்கிறதென்று ஆஜாத்சத்ரு நினைத்தானே தவிர அரண்மனையில் கோசலாதேவி அலட்சியம் செய்யப்படுகிறாளென்றோ, அல்லது ஜனகன் தாய் வசுமதியிடம் அரசர் அதீதமான அன்பு காட்டுகிறாரென்றோ ஆஜாத்சத்ரு கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை. அத்தகைய எண்ணங்கள் அவன் மனதில் இடம்பெற கோசலாதேவி இடம் கொடுக்கவுமில்லை.

அந்தப்புரத்தில் வசுமதியின் கை ஓங்கியிருக்குமென்றும், அங்கத்தில் தனது பிள்ளையை ராஜப்பிரதிநிதியாக நியமிக்கவேண்டுமென அவள் வாதாடுகிறாளென்றும் உக்கிரசேனர் சொல்லக் கேட்டபொழுது தனது உயிருக்கும் மேலான தாய் கோசலாதேவி ஒரு உயர்ந்தபீடத்திலிருந்து தலைகுப்புற கீழே உதைத்துத் தள்ளப்பட்டுவிட்டதைப் போன்ற ஒரு உணர்ச்சி. குரூரமான ஒரு அதிர்ச்சி. ஆஜாத்சத்ருவுக்கு ஏற்பட்டது. 'மகனே என் இழி நிலையைப் பாரடா! அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண் சிங்கம் போன்ற உன்னைப்பெற்றெடுத்த தாயின் கதியைப் பாரடா பட்டத்திளவரசனின் தாய் படும் பாட்டைப் பாரடா!' என்று கோசலாதேவி தலைவிரி கோலமாகக் குமுறிக் குமுறி

அழுவதைப் போன்ற ஒரு பயங்கரமான கற்பனைக்காட்சி ஆஜாத்சத்ருவின் மனக்கண்களின் முன்தோன்றி அவனை ஒரு வெறியனாக்கியது. இந்த வெறியுணர்ச்சியுடன் 'என்ன சொன்னீர்கள் மாமா! அதை இன்னொருதரம் சொல்லுங்கள் கேட்கிறேன்' என்று அவன் முழங்கினான்.

'ஆத்திரப்படாதே தம்பி! ஆத்திரப்படுவதினால் ஆகக்கூடியது ஒன்றுமில்லை. உன் தாய் என்னுடன் கூடப் பிறந்த தங்கையென்பதை மறந்துவிட்டாய். கோசலையிடம் உனக்கு உள்ள அக்கறை எனக்கும் உண்டு. பூதேவியைக் காட்டிலும் பொறுமையில் சிறந்த என் தங்கை தனது மனத்துயரங்களையெல்லாம் உள்ளே அடக்கிக்கொண்டு புழுங்கினாலும் தலைநகரில் என்ன நடக்கிறது? என்ன நடக்கவேண்டும்? அது எப்பொழுது நடக்கவேண்டும் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். பதறிச் செய்யும் காரியம் சிதறிப் போகும். உன்னைத் தீர்த்துக்கட்டவும் ஜனகனுக்கு சிம்மாசனம் கிடைக்கவும் ஆஷாதேவியின் தூண்டுதலின் பேரில் வசுமதி சதி செய்கிறாள். இதில் சக்கரவர்த்தியாருக்கும், விதர்ப்ப மன்னருக்கும் எவ்வளவு தூரம் சம்பந்தமிருக்குமென்பதை போகப் போகத்தான் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்!' என்றார் சேனாதிபதி.

'எனக்கு ஒன்றுமே தெளிவாகப் புரியவில்லை மாமா! எனக்குக் கிடைக்கவேண்டிய சாம்ராஜ்யத்தைத் தனது பிள்ளைக்குச் சம்பாதித்துக் கொடுக்க சிற்றன்னை வசுமதி சதி செய்வதில் அர்த்தமிருக்கிறது; வசுமதியின் இந்தத் துர் எண்ணத்தை ஆஷாதேவி பயன்படுத்திக்கொள்ள நினைப்பதிலும் அர்த்தமிருக்கிறது. தனது சொந்த நலனை முன்னிட்டு ஆஷாதேவியே இம்மாதிரியான தீய எண்ணங்களை என் சிற்றன்னையின் மனதில் தோற்றுவித்திருப்பதும் சாத்தியமே. ஆனால் விதர்ப்பத்தின்மீது எனக்குப் பகை ஏற்படுத்த ஆஷா ஏன் முயற்சிக்கவேண்டும்? பாம்பாட்டி மூலம் அவள் இவ்வித முயற்சி செய்ததற்கு என்ன பொருள்?' என்று கேட்டான் ஆஜாத்சத்ரு.

'அதில் தான் தங்கியிருக்கிறது ஆஷாவின் சாதுர்யம். விதர்ப்பத்தின் மீது உனக்குப் பகையேற்படவேண்டும். படிப்படியாக அதைத் தூபமிட்டு வளர்க்கவேண்டும் விதர்ப்பத்தின் மீது படையெடுக்க நீ விரும்பவேண்டும். வசுமதியிடமும் ஜனங்களிடமும் கொண்ட பொறுமையே இதற்குக் காரணமென்று சக்கரவர்த்தியார் நினைத்துப் படையெடுப்புக்கு அனுமதி மறுக்கவேண்டும். இதற்கிடையில் வசுமதி கொடுமைப்படுத்தப்படுவதாக விதர்ப்பத்தில் வதந்தி பரவி விதர்ப்ப மன்னனே மகதத்தைத் தாக்கத் துணியவேண்டும். இதன் பயன் என்ன? அப்பனுக்கும் பிள்ளைக்கும் தகராறு, சக்களத்திகளுக்கிடையில் தகராறு, சர்வ தேசத் தகராறு, இம்மாதிரியான சூழ்நிலைமையில் மகதத்தைத் தத்தளிக்க வைத்து ஆஷா தனது திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள விரும்புகிறாள். பல சதித்திட்டங்களுக்குமிடையிலுள்ள தொடர்பு இப்பொழுது புரிகிறதா தம்பி. நான் ஒன்று மட்டும் சொல்லுகிறேன், அழகு மிக்கவர்கள் என்றுமே அபாயகரமானவர்கள். ஆஷாவும் உன் சிற்றன்னை வசுமதியும் இந்த அபாயகரமானவர்களின் பட்டியலில் முதல் ஸ்தானம் வகிப்பவர்கள். அங்கே ஒருவள் சக்கரவர்த்திக்குப் போதையூட்டி சொக்கவைத்துப் பம்பரமாகச் சுற்றுகிறாள். இங்கே.........'

உக்கிரசேனர் சொல்ல வந்ததைச் சொல்லி முடிப்பதற்குள் ஆஜாத்சத்ரு குறுக்கிட்டான். 'மாமா! உங்கள் மருமகனை இன்னும் நீங்கள் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை அழகுப் பதுமைகளின் முன்னிலையில் எத்தனை தூரம் அடங்கியொடுங்கி லயித்துப் போய்விட்டதாகத் தோன்றுகிறதோ, அத்தனை அதிக அபாயகரமானவன் உங்கள் மருமகன் ஆஜாத்சத்ரு. ஆஷாவின் முத்துப் பற்களும் மோகனச் சிரிப்பொலியும், பொன்னிற மேனியும், பவளச்செவ்வாயும் ஆஜாத்சத்ருவை ஒருகணம் ஒரேஒரு கணம் வேண்டுமானால் சற்று நிலைதடுமாறச் செய்யலாம். ஆனால் இறுதி இலட்சியம் என்றைக்கும் அவன் கண் முன்னே நிற்கும். கோசலாதேவியின் மைந்தன் வலிமைமிக்க உக்கிரசேனரின்

மருமகன், உலகாளப் பிறந்தவன், மாமா உலகாளப் பிறந்தவன். கேவலம், காதல் அவன் கரங்களை ஒரு போதும் கட்டுப்படுத்தி வைக்கமுடியாது. என் வாழ்நாளுக்குள் மகதப் பேரரசு இந்தச் சுண்டைக்காய் மங்களகிரியை விழுங்கி கலிங்கம், ஆந்திரம், விதர்ப்பம், சேதி, அவந்தி முதலியவைகளையெல்லாம் கொண்டு துங்க பத்திரை வரையில் ஜயப்பேரிகை கொட்டுவதை நீங்கள் கேட்கத்தான் போகிறீர்கள்' என்றான்.

ஜயப்பேரிகை முழங்குவதைக் கேட்கத்தான் போகிறீர்களென்று அவன் சொல்லி வாய் மூடிய மறுகணம் விடுதிக்கு வெளியில் உண்மையாகவே பேரிகை முழக்கம் பலமாகக் கேட்டது. ஆஜாத்சத்ருவும், உக்கிரசேனரும், ராஜப்பிரதிநிதியும் ஒருவர் முகத்தையொருவர் வியப்புடன் பார்த்துக்கொண்டார்கள்.

'நள்ளிரவைத் தாண்டிய இந்நேரத்தில் பேரிகைகள் வீதியில் முழங்குவானேன்?' என்றான் ஆஜாத்சத்ரு.

அவனுக்கு யாரும் பதில் சொல்ல அவசியமில்லாமல் வீதியிலிருந்து உரத்த குரலில் பதில் வந்தது.

## அத்தியாயம் 2

# ஈட்டியும் ஈட்டியும் மோதிய பயங்கரம்!

பேரிகைகள் முழங்கியவர்கள் திடீரென்று அதை நிறுத்தினர். ஒருவன் அடித் தொண்டையிலிருந்து, 'மகா ஜனங்களே! மகாஜனங்களே! மகாராணி ஆஷாதேவியாரின் உத்தரவைக் கவனமாய்க் கேளுங்கள்' என்று பறை சாற்ற ஆரம்பித்தான். அவன் என்ன சொல்லுகிறுனென்பதை ஆஜாத்சத்ரு கவனமாகச் செவிகொடுத்துக் கேட்டான்.

நடுநிசியில் மகாராணி ஆஷாதேவியாரின் ஆக்ஞை என்று பறையறிவித்தவன் சொல்லியதை விடுதியில் ஆஜாத்சத்ரு கேட்டதைப் போலவே அரண்மனையில் மலயத்வஜனும் அரைத் தூக்கத்திலிருந்து எழுந்து வந்து கேட்டான்.

'மகாஜனங்களே! நமது அன்புக்குரிய மகதப் பேரரசின் இளைய புதல்வரான இளவரசர் ஜனகர் நாளை மாலை

மங்களகிரிக்கு விஜயம் செய்கிறார். அவருக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒருமுகமாக உற்சாக வரவேற்பளிக்க வேண்டுமென்பது நம் அரசியாரின் விருப்பம். வீடுகள் தோறும் பெருக்கி, மெழுகிக் கோலமிட்டு வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டவேண்டும். நாளை இரவு தலைநகரம் ஆயிரக்கணக்கான தீபாலங்காரங்களுடன் கோடி சூரியப் பிரகாசத்தோடு விளங்கவேண்டும். முக்கியமான தெருச் சந்திகளிலே நகரப் பிரமுகர்கள் பூரண கும்பத்துடன் இளவரசரை வரவேற்க வேண்டும். இளவரசருக்குச் செய்யும் மரியாதை மகதப் பேரரசுக்குச் செய்யும் மரியாதையாகையால் நகர மக்கள் ஒவ்வொருவரும் புத்தாடையணிந்து வரவேற்பு பவனியில் கலந்துகொள்ள வேண்டுமென்பது அரசியாரின் ஆக்ஞை!'

இப்படி அறிவித்துக் கொண்டு மீண்டும் பேரிகையை முழங்கிய வண்ணம் சென்றது ஒரு சிறு கூட்டம். நிம்மதியான நடுநிசியில் பேரிகையும் அறிவிப்பும் நகரில் இடி முழக்கத்தைப்போல எதிரொலித்தன.

'என்ன ஆணவம் பார்த்தீர்களா மாமா! என்னை அலட்சியம் செய்துவிட்டு ஜனகனுக்குச் செய்யும் மரியாதை மகதப் பேரரசுக்குச் செய்யும் மரியாதையென்று பறைசாற்றுகிறாள் ராணி! அப்படியானால் நான் யார்? மகதத்தின் பட்டத்திளவரசன் நானா? ஜனகனா? நான் இங்கிருப்பதையறிந்த மங்களகிரி மக்கள் ஆஷாவின் இந்த ஆக்ஞையைக் கேட்கும் பொழுது என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? தாங்க முடியாத அவமானம், மாமா, இது தாங்க முடியாத அவமானம்!' என்று முழங்கினான் அஜாத்சத்ரு.

''பதறாதே தம்பி, பதறாதே! உன் பதட்டத்தைக் காட்டவேண்டிய நேரமும் இடமும் இதுவல்ல. என்ன செய்யவேண்டும், அதை எப்பொழுது செய்யவேண்டும், எங்கு செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியும்! இவ்வளவு காலமாக என் நெஞ்சில் புதைந்துகிடந்த திட்டத்தைச் செயல்படுத்தவேண்டிய தருணம் சமீபித்துக்கொண்டிருக்கிறது. பெரிய காரியம் காத்துக்கிடக்கும் பொழுது

சுண்டைக்காய் போன்ற மங்களகிரியும் அதன் ராணியும் உன் மனதில் இடம்பெற்று வேதனைப்படுத்தக்கூடாது. வா, சற்றுப் படுத்திருந்துவிட்டுக் காலையில் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி யோசிப்போம்'' என்றார் உக்கிரசேனர்.

மனிதன் அளவுமீறி உணர்ச்சிவசப்பட்டுவிடும் பொழுது பேச்சிழந்து செயலற்றுப்போவது இயற்கை. அந்த நிலைமையில் இருந்தான் ஆஜாத்சத்ருவும் இப்பொழுது. மனம் சற்று அமைதியடைந்தாலொழிய எதைப் பற்றியும் சிந்திக்கமுடியாத நிலை அவனை வந்தடைந்திருந்தது. உக்கிரசேனர் சொல்லியபடியே சயனக்கிரகத்தையடைந்து கட்டிலில் கால்நீட்டிப் படுத்தான்.

அதே நேரத்தில் அரண்மனையில் மலையத்வஜனுக்கும், ராணி ஆஷாவுக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது. பறையறிவிப்பைக் கேட்ட மலயத்வஜன் ஒன்றும் புரியாமல் ராணியிடம் விசாரிக்க அவளுடைய சயனக்கிரகத்தையடைந்து கதவைத் தட்டினன். அவன் வருவானென்று எதிர்பார்த்ததைப்போல ராணி ஆஷா உடனே கதவைத் திறந்தாள். அவளிடம் இரவு செய்துகொண்ட அலங்காரம் சற்றும் கலையாததைக்கண்டு அவள் இன்னும் படுக்கப்போகவில்லையென்பதை தெரிந்துகொண்டான் மலயத்வஜன்.

''இதெல்லாம் என்ன கூத்து ராணி'' என்று சற்றுக் கடுமையான குரலில் அவன் கேட்டான்!

''எதைக் கேட்கிறீர்கள்? அலங்காரத்தையா? உறக்கம் வரவில்லை. ஆகையால் அப்படியே உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கிறேன்'' என்றாள் ஆஷா. மன்னர் வந்திருக்கும் காரியத்தை அறிந்தும் அறியாததைப்போல;

''உன் அலங்காரத்தைச் சொல்லவில்லை ஆஷா! வெளியே உன் பெயரினல் பறைசாற்றுகிறார்களே அதைப் பற்றித்தான் கேட்கிறேன். இளவரசன் ஜனகன் வருவதாக

உனக்கு யார் சொன்னது? இந்தச் சமயத்தில் அவன் எதற்காக இங்கு வருகிறுன்?'' என்று கேட்டான் மலயத்வஜன்.

''இளவரசர் ஆஜாத்சத்ரு நம்மிடம் சொல்லிக் கொண்டா மங்களகிரிக்கு வந்தார்? அவரைப்போலவே ஜனகனும் வந்தால் அதில் என்ன தவறு?'' என்று ஒரு பதில் கேள்வியைக் கேட்டாள் ஆஷா.

''ஆஜாத்சத்ரு இங்கிருக்கும்போது ஜனகனையும் சக்கரவர்த்தி எதற்காகஇங்கு அனுப்பிவைக்கவேண்டும்?'' என்றுர் மன்னர்.

''சக்கரவர்த்திப் பெருமகனிடம் கேட்கவேண்டிய கேள்வியை என்னிடம் கேட்டால் நான் என்ன பதில் சொல்லமுடியும்'?'' என்றுள் ராணி.

மலயத்வஜன் ஒன்றும் புரியாமல் ஒரு கணப் மௌனம் சாதித்தான். பிறகு ''ஜனகன் வருவதாக உனக்கு யார் சொன்னது?'' என்று கேட்டான்.

''நீங்கள் படுக்கப்போனபிறகு ராஜகிருகத்திலிருந்து வந்த ஒரு தூதுவன் அறிவித்தான். உங்களை எழுப்புவானேன் என்று நினைத்து நானே பறை சாற்றச் சொன்னேன்! வரவேற்பு ஏற்பாடுகளுக்கு போதிய அவகாசம் வேண்டாமா?'' என்றுள் ஆஷா.

''பட்டத்திளவரசர் இங்கிருக்கும் பொழுது அவன் தம்பிக்கு வரவேற்பா? ஆஜாத்சத்ரு என்ன நினைப்பார்?'' என்று மலயத்வஜன் கேட்டபொழுது ''அந்த வரவேற்பில் பட்டத்திளவரசரும் கலந்துகொள்ளட்டுமே! யார் வேண்டாமென்கிருர்கள்? அவரும் முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு வந்திருந்தால் அமோகமான வரவேற்பு நடத்தியிருக்கலாம்!'' என்றுள் ஆஷா.

''ராணி நீ நெருப்புடன் விளையாடுகிருய்? அரசியல் விவகாரங்களில் தலையிடவேண்டாமென்று உன்னைப் பல தடவை கடுமையாக எச்சரித்திருக்கிறேன். நேற்று ஆஜாத்சத்ருவிடம் வரம்பு மீறிப் பேசி அவமதித்தாய்.

இன்று அவர் முன்னிலையிலே அவர் தம்பிக்கு ராஜோபசாரம் செய்ய ஏற்பாடு செய்கிறாய்! கடைசியாகச் சொல்லுகிறேன் கேள்! உன்னுடைய இந்த அபாயகரமான அரசியல் விளையாட்டுக்களை இனி அரைக்கணமும் நான் சகித்துக்கொண்டிருக்கத் தயாரில்லை. உன் உத்தரவுகளை ஏற்க வேண்டாம் என்று அரண்மனை அதிகாரிகளுக்குச் சொல்ல அதிக நேரமாகாது. உன் மரியாதையை நீயாகக் காப்பாற்றிக் கொள்! இது உனக்குக் கடைசி எச்சரிக்கை!'' என்று பொழிந்துகொட்டிவிட்டு படுக்கச் சென்ற இரா உடுப்புகளுடனேயே மளமளவென்று அரண்மனை வாசலுக்கு வந்தான் மலயத்வஜன்.

அவன் உத்தரவின் மீது இரு குதிரைகள் பூட்டிய ரதம் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. சாரதியையும் எதிர்பார்க்காமல் சாரதியின் இடத்தில் அமர்ந்து வேகமாகத் தானே ரதத்தை ஓட்டிக்கொண்டு எங்கோ புறப்பட்டுச் சென்றான் மலயத்வஜன். அரண்மனை வாசலையடுத்த வீதியில் பெரும் சப்தத்துடன் அவனுடைய ரதம் உருண்டு செல்லுவதை மகாராணி ஆஷா உப்பரிகையிலிருந்து இமை கொட்டாமல் கவனித்துக்கொண்டு நின்றாள்.

பிறகு 'யாரங்கே!' என்று குரல் கொடுத்துக் காவலாளியை அவள் அழைத்தாள்.

அரண்மனையிலிருந்து ரதத்தில் புறப்பட்ட மலயத்வஜன் நேராக ஆஜாத்சத்ரு தங்கியிருந்த விடுதிக்குத்தான் வந்தான். வரும்போது அவனுடைய ரதத்தைக் காட்டிலும் அவனுடைய மனம் மின்னல் வேகத்துடன் எங்கெங்கோ ஓடிக்கொண்டிருந்தது.

''மங்களகிரிக்கு ஜனகன் வருவதை சாதுர்யமாக எப்படியும் தடுத்துவிடவேண்டும். ஆஜாத்சத்ரு இங்கிருக்கும்பொழுது ஜனகனை அழைத்து ராஜோபசாரங்கள் செய்தால் பெரும் விபரீதம் ஏற்பட்டுவிடும். சக்கரவர்த்தியாரைவிட அதிகம் அஞ்சவேண்டியது ஆஜாத்சத்ருவிடமும், உக்கிரசேனரிடமும் தான். இவ்விருவரால்தான்

சக்கரவர்த்தியார் விரிந்த சாம்ராஜ்யத்தை நிலைத்து ஆட்சிபுரிய முடிகிறது. ஆஜாத்சத்ரு நினைத்தால் மங்களகிரியை சில மணி நேரத்துக்குள் பிடிசாம்பலாக்கிவிடலாம். இது தெரியாமல் அரசியல் கற்றுக்குட்டியான ஆஷா அபாயகரமான விளையாட்டில் இறங்கிவிட்டாளே!

இளவரசரையும் சேனாதிபதியையும் எப்படிச் சமாதானப்படுத்துவது? பறையறிவித்தலை அவர்களும் கேட்டுப் பொங்கிக்கொண்டிருப்பார்களே! அவர்களிடம் என்ன சொல்லி மன்றாடுவது? ஜனகன் வருகையை எப்படித் தடைசெய்வது? அவன் வருகையைத் தடுத்துவிட்டாலும் அவனை வரவேற்க ஆடம்பரமான ஏற்பாடுகளைச் செய்யும் பொதுஜனங்களுக்கு என்ன சமாதானம் சொல்லுவது?

இப்படி எண்ணங்கள் அலைமோத கவலையே உருவமாக விடுதியின் வாசலில் வந்திறங்கினான் மலயத்வஜன். அந்த நேரத்தில் அரசரைக் கண்டதும் காவலாளர்க்கு தங்களுடைய கண்களையே நம்பமுடியவில்லை.

இளவரசர் உறங்கிவிட்டாரா அல்லது விழித்துக்கொண்டிருக்கிறாரா என்று அரசன் விசாரித்தான்.

"இளவரசர், சேனாதிபதி இருவருமே சில நிமிடங்களுக்கு முன்புதான் படுக்கப்போனார்கள். இதற்குள் உறங்கியிருப்பார்களென்று தோன்றவில்லை. தாங்கள் வந்திருப்பதை அவர்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று கேட்டான் காவலாளர்களில் ஒருவன்.

"இளவரசரைத் தொந்தரவு செய்யவேண்டாம் சேனாதிபதியாரை மட்டும் நான் அவசரமாகப் பார்க்க வேண்டுமென்று சொல்லு!" என்றான் மன்னன்.

இதற்குள் உக்கிரசேனரே அங்கு வந்துவிட்டார்.

"வாசலில் அரண்மனை ரதம் வந்து நிற்பதைச் சாளர வழியாகப் பார்த்தேன். யார் என்று பார்க்க வந்தேன். நீங்களா? இந்த நேரத்தில் வரவேண்டிய காரணம்?

பகல் முழுவதும் காட்டில் வேட்டையாடி, இரவிலும் நெடுநேரம் எங்களை உபசரித்து அந்தக் களைப்பில் அயர்ந்துபோய் உறங்கவேண்டியவர் விடுதிக்கு வருவதாயிருந்தால் ஏதாவது முக்கியமான காரணம் இருக்க வேண்டுமே?'' என்றார் உக்கிரசேனர்.

''ஆமாம் சேனாதிபதியாரே! ஒரு பெரிய ஆபத்தில் நான் மாட்டிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் இதிலிருந்து என்னை விடுவிக்கவேண்டும்!'' என்று தழுதழுத்த குரலில் கெஞ்சினான் மலயத்வஜன்.

''மேரு பர்வதத்தைப்போல மகத சாம்ராஜ்யம் உங்களுக்குப் பக்கபலமாயிருக்கும் பொழுது உங்களைக் கலவரப்படுத்தும் அளவுக்கு துணிவு படைத்தவன் யார் மன்னவா?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''என் மனைவியே எனக்குச் சத்ருவாகிவிடுவாள் போலிருக்கிறது நண்பரே! இளவரசரின் தம்பியார் ஜனகர் நாளை இங்கு வருகிறாராம். அவர் ஏன் வருகிறார் என்று தெரியவில்லை. வந்தால் வந்துவிட்டுப் போகட்டும். ஆனால் என்னைக் கேளாமலும், எனக்குச் சொல்லாமலும் ஜனகரை வரவேற்க ஆடம்பரமான ஏற்பாடுகளைச் செய்ய உத்தரவிட்டிருக்கிறாள் ராணி! ஏன் அப்படிச் செய்தாய் என்று கேட்டதற்கு மக்களுக்குப் போதிய அவகாசமளிக்க வேண்டுமென்பதற்காக என்னைக்கேளாமலே பறையறிவிக்கச் செய்தாளாம். அவள் மனதில் களங்கமின்றி மகதப் பேரரசைக் கௌரவிக்கவேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் இதைச்செய்திருந்தாலும் பட்டத்திளவரசர் என்ன நினைப்பார்? நமக்கு இல்லாத வரவேற்பு உபசாரங்கள் நம் தம்பிக்கா என்று அவர் நினைக்கமாட்டாரா நண்பரே! பெண்ணால் எத்தனையோ பெரிய பெரிய சாம்ராஜ்யங்களெல்லாம் அழிந்தொழிந்துபோயிருப்பதாக கதைகளில் படித்திருக்கிறேன். ஆஷாவினால் மங்களகிரிக்கு அந்தப் பயங்கரநிலைமை ஏற்பட்டுவிடாதபடி பெரியமனதுவைத்து

நீங்கள்தான் காப்பாற்றவேண்டும்!'' என்று பிரலாபித்தான் மன்னன்.

''மன்னவா! ராணி ஆஷா அரசியல் அஞ்ஞானத்தில் ஏதேதோ அசட்டுத்தனங்கள் செய்தாலும் உங்களுடைய ராஜவிசுவாசத்தில் இளவரசருக்கும்சரி, சக்கரவர்த்தியாருக்கும்சரி அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு. இதை நீங்கள் உறுதியாக நம்பலாம். நாளைக் காலை ஆஜாத்சத்ரு இங்கிருக்கப்போவதுமில்லை. இளவரசன் ஜனகன் மங்களகிரிக்கு வரப்போவதுமில்லை! மனதை வேதனைக்குட்படுத்திக்கொள்ளாமல் நிம்மதியாகப் போய் படுத்து உறங்குங்கள்!'' என்று சமாதானம் சொன்னார் சேனாதிபதி.

''ஜனகர் இங்கு வரப்போவதில்லையா? ராஜகிருகத்தை விட்டு அவர் ஏற்கனவே புறப்பட்டுவிட்டதாயும், அடுத்த சிலமணி நேரத்திற்குள் இங்கு வந்துவிடுவாரென்றும் செய்தி கிடைத்திருக்கிறதே!'' என்று திகைப்புடன் வினவினான் மலயத்வஜன்.

ஏதோ தவறு நடந்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். ஜனகர் இப்பொழுது ராஜகிருகத்தில் இல்லை. நாங்கள் புறப்பட்ட தினத்தன்றுதான் இளையவர் தக்ஷசீலத்தைப் பார்க்க காந்தாரத்துக்குப் புறப்பட்டுப்போனார். உலகப் பல்கலைக்கழகமான தக்ஷசீலத்தைப் பார்க்கவேண்டுமென்பது அவருடைய நீண்டகாலத்திய ஆசை. புத்தர்பிரான் தக்ஷசீலத்திலிருக்கும் சமயத்தில் ஜனகரும் அங்கு போவது நல்லதென்றெண்ணி சர்க்கரவர்த்தியார் அனுப்பி வைத்திருக்கிறார். ஆகையால் ஜனகர் இங்கு வரப்போவதில்லை. வரவும் முடியாது. கலக்கப்படாமல் அரண்மனைக்குத் திரும்புங்கள்'' என்றார் உக்கிரசேனர்.

மலயத்வஜனுக்கு இதனால் மனக் குழப்பம் அதிகரித்ததேயன்றி குறைவதாக இல்லை. ஆயினும் சேனாதிபதியாரின் ஆதரவு தனக்கு இருக்கிறதென்ற நம்பிக்கையோடு அவன் தேரில் ஏறிக்கொண்டு புறப்பட்டபின்

அவனை வாசல்வரையில் கொண்டுபோய் விட்டுவிட்டு உக்கிரசேனர் திரும்பியபொழுது ஆஜாத்சத்ரு அங்கு நின்றுகொண்டிருந்தான்.

"நீ இன்னும் தூங்கவில்லையா தம்பி?" என்று வாஞ்சையோடு விசாரித்தார் உக்கிரசேனர்.

"தூங்குவதா? இங்கு என்னவெல்லாமோ நடக்கும்பொழுது எனக்கு எப்படித் தூக்கம் வரும் மாமா! மலயத்வஜன் வந்து உங்களுடன் பேசியதையெல்லாம் கேட்டேன். ஜனகன் வருகைக்காக இங்கு பிரமாதமான ஏற்பாடுகளைச் செய்ய ஆஷா தேவியார் உத்தரவிட்டிருக்க அவன் கண்டிப்பாக இங்கு வரப்போவதில்லையென்று மலயத்வஜனுக்கு எப்படி அவ்வளவு உறுதியாகச் சொன்னீர்கள்? ஜனகன் தக்ஷசீலத்துக்குப் போவது எனக்கே தெரியாதே! உண்மையில் அவன் தக்ஷசீலம் போயிருக்கிறானா? மங்களகிரிக்கு அவன் வரமாட்டானா? இதை நேற்றே எனக்கு ஏன் சொல்லவில்லை? மற்றவர்களைப்போல நீங்களுமா என்னிடம் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவேண்டும்? இதை நான் எதிர்பார்க்கவில்லை மாமா!" என்று மளமளவென்று பொழிந்து கொட்டினான் இளவரசன்.

"அவசரப்படாதே தம்பி! மலயத்வஜனிடம் பேசியதையெல்லாம் அப்படியே உண்மையென்று நினைத்துக் கொண்டு தடுமாறுகிறாய்! ஜனகன் தக்ஷசீலத்துக்குப் போனால் உனக்குத் தெரியாமலா இருக்கும்?" என்றார் உக்கிரசேனர்.

"அப்படியென்றால் அவன் மங்களகிரிக்கு வரப்போவதில்லையென்று எப்படி உறுதியாக நீங்கள் சொன்னீர்கள்? ராணிக்கு ஏற்கனவே ராஜகிருகத்தை விட்டு ஜனகன் புறப்பட்டுவிட்டதாக தகவல் கிடைத்துத்தான் அவள் வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்கிறாள். நீங்களானால் அவன் இங்கு வரப்போவதில்லையென்கிறீர்கள்! நான் படுக்கப்போகும்வரை இதை என்னிடம் சொல்லாமல்

சில நிமிடங்களுக்குள் எப்படி இந்த முடிவுக்கு வந்தீர்கள்?'' என்று கேட்டான் இளவரசன்.

''ஜனகன் மங்களகிரிக்குப் புறப்பட்டிருப்பது என்னவோ உண்மை. அவன் இங்கு வரப்போவதில்லையென்பதும் நிச்சயம்'' என்று சேனாதிபதி புதிர் போட்டமாதிரிப் பேசவே ''தலைநகரைவிட்டுப் புறப்பட்டவன் இங்கு வராமல் வேறு எங்கே போவான்? விளக்கமாகச் சொல்லுங்கள்'' என்று இளவரசன் வற்புறுத்தினான்.

'வேறு எங்கே போவான்? ராஜகிருகத்துக்கே திரும்பிப் போவான். உன்னை அவமதித்த ராணி ஆஷா உன் தம்பிக்கு உற்சாகமான வரவேற்பளிப்பதை நான் அனுமதிப்பேனென்று நினைக்கிறாயா தம்பி! தலைநகரிலிருந்து புறப்பட்ட ஜனகன் இரவைக் கழிக்க சமணபுரிக்கு வந்திருப்பான். காலையில் தான் அவன் மங்களகிரிக்குப் பிரயாணப்படுவான். அவனை சமணபுரியிலேயே வழிமறித்து தலைநகருக்குத் திருப்பி விரட்ட ஏற்பாடு செய்துவிட்டுத்தான் படுக்கப் போனேன்' என்றார் உக்கிரசேனர்.

'தம்பியை மிரட்டி விரட்டவா ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?' என்று கேட்டான் அஜாத்சத்ரு.

'ஆமாம்! சமணபுரி எல்லையில் நம் காலாட்படை ஒன்று இருக்கிறதல்லவா? அதன் தளபதிக்கு ஒரு ரகசியச் செய்தியனுப்பியிருக்கிறேன். சுமார் 100 பேர்கள் கொள்ளைக் கூட்டத் தலைவர்களைப்போல மாறுவேடமணிந்து பாலைவனத்தில் ஜனகனை வழி மறித்து தலைநகருக்குத் திருப்பி விரட்ட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன் என் முத்திரை மோதிரத்துடன் சென்றிருக்கும் தூதன் பொழுது விடிவதற்கு முன் மின்னல் வேகத்துடன் சென்று சமணபுரியை அடைந்துவிடுவான். நாளை வரவேற்பு ஏற்பாடுகளையெல்லாம் பிரமாதமாகச் செய்து வைத்துக் கொண்டு ஆஷாதேவி ஏமாந்து போவாள்!' என்றார் சேனாதிபதி.

''ஆஷாதேவியின் விஷயத்தில் நீங்கும் எச்சரிக்கை யுடனிருக்க வேண்டும் மாமா!! உங்களுடைய ஏற்பாடு அவளுக்குத் தெரிந்திருந்தால் அவளும் பாலேவனத்துக்கு ஒரு உதவிப் படையை விரைந்தனுப்பத் தயங்கமாட்டா ளென்பதை மறந்துவிடாதீர்கள். இந்த விடுதியின் சுவ ருக்குக் கூட அவள் செவிகளைப் பொருத்தியிருப்பாள்!!'' என்று எச்சரித்தான் இளவரசன்.

''ஆஷா அசாதாரனமானவள்தான் தம்பி! எந்த நிலைமையையும் சமாளிக்க முன்னேற்பாடுகள் செய்து விட்டுத்தான் நிம்மதியுடனிருக்கிறேன். ராணி படை களைப் பாலேவனத்துக்கு அனுப்பினால் உடனே தகவல் தெரிவிக்கவும் ஒற்றர்களை அமர்த்தியிருக்கிறேன்'' என் றார் உக்கிரசேனர்.

அவர்கள் இப்படி பேசிக்கொண்டிருக்கையில் கிழக்கு வெளுத்துவிட்டது. ஒருகண நேரமும் கண்ணயரா மல் இரவு கழிந்து பொழுதும் விடிந்துவிட்டது. அவர் களைப் போலவே ஆஷாவும் அன்றிரவு நித்திராதேவியை நெருங்கவில்லை.

மலயத்வஜன் அரண்மனையைவிட்டுக் கிளம்பியதும் ''யாரங்கே?'' என்று குரல் கொடுத்த ஆஷா, ஒரு காவலாளி வந்ததும், ''மந்திரி சர்வோத்தமரை எழுப்பி உடனே நான் பார்க்கவேண்டுமென்று சொல்லு. அவர் வந்துவிட்டுப் போகும்வரை என் சயனக் கிரகத்துக்கு யாரும் வரக்கூடாது. மன்னரே வந்தால் கூட நான் அயர்ந்து தூங்குவதாகச் சாக்கு போக்கு சொல்லி அனுப்பி விட வேண்டும் தெரிந்ததா?'' என்றாள்.

சில நிமிடங்களுக்கெல்லாம் மந்திரி சர்வோத்தமர் பாதி உறக்கத்தில் தள்ளாடிக்கொண்டு ராணியின் சய னக் கிரகத்தில் நுழைந்தார். அவர் எப்பொழுது அங் கிருந்து போனாரென்பது வெளியே விழித்த கண்களை மூடாமல் காவலிருந்த காவலாளிக்கே தெரியாது. அதி காலையில் வரவேற்பு ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக

ஆஷாதேவி மட்டும் தான் வெளியே வந்தாள். உள்ளே சென்ற மந்திரி என்ன ஆனார்? அவரை ராணி உள்ளேயே பதுக்கி வைத்திருக்கிறாளோ? அல்லது வெளியே போக வேறு வழி இருக்கிறதா? என்று காவலாளி வியந்து கொண்டிருந்தான்.

"இரவு மன்னர் வந்தாரா?" என்று காவலாளியிடம் கேட்டாள் ராணி.

'இல்லே!! இந்தப் பக்கம் யாருமே வரவில்லே!!" என்றான் அவன். அவன் இப்படிக் கூறியது உண்மைதான். அஜாதசத்ருவின் விடுதியிலிருந்து திரும்பிய மலயத்வஜன் ராணியின் அறைக்குப்போகாமல் நேராக தன் அறைக்கே போய்விட்டான். ஆகையால் அவன் திரும்பிவிட்டதை காவலாளியோ அல்லது ராணியோ அறிய நியாயமில்லாது போய்விட்டது.

இரவில் சென்ற மன்னர் திரும்பிவிட்டாரா என்பதைப் பார்க்க அவர் அறைக்குச் சென்றாள் ஆஷா இரவு நெடுநேரம் விழித்திருந்த மலயத்வஜன் சுய நினைவின்றி நன்கு உறங்கிக்கொண்டிருந்தான். அவனை எழுப்பாமல் அன்றைய ஏற்பாடுகளைப் பற்றி உத்தரவுகள் பிறப்பிக்க அரண்மனை அதிகாரிகளைச் சந்திக்க ஆஷா கீழே இறங்கி வந்தாள்.

அன்று காலையில் மஹாநதி தீரத்துக்குப் புறப்படுவதாயிருந்த அஜாத்சத்ரு தனது பிரயாணத்தை ஒத்தி வைத்துக்கொண்டான்.

"சிலமணி நேரத்துக்குள் தங்கள் தம்பியும் வந்துவிடுவார். முன்னறிவிப்பு இன்றி தாங்கள் திடீரென்று இங்கு விஜயம் செய்ததால் தங்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்காமற் போய்விட்டது. அந்தக்குறை தீர வரவேற்பு ஊர்வலத்தில் அண்ணனும் தம்பியும் கலந்துகொண்டு எங்களை

மகிழ்விக்க வேண்டும்!!'' என்று ராணி ஆஷா விடுதிக்கு வந்து நேரிலேயே இளவரசரிடம் கேட்டுக்கொண்டாள்.

ஆஜாத்சத்ரு துடுக்காக ஏதவாது சொல்லிவிடப் போகிறனேயென்று அஞ்சிய உக்கிரசேனர் ஆஜாத்சத்ரு பதில் சொல்லுவதற்குள் குறுகிட்டு ''ராணியாரே இவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்லும்பொழுது இளவரசர் மறுக்கவா போகிறார்? வரவேற்புக்கு இருந்துவிட்டு மாலையில் எங்கள் பிரயாணத்தை வைத்துக்கொள்ளுகிறோம்!!''

ராணி போனபிறகு ''நம்மை அமானப்படுத்த நினைத்தவள் நம் கண் முன்னிலையிலே வெட்கித் தலை குனிந்து கூனிக் குறுகிப் போவதைப் பார்த்துவிட்டுத்தான் போகவேண்டும்'' என்றார் இளவரசனிடம் உக்கிரசேனர்.

மலயத்வஜனுக்கோ ஒன்றுமே புரியாமல் தலை சுற்றியது. உக்கிரசேனராஜல் ஜனகன் நிச்சயம் வரமாட்டானென்று உறுதி கூறுகிறார். அப்படிச் சொல்லிக்கொண்டே வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டுவிட்டுப் போவதாக ராணியிடம் சொல்லி பிரயாணத்தையும் ஒத்தி வைத்துக்கொண்டிருக்கிறார்!! எல்லாம் ஒரே குழப்பமாயிருக்கிறது!! கடவுளே, நடப்பதெல்லாம் நன்மையாகவே முடிய வேண்டும்!! என்று கலவரத்துடன் கடவுளை வேண்டிக்கொண்டிருந்தான் மலையத்வஜன்.

ஆஜாத்சத்ருவை ராணி சந்தித்த அதே கானகத்தின் விளிம்பிற்கு பிற்பகல் மூன்று மணிக்குப்போய் ஜனகனை வரவேற்கக் காத்திருப்பது என்பது ஏற்பாடு. அதன்படி அரசபவனியுடன் ஆஜாதசத்ருவும், உக்கிரசேனரும் அவரது பரிவாரங்களும் சென்றனர். நேரம் நெருங்க நெருங்க ஆஜாத்சத்ருவுக்கு உள்ளே மனம் குழம்பிக் கொண்டிருந்தது.

''மாமா!! உங்கள் திட்டத்தை ராணி முறியடித்து உண்மையாகவே ஜனகன் வந்தால் அது எவ்வளவு பெரிய

அவமானமாக இருக்கும் தெரியுமா? தம்பியை வரவேற்று என்னை அவமதிக்க ராணி நினைப்பது ஒருபுறமிருக்க, நமது திட்டங்களை முறியடித்த வெற்றியும் அவளைச் சாரும். பிறகு அவள் முகத்தில் கூட என்னால் விழிக்க முடியாது!! உங்கள் ஏற்பாட்டில் தவறு ஏதும் நடந்து விடாதே!! என்று கவலையுடன் கேட்டான் ஆஜாதசத்ரு.

''கடவுளாகப் பார்த்து நம்மை வேண்டுமென்ற கைவிடாமலிருந்தால் எல்லாம் கச்சிதமாக இருக்கும்!!'' என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கையில் பாலைவன மணல் மேட்டைத் தாண்டி ஒரு குதிரை வீரன் குளக் கரையினூடே வேகமாக அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்,

தூரத்திலிருந்தபடியே அவன்யாரென்பதை அறிந்து கொண்ட ஆஷா அன்றலர்ந்த தாமரையைப்போல முகம் மலர ''அவன் எங்கள் படையைச் சேர்ந்தவன்தான்!! ஜனகர் திட்டப்படி வந்த கொண்டிருப்பதை அறிவிக்க முன்னதாக வருகிறான்'' என்றாள்.

ஆஜாதசத்ரு உக்கிரசேனரைப் பார்க்க, உக்கிர சேனர் ஆஷாவைப் பார்க்க பிறகு மூவரும் ஒரு கண நேரம் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். அந்தப் பார்வைக்குப் பேசும் சக்தி மாத்திரமிருந்தால் ஒரு பெரிய மாககாவியமே அங்கு பிறந்திருக்கும்.

தடாகக் கரையோரமாகப் பறந்துவந்த தூதுவன் ராணியும் மற்றவர்களும் இருந்த இடத்தை அடைந்ததும் அவனுடைய நிலைமையைக் கண்டு ஆஷா கலவரமடைந்தாள்.

அந்தத் தூதுவன் படுகாயமடைந்திருந்தான். இரத்தம் மேலெல்லாம் சொட்டச் சொட்ட அந்தக் காயங்களுடனும் அவன் எப்படி நெடுந்தூரம் பிரயாணம் செய்து வந்தானென்பதை நினைந்து உக்கிரசேனரும் ஆஜாத் சத்ருவும் வியந்து கொண்டிருக்க, ராணி ஆஷாதேவி

பாலைவனப் பிரதேசத்தில் என்ன நிகழ்ந்திருக்க வேண்டு மென்பதை ஒருவாறு ஊகித்துக்கொண்டிருக்க வேண்டும் ஏமாற்றம் ஒரு புறமும் கடுங்கோபம் மற்ருெரு புறமாக உயிருக்கு மன்ருடிக்கொண்டுவந்த தூதனை அப்படியே தூக்கி விழுங்கி விடுவதைப் போலப்பார்த்தாள். கண் களில் கோபக்கனல் பறக்க வந்திருப்பவனின் அவஸ்தை யையும் பொருட்படுத்தாமல், ''இதெல்லாம் என்ன? இளவரசரை எதிர்கொண்டு உபசரித்து அழைத்துவர அனுப்பிய நம் படைவீரர்களெல்லாம் எங்கே?'' என்று அதட்டிக் கேட்டாள்.

''நான் அப்பொழுதே சொல்லவில்லையா மாமா நாம் தங்கியிருந்த விடுதிக்கும் இவள் செவிகளைப் பொருத்தியிருப்பாளென்று!; ஜனகனை வழிமறித்து விரட்ட நீங்கள் செய்த ஏற்பாட்டை அறிந்து ராணியும் பாலை வனத்துக்கு ஒரு படையை அனுப்பிவைத்திருக்கிருள். இதை அவள் வாயிலிருந்தே சொல்லக் கேட்டீர்களா மாமா!!'' என்று வாயினுல் கேளாமல் கண்பார்வையினுல் உக்கிரசேனரிடம் வினவினுன் ஆஜாத்சத்ரு.

''அவள் அப்படிச் செய்வாளென்பதை நீமட்டுமா எதிர்பார்த்தாய்? நானும் தான் எதிர்பார்த்தேன். என் ஆட்களின் திறமையில் எனக்கு பரிபூரண நம்பிக்கை யிருப்பதினுல்தான் ஜனகன் மங்களகிரிக்கு வரமாட்டா னென்று அவ்வளவு நிச்சயமாகச் சொன்னேன்!!'' என்று பதிலளிப்பதைப்போல சமிக்ஞை செய்தார் சேனுதிபதி உக்கிரசேனர்.

இதற்கிடையில் குதிரையிலிருந்து கீழே விழுந்த தூதன் வலி பொறுக்கமாட்டாமல் முக்கி முனகிக் கொண்டு ''நம் படையில் பலர் கொல்லப்பட்டுவிட்டார் கள்; சிலர் படுகாயமடைந்து எழுந்திருக்க முடியாத நிலை மையில் அங்கேயே கிடக்கிருர்கள். மற்றவர்கள் போன இடம் தெரியாமல் தலைதெறிக்க ஓடிவிட்டார்கள். நான் ஒருவன் தான் தகவல் கொடுப்பதற்காக உயிரைப் கையில்

பிடித்துக்கொண்டு காற்று வேகத்தில் திரும்பி வந்தேன்'' என்றான் அவன்.

''தம்பியை வரவேற்க ஒரு படையை அனுப்பிவைத் திருத்தீர்களா?'' என்று ராணியிடம் கேட்டான் ஆஜாத் சத்ரு.

''ஆமாம்!! சமணபுரியின் அருகில் கொள்ளைக்காரர் கள் அதிகம். இதை நினைத்து முன்னெச்சரிக்கையாக ஒரு படையை அனுப்பியிருந்தேன்'' என்று அர்த்தம் நிறைந்த பார்வையுடன் ஆஜாத்சத்ருவைப் பார்த்துச் சொன்னாள் ராணி.

''எங்களைத் தாக்கியவர்கள் கொள்ளைக்காரர்கள் நாங்கள் சமணபுரியை நெருங்குவதற்கும் இளவரசர் கோஷ்டி நகரத்தைவிட்டு பாலைவனத்தில் பிரவேசிப்பதற் கும் சரியாயிருந்தது. பாலைவனத்தில் கொஞ்ச தூரம் வந்ததும் முகமூடியணிந்த கொள்ளைக்காரர்கள் நாற்றிசை களிலிருந்தும் பாய்ந்து வந்தார்கள். அவர்கள் சுமார் ஐம் பது அறுபது பேர்கள்தான் இருப்பார்கள். நமது படை யில் நூறு பேர்களிருந்தார்கள். அப்படியிருந்தும் அவர் களைச் சமாளிக்க முடியவில்லை. நமது படையைச் சின்ன பின்னப்படுத்தி இளவரசர் ஜனகரையும் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள்!! என்று அந்த தூதன் சொல்லிக் கொண்டிருக்கையில் ''கடத்திக்கொண்டு போய்விட்டார் களா?'' என்று ஆஜாத்சத்ருவும் மலயத்வஜனும் ஏக காலத்தில் வினவினார்கள். ஆனால் ராணியோ அல்லது உக் கிரசேனரோ சிறிதும் பதட்டமடைந்ததாகத் தெரிய வில்லை.

''ஆமாம், பிரபு! கொள்ளைக்காரர்கள் இளவரச ரைக் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள்!!'' என்றான் தூதன்.

'இளவரசரைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டி யதில்லை. ஜனகர் யாரென்பது தெரிந்ததும் கொள்ளைக்

ரார்கள் அவரைப் பத்திரமாக மகதத் தலை நகரில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவார்கள். இல்லையா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று ஆஷா தேவியாரைப் பார்த்து உக்கிரசேனர் கேட்டபொழுது அவள் ஒரு பதிலும் சொல்லவில்லை. அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

அவளிடம் பதில் கிடைக்காது என்பதை அறிந்த உக்கிரசேனர் ஆஜாத்சத்ருவின் பக்கம் தி ம்பி ''இளவரசே!! சிறுகன்று பயமறியாது என்பார்கள். அதைப் போல தக்ஷசீலத்துக் குப்போன தங்கள் தம்பியார் போதிய வழித் துணையின்றி ஏன் இங்கு வரவேண்டும்? யாரை நம்பிக்கொண்டு இங்கு வந்தாரென்பதுதான் ஆச்சர்யமாயிருக்கிறது!! எனக்கு என்னவோ வந்தவர் ஜனகராயிருக்குமென்று தோன்றவில்லை. தக்ஷசீலத்திந்தான் அவர் இப்பொழுது இருக்கவேண்டும். இதற்கு மாருக கொள்ளைக்காரர்கள் சடத்திக்கொண்டு போனது ஜனகராக இருந்தாலும் நாம் கவலைகொள்ளத் தேவை கிடையாது. பத்திரமாக அவரைத் தலை நகரில் கொண்டுபோய்ச் சேர்ந்து விடுவார்கள். மகதத்தைப் பகைத்துக்கொள்ளும் துணிச்சல் இந்த மண்டலத்தில் அரசியல் அறிவு படைத்தவர்கள் யாருக்கும் இருக்காது!! என்ருர். ராணிக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போலிருக்க வேண்டுமென்று கருதியே அவர் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாக வி திரிபு செய்து பேசினுர்.

''இளவரசர் ஆஜாத்சத்ருவுக்கு வரவேற்பு நடைபெருத குறையைப் போக்கவே இறைவன் இந்த சம்பவத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிருன் போலிருக்கிறது. ஊர்வலம் ஆரம்பமாகட்டும்!!'' என்று உத்தரவிட்டான் மலயத்வஜன்.

ஒரு ரதத்தில் அவனும் ராணியும் ஆஜாத்சத்ருவும் ஏறிக்கொள்ள முன்ஞல் உக்கிரசேனரும் மற்ற படைத்

தலைவர்களும் குதிரைகளில் சென்றார்கள். பின்னால் காலாட் படைகளும் குதிரைப் படைகளும் அணிவகுத்து வந்தன. மிகுந்த ஆரவாரத்துடன் ஊர்வலம் ஆரம்பமாகி நகரில் பிரவேசித்தது. தலைநகரம் விசேஷ அலங்காரத்துடன் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

வழிநெடுக புத்தாடை அணிந்து சாரிசாரியாக நின்ற மக்களுக்கு ரதத்தில் வருவது யார் என்பது தெரியாது. ஆஜாத்சத்ரு மங்களகிரிக்கு வந்திருப்பதை வேட்டையில் பங்குகொண்டிருந்த ஒரு சிலர் மாத்திரம் அறிந்திருந்தார்களே தவிர அவனுடைய விஜயம் பொதுஜனங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. ஆகையால் மலயத்வஜனுடன் அமர்ந்திருக்கும் ஆஜாத்சத்ருவை இளவரசன் ஜனகனென்றே பொதுஜனங்கள் கருதினார்கள். வீதியெங்கும் குழுமியிருந்த மகாஜனங்கள் ஜனகனின் பெயரைச் சொல்லி வாழ்த்தொலி செய்தார்கள். தன்னையே ஜனகனென்று கருதி மக்கள் வாழ்த்துகிறார்களென்பது தெரிந்தும் அந்தச் சந்தர்ப்பத்தில் ஆஜாத்சத்ருவினால் ஏதும் செய்ய முடியவில்லை. ஜனகனென்ற முறையிலேயே மக்களின் வாழ்த்துகளை குவித்த கரங்களுடன் அவன் ஏற்றுக் கொண்டான்.

பட்டணத்தின் நடுவிலே ஒரு பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. அதில் நகரப் பிரமுகர்கள் இளவரசரை வரவேற்பதற்காகக் குழுமியிருந்தார்கள். அங்கு போட்டிருந்த ஒரு மேடைக்கு ஆஜாதசத்ருவை மலயத்வஜன் அழைத்துச் சென்றான். ராணியோ பேயறைந்தவளைப்போல ஒன்றும் பேசாமல் அவர்களின் பின்னால் வந்துகொண்டிருந்தாள்.

'இவர்களில் ஒருவருக்கும் நான் யாரென்பது தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையில் தெரியாமலிருப்பதே நல்லது. ராணியாருக்கு ஏற்கனவே ஏற்பட்ட அவமானத்துடன் அவர் வெளியிட்ட பிரகடனம் பொய், தவறு என்ற அபக்யாதியும் சேரவேண்டாம். என்னை ஜனக

னென்றே இந்தக் கூட்டத்துக்கு அறிமுகப்படுத்துங்கள்!!'' என்று மலயத்வஜனிடம் சொன்னான் ஆஜாத்சத்ரு. அவனுடைய பெருந்தன்மையைப் பாராட்டி அவ்வாறே செய்தான் மலயத்வஜன்.

வரவேற்புகள் முடிந்து ஆஜாத்சத்ரு விடுதிக்குத் திரும்பிய பொழுது அவன் கூடவே மலயத்வஜனும் ராணியும் வந்தார்கள்.

''ராவி!! உன் விஷமம் உன் கணவருக்கே தெரியாது. ஆனால் நாங்கள் அறிவோம். உன்னைக் கடைசித் தடவையாக எச்சரிக்கிறேன். கருங்கல்லின் மீது மோதி அநியாயமாக அந்த அழகான தலையை உடைத்துக்கொள்ளாதே!! நீ செய்யும் சதிகளை எப்படி நசுக்கவேண்டுமென்பது எனக்குத் தெரியும்!! என்று ஆஷாவைக் கடுமையாகப் பார்த்தவண்ணம் சொன்னான் ஆஜாத்சத்ரு.

இதுவரையில் என்ன காரணத்தினாலோ பசுவைப் போலச் சாதுவாகக் காட்சியளித்த ஆஷா, இளவரசரை ஏளனத்துடன் ஏறத்தாழப் பார்த்துவிட்டு, ''இளவரசருக்கும் நான் ஒன்று சொல்லுகிறேன்: அடுத்த வீட்டில் கவனம் செலுத்துபவர்கள் முதலில் சொந்த வீட்டைச் சிந்தித்துக்கொள்ள வேண்டும். மங்களகிரியில் நடப்பதாகக் கற்பனை செய்யும் சதியில் உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்காதீர்கள். உங்கள் தலைநகரில், அரண்மனை அந்தப்புரத்தில் நடக்கும் சதிகளில் கவனம் செலுத்துங்கள். இல்லாவிடில் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாததைப் போல உங்களுக்குக் கிடைக்கவேண்டிய மணிமுடி பறிபோய்விடும்!! நண்பரென்ற முறையில் உஷாராயிருக்கும்படி எச்சரிக்கிறேன். மறுபடி நாம் எப்பொழுது சந்திக்கிறோமோ, எங்கு சந்திக்கிறோமோ யார் கண்டார்கள்!! என்றாள்.

அதற்குமேல் அவள் அங்கு நிற்கவில்லை. ''நான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து மின்னல்

போல மறைந்துவிட்டாள். மலயஜத்வஜன் தனது மனைவியின் போக்கைக் கண்டு பிரமை பிடித்தவனைப்போல நின்ருன்.

வரவேற்பு வைபவங்கள் முடிந்ததும் அன்று மாலையே மஹா நதி தீரத்துக்குப் புறப்பட்டு விடுவதென்பதுதான் ஆஜாதசத்ருவும் உக்கிரசேனரும் அன்று காலையில் போட்டிருந்த திட்டம். ஆஜாதசத்ருவின் எச்சரிக்கைக்கு ராணி ஆஷாதேவி விடுத்த பதில் எச்சரிக்கையை ஆர அமர சிந்தித்துப் பார்த்த பொழுது மாலையே மங்களகிரியை விட்டுப்போவது அவ்வளவு உசிதமாக அவர்களுக்குத் தோன்றவில்லை.

''ஆஷா பேசுவதைப் பார்த்தால் அவள் எதற்கும் துணிந்தவளாக இருப்பாள் போலிருக்கிறது. நாம் மகதத்தை விட்டு வெகு தூரத்துக்கப்பால் வந்திருக்கிறோம். நம்மிடம் தற்சமயத்துக்குப் படை பலமும் அதிகமில்லை. ஜனகனை விரட்டுவதற்கு நாம் செய்த ஏற்பாடுகள் தெரிந்து நமது திட்டத்தை எதிர்க்கத் துணிந்த ராணி எதைத்தான் செய்யமாட்டாள்? விதர்ப்ப நாடு கொடுக்கும் ஊக்கத்தைப் பக்கபலமாகக் கொண்டு அவள் இத்தனை துள்ளு துள்ளினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.'' என்று விடுதிக்குள் வந்ததும் தாழ்ந்த குரலில் கூறினார் உக்கிரசேனர்.

ஆஷாவின் சாகசங்களை நேரில் கண்ட பிறகு அவருக்கு உரக்கப்பேசுவதற்குக் கூடப்பயமாயிருந்தது. பல பெரிய யுத்தங்களிலே வாழைக்குலைகளை வெட்டிச் சாய்ப்பதைப் போல எதிரிகளை ஆயிரமாயிரமாக வெட்டிச் சாய்த்த மகதப் பேரரசின் பிரதம சேனதிபதி ஒரு பெண்ணிடம் இவ்வளவு பயந்துகொண்டு மெதுவாகப் பேசியது ஆஜாதசத்ருவுக்கு ஆச்சர்யமாயிருந்தது. தன்னையே அவள் எவ்வளவு தூரம் அவமானப்படுத்திவிட்டாளென்பதை நினைத்துப் பார்த்ததும் உக்கிரசேனர் முன்னெச்சரிக்கையுடனிருப்பது நல்லதுதானென்பது உடனே தோன்றியது.

''ஆமாம்!! அப்படியானல் நாம் எப்பொழுது இவ்விடத்தை விட்டு புறப்படலாமென்கிறீகள்?'' என்று கேட்டான் ஆஜாதசத்ரு.

''எப்பொழுதா? நாம்புறப்படுவது யாருக்கும் தெரியக்கூடாதென்கிறேன். அதேபோல நமது படையைச் சேர்ந்தவர்களும் தனித்தனியே பிரிந்து சென்று பிறகு ஒன்றுசேர வேண்டும் அந்த ஏற்பாடுகளை நான் கவனிக்கிறேன். நமது ராஜப்பிரதிநிதிக்கும் சில விஷயங்களை சொல்லவேண்டியிருக்கிறது. நீ சற்று ஓய்வு எடுத்துக்கொள்!' என்று!' கூறிவிட்டு விஜயகேசரியை மட்டும் தன்னுடைய அறைக்கு அழைத்துச்சென்முர் உக்கிரசேனர்.

அன்றிவு அரண்மனை விருந்தின் பொழுது மறுநாட்காலை தாங்கள் மகாநதி தீரத்துக்குப் புறப்படவிருப்பதாக உக்கிரசேனர் அறிவித்தார். திரும்புகையில் தாங்கள் மறுபடியும் மங்களகிரிக்கு வந்துபோக எண்ணியிருப்பதாயும் அவர் சொன்ஞர்.

''இந்தப் பக்கங்களில் கொள்ளைக்கூட்டங்கள் அதிகமிருப்பதாகத் தெரிகிறது. இளவரசர் விரும்பினல் மகாநதிக்குப் போகும்வரைவழித்துணையாக எங்கள் வழிகாட்டிகளில் சிலரையும் படைவீரர்களில் சிலரையும் அனுப்புகிரேம்'' என்று ராணி சொல்லியபொழுது அதற்கு ஆஜாதசத்ரு பதிலளிக்க இடம் வைக்காமல் ''மிக்க நன்றி அப்படியே செய்யுங்கள்!!'' என்ருர் உக்கிரசேனர்.

மறுநாட்காலை சூரியோதயத்துக்குச் சிறிது முன்னல் மங்களகிரி படைவீரர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு வீரர்கள் ராணியின் உத்தரவுப் படி ஆஜாதசத்ருவின் விடுதி வாசலில் அணிவகுத்து நின்ருர்கள். நீண்டதூரம் பிரயாணத்துக்கு ஆயத்தமாக கூடாரங்கள் முதலியவைகளுடன் சிலர் காத்திருந்தனர். ராணியும், மலயத்வஜனும் இளவரசரை வழியனுப்ப நேரில் வந்து விடுதிக்குள் பிரேவசித்தனர். ஆனல் விடுதியில் ஓரிரண்டு பேர்கள் தானிருந்தார்களேயன்றி அதிக ஜனநடமாட்டமில்லை.

''சூரியோதயத்துடன் புறப்படவேண்டுமென்று சொன்னவர்களா இன்னும் நித்திரை கலைந்து எழுந்திருக்கவில்லை'' என்ற வியப்புடன் மலயத்வஜன் காவலாளர் ஒருவரிடம் விசாரித்தான். அந்தச் சப்தம் கேட்டு விடுதியில் ஒரு அறையிலிருந்த ராஜப்பிரதிநிதி அவசரம் அவசரமாக வெளியே வந்தார்:

''இளவரசரும் சேனதிபதியும் நேற்றிரவே போய் விட்டார்கள். அவர்கள் விதர்ப்பத்துக்கே போவதாகச் சொல்லிவிட்டுப் போனார்கள்!!'' என்றார்.

''என்ன ஆச்சர்யம்? எங்களிடம் சொல்லிக்கொள்ளாமல் அத்தனை அவசரமாகப் போவானேன்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!! என்றான் மலையத்வஜன.

நேற்றிரவு விருந்திலிருந்து இங்கு திரும்பியதும் விதர்ப்ப நாட்டு தூதன் ஒருவன் இங்கு காத்திருந்தான். பார்த்ததில் சாதாரணப் பாம்பாட்டியைப் போலிருந்தான். அவன் மாறு வேஷத்தில் வந்த ஒற்றன் என்பது பிறகுதான் எனக்கு தெரிந்தது,'' என்று கூறிய விஜயகேசரி பாம்பாட்டி என்ற சொல்லைச் சற்று அழுதிச் சொல்லி விட்டு ராணியைக் ஓரக்கண்களால் கவனித்தார். அவள் முகம் சுண்டி சுண்டைக்காய்போலாகியிருந்தது.

அவர் மேலும் சொன்னார், ''தூதனுடன் பேசியதும் மிக அவசரமாகத் தாங்கள் போக வேண்டியிருப்பதாயும், பொழுது புலர்ந்தவுடன் தங்களிடம் சொல்லும் படியும் இளவரசர் சொல்லிவிட்டு போனார். காலையில் நானே அரண்மனைக்கு வரலாமென்றிருந்தேன். அதற்குள் நீங்களே வந்து விட்டீர்கள்!!''

''விதர்ப்பம் ஜனகன் தாய் வசுமதி தேவியாரின் தேசமல்லவா? ஜனகனை கொள்ளைக்காரர்கள் கடத்திக் கொண்டு போயிருப்பதற்கும், விதர்ப்பத்துக்கு இளவரசர் இப்பொழுது போயிருப்பதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ!! என் தலை சுற்றுகிறது!! ஒன்றுமே புரிய

வில்லை. எனக்குத் தெரியாமலே என் ராஜ்யத்தில் ஏதேதோ நடந்து கொண்டிருக்கிறது. கடவுளே இதெல்லாம் எங்கு கொண்டு போய்விடப் போகிறதோ தெரியவில்லை!!'' என்று முனகிக்கொண்டே மலயத்வஜன் திரும்பினன்' ராணி ஆஷா ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. விடு திக்கு வெளியிலிருந்த வீரர்களை அவரவர்களுடைய இடங்களுக்குத் திரும்பிப் போகச் சொல்லிவிட்டு ரதத்தில் ஏறிக்கொண்டான்.

மங்களகிரியில் இந்தச் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஆஜாத்சத்ருவும் உக்கிரசேனரும் இரவோடு இரவாகப் பாலைவனப் பிரதேசத்தைக் கடந்து சமணபுரிக்குள் பிரவேசித்துக்கொண்டிருந்தார்கள்.

பாலைவனப் பிரதேசத்தைத் தாண்டியதும், முதன் முதலாக இருக்கும் மகத எல்லைப்புற நகரம் சமணபுரியாகையினுல் அங்கு பலம் பொருந்திய மகத எல்லைப்புற காவற்படையொன்று நிரந்தரமாக வைக்கப்பட்டிருந்தது. அதன் தளபதியினுடைய பெயர் துன்முகி அவனைச் சந்திக்கவே ஆஜாத்சத்ருவும், உக்கிரசேனரும் மாறு வேடத்தோடு சென்றுர்கள் அவர்கள் துன்முகியின் வாசஸ்தலத்தில் நுழைந்த பொழுது அங்கு அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது. தளபதி துன்முகி ருத்திராகாரத்தில் முழங்கிக்கொண்டிருந்தான். குதிரைச் சவுக்கினல் எவரோ தூணில் கட்டிவைத்து அடிக்கபடுவதைப் போல ''பளார்'' ''பளார்'' என்ற சவுக்கடி சப்தமும் வெளியே கேட்டுக்கொண்டிருந்தது.

''என்ன விபரீதம் நடத்திருக்கிறதோ தெரியவில்லையே!!'' என்ற கவலையுடன் ஆஜாத்சத்ருவும், உக்கிரசேனரும் பரபரப்போடு உள்ளே பாய்ந்தார்கள். உள்ளே கண்ட காட்சி அவர்களை ஒரு கணம் திகைப்புடன் செயலற்றுப் போகச் செய்துவிட்டது.

துன்முகி வாசஸ்தலத்தின் நடுக்கூடத்தில் மூவர் தூண்களில் இழுத்துக் கட்டப்பட்டிருந்தார்கள். அவர்களை

ஒருவன் நீண்ட குதிரைச் சவுக்கினுல் மாறி மாறி அடித்துக்கொண்டிருந்தான். அடிபட்டவர்கள் மேலிருந்து கசிந்த இரத்தம் அவர்கள் மேலெல்லாம் வழிந்து கொண்டிருந்தது வேதனை பொறுக்கமாட்டாமல் அவர்கள் வீறிட்டு அலறினர்கள். அந்தக் குரலுக்கிடையில் ''உங்களை உயிரோடு விடக்கூடாது!! உங்கள் மூவரையும் அடித்து சாகடித்தால்தான் என் மனம் சாந்தியடையும்!!'' என்று துன்முகி கத்திக்கொண்டிருந்தான்.

அந்த பயங்கரக் காட்சியைக் கண்டு மனம் தாளாத ஆஜாதசத்ரு ''துன்முகி, நிறுத்து!!'' என்று கத்தினன். சப்தம் வந்த திசையில் திரும்பிப் பார்த்த துன்முகி, மாறு வேடத்திலிருந்த இளவரசரைக் கண்டுகொள்ளாமல் ''என் வீட்டில் நுழைந்து என்னையே அதிகாரம் செய்யும் துணிவுபடைத்த ஆண்மகன் யார் நீ!! பிடித்துக் கட்டுங்கள் அவனையும் இந்த மூவரோடு சேர்த்து!!'' என்று முழங்கினன்.

''முட்டாளே!! அவர் இளவரசர் ஆஜாத்சத்ரு!!'' என்று முன்வந்து அறிவித்தார் உக்கிரசேனர்.

இளவரசர் என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் துன்முகியின் சரீரம் வெட வெடத்துப்போயிற்று. அவனுடைய கோபதாபங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயின. உடைவாளைச் சரேலென்று உருவி இளவரசனின் பாதங்களில் சமர்ப்பித்து சாஷ்டாங்கமாக விழுந்து வனங்கினன்.

''இளவரசே!! என்னை மன்னிக்க வேண்டும். நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. உங்களுடைய முகத்தில் விழிக்கவே எனக்கு வெட்கமாயிருக்கிறது. இந்தப் பாவிகள் மூவரையும் நம்பி மோசம் போய்விட்டேன் பிரபு. மோசம்போய்விட்டேன்'' என்று பிரலாபித்தான் துன்முகி

''எல்லா விஷயங்களையும் பிறகு பேசிக்கொள்ளுவோம். முதலில் அவர்களை அவிழ்த்து விட்டு வைத்திய

சிகிச்சைக்கு அனுப்பிவை!! மன்னிக்க முடியாத பெருங் குற்றம் செய்தவனை ஒரே வெட்டில் வெட்டி அவஸ்தை யின்றி உயிரைப் போக்கினாலும் போக்கலாம். இப்படி ரத்த விளாறுக அடித்து இம்சித்துச் சிறுகச் சிறுகக் கொல் லும் கோரத்தை நான் அனுமதிக்கமாட்டேன்!!'' என் றான் ஆஜாதசத்ரு.

தூண்களில் கட்டப்பட்டிருந்தவர்கள் அலறலை நிறுத்தி நன்றியுடன் இளவரசனைப் பார்க்க அவர்களுடைய கட்டுகளை அவிழ்த்தான் ஒருவன்'

''இளவரசே!! இவர்கள் செய்த குற்றம் சாதாரண மல்ல!! மகத சாம்ராஜ்யத்துக்கே மிகப்பெரி துரோகம் செய்திருக்கிறார்கள்!! என்றான் துன்முகி.

''இவர்கள் செய்த துரோகமென்ன? சொல்லு கேட்கிறேன்'' என்றான ஆஜாத்சத்ரு.

''இளவரசர் ஜனகர் கடத்தப்படுவதற்கு இவர்கள் உடந்தையாயிருந்திருக்கிறார்கள் பிரபு!! என்று துன்முகி கூறியதும்'' ஜனகன் கடத்தப்பட்டுவிட்டானா? என்ன சொல்லுகிறாய் துன்முகி!! நேற்றிரவு உன் வீரர்கள் ஜன கனை வழிமறித்துப் பிடித்துக்கொண்டு போனதாக அல் லவா மங்களகிரியில் கேள்விப்பட்டோம்!!'' என்று ஆச்சரி யத்துடன் கேட்டார் உக்கிரசேனர்.

''ஆமாம்!! அது உண்மைதான் சேனாதிபதியாரே!! தங்களுடைய ஓலை கிடைத்ததும் சிறந்த ஐம்பது வீரர் களுடன் மாறு வேஷத்தோடு பாலைவனத்தில் கொஞ்ச தூரம் சென்றதும் மங்களகிரியிலிருந்து ஒரு குதிரைப் படை வந்து அவரை வரவேற்று அழைத்துச் சென்றது. சுமார் 100 பேர்களுக்கு மேலிருந்து அவர்களிடமிருந்து ஜனகரை எப்படிக்கைப்பற்றுவதென்று நான் குழப்ப மடைந்திருந்தேன். நம் ஆட்களோ நூறு என்ன இருநூறு பேர்கள் இருந்தாலும் நாங்கள் சமாளித்துவிடுவோமென்று உறுதி கூறினார்கள். அவர்களை நம்பி ஜனகர் கோஷ்டி

யின் மீது பாய்ந்தோம். மங்களகிரிப் படையைச் சின்னு பின்னப்படுத்திவிட்டு ஜனகரை கடத்திக்கொண்டு வந்தோம்.

இவ்வாறு துன்முகி கூறுகையில் "இதுவரையில் எங்களுக்குத் தெரியும். அதற்கு மேல் என்ன நடந்தது? அதைச்சொல்லு!!" என்றார் உக்கிரசேனர்.

"நாங்கள் யாரென்பது ஜனகருக்குத் தெரியக் கூடாதென்று தாங்கள் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்த படியினுல் ஜனகரை என் வாசஸ்தலத்துக்கு அழைத்து வரவில்லை. தலைநகருக்கு அவரையெப்படித் திருப்பியனுப்புவதென்பதைப் பிறகு தீர்மானிக்கலாமென்று எண்ணி நகர எல்லையிலுள்ள இவர்களுடைய வீட்டில் ஜனகரை இரவு வைத்திருக்க ஏற்பாடு செய்தேன். ஜனகரை ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டி சாவியை நான் எடுத்துக் கொண்டேன். இரவில் ஒரு விநாடிகூடக் கண்ணயராமலிருந்து காவல் புரிய வேண்டுமென உத்தரவிட்டுத் திரும்பினேன். இருள் நீங்குவதற்கு முன்னுல் ஜனகரைத் தலை நகருக்கு அனுப்பிவிட வேண்டுமென்பதற்காக அதிகாலை 4-30 மணிக்கு மறுபடியும் இவர்கள் வீட்டுக்குப் போய்ப் பார்த்தால் உள்ளே இவர்கள் உறங்கிக்கொண்டிருந்தார்கள். ஜனகரை வைத்திருந்த அறை உடைத்துத் திறக்கப்பட்டுச் கிடந்தது. இளவரசரைக்காணவில்லை. வெளியில் பலர் குதிரைகளில் வந்து போன அடையாளங்கள் இருந்தன" என்றுன் துன்முகி.

காயமடைந்த மூவரில் ஒருவன் ஹீனஸ்வரத்தில், "பிரபு!! நான் சொல்லுவதையும் பெரிய மனது வைத்துக் கேட்க வேண்டும். நாங்கள் மூவரும் எவ்வளவோ முன் ஜாக்கிரதையோடுதான் இருந்தோம். இரவு சுமார் பத்து மணிக்கு வீட்டுக்கு வெளியே குதிரைகள் வரும் சப்தம் கேட்டது. தளபதியார்தான் வருகிறுரென்று நினைத்து வெளியே வந்த பார்த்தோம். எதிர்பாராத விதமாக பத்துப் பதினைந்து பேர்கள் எங்கள் மீது பாய்ந்தார்கள்.

பாலைவனத்தில் நாங்கள் தாக்கியவர்கள் தான் அவர்க ளென்பதை தெரிந்து கொண்டோம். அவர்கள் எங்கள் மூக்கில் எதையோ காட்டினார்கள். பிறகு என்ன நடந்த தென்பதே எங்களுக்குத் தெரியாது. தளபதியார் வந்து சவுக்கினால் அடித்த பொழுதுதான் நாங்கள் சுயநினைவு பெற்று எழுந்தோம்'' என்றான்.

''இப்பொழுது எனக்கு என்ன நடந்திருக்க வேண்டு மென்று விளங்குகிறது.பாவம் இவர்களைக் குற்றஞ் சாட்டு வதில் பயனில்லை. இவர்களை வைத்திய சிகிச்சைக்கு உடனே அனுப்பு. குணமடைந்தவுடன் இவர்கள் சம்பா நகரில் என் அரண்மனைக்கு வரட்டும். ''என்று சொல் லிய இளவரசர் காயமடைந்தவர்களை நோக்கி,'' நேற் றிரவு நடந்த சம்பவங்களைப் பற்றி பேச்சு மூச்சு காட் டக்கூடாது. நேற்று முழுவதும் நடந்த எல்லாச் சம் பவங்களையும் அடியோடு மறந்து விடவேண்டும் தெரிந் ததா? குணமடைந்தவுடன் அங்க நாட்டுக்கு வந்துவிடுங் கள். அரண்மனையில் நல்ல வேலை கொடுக்கிறேன்'' என் றான்.

அவர்கள் வெளியே அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் ''ஆஷாவின் சாகஸத்தைப் பார்த்தீர்களா மாமா? ஜனகனுக்கு மங்களகிரியில் வெற்றிகரமான வர வேற்பு நடத்த முடியாவிட்டாலும் அவனைக் கடத்தி, கொண்டு போய்விட்டாள். அவனை வைத்துக்கொண்டு என்னென்ன செய்யத் திட்டமிட்டிருக்கிறாளோ தெரியவில் லையே!!'' என்றான் ஆஜாத்சத்ரு.

உக்கிரசேனர் இதற்குப் பதிலளிப்பதற்குள் வீதி யில் சற்றுத் தூரத்துக்கப்பால் குதிரையில் அதிவேக மாகச் சிலர் வரும் சப்தம் அவர்களுக்குக் கேட்டது.

சிலநிமிட நேரத்துக்கெல்லாம் மூவர் அந்த வீட் டின் முன்னால் குதிரைகளில் வந்து இறங்கினார்கள். அவர் களில்நெட்டையான மனிதன் வாசலில் உருவிய வாளோடு

நின்ற காவலாளியிடம் ''தளபதி துன்முகியார் இருக்கிறாரா?'' என்று விசாரித்தான்.

''ஆமாம், யார் வந்திருப்பதாகச் சொல்லவேண்டும்?'' என்று கேட்டான் காவலாளி.

நெட்டை மனிதன் கரத்தில் அணிந்திருந்த ஒரு இலட்சினை மோதிரத்தைக் காட்டி ''முகுந்தன் அவசரமாகப் பார்க்க வேண்டுமென்று சொல்லு!'' என்றான்.

இதைக் காவலாளி உள்ளே சென்று துன்முகியிடம் அறிவித்தபொழுது ''முகுந்தனா! இந்தச் சமயத்தில் அவன் எதற்காக வந்திருக்கிறான்? அதி முக்கியமான காரியமாக இல்லாவிட்டால் அவனைச் சக்கரவர்த்தியார் அனுப்பமாட்டாரே!'' என்றார் உக்கிரசேனர்.

''எனக்கும் ஒரே திகைப்பாக இருக்கிறது. சக்கரவர்த்தியாரின் துணைப்படைத் தலைவன் தலைநகரிலிருந்து வருவதென்றால் விஷயம் மிகமிக முக்கியமானதாகத்தான் இருக்கவேண்டும். அவனை இங்குவரச் சொல்லட்டுமா? அல்லது நான்போய் பார்த்துவிட்டு வரட்டுமா? என்று விசாரித்தான் துன்முகி.

''இங்குவரச் சொல்லு. ஆனால் நாங்கள் யார் என்பதை உடனே அவனுக்குச் சொல்லவேண்டாம். மாறுவேடத்தில் உள்ள எங்களை அவனால் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. அவன் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டு மேற்கொண்டு என்ன செய்யவேண்டுமென்பதைத் தீர்மானிப்போம்!'' என்றார் உக்கிரசேனர்.

காவலாளி வெளியே சென்று முகுந்தனை மாத்திரம் உள்ளே அழைத்து வந்து விட்டுப்போனான். துன்முகியுடன் மற்றும் இருவர் இருப்பதைக் கண்ட முகுந்தன் ''தளபதியாருடன் அதிமுக்கியமான விஷயத்தைப் பற்றி தனிமையில் பேச வேண்டும். மிக அவசரமான விஷயம்!'' என்று சொல்லிவிட்டுத் தயங்கி நின்றான்.

"இவர்கள் முன்னிலையில் நீங்கள் எதையும் சொல்லலாம். இவர்களும் சக்கரவர்த்தியாரின் பரிபூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் தான்!" என்றான் துன்முகி.

"தயவு செய்து மன்னிக்க வேண்டும்! உங்கள் ஒருவரைத் தவிர மற்ற எவருக்கும் தெரியக்கூடாதென்பது சக்கரவர்த்தியாரின் ஆக்ஞை! என்று முகுந்தன் சொல்லவே துன்முகி உக்கிரசேனரையும் ஆஜாத்சத்ருவையும் பரிதாபமாகப் பார்த்தான். அவனுடைய தர்மசங்கடமான நிலைமையை உணர்ந்த உக்கிரசேனர்," முகுந்தா!! நீ தாராளமாகப் பேசலாம்!! சேனாதிபதிக்குக்கூடத் தெரியக்கூடாதென்பது சக்கரவர்த்தியாரின் கட்டளையானால் துன்முகியை வெளியே அழைத்துப்போ! இதோ என் பக்கத்தில் நிற்பவர் யார் என்பது உனக்குத்தெரிய வேண்டியதுமில்லை. அவர் முன்னிலையில் நீ எதையும் சொல்லலாமென்ற என் வாக்குறுதி போதுமானது!" என்று தமது வழக்கமான சொந்தக்குரலில் சொன்னார்.

குரலைக்கொண்டு உக்கிரசேனரைக்கண்டுகொண்ட முகுந்தன் மரியாதையுடன் தலை வணங்கிவிட்டு "தங்கள் பக்கத்திலிருப்பவர் யாராயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை. அவர் முன்னிலையில் சக்கரவர்த்தியாரின் செய்தியைத் தெரிவிக்கலாமென்று தாங்கள் சொன்னால் அதுவே போதும்!! மங்களகிரிக்குப் போயிருக்கும் இளவரசரை உடனே மிக மிக அவசரமாகத் தலைநகரத்துக்கு அழைத்து வரவேண்டுமென்று சக்கரவர்த்திப்பெருமானின் உத்தரவு. சென்ற இரண்டு வாரங்களுக்கு இடையில் தலைநகரில் அதிர்ச்சியளிக்கும் பல நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. இளைய ராஜகுமாரர் ஜனகர் திடீரென்று காணாமற் போய்விட்டார். அவர் கடத்திக்கொண்டு போகப்பட்டிருக்க வேண்டுமென்று சக்கரவர்த்தியார் நினைக்கிறார்!" என்றான் முகுந்தன்.

"ஜனகர் எப்படிக் காணாமற்போனார்?" என்று கேட்டார் உக்கிரசேனர்.

''நான்கு தினங்களுக்கு முன்னால் அதிகாலையில் இளவரசர் அரண்மனையிலிருந்து எங்கோ புறப்பட்டுச் சென்றார். அவருடன் கூட அறுவர் தலைநகர எல்லையைத் தாண்டிச் சென்றதாகத் தகவல் கிடைத்தது. இரவுவரை இளவரசர் அரண்மனைக்குத் திரும்பி வரவேயில்லை. தலை நகருக்கு வெளியே அவரை எதிரிகள் ஏமாற்றி அழைத்துப்போய் சேதி நாட்டுக்குக் கடத்திக்கொண்டு போயிருக்க வேண்டுமென்று உளவுப் படையிலிருந்து ஒரு தகவல் கிடைத்திருக்கிறது'' என்றான் முகுந்தன்.

''சேதி நாட்டவர்கள் ஜனகரைக் கடத்திப்போகக் காரணம்?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''சென்ற இரண்டு வாரங்களாகப் பரபரப்பான செய்திகள் தலைநகரத்துக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. எதை முதலில் சொல்லுவது, எதைப் பிறகு சொல்லுவது என்று புரியாமல்தான் நான் தவிக்கிறேன். சேதி நாட்டு எல்லையிலே திடீரென்று பெரும் படைகள் திரண்டிருப்பதாக நமது உளவாளிகள் தகவல் திரட்டி வந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர்களை தாக்குதல் நடத்தத் தயாராக சேதி நாட்டவர்கள் அணிவகுத்து நிறுத்தி வைத்திருக்கிறார்களாம். இதற்குக் கூட சக்கரவர்த்தியார் கவலைப்படவில்லை! என்று சொல்லிவிட்டு சற்று நிறுத்தினான். முகுந்தன்.

''நமது குதிரைப் படை ஒன்று போதுமே சேதி நாட்டவர்களைப் புறமுதுகுகாட்டி விரட்டியடிக்க!'' என்று நம்பிக்கையோடு சொன்னார் உக்கிரசேனர்.

''சேதி நாட்டுடன் மட்டும் யுத்த மேற்படுவதாயிருந்தால் நாம் கவலைப்பட வேண்டியதில்லைதான்' ஆனால் மேற்கு எல்லையை சேதி நாட்டவர்கள் தாக்கும் அதே சமயம் பார்த்து வடகிழக்கில் வங்கமும், புண்டரமும் இரு முனைத் தாக்குதல் நடத்த ஆயத்தமாயிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ஏக காலத்தில் மூன்று

நாடுகளும் ஆக்கிரமிப்பு நடத்தத் திட்டமிடுவதைக் கவனிக்கும் பொழுது மூவரும் ஒன்று சேர்ந்து பேசிக்கொண்டு போர்முரசு கொட்டவேண்டுமென சக்கரவர்த்தியார் நினைக்கிறார். தலைநகரில் கைது செய்யப்பட்ட இரு சேதி நாட்டு உளவாளிகள் கூறுவதைக் கவனித்தால் மிகப் பெரிய யுத்தம் எந்த வினாடியும் ஆரம்பமாகலாம். இதற்குள் மகதத்தின் இரு புறங்களிலும் தாக்குதல்கள் ஆரம்பித்திருந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த சமயம் பார்த்து வசுமதி தேவியாரும் விதர்ப்பத்துக்குப் போயிருக்கிறார்;! என்றான் முகுந்தன்.

வசுமதி ராணியார் விதர்ப்பத்திற்குப் போயிருக்கிறாரென்று முகுந்தன் சொன்னவுடன் உக்கிரசேனரும், ஆஜாத்சத்ருவும் ஒரு கணம் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். ராணி ஆஷாவின் அழைப்பை ஏற்று மங்களகிரிக்கு விஜயம் செய்ய ஜனகன் புறப்பட்டு வந்ததற்கும், வசுமதி தேவியார் விதர்ப்பத்துக்குப் போயிருப்பதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகம் இருவருடைய மனதிலும் ஏககாலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். விதர்ப்பத்துக்குப் போவதாகச் சொல்லிக்கொண்டு வசுமதி உண்மையில் மங்களகிரிக்கு வந்திருப்பாளோ? அவளை அரண்மனையில் மறைத்து வைத்துக் கொண்டுதான் ஆஷா ஒரு பெரிய நாடகம் நடித்தாளோ? என்று இருவரும் இப்பொழுது நினைக்கத் தலைப்பட்டார்கள்.

ஜனகன் சக்கரவர்த்தியாரிடம் கூடச் சொல்லாமல் தலைநகரத்திலிருந்து புறப்பட்டிருக்கிறான். அவனுடைய பிரயாணத்தில் ரகசியம் ஏதுமில்லாவிட்டால் போகுமிடத்தை சக்கரவர்த்தியிடம் சொல்லி விட்டுப்போயிருக்கலாம். வசுமதியும் இல்லாத சமயத்தில் ஆஷாவின் அழைப்பை ஏற்றுக்கொண்டு அவன் துணிந்து புறப்பட்டிருப்பானா? இது சாத்தியமா? வசுமதி மங்களகிரியில் இருந்து அவள் கொடுத்த ஓலையுடன் தூதுவன் போய்

அழைத்திருந்தால் தாயின் ஓலேயைக் கண்டு தட்டாமல் அவன் உடனே தலைநகரத்தை விட்டுக் கிளம்பியிருப்பான். இதை எண்ணிப்பார்க்கும் பொழுது வசுமதி மங்களகிரியில் இருப்பது சாத்தியுமேயென்று தோன்றுகிறது. இதை மலயத்வஜன் ஏன் நம்மிடம் சொல்லவில்லே? மலயத்வஜனுக்குக் கூடத்தெரியாமல் வசுமதி அவனுடைய அரண்மனையில் இருப்பது சாத்தியமா? அந்த அரண்மனையில் ஆஷா இராணியாக இருக்கும்வரையில் எதுவுமே அங்கு நடப்பது அசாத்தியமில்லை.

''முகுந்தன், வசுமதி தேவியார் எப்பொழுது விதர்ப்பத்துக்குப் புறப்பட்டுச் சென்ருர்களென்று நினைவிருக்கிறதா?'' என்று கேட்டார் உக்கிரசேனர் பிறகு.

''சுமார் பத்துப் பன்னிரண்டு தினங்களிருக்கும், விதர்ப்பத்தின் படை உதவியைக் கேட்க சக்கரவர்த்தியாரே அனுப்பியிருப்பாரோ என்றுகூட நினைக்கிறேன். ஆனுல் இது நிச்சயமாகத் தெரியாது. ஏககாலத்தில் நம் நாட்டுக்குப் பல மாதிரியான இடையூறுகள் சூழ்ந்து கொண்டு வருவதைக் கவனித்தால் பொது ஜனங்களுக்கிடையில் இருந்துவரும் பீதி உண்மையாகிவிடக் கூடாதேயென்று பயமாயிருக்கிறது!'' என்ருன் முகுந்தன்.

''அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சியைக் கொடுக்கிருயே முகுந்தன்!! பொதுஜனங்களுக்கிடையில் பீதி இருப்பதாகவா சொல்லுகிருய்?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''மகத நாட்டு மக்களிடம் கூடவா பீதி!! ஆச்சரியமாகவிருக்கிறதே!!'' என்று இவ்வளவு நேரம் பேசாமல் மௌனமாக அவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த ஆஜாத்சத்ரு சொல்லி வைத்தான்.

''ஆமாம் சேனுதிபதியாரே!! அடுத்த மாதம் எட்டாம் தேதி எட்டுக் கிரகங்கள் கும்பத்தில் கூடுகின்றன அல்லவா? அது வடபாரதம் முழுவதற்குமே மகத்தான தீங்குகளே இழைக்குமென்று சோதிடர்கள் சொல்வதில்

மக்களுக்கும் ஓரளவு நம்பிக்கையிருந்து வருகிறது. நாட்டில் ஏதோ ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்படக்கூடுமென்று பொதுவாக எல்லோரும் நம்புகின்றார்கள். மேற்கில் சேதிநாடும், வடகிழக்கில் வங்கமும், புண்டாகமும் வக்கரித்துக்கொண்டிருப்பதை கவனித்துச் சோதிடர்களின் கூற்று பலித்துவிடுமோ என்று மக்களுக்குப் பயமாக இருக்கிறது சேனாதிபதியாரே!!'' என்றான் முகுந்தன்.

''பாவம்! ஒவ்வொருவரும் அவரவர்களுடைய வினைப் பயனை அனுபவித்தே தீரவேண்டியிருக்கிறது. கிரகங்கள் என்ன செய்யும்? சூரியனைச் சுற்றி வரும் கிரகங்கள் என்றைக்காவது ஒரு நாள் ஒரே ராசியில் சந்தித்துத் தானே ஆகவேண்டும்? எட்டுக் கிரகங்கள் முதன்முதலாக இப்பொழுதுதான் ஒரு இடத்தில் சேருகின்றனவா? சிருஷ்டியாதிகாலத்திலிருந்து இதுவரை எத்தனை தடவை அவை ஒரே ராசியில் சந்தித்திருக்கும்!! இது கிடக்கட்டும். இளவரசர் ஆஜாத்சத்ருவை நான் சந்தித்து எப்படியும் விரைவில் தலைநகருக்கு அழைத்து வருவேனென்று சக்கரவர்த்தியாரிடம் சொல்லு. இனி நீ போகலாம்'' என்று அவனுக்கு விடை கொடுத்தனுப்பினார் உக்கிரசேனர்.

அவன் போனபிறகு, ''துன்முகி, இளவரசர் முன்னிலையிலேயே உன்னிடம் நான் சில வார்த்தைகள் பேச வேண்டும். நான் கேட்கும் கேள்விகளுக்கு உன்னிடமிருந்து ஒளிவு மறைவின்றி நேரடியான பதிலை எதிர்பார்க்கின்றேன். அடுத்த மாதம் எட்டுக் கிரகங்கள் கூடுவதைப் பற்றி முகுந்தன் சொல்லியதைக் கேட்டாயா? என்றான்.

''கேட்டேன்!! என்றான் துன்முகி.

''அதன் பயனாக மகதத்தில் மட்டுமல்ல, வடபாரதம் முழுவதிலுமே எத்தனையோ பெரிய அனர்த்தங்கள் நிகழலாம். நிகழத்தான் போகிறது என்று சோதிடர்கள் கூறுவ

தாக முகுந்தன் சொல்லியதையும் நீ கேட்டாயல்லவா?'' என்றார் உக்கிரசேனர்.

''ஆமாம், கேட்டேன்!!'' என்றான் அவன்.

''அதை நீ நம்புகிறாயா?'' என்று எதிர்பாராத ஒரு கேள்வியைக் கேட்டார் உக்கிரசேனர். அதற்கு என்ன பதில் சொல்லுவதென்று புரியாமல் துன்முகி சிறிது தடுமாறினான். சோதிடத்தில் உக்கிரசேனருக்கும், இளவரசருக்கும் நம்பிக்கை இருக்குமா என்று தெரியாமல் தன்னுடைய எண்ணத்தை வெளியிடுவது உசிதமல்ல வென்று நினைத்தே அவன் தயங்கினான்.

''என் கேள்விக்கு நேரடியான பதில் வேண்டுமென்று ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். சோதிடம் ஒரு போதும் பொய்க்காதென்பது என்னுடைய திடமான நம்பிக்கை. நீ என்ன நினைக்கிறாய்?'' என்றார் சேனாதிபதி.

துன்முகியின் நிலைமை இப்பொழுது சுலபமாகி விட்டது. ''சோதிடத்தை அலட்சியம் செய்ய முடியாதென்றுதான் நானும் நினைக்கிறேன்'' என்று அவன் சொல்லி வைத்தான்.

''எட்டுக்கிரகங்களைத் தனது சிம்மாசனத்தின் கீழ் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாலும் இராவணன். எட்டுக் கிரகச் சேர்க்கை அவனை அழித்தது. பாரதயுத்தத்தின் பொழுதும் இப்படித்தான் எட்டுக் கிரகங்கள் ஒரு ராசியில் கூடியதாக சோதிடர்கள் சொல்லக்கேட்கிறோம். அப்பொழுது என்ன நடந்தது?'' என்று ஒரு கேள்வியைப் போட்டு விட்டு சற்று நிறுத்தினார் உக்கிரசேனர்.

சேனாதிபதியார் இப்படி திடீரென்று சோதிட சாஸ்திர ஆராய்ச்சியில் இறங்கிவிட்டது துன்முகிக்கு ஆச்சரி

யமாயிருந்தது. ஆஜாத்சத்ருவுக்கோ தனது மாமனின் குணம் நன்ருகத் தெரியும். காரணமில்லாமல் சோதிடர் களின் தலையை அவர் உருட்டமாட்டாரென்று எண்ணி அவர்களுடைய சம்பாஷணையில் குறுக்கிடாமல் கவனித் துக்கொண்டிந்தான்.

''பாரத யுத்தத்தின் பொழுது என்ன நடந்தது!!'' என்று உக்கிரசேனர் கேட்டதற்கு, ''பல்லாயிரக் கணக் கானவர்கள் கொல்லப்பட்டார்கள். பூமி பாரம் குறைந் தது!!'' என்று தனக்குத் தெரிந்ததைச் சொன்ஞன் துன் முகி,

''அதுமட்டுமில்லை, துன்முகி!! இன்னெரு முக்கிய மான சம்பவமும் அப்பொழுது நிகழ்ந்தது. வடபாரதத் திலிருந்த பல குட்டி நாடுகளும் ஒரு குடையின் கீழ் வந் தன. பாண்டவ சாம்ராஜ்யம் வடக்கே காந்தாரத்தி லிருந்து தெற்கே மகாநதி வரையில்வியாபித்தது. அவந்தி, சேதி, விதர்ப்பம், கோசலம், வைதேகி, உசினரா, அங் கம், வங்கம், புண்டரகம் முதலான எல்லா நாடுகளும்' பாண்டவ சாம்ராஜ்யத்தின் அரவணைப்பின் கீழ் வந்தன. குருக்ஷத்திரத்தில் நடந்த கோரயுத்தம் லட்சக்கணக் கானவர்களை மாய்த்த ஒன்ருகும். எஞ்சியிருந்த பல கோடிக்கணக்கானவர்களுக்கு நல்வாழ்வை அளித்ததும் அதே யுத்தம்தான். இதையெல்லாம் உனக்கு நான் ஏன் சொல்லுகிறேன் என்று நினைப்பாய். மகதத்தை அதன் சரித்திரம் அறிந்திராத மிகப்பெரிய அபாயம் நாலா திசைகளிலும் சூழ்ந்து கொண்டு வரும் பொழுது ஆயிர மாயிரமாகவும், லட்சோபலட்சமாகவும் வீரர்களைத் திரட் டிக்கொண்டு போய், போர்க் களத்தில் சிம்மகர்ஜனை செய்ய வேண்டிய சேனுதிபதியார் வானத்தில் சஞ்சரிக் கும் கோள்களின் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு, இது என்னுடைய வயதுகாலத்தின் விபரீதக் கோளாருக இருக்குமோ என்று கூடச் சந்தேகப்படுவாய். ஆனல்...... ஆனல்...... துன்முகி, இப்பொழுது நான்

சொல்லுவதைக் கவனமாகக்கேட்டுக்கொள்!!', மிகக்கவனமாகக்கேட்டுக்கொள்'' என்று மூச்சுவிடாமல் சொல்லிய உக்கிரசேனர் மூச்சு விடுவதற்காகச் சற்றுநிறுத்தி பக்கத்தில் நின்ற ஆஜாத்சத்ருவை நோக்கினார்.

உக்கிரசேனர் பிறகு மேலும் சொன்னார், ''துன்முகி!! இந்தக் கிழவன் வயதுக் கோளாறினால் ஏதேதோ உளறுகிறானென்று நினைக்கிறாயா? இல்லை, துன்முகி, இல்லை! வயது கூடக்கூட என் தோள்வலிமையும் கூடிக்கொண்டிருப்பதைக் காட்ட வேண்டிய சந்தர்ப்பம் இதோ நெருங்கி விட்டது. அஷ்டக் கிரகச் சேர்க்கையினால் அநேக அரசுகள் நிலை தடுமாறப்போகின்றன. மணிமுடிகள் தரையில் உருளப் போகின்றன. குருதிவெள்ளம் எங்கும் ஆறுகப்பெருக்கெடுத்து ஓடப்போகிறது. அதிலே மகதப் பேரரசின் எல்லைகள் வடக்கே காந்தாரத்திலிருந்து தெற்கே நர்மதை வரையில் விஸ்தரிக்கப்படப்போகின்றன. இதன் அறிகுறிகளை எல்லாம் நான் காண்கிறேன். மங்களகிரிக்குப் போய் வந்ததிலிருந்து, என்மனதிலிருந்த பல சந்தேகங்களும் தீர்ந்துவிட்டன. மனத் தெளிவும் ஒரு புதிய துணிவும் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் உனக்கு ஏன் சொல்லுகிறேன் தெரியுமா? நீ எல்லைப் படைக் காவலன். உன்கீழ் பொறுக்கியெடுத்த ஐயாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள். மகதத்தின் தென்மேற்கு எல்லையில் ஒரு பகுதியைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு உன்னிடமிருக்கிறது. இதைவிட வருங்கால நிகழ்ச்சிகளில் உனக்கு ஒரு முக்கியமான பங்கை ஒதுக்கப்போகிறேன். அதற்கு முன்னால் உன்னிடம் நான் ஒரு உறுதிமொழியைக் கேட்கப்போகிறேன். என்னிடமும், பட்டத்திளவரசரிடமும் பரிபூரண நம்பிக்கை வைத்து, நான் கேட்பதைப் போல உறுதி மொழியளிப்பாயா?'' என்றார்.

''இந்தக் கேள்விக்கு இடமே கிடையாது சேனாதிபதியாரே!' பட்டத்திளவரசர் வாயால் சொல்ல வேண்டி

யது தான்பாக்கி,மறுகணம் அதைச்செய்து முடிக்கச் சித்தமாயிருக்கிறேன். அவருக்காக என் உயிரை அர்ப்பணிக்கவும், தயங்கமாட்டேன்'' என்றார் துன்முகி.

உக்கிரசேனர் அவன் இடையில் தொங்கிய வாளைச் சரேலென்று உருவியெடுத்து, அவர் கையில் கொடுத்து ''நீ சொல்வது உண்மையானால் இந்த வாளை இளவரசர் பாதங்களில் சமர்ப்பித்து நான் சொல்வதைப்போல பிரமாணம் செய்'' என்றார் உக்கிரசேனர்.

துன்முகி ஒரு கணம்கூடத் தயங்கவில்லை. வாளை இளவரசர் பாதங்களில் வைத்து ''சொல்லுங்கள்'' என்றான்.

''சகல தெய்வங்களின் சாட்சியாகவும் பட்டத்திளவரசருக்கு நானும் எல்லைப் படைகளும் என்றென்றும் விசுவாசமாயிருப்போமென்று பிரமாணம் செய்கிறேன். எங்களுடைய பரிபூரண விசுவாசம் என்றைக்கும் எப்பொழுதும் பட்டத்திளவரசர் ஒருவருக்கு மட்டுமே இருக்கும். உயிர்போவதாயினும் இந்தப் பிரதிக்ஞையை 'நாங்கள் மீறமாட்டோம். இது சத்தியம், சத்தியம், சத்தியம்!! இப்படிப் பிரமாணம் செய் என்றார் சேனாதிபதி.

துன்முகி தயக்கமின்றி அதேபோலப் பிரமாணம் செய்துவிட்டு வாளை எடுத்து முத்தமிட்டுவிட்டு உறையில் போட்டான்.

''புதிதாக என்றைக்கும் இல்லாதவிதமாக பட்டத்திளவரசருக்கு நீ ஏன் விசுவாசப் பிரமாணம செய்ய வேண்டுமென்று நினைப்பாய், நீயென்ன, பட்டத்திளவரசருக்குக்கூட இது புதுமையாகத் தோன்றும். ஆனால் இப்பொழுது இருவருமே என்னிடம் எதுவும் கேட்காதீர்கள். காரணத்தைச் சொல்லவேண்டிய காலம் வரும் பொழுது...!!

இப்படிச் சொல்லிக்கொண்டிருந்த உக்கிரசேனர் பேச்சைச் சட்டென்று நிறுத்தி, இடுப்பிலிருந்த பிச்சுவா கத்தியை எடுத்து எதிரில் சற்று தூரத்துக்கப்பாலிருந்த திரையை நோக்கி பலம்கொண்ட மட்டில் வேகமாக வீசினார்

## அத்தியாயம் 3

# அரசியல் சதுரங்கத்தில் ஆஷா ஆடிய ஆட்டம்!

திரைக்குப் பின்னுலிருந்து "ஐயோ செத்தேன்!! என்று ஒருவர் அந்த விடுதியே கிடுகிடுத்துப் போகுமாறு அலறிய சப்தம் அவர்களுக்குக் கேட்டது. சப்தம் பிறந்த இடத்தை நோக்கி சேஞதிபதி உக்கிரசேனரும், ஆஜாத்சத்ருவும், துன்முகியும், பாந்ய்தார்கள்.

திரைக்குப்பின்னுல் ஒருவன் காயமடைந்து விழுந்து கிடந்தான். உக்கிரசேனர் வீசிய பிச்சுவாள் கத்தி வீசிய வேகத்தில் திரையைக் கிழித்துக்கொண்டு போய் பின்னுல் நின்றஅம்மனிதனின் நடுமார்பில் பாய்ந்திருந்தது. என்னை வயது கடந்துவிட்ட கிழவனென்று நினைக்காதே என்று சில நிமிடங்களுக்கு முன்னுல் சொல்லிய உக்கிரசேனரின் புஜ வலிமை எப்படிப்பட்டதாக இருந்தால் அவர் வீசிய

பிச்சுவாக் கத்தி கனத்த திரைச்சீலையையும் கிழித்துக் கொண்டு போய் விழுந்து கிடக்கும் மனிதனின் மார்பில் பாய்ந்திருக்குமென்று துன்முகி வியந்துகொண்டிருக்கையில் உக்கிரசேனர் அம்மனிதனைக் காலினால் பலம் கொண்டமட்டும் உதைத்து ''நீ யார்? சாவதற்கு முன்னால் அதைச் சொல்லிவிட்டு உயிரைவிடு!! கடைசி நேரத்தில் செய்யும் ஒரு நல்ல காரியம் ஒட்டுக்கேட்ட உன் பாவத்தைக் கழுவட்டும்!!'' என்று முழங்கினார்.

''நான்......நான்......'' என்று நான்கைந்து தடவை பேசமுயன்றான், அம் மனிதன். கடைசி வரையில் பேச முடியாமலே உயிரைவிட்டான்.

''இவன் இங்கு மறைந்திருப்பதை எப்படிக் கண்டு பிடித்தீர்கள் மாமா?'' என்று கேட்டான் இளவரசன்.

''மங்களபுரி விடுதியில் ராணியின் வேவுகாரி தூண் மறைவிலிருந்ததை நீ எப்படி கண்டுபிடித்தாயோ அப்படித்தான் இவனை நானும் கண்டுபிடித்தேன். உங்களுடன் பேசிக் கொண்டிருக்கையில், திரையை பின்னாலிருந்து யாரோ அடிக்கடி லேசாக இழுப்பது தெரிந்தது. திரை சுருங்கிய இலக்கைப்பார்த்து, கத்தியை வீசினேன். அதற்கு ஒற்றன் பலியானான். எந்த நாட்டைச் சேர்ந்தவனென்பது கூடத்தெரியாமல் அநியாயமாகச் செத்துவிட்டானே!!'' என்று உக்கிரசேனர் சொல்லிக்கொண்டிருக்கையில் ஆஜாத்சத்ரு கீழே குனிந்து இறந்து கிடப்பவனின் இடுப்பில் சொருகியிருந்த ஒரு பட்டுப் பையை எடுத்துப் பிரித்தான். அந்தப் பைக்குள் அவனையும் உக்கிரசேனரையும் அதிர்ச்சியடையச் செய்யும் ஒரு இரகசியம் அடங்கியிருந்தது.

இறந்துகிடந்தவன் இடுப்பிலிருந்து எடுத்த பைக்குள் ஒரு ஓலைச்சுருள் இருந்தது. அந்த ஓலையில் இட்டிருந்த கையொப்பத்தைக் கண்டதும் நெருப்பை மிதித்

தவனைப் போல ''அடபாவி!! என்று கூச்சலிட்டான் ஆஜாத்சத்ரு.

''என்ன தம்பி!! அது யாருடைய கடிதம்? இவன், எவருடைய ஒற்றனென்பது தெரிகிறதா?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''யாருடைய ஒற்றனென்று கேட்கிறீர்கள்? சொன்னால் மூர்ச்சைபோட்டுவிடுவீர்கள் மாமா, மூர்ச்சை போட்டுவிடுவீர்கள்! இவன், ஆஷாதேவி அனுப்பி வந்தவன்! என்று ஆஜாத்சத்ரு சொல்லவும், ''சமணபுரிக்கு வந்த பிறகு கூடவா நம்மை ஆஷாதேவி விடவில்லை!! ஆச்சர்யமாயிருக்கிறதே!!'' என்றார் உக்கிரசேனர்.

''ஓலையைப் படிக்கிறேன் கேளுங்கள். பெரிய ராஜதந்திரியாகப் பிறக்க வேண்டியவள், தவறிப்போய்ப் பெண்ணாகப் பிறந்த ஒரு குட்டி நாட்டு அரசனுக்கு வாழ்க்கைப் பட்டுவிட்டாள்!!'' என்று கூறிய ஆஜாத்சத்ரு, அந்த ஓலையைப் பின்வருமாறு படித்தான்:-

''இளவரசர் ஆஜாத்சத்ருவும், சேனாதிபதி உக்கிரசேனரும் நாளைக்காலை மங்களகிரியைவிட்டுப் புறப்படப் போவதாகச் சொல்லியதோடு நில்லாமல், வழித்துணைக்கு நான் அனுப்பும் படைகளையும் ஏற்றுக்கொண்டார்கள். இதிலிருந்தே காலையில் புறப்படும் எண்ணம் அவர்களுக்கு கண்டிப்பாக இல்லையென்பதைத் தெரிந்துகொண்டேன். இரவோடு இரவாக அவர்கள் சொல்லிக்கொள்ளாமல் புறப்படத் தீர்மானித்திருக்கிறார்கள். அவர்கள் தென் திசையை நோக்கிப் போகமாட்டார்களென்பதும் எனக்குத் தெரியும். மகாநதிதீரத்துக்குப் போவதாகச் சொல்லியவர்கள், விழுந்தடித்துக்கொண்டு சமணபுரிக்குப் போவார்கள். அங்குபோய் ஜனகன் என்ன கதி ஆனான் என்பதைத் தெரிந்து கொண்டுதான் ராஜக்கிருகத்துக்குப் போவதா அல்லது சம்பாவுக்குப் போவதா என்பதை முடிவுசெய்வார்களென்று நினைக்கிறேன். சமணபுரியை அடையும்

அதே நேரத்தில் ஜனகன் மங்களகிரியை அடைந்திருப்பான் என்பது இந்த அப்பாவிகளுக்குத் தெரியாது. சமணபுரிக்குப் படை அனுப்பியபொழுது அந்தப் படைக்குத் தோல்வியேற்பட்டாலும் அதை வெற்றியாக மாற்ற நான் ஏற்பாடுசெய்திருக்கிறேன். அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம்.

நாளைக்காலை அரசருடன் நான் விடுதிக்குச் செல்லுவேன். இளவரசர் சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டதில் மிகப்பெரிய ஏமாற்றமடைந்துவிட்டதைப் போல அருமையாக நடிப்பேன். இதெல்லாம் எதற்காக என்பதை நேரில் சந்திக்கும் பொழுது சொல்லுகிறேன்.

தம்பி, நீ அவசரமாக ஒரு காரியம் செய்யவேண்டும். இந்த ஓலை கிடைத்தவுடன் ஒரு வினாடிகூடத் தாமதியாமல் சமணபுரிக்குப் புறப்படு. எல்லைப்புறப் படைத்தலைவன் துன்முகியின் விடுதிக்குள் எப்படியாவது நீ நுழைந்துவிடவேண்டும். இளவரசரும் உக்கிரசேனரும் எப்படியும் அங்கு வருவார்கள். அவர்கள் ஜனகனைப் பற்றியும், வசுமதிதேவியாரைப் பற்றியும் என்ன பேசுகிறார்களென்பது எனக்குத் தெரியவேண்டும்.

என் திட்டப்படி அவர்கள் மகாநதிக்குச் சென்று அங்கே அவர்களைச் சிறைப்பிடித்து சில தினங்கள் வரையில் மறைத்துவைத்திருந்தால் அவர்கள் மறுபடி மகதத்துக்குப் போகவேண்டியஅவசியமே ஏற்பட்டிருக்காது. துரதிர்ஷ்டவசமாக இந்தத்திட்டம் கைகூடாமற் போய்விட்டது. போனால் போகட்டும். அவர்கள் சமணபுரியிலிருக்கும் வரையில் அவர்களுடைய பேச்சையும் நடமாட்டத்தையும் கவனிக்க வேண்டும். அங்கிருந்து அவர்கள் எங்கே போகிறார்களென்பதும் தெரியவேண்டும்.

தம்பி உன் தங்கையின் வருங்கால நல்வாழ்வு இந்த வேலையை வெற்றிகரமாக நீ செய்து முடிப்பதைப் பொறுத்திருக்கிறது. வெற்றியோடு திரும்பி வா.

உன் அருமைத் தங்கை
ஆஷா.

இதை ஆஜாத்சத்ரு படித்து முடித்ததும், உக்கிரசேனருக்கு சில நிமிட நேரம் என்ன சொல்லுவதென்றே புரியவில்லை. இந்தக் கடிதம் புதிருக்குமேல் புதிர்களை ஏற்படுத்தியிருந்தது. சற்றுமுன்பு வரை ஓரளவு தெளிவாக ஊகிக்க முடிந்த பல விஷயங்களை குட்டையைக் குழப்புவதைப்போல குழப்பியிருந்தது. மறுநாட்காலை கிளம்பாமல் இரவோடு இரவாக தாங்கள் மங்களகிரியை விட்டுப் புறப்படப் போவதுகூட ஆஷாவுக்குத் தெரிந்து, துன்முகியின் வீட்டில் வேவு பார்க்கத் தனது தம்பியையே அவள் அனுப்பியிருந்தது உக்கிரசேனருக்கு மிகப்பெரிய ஆச்சர்யத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தது. இவ்வளவுக்கும் மேலாக தன்னையும் ஆஜாத்சத்ருவையும் ஒருமாத காலம் சிறைப்பிடித்து வைத்திருந்தால் அவர்கள் மறுபடி ராஜகிருகத்துக்குப் போகவேண்டிய அவசியமேயிருக்காதென்று ஆஷா எழுதியிருந்தது உக்கிரசேனருக்கு ஒரு அதிபயங்கரமான மிக மிக விரிவான சதித்திட்டத்தை நினைவுபடுத்துவதைப் போலத் தோன்றியது. இந்த ஒரு வாக்கியம் சமீபகாலத்திய சம்பவங்களுக்கெல்லாம் சரியான விடை பகருவதாக அவர் நினைத்தார்.

உக்கிரசேனரைப் போலவே ஆஜாத்சத்ருவும் மனக் குழப்பத்தில் பேசும் சக்தியை இழந்து வாய்மூடி மௌனியாகச் சமைந்துபோய் நின்றான். அவர்களுடைய மௌனத்தைக் கலைக்க விரும்பிய துன்முகி "ஆஷாதேவியாரின் ஓலையிலிருந்து ஜனகனைக் கடத்திச் சென்றவர்கள் மங்கள

கிரியைச் சேர்ந்தவர்களென்பது நிச்சயமாகத் தெரிகிறது இல்லையா?'' என்றார்.

''ஜனகன் எப்படியாவது தொலையட்டும். கவலைப் பட வேண்டிய விஷயங்கள் பல இருக்கும்பொழுது ஜனகனைப் பற்றி இனி நமக்கு என்ன கவலை? தம்பி நான் சொல்லுவதைக் கவனமாகக் கேட்டுவிட்டு உன் அபிப் பிராயத்தைச் சொல்லு. ஆஷாவின் ஓலை நம்முடைய கைக்குக் கிடைத்தது நாம் பூர்வஜென்மத்தில் செய்த புண்ணியத்தின் பயனாகத்தான். இது வரை நிகழ்ந்த பல சம்பவங்களும் நமக்கு பல மாதிரியான சந்தேகங்களைக் கிளப்பிவிட்டு திக்குத்தெரியாத நடுக்காட்டில் நம்மை நடமாடவிட்டு வந்திருக்கிறது. ஆஷாவின் கடிதம் நமது கண்களைத் திறந்துவிட்டிருக்கிறது. முதலாவதாக நாம் ஆரம்பத்தில் நினைத்ததைப்போல ஆஷா சாதாரணமான பேர்வழியில்லை சாதுர்யமானவள் மட்டுமல்ல, அவள் கை தேர்ந்த அரசியல் சூதாட்டக்காரி. அந்தச் சூதாட்டத்தில் அவள் தனியாக இறங்கவில்லை, தக்க பக்கபலத்தோடு இறங்கியிருக்கிறாள். இரண்டாவது, அவளுடைய பேச்சையும் போக்கையும் கண்டு நாம் எதுவுமே மதிப்பிடமுடியாது. ஜனகனை நாம் விரட்ட முயற்சித்த பொழுது அவள் மீட்க முயற்சித்தாள். நாம் வெற்றி பெற்றுவிட்டதாக இறுமாந்திருக்கையில் அதே வெற்றி யைப் படுதோல்வியாக்கிவிட்டாள். அவளுக்குத் தெரி யாமல் இரவில் புறப்பட்டுவிட்டதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கையில் அதை அறிந்து தனது தம்பியை உள வறிய இங்கு அனுப்பியிருக்கிறாள். அதுவும் எப்படி? நமக்கு சந்தேகம் ஏற்படக்கூடாதென்பதற்காக தம்பியை அரண்மனைக்கு அழைக்காமலும் அவனைப்பார்க்க தான் போகாமலும் நம்முடன் பேசிக்கொண்டிருக்கையிலேயே ஓலைமூலம் தம்பிக்குச் செய்தியனுப்பி நமக்கு முன்னால் அவனை இங்கு அனுப்பியிருக்கிறாள். இதெல்லாம் போகட்

டும். நம்மை ஒரு மாதம் மறித்து வைத்துவிட்டால் நாம் மறுபடி ராஜகிருகத்துக்கும் போகவேண்டிய அவசியமே இருக்காதென்று எழுதியிருக்கிறுளல்லவா? அதன்பொருள் என்னவென்று நினைக்கிருய் தம்பி?''

உக்கிரசேனர் இப்படிக் கேட்டுவிட்டு சற்று நிறுத்தவும், ''பொருள் என்ன? இதையும் தலைநகரிலிருந்து முகுந்தன் கொண்டுவந்த தகவல்களையும் சேர்த்துப்பார்க்கும் பொழுது ஆஷா எவ்வளவு பயங்கரமானவளென்பதை ஒருவாறு நான் உணரமுடிகிறது. இன்று மகதத்தைச் சூழ்ந்திருக்கும் பேராபத்துக்களில் ஆஷாவுக்கும் நிச்சயம் பங்கிருக்கவேண்டுமென்பதும் தெரிகிறது. வசுமதி தேவியாரைப் பற்றி நாம் என்ன பேசுகிறேமென்பதை அறிவதில் ஆஷாவுக்கு ஏன் இத்தனை ஆர்வம்? நாம் என்ன பேசுவோமென்று அவள் எதிர்பார்த்து அதை அறிய விரும்புகிருள்? இதைப்பற்றி யோசிக்கும்பொழுது வசுமதிதேவியார் விதர்ப்பத்துக்குப் போவதாகச்சொல்லிவிட்டு உண்மையில் மங்களகிரிக்குத்தான் போயிருப்பாளோ? அவள் அழைப்பின் மீதுதான் ஜனகன் எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் ராஜகிருகத்தைவிட்டுக் கிளம்பியிருப்பானே? என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. நமக்கு எதிராக கோசலம் ஒன்றைத் தவிர சுற்றியுள்ள எல்லா நாடுகளுமே எதிர்பாராதவிதமாக ஒரு சதிக்கூட்டத்தில் ஒன்று திரண்டிருக்கின்றன. அதற்கு ஆஷாவே தலைமை தாங்குவதாக இருந்தால் கூட நான் ஆச்சர்யப்படமாட்டேன். கணவனுக்கு ஒன்றுமே தெரியாமல் இவ்வளவு பயங்கரமான சதியில் அவள் ஈடுபாடுகொண்டிருப்பது தான் எனக்கு நம்பமுடியாத அதிசயமாயிருக்கிறது. அங்கத்தை மூன்று திசைகளிலும் சூழ்ந்துள்ள புண்டரம், வங்கம், மங்களகிரி ஆகிய மூன்றும் ஏககாலத்தில் சேர்ந்து தாக்குதல் நடத்திஞல் அங்கத்தில் நாம் நின்றுபிடிக்க முடியுமா? அதேசமயத்தில் மகதத்திலே இருமுனைத் தாக்குதல்

நடக்குமாயின் அதைச் சமாளிப்பது எப்படி? என்னையும் உங்களையும் சிறைப்பிடித்து வைத்துக்கொண்டு இந்த பயங்கரப் போரைத் துவக்க நினைத்திருந்தவர்களுக்கு நாம் சுதந்திரமாக மகதத்தை அடைந்து விட்டது முதல் தோல்வி. இந்த முதல்தோல்வி எதிரிகளை உடன்செயலில் இறங்கச் செய்வதாயிருக்கலாம். இனி ஒரு விநாடியும் தாமதிப்பதற்கில்லை. மாமா! உடனே நாம் தலைநகருக்குப் போயாகவேண்டும்!'' என்றான் ஆஜாத்சத்ரு.

''தலைநகருக்கா? அல்லது சிறைச்சாலைக்கா? நீ என்ன சொல்லுகிறாய் தம்பி'' என்றார் உக்கிரசேனர்.

''தலைநகருக்கு என்று சொன்னேன். அங்குபோவதற்கும் சிறைச்சாலைக்குப் போவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?'' என்று ஒன்றும் விளங்காமல் வினவினான் ஆஜாத்சத்ரு.

''சம்பந்தம் இருப்பதனால் தான் சொல்கிறேன் தம்பி! நீ தலைநகருக்குப் போவதும் ஒன்றுதான், சிறைச்சாலைக்குப் போவதும் ஒன்றுதான். இப்பொழுது நிகழும் சம்பவங்களெல்லாம் உன் நன்மைக்குத்தான் கடவுள் அனுக்கிரகத்தினால் நிகழுபவை. அஷ்டக் கிரகக்கூட்டம் உனக்கு எத்தனை பெரிய யோகத்தைக் கூட்டிவைக்கப் போகிறதென்பதை நீ அறியமாட்டாய். ஆனால் அதை இதோ என் கண்ணெதிரில் நான் காண்கிறேன்'' என்று ஒரு வெற்றிப் புன்னகையோடு உக்கிரசேனர் கூறினார்.

அவர் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் முகுந்தனும் அவனோடு இன்னொருவனும் பரக்கப்பரக்க அங்கே ஓடிவந்தார்கள்.

''மன்னிக்க வேண்டும், சேனாதிபதியாரே! தங்கள் அனுமதி பெறும்வரையில் வெளியே காத்திருக்க பொறுமையில்லாமல் உள்ளே வந்து விட்டதற்கு மன்னிக்க வேண்டும். தலைபோகிற ஆபத்தான செய்தியுடன் இந்தத்

தூதுவன் தலைநகரிலிருந்து வந்திருக்கிறான்!!" என்றான் அரண்மனை துணைப்படைத் தலைவன் முகுந்தன்.

"அப்படி என்ன தலைபோகிற ஆபத்து? செய்தி கொண்டு வந்தவனே சீக்கிரமாகச் சொல்லட்டும்?" என்றார் உக்கிரசேனர்.

"பிரபு! நமது தலைநகருக்கு எந்தவிதமான ஆபத்துமில்லை. அண்மையிலுள்ள கோசலத்தில் பல பரபரப்பான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவை நம்நாட்டையும் நிச்சயம் பாதிக்கவே செய்யுமென்று சக்கரவர்த்தி பெருமான் அஞ்சுகிறார்!!" என்றான் வந்த தூதுவன்.

"கோசலத்தில் என்ன நடந்திருக்கிறது? சீக்கிரமாகச் சொல்லு!!" என்று உத்தரவிட்டார் உக்கிரசேனர்.

"கோசலச் சக்கரவர்த்தி பிரசன்னஜித் உல்லாசப் பிரயாணத்துக்காக திகசாரண்யத்துக்குப் போயிருந்தார். அந்தச் சமயம்பார்த்து பிரதம சேனாதிபதி விதூர்த்தன் இராணுவத்தைத் தன் கையில் போட்டுக்கொண்டு ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றியதோடல்லாமல் சக்கரவர்த்தியாரை உயிருடன் சிறைப் பிடிக்கவும் அது சாத்தியமில்லாவிடில் கொன்றுவிடவும் உத்தரவிட்டிருக்கிறான்!!" என்றான் தூதுவன்.

"விதூர்த்தன் பட்டத்திளவரசனல்லவா? எப்படியும் ராஜ்யம் அவனை அடையவேண்டியதுதானே!! தானாக வருவதற்கு முன்னால் தகப்பனைத் தீர்த்துக்கட்டி அரசைக் கைப்பற்ற அவன் ஏன் முயற்சிக்க வேண்டும்!!" என்று ஆஜாத்சத்ரு கேட்டபொழுது, "பிறகு சொல்லுகிறேன்" என்று சுருக்கமாகப் பதிலளித்த உக்கிரசேனர் தூதுவனைப் பார்த்து, "ஊம், மேலே சொல்லு!!" என்றார்.

"சக்கரவர்த்தி பிரசன்னஜித் பிள்ளைக்குப் பயந்து நாட்டைவிட்டு வெளியேறி நம்நாட்டுக்கு ஓடிவந்துவிட்ட

தாக கோசலத்தில் பேசிக்கொள்ளுகிருர்களாம். பிரசன்ன ஜித்துக்கு அவரது சிம்மாசனத்தைத் திரும்பப் பெற்றுக் கொடுக்க நமது மன்னர் யுத்த முஸ்தீபுகளைச் செய்கிரு ரென்ற ஒரு வதந்தியும் கோசலத்தில் பரவிக்கொண்டிருக் கிறதாம். தலைநகரில் யுத்த முஸ்தீபுகள் நடப்பது என் னவோ உண்மைதான். நாடெங்கும் படைதிரட்டும் நட வடிக்கைகள் ஜரூராக நடக்கின்றன. கிராமம் கிராமமாக சேனைக்கு ஆள்திரட்ட தீவிரமான முயற்சிகள் செய்யப் பட்டு வருகின்றன. ஆனுல் இதற்கும் கோசலத்தில் நடந் துள்ள உள்நாட்டுக் கொந்தளிப்புக்கும் எவ்விதமான சம் பந்தமும் இல்லையென்பது நமக்குத் தெரியும். ஆனுல் விதூர்த்தன் வேறுவிதமாக நினைக்கின்ருனும். மகதம்கோச லத்தைத் தாக்குவதன் முன்னுல் கோசலமே வலுத்தாக்கு தலை ஆரம்பித்து விடவேண்டுமென்று விதூர்த்தன் திட்ட மிட்டுக்கொண்டிருப்பதாக நமது சக்கரவர்த்தியாருக்கு தகவல் கிடைத்திருக்கிறது. இதை எல்லைப்படைத் தலை வர் துன்முகியிடம் தெரிவித்து, பட்டத்திளவரசர் ஆஜாத் சத்ருவைச் சந்தித்தால் அவருக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்பது சக்கரவர்த்தியாரின் ஆணை'' என்ருன் தூதுவன்.

''பிரசன்னஜித் இப்பொழுது மகதத்தில்தான் தஞ் சம் புகுந்திருக்கிருரா?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''இல்லை!! அவர் மகதத்தில் நுழைந்ததாகவே தெரியவில்லை. அப்படியிருக்கையில், தாம் அவருக்கு சிம்மா சனத்தை மீட்டுக்கொடுக்க நாம் யுத்த முஸ்தீபுகளைச் செய்கிருேமென்று விதூர்த்தன் குற்றஞ்சாட்டுகிருர். இதையும் சக்கரவர்த்தியார் அறிவிக்கச் சொன்னுர்'' என்ருன் தூதுவன்.

''நல்லது! முகுந்தா, நீயும் இவனும் எவ்வளவு சீக்கிரமாகத் தலைநகருக்குத் திரும்ப முடியுமோ அவ்வளவு

சீக்கிரமாகத் திரும்புங்கள். எல்லைப்புறப் பாதுகாப்புகளை ஒழுங்குபடுத்திவிட்டு, இளவரசருடன் வெகுசீக்கிரத்தில் ராஜகிருகத்துக்கு நான் வருவதாக சக்கரவர்த்தியாரிடம் தெரிவி! நீங்கள் இனிப்போகலாம்'' என்ருர் உக்கிரசேனர்.

தூதுவர்கள் வெளியே போன பிறகு ''என்ன யோசிக்கிருய் தம்பி? கோசலத்தை நமது நேசநாடாக எப்பொழுதும் போல வைத்திருக்க என்னசெய்ய வேண்டுமென்பதை கவலையில்லாமல் என்னிடம் விட்டு விடு. கோசலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மகதத்தில் ஏதாவது எதிரொலிகளைக் கிளப்புவதாயிருந்தால் அது நமது சக்கரவர்த்தியாரின் மனதில் எழக்கூடிய புயலாகத்தான் இருக்கும். ஏற்கனவே உன்னைப் பற்றி அவர் மனதில் நஞ்சூட்டும் முயற்சியிலே வசுமதியும் மற்றவர்களும் ஓரளவு வெற்றி கண்டிருக்கிருர்கள். விதூரத்தன் அரசைக் கைப்பற்றியதை உன் எதிரிகள் இப்பொழுது சரியாகச் சூறையாட நினைப்பார்கள். இன்று விதூரத்தன் செய்ததையே நாளை ஆஜாதசத்ருவும் செய்யப் போகிருனென்று நம் அரசர் காதுகளில் ஏற்கனவே அவர்கள் ஓதத் தலைப்பட்டிருப்பார்கள். ஆகையால், அடுத்த ஒவ்வொரு நிமிடமும் நாம் மிக விழிப்புடனிருக்க வேண்டும். நாம் இனிச் செய்ய வேண்டியதென்ன என்பதை கச்சிதமாக திட்டமிட்டு வகுத்துக்கொண்டு சமணபுரியிலிருந்து உடனே புறப்பட்டாக வேண்டும்!'' என்ருர் உக்கிரசேனர்.

பிறகு இருவரும் தாழ்ந்த குரலில் தங்களுடைய வருங்காலத் திட்டங்களைப் பற்றி விவாதித்து முடிவுசெய்து கொண்டார்கள். அந்தி மயங்கும் நேரத்தில் ஆஜாதசத்ரு மட்டும் தனது வழித்துணைப் படையுடன் அங்கத்தின் தலைநகரான சம்பாவை நோக்கிப் புறப்பட்டான். அவன் சென்ற பிறகு உக்கிரசேனர் துன்முகியை அழைத்து

''துன்முகி!! எனக்கு ஒரு மிகமிக நம்பிக்கையான உளவாளி வேண்டும்'' என்ருர்.

''அதற்கென்ன? தருகிறேன்'' என்ருர் துன்முகி.

''அவன் கொண்டுபோகும் செய்தி எப்படிப்பட்டது தெரியுமா? மிகமிக ரகசியமானது. அச்செய்தி வெளியாகுமாளுல் முதலிலே தூக்கில் தொங்கவேண்டியவர்கள் நீயும் நானும்தான். தலைநகரிலிருந்து வந்த தூதன் சொல்லிய விஷயத்தைக்கேட்கும் பொழுது இதற்குள்ளாகவே நம்நாட்டை விதூர்த்தன் கொடூரமாகத் தாக்க ஆரம்பித்திருப்பானே என்று எனக்குப் பயமாயிருக்கிறது. நாலா புறமும் அபாயம் சூழ்ந்திருக்கும் இந்நேரத்தில் கோசலம் தாக்குதலை ஆரம்பித்தால் மகதம் இருக்குமிடம் தெரியாமற் போய்விடும். இதை எப்படியும் தடுக்க வேண்டும். தடுத்தே தீரவேண்டும். அதற்கு ஒரு உபாயம் இருக்கிறது. நான்கொடுக்கும் ஒரு ஓலை விதூர்த்தன் கைக்குப் போய்ச் சேர்ந்துவிடுமாளுல் அவனிடம் மந்திரசக்தியைப் போல அந்த ஓலை வேலைசெய்யும். அவன் நமது கடும் எதிரியாயிருந்தால் கூட ஓலையைப் பார்த்த மாத்திரத்தில் நமது ஆத்ம நண்பனுக மாறிவிடுவான். அம்மட்டல்ல, சேதிநாட்டுடன் நாம் நடத்தவேண்டியிருக்கும் போரிலே அவன் பேருதவி புரியவும் வலுவில் முன்வருவான். நீயே யோசித்துப்பார். மேற்குத் திசையில் சேதிநாட்டுப் படை நம்மைத் தாக்கும் பொழுது வடக்கிலிருந்து கோசலம் சேதிநாட்டைத் தாக்குமாளுல் சேதிநாடு திக்குமுக்காடித் திணறிப்போகும்'' என்ருர்.

''நீங்கள் சொல்லுவது சரி! விதூர்த்தன் தங்கள் ஓலையைப் பார்த்தவுடன் மனம்மாறுவானென்பது என்ன நிச்சயம்?'' என்று சந்தேகம் எழுப்பினுன் துன்முகி.

''அந்தக் கவலையே வேண்டாம்! என்னிடம் ஒரு பரம ரகசியமிருக்கிறது. அடுத்த ஓரிரண்டு ஆண்டுகளுக்கிடையில் வட பாரதத்தில் எத்தகைய மகத்தான மாற்றங்கள் ஏற்படப்போகின்றன, அவை எப்படி யாரால்

ஏற்படப் போகின்றன என்ற ஒரு பயங்கர ரகசியத்தை நான் அறிவேன், அதை விதூர்த்தன் அறிந்தால் நமக்காக எதைத் தியாகம் செய்யவும் முன்வருவான். எப்படியாவது அவன் கைக்கு என் ஓலை கிடைக்கச் செய்துவிட்டால் அரசியல் அரங்கில் ஆச்சர்யமான மாற்றங்களை நாம் காணலாம். நீ இளவரசர் ஆஜாத்சத்ருவுக்கு விசுவாசப்பிரமாணம் செய்திருப்பவன். அவருக்காக உயிர்கொடுக்கவும் தயாரென்று சகல தெய்வங்களின் பெயராலும் பிரமாணம் செய்திருப்பவன். ஆஜாத்சத்ருவுக்குக்கூட வெளியிடாத அந்த பயங்கர ரகசியத்தை உனக்கு மட்டும் சொல்லுகிறேன்'' என்ருர்.

இப்படிக் கூறிய உக்கிரசேனர் துன்முகியிடம் காதோடு காதாகச் சிலநிமிட நேரம் பேசினுர். அவர் சொல்லியவைகளைக் கேட்ட துன்முகியின் விழிகள் இரண்டும் பெயர்ந்து கீழே விழுந்துவிடுபவைபோல அப்படி ஆச்சர்யத்தில் அகன்றுபோயின. அவனுக்கு உரோமாஞ்சலி ஏற்பட்டிருக்க வேண்டும். உடலெல்லாம் உரோமங்கள் குத்திட்டுக்கொண்டு நின்றன. அவனுடைய கைகால் விரல்கள் கூட ஓரளவு பயத்தில் நடுங்கிக்கொண்டிருந்தன. இடைமறிக்காமல் அவன் மௌனமாக உக்கிரசேனர் சொல்லியதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அதேசமயம் அவன் உண்மையில் சுய நினைவோடு செவி கொடுத்துக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிருஞ அல்லது விழித்த கண் விழித்தபடியே சுய நினைவையெல்லாம் இழந்து, கல்லாகச் சமைந்துபோய்விட்டாஞ என்று எண்ண வேண்டியிருந்தது. அவன் ஆடாமல் அசையாமல், இமைகளைக்கூடக் கொட்டாமல்உக்கிர சேனரைப்பார்த்தவண்ணமிருந்தான்.

உக்கிரசேனர் சொல்ல வேண்டியதை சொல்லி முடித்ததும்' ''துன்முகி! ஏன் இப்படிப் பேயறைந்தவனைப்போலபிரமைபிடித்துப் போய்விட்டாய்? நான் சொல்லிய விஷயங்கள் உன் உடலிலுள்ள ஒவ்வொரு துளி

ரத்தத்தையும் உறைந்து போகச் செய்துவிட்டதா? என்றைக்கோ வரவேண்டிய சாவின் தலைவாசலுக்கு இன்றைக்கே போய்விட்டதாக எண்ணிப் பீதிகொள்ளுகிருயா? முட்டாளே, இந்த உலகம் என்னைப்போல வைரநெஞ்சம் படைத்தவர்களுக்குத் தானடா! கோழைகள் எலிக்குஞ்சுகளைப் போல நம் காலடியிலே நசுக்கப்பட்டு மாளவேண்டியவர்கள். வீரர்கள் வாழவேண்டிய உலகிலே கோழைகளுக்கு இடமில்லை. நான் நெருப்புடன் விளையாடுவதாக நீ நினைப்பாய்!! அந்த நெருப்பு என்னைப் பொசுக்கிப் பிடி சாம்பலாக்கிவிடப் போவதாக எண்ணிக் கலங்குவாய், ஆனல் இந்த உக்கிரசேனன் போட்ட திட்டங்கள் இதுவரையில் தோற்றதில்லை. இனி எக்காலத்திலும் தோற்கப்போவதில்லை. என் சொந்த மருமகன் ஆஜாத்சத்ருவுக்குக் கூடச் சொல்லாத ஒரு அதி பயங்கரமான ரகசியத்தை உனக்குச் சொல்லி என் தலையை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறேன். இதிலிருந்தே எந்த மட்டில் உன்னிடம் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேனென்பதை நீ உணர்ந்து கொண்டிருப்பாய். இதோபார். துன்முகி! உன் உதவியுடன் என் திட்டங்கள் கைகூடிவிட்டால் நீ ஒரு சாதாரண எல்லைப்படைக்காப்பாளனுக இருக்கமாட்டாய். தலைநகரிலே ஒரு பெரும் பதவியை வகிப்பவனுக இருப்பாய். என்ன சொல்லுகிருய் துன்முகி? வாய் திறந்து பேசு'' என்றுர் உக்கிரசேனர்.

''சேனுதிபதியாரே!!'' என்று அவன் ஏதோ சொல்ல ஆரம்பித்தபொழுது உக்கிரசேனர் சட்டென்று சுற்று முற்றிலும் பார்த்துவிட்டு ''நீ சேனுதிபதியென்று என்னை இனி அழைக்கக்கூடாது. எனது திட்டத்தில் என்னைப் போல நீயும் இனி சம பங்காளி; நண்பரே என்று அழைக்கும் உரிமை உனக்கு உண்டு. பட்டப்பெயர்களை விட்டு ஒரு நண்பருடன் பேசுவதைப்போல என்னிடம் பேசு'' என்றுர் உக்கிரசேனர்.

''தங்களுடைய நம்பிக்கைக்கு இவ்வளவுதூரம் பாத்திரமாகியது என்னுடைய பூர்வஜென்மப் புண்ணியம்

தான். இனி உலகத்தில் ஒருவருக்கும் அஞ்சமாட்டேன். எவ ரிடமும் கைகட்டிச் சேவகம் செய்யமாட்டேன். என் உட லில் கடைசிமூச்சு இருக்கும்வரையில் தங்களுக்கு நான் மெய்விசுவாசத்துடன் நடந்து கொள்ளுவேன். என் மனைவி மக்கள் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நண்பரே ஆணையிட்டுச் சொல்லுகிறேன். உங்கள் திட்டம் எத்தனை பயங்கரமானதென்பது எனக்குத் தெரியும். அதில் தோல்வி கண்டால் கூண்டோடுகைலாயம் போவதைத் தவிர தப்பு வதற்கு வழியில்லையென்பதையும் நான் தெளிவாக அறிந்து தான் இருக்கிறேன். என்றாலும் தங்களோடு என் வாழ்க் கையையும் இந்தத் திட்டத்தில் பணயம் வைக்கச் சித்த மாயிருக்கிறேன், நான் என்ன செய்ய வேண்டுமென்று உத்தரவிடுங்கள். உத்தரவிட்டு வாய் மூடுவதற்குள் அதை நான் செய்துமுடிப்பேன்'' என்றான் துன்முகி.

இதன்பிறகு கோசல மன்னன் விதூரத்தனுக்கு, துன் முகியே ஓலையை எடுத்துச் செல்வதென்று தீர்மான மாயிற்று.

ஓலையுடன் துன்முகியைப் பிரயாணப்படுத்திவிட்டு உக்கிரசேனர் சமணபுரியிலிருந்து கிளம்பினார். ஐந்து தினங்களுக்குப் பின்னர் உக்கிரசேனர் ராஜகிருகத்தை யடைந்த சமயம், பொழுது விடிய சற்று நேரமிருந்தது. பொழுது புலர்ந்த பிறகு அரண்மனைக்குச் செல்லலா மென்றெண்ணி தமது மாளிகையை நோக்கிக் குதிரை யைத் திருப்பினார். மாளிகை வாசலில் குதிரையைவிட்டு இறங்கி பூங்காவில் அவர் நுழைந்த பொழுது காலில் ஏதோ பலமாகத் தடுக்கியது. தடுக்கிய வேகத்தில் சற்று தூரத்துக்கு அப்பால் போய் குப்புறவிழுந்தார் சேனாதி பதி. வெளித்தேச யாத்திரைக்குப்பின் வீடு திரும்புகையில் இடறிவிழுந்தது அமங்கலமாக அவருக்குத் தோன்றி வேதனையளித்தது. தடுக்கிய பொருள் என்ன வென்பதைப் பார்க்க அவர் விழுந்த இடத்திலிருந்து எழுந்துவந்து கவனித்த பொழுது பாதையின் குறுக்கே ஒரு மனிதன் விழுந்துகிடந்தான்.

தரையில் ஒரு மனிதன் பாதையின் குறுக்கே விழுந்து கிடப்பது தெரிந்ததும், சேனதிபதி உக்கிரசேனர் குனிந்து அவன் முகத்தைப் பார்த்தார். மாளிகையிலிருந்து வந்த லேசான வெளிச்சத்தில் விழுந்து கிடப்பவன் வயோதிகன் என்பது மட்டும்தான் தெரிந்ததே தவிர, அவன் யாரென்பதைத் தெளிவாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. லேசாக முனகல் சப்தம் அவனிடமிருந்து வந்தது. பொறுக்க முடியாதவேதனையில் அவன் துன்பப் படுவதைப்போல உக்கிரசேனருக்குத் தோன்றியது.

அம் மனிதனுக்குப் பக்கத்தில் ஒரு சிறு மூட்டை கிடந்தது. அம்மூட்டையில் என்ன இருக்கிறதென்பதைக் கவனிக்க அதைத் தூக்குவதற்கு முயற்சித்த உக்கிர சேனர் சின்னஞ் சிறு மூட்டையை ஒருகையினால் எடுக்க முடியாததைக் கண்டு ஆச்சரியமடைந்தார். இரண்டு கைகளினாலும் அதைத் தூக்கிப்பார்த்த பொழுது அதற்குள்ளிருந்து கண்களைப்பறிக்கும்படியான பிரகாசம் வெளிப்பட்டது. மூட்டைக்குள் இருந்தவை அவ்வளவும் விலை உயர்ந்த நவரத்தின ஆபரணங்கள், விலை மதிக்க முடியாத வைர, வைடூரிய மாலைகள். மங்கலான வெளிச்சத்திலேயே அவை இவ்வளவு பிரகாசிக்க முடியுமானால் அவற்றின் மதிப்பு எவ்வளவு இருக்கவேண்டுமென்பதை ஊகித்துக்கொள்ள உக்கிரசேனருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

''இத்தனை மதிப்புள்ள ஆபரண மூட்டையுடன் இவன் என் மாளிகையில் விழுந்து கிடப்பானேன்? நிச்சயம் இவன் கொள்ளைக்காரனாக இருக்கமாட்டான். தள்ளாத வயதிலே பெரிய மாளிகைகளில் நுழைந்து கொள்ளையடிக்கும் அளவுக்கு இவனிடம் துணிவு இருக்க முடியாது. அப்படியானால் இவன் யார்? யாரென்று யோசித்து நேரத்தைச் செலவிடாமல் இவனிடமே அதைக்கேட்டுப் பார்ப்போமே.'''

இவ்வாறு சிந்தனையிலீடுபட்டிருந்த உக்கிரசேனர் அந்த மனிதனுடைய முகத்துக்கு அருகில் குனிந்து ''அய்யா நீங்கள் யார்? உங்கள் பெயரென்ன?'' என்று விசாரித்தார்.

முக்கல் முனகல் சப்தத்தைத்தவிர, அம் மனிதனிட மிருந்து வார்த்தைகள் ஏதும் வருவதாயில்லை. நான்கைந்து முறை திரும்பத் திரும்ப உக்கிரசேனர் கேட்டபிறகு ''உக்கிரசேனன்.....உக்கிரசேனன் அவனை...அவனை...பார்க்கணும்!! அவனைப்பார்க்கணும்!!'' என்று முனகியவாறே கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதைப்போலச் சொன்னான் அம் மனிதன்.

இதற்குள் உக்கிரசேனருக்கு நிலைமை ஒருவாறு புரிந்து விட்டது. தன்னைப்பார்ப்பதற்காக அந்த மனிதன் நெடுந்தூரத்திலிருந்து வந்திருக்க வேண்டுமென்றும் பசி தாகத்தினாலும் களைப்பினாலும் சேரவேண்டிய இடத்தை அடைந்தபின் தள்ளாடி விழுந்திருக்க வேண்டுமென்றும் அவர் தீர்மானித்தார். அவன் யாராக இருப்பினும் தன்னைத் தேடி வந்தவனாதலால் உள்ளே கொண்டுபோய் விசாரிக்க வேண்டுமென்று முடிவு செய்த உக்கிரசேனர் மளமளவென்று வேகமாக மாளிகையை நோக்கி நடந்தார்.

மாளிகையில் விளக்குகள்தான் எரிந்துகொண் டிருந்தனவே தவிர காவலாளர்கள் ஒருவராவது மாளிகையைக் காவல்புரிவதாகத் தெரியவில்லை. மூலைக்கு ஒருவராகப் படுத்து உறங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலரை எழுப்பி பூங்காவுக்கு அழைத்து வந்தார். தரையில் கிடந்தவரை மெதுவாக அவர்கள் உள்ளே தூக்கிச்சென்று ஒரு படுக்கையில் படுக்கவைத்தார்கள். அந்த மனிதன் காட்டிய சமிக்ஞையிலிருந்து அவனது தேவையை ஊகித்த உக்கிரசேனர் கொஞ்சம் பால் கொண்டுவரச்செய்து அவன் வாயில் ஊற்றினார். பாலி

ஞல் நெஞ்சு நனைந்த பிறகுதான் அவனுக்குச் சற்று தெம்பு ஏற்பட்டதைப் போலிருந்தது. அரைக் கோப்பை பால் உள்ளேபோனவுடன் அவன் படுக்கையில் மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். அதுவரையில் மூடிக்கொண்டிருந்த கண்களைத் திறந்து சுற்றி நிற்பவர்களை அவன் கவனித்தான். உக்கிரசேனர் மீது அவன் பார்வை விழுந்ததுதான் தாமதம் "உக்கிரசேனு? நீயா? நீயேதானு?" என்றுன்.

இதைச் சொல்லிய பொழுது பஞ்சடைந்து போயிருந்த அவன் கண்களிலே திடீரென்று ஒரு பிரகாசம் தோன்றியது. தளர்ந்து போயிருந்த உடலில் ஒரு புதிய தெம்பு பிறந்தது. சற்று முன்னுல் சாவின் தலைவாசலில் கிடப்பவனைப்போலிருந்த மனிதன் புது வாழ்வில் அடியெடுத்து வைப்பவனைப்போல புன்னகை தவழ உக்கிரசேனரைப் பார்த்தான். தாம் காண்பது கனவல்லவென்பதை ஊர்ஜிதம் செய்துகொள்ள கண்களை இரண்டு மூன்று தடவை கசக்கிக்கொண்டுபார்த்தார். பிறகு "உக்கிரசேனு? ஏன் ஒரு மாதிரிப் பார்க்கிருய்? என்னைத் தெரியவில்லையா? ஆமாம், எப்படியப்பா உனக்குத் தெரியும்? எப்படியோ இருக்கவேண்டிய என்னை இப்படிப் பார்த்தால் எப்படி உனக்குத்தெரியும்" என்ருர் அவர். அந்தப் பேச்சிலே ஏமாற்றம் தொனித்தது.

"முதலில் சாப்பிடுவதற்கு இன்னும் ஏதாவது கொண்டு வரச்சொல்லு. ஐந்து நாட்களாக ஒரு கவளம் கூடச் சாப்பிடாமல் கைகால்கள் தளர்ந்துபோய்விட்டன. சரியாகப் பேசுவதற்குக்கூடத் தெம்பு இல்லை. என்னை நீ அடையாளம் கண்டுகொள்ளாததும் ஒரு விதத்தில் நல்லதுதான். உனக்கே தெரியவில்லையென்ருல் என்னை வேறு எவரும் அடையாளம் கண்டுகொண்டிருக்க முடியாது. சேரவேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்து விட்டேன். என் மனதில் இருந்த பெரும் சுமை இப்பொழுது இறங்கிவிட்

டது. உன்னிடம் தனிமையில் பேசவேண்டும். தற்சமயத்துக்கு என்னை மற்றவர்கள் தெரிந்து கொள்ளாமலிருப்பது தான் நல்லது'' என்றுர் அந்த வயோதிகர்.

இதற்குள் அம் மனிதர் யாராயிருக்க வேண்டுமென்பதை ஒருவாறு ஊகித்துக்கொண்ட உக்கிரசேனர், அவருக்கு பாலும் பழமும் கொண்டுவரச் செய்தார். காவலாளிகளையெல்லாம் வெளியே அனுப்பிவிட்டு அந்த மனிதனின் அருகில் வந்தார். பல நாட்களாக உணவைக் கண்டிராதவரைப்போல ஆவலுடன் பழங்களை உரித்துத் தின்ற அம் மனிதரைக் கண்டதும் உக்கிரசேனருக்குக் கண்களில் கண்ணீர் மல்கிவிட்டது. ஒரு துளி கண்ணீர் அம்மனிதர் அமர்ந்திருந்த கட்டிலின் மீது விழுந்தபொழுது தான் அவர் நிமிர்ந்து பார்த்தார்.

''உக்கிரசேனு! என்னைத் தெரிந்துகொண்டு விட்டாயென்று நினைக்கிறேன். உன்கண்ணீர் சொல்லுகிறது நான் யாரென்பதை நீ அறிந்து கொண்டுவிட்டாயென்பதை! அகண்ட சாம்ராஜ்யத்தை மூன்று வாரங்களுக்கு முன் கட்டியாண்ட சக்கரவர்த்தி பிரசன்னஜித், இன்று பசித்த வயிறுக்கு உன்னிடம் பிச்சை கேட்டு வாங்கிச் சாப்பிடும் நிலைமையை அடைந்துவிட்டதைப் பாரடா உக்கிரசேனு. பார்!! தாடியும் மீசையுமாக கந்தல் துணியுடுத்தி மேலெல்லாம் புழுதிபடிந்து பிச்சைக்காரனைவிட கேவலமான நிலைமையிலிருக்கும் உன் மாமனைப் பாரடா உக்கிரசேனு!! நான் வாழ்ந்த வாழ்வு என்ன? இருந்த கௌரவமென்ன? தலையிலே மணிமுடியும் இடுப்பில் பட்டுப் பீதாம்பரமும் கரத்திலே செங்கோலுமாக நான் சிம்மாசனத்தில் வீற்றிருந்த கோலமென்ன? இன்று வயிறு காய்ந்து உடல் காய்ந்து பேசவும் சக்தியின்றி உன் பூங்காவிலே விழுந்துகிடந்த கோலமென்ன? மண்டலம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் கட்டியாள வேண்டுமென்ற மமதைகொண்டிருந்த உன் மாமன் இன்று அண்டியிருக்க

ஒரு குடிசைகூட இல்லாமல் பரிதவிக்கும் அலங்கோலத்தை பார்!!''

இப்படிப் புலம்பவாரம்பித்தார் அம்மனிதர். கோசலத்திலிருந்து தப்பிவந்த கோசலச்சக்கரவர்த்தி பிரசன்னஜித்தான் இந்த வயோதிகர் என்பதை வாசக நேயர்கள் இதற்குள் தெரிந்துகொண்டிருப்பார்கள்.

''மாமா!! கடந்துபோனதையெல்லாம் நினைத்து இப்படி மனதை அலட்டிக்கொள்ளுவதில் பயனில்லை. உங்கள் உடம்பு நெருப்பாகக்காய்கிறது. கடுமையான ஜுரம் அடிக்கவேண்டுமென்று நினைக்கிறேன். கோசலத்தில் நிகழ்ந்த அசம்பாவிதங்களைப் பற்றியெல்லாம் வரும் வழியில் ஒற்றர்கள் மூலமாகக் கேள்விப்பட்டேன். இப்பொழுது அதிகாரமும், சேனைகளும் விதூர்த்தன் கையிலிருக்கின்றன. எதைச்செய்ய நீங்கள் திட்டமிட்டாலும் அவசரப்படாமல் நிதானமாகச் செய்ய வேண்டும். நீங்கள் இங்கிருப்பதாக எண்ணி மகதத்தின் மீது படையெடுக்க ஏற்கனவே அவன் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறான்'' என்றார் உக்கிரசேனர்.

''அதை எதிர்ப்பார்த்துதான் நான் இங்கு வந்தேன் உக்கிரசேனா! சேதிநாட்டுக்கோ, வைதேகிக்கோ போகாமல் நான் இங்குவரக் காரணம் என் மருமகனை நீ கைவிடமாட்டாயென்ற பூரண நம்பிக்கையோடுதான். பிம்பிசாரனையும் நான் பார்க்கவேண்டும். நடந்ததையெல்லாம் விவரமாக அவனுக்குச் சொல்லவேண்டும்.. விதூர்த்தன் தாக்குதலை ஆரம்பிப்பதன் முன்னால் நீங்கள் தாக்குதலை ஆரம்பித்து அவனைத் தொலைக்கவேண்டும் என்ன சொல்லுகிறாய், உக்கிரசேனா? உன் உதவி எனக்கு நிச்சயம் கிடைக்குமா?'' என்றார் பிரசன்னஜித்.

''உங்களுடைய தற்போதைய உடல் நிலைமையில் தீவிரமாக எதைப்பற்றியும் சிந்திக்கக்கூடாது. என்னைக் கேட்டால் நீங்கள் யாரென்பது இங்கு யாருக்குமே

தெரியக் கூடாதென்றுதான் நான் சொல்லுவேன். வஞ்சகத்தை வஞ்சகத்திஞல்தான் வெல்ல வேண்டும். வந்து சேரவேண்டிய இடத்திற்கு நீங்கள் பத்திரமாக வந்து சேர்ந்து விட்டீர்கள். இனி பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாயிருங்கள். எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொள்ளுகிறேன். சற்று நிம்மதியாகப் படுத்துத் தூங்குங்கள் மாமா! நண்பகல் வைத்தியரோடு மறுபடி நான் வருகின்றேன்'' என்று சொல்லி பிரசன்னஜித்தைப் படுக்க வைத்துவிட்டு வெளியே வந்தார் உக்கிரசேனர்.

பிறகு அந்த அறையின் கதவுகளை இறுக்கிப் பூட்டி, சாவியை இடுப்பில் சொருகிக் கொண்டு சற்று தூரத்திற்கு அப்பாலிருந்து இரு காவலாளர்களை அழைத்து அவர்களிடம் காதோடு காதாக ஏதோ சொன்ஞர்.

சேஞதிபதி உக்கிரசேனர் ஸ்நானம் செய்து காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு சக்கரவர்த்தி பிம்பிஸாரனைச் சந்திக்க அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார்.

## அத்தியாயம் — 4

# சிலந்தி கட்டிய வலை

மகதத்தின் தலைநகரமான ராஜகிருகத்தின் அமைப்பைப் பற்றி சில விஷயங்களைக் குறிப்பிடுவது இங்கு அவசியமாகிறது. சக்கரவர்த்தியாரின் அரண்மனை நகருக்கு நடுநாயகமாக நகரின் நடுமத்தியில் அமைந்திருந்தது. கோயிலைச் சுற்றி நான்கு புறங்களிலும் நான்கு பிரகாரங்கள் இருப்பதைப் போல தலைநகர வீதிகள் எல்லாம் அரண்மனையை நடுநாயகமாகக் கொண்டு அமைந்திருந்தன. ஒவ்வொரு பெயருடைய வீதியும் உண்மையில் அரண்மனையைச் சுற்றி வரும் நான்கு வீதிகளாக இருந்தபடியினால், திசையின் பெயரைக் கொண்டு வடக்கு வணிகர் வீதி, தெற்கு வணிகர் வீதி என்றவாறாகப் பெயரிடப்பட்டிருந்தன. இவ்வாறு அமைந்த இருபத்திரண்டு வீதிகளில் உட்புறமிருந்த ஐந்து வீதிகளும், வெளிப்புறமிருந்த கடைசி வீதியும் அமைச்சர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், தளபதிகள், படை வீரர்கள், புராதன ராஜ வம்சத்தவர்கள் ஆகியவர்களின் வசிப்பிடங்களாக இருந்தன. மற்ற இடங்களில் பொது ஜனங்களின் இல்லங்களும், வர்த்தக

நிலையங்களும் தென்பட்டன. வீதிகள் தோறும் சுமார் பதினைந்து வீடுகள் மாத்திரம் பெரிய மாளிகைகளைப் போலவும், மற்ற மாளிகைகளைக் காட்டிலும் அமைப்பிலும், தோற்றத்திலும் வர்ணப் பூச்சுகளிலும் கூட தெளிவாக மாறுபட்டவைகளாகவும் இருந்தன. இந்த மாளிகைகளில் ஒன்றுக்குள் வாசக நேயர்களை அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் பிறகு ஒரு சமயம் ஏற்படப் போவதினால், தற்சமயத்திற்கு அவைகளில் வசிப்பவர்கள் யார் என்பதையும், அவை மற்ற இல்லங்களுக்கு மாறுபட்டவைகளாக ஏன் இருக்க வேண்டுமென்பதையும் கூருமல் விடுகிறோம்.

வழி நெடுகிலும் தென்பட்டவர்கள் ஆங்காங்கே சேனாதிபதியாருக்கு தலை குனிந்து கரம் குவித்து வணக்கம் தெரிவித்தார்கள். வீரர்கள் விலகிநின்று இராணுவ சம்பிரதாயப்படி வணக்கம் தெரிவித்தனர். உக்கிரசேனர் அரண்மனையை அடுத்த முதல் வீதிக்குள் பிரவேசித்த பொழுது எதிரில் துணைப்படைத் தலைவன் முகுந்தன் அரண்மனையிலிருந்து வந்து கொண்டிருந்தான். சேனாதிபதியாரைக் கண்டதும் ''வந்துவிட்டீர்களா? இப்பொழுதுதான் சக்கரவர்த்தியார் தங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். தாங்கள் வந்துவிட்டீர்களா? என்று பார்க்கவே நான் புறப்பட்டு வந்தேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தமாதிரி நீங்களே வந்துவிட்டீர்கள்'' என்று சொல்லியவாறு குதிரையைத் திருப்பினான்.

இருவரும் சேர்ந்து அரண்மனையை நோக்கிச் செல்லுகையில், ''முகுந்தா! வீதிகளெல்லாம் ஏன் வெறிச் சென்று காட்சி தருகின்றன? வணிகர்கள் வீதியில் கூட அதிக ஜன நடமாட்டத்தைக் காணுமே'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''எந்த நிமிடமும் யுத்தம் ஆரம்பிக்கலாம் என்ற கவலையுடன் எல்லோரும் பீதியடைந்திருக்கிறார்கள்

ஐயா! யுத்த காலத் தேவையை முன்னிட்டு வணிகப் பெருமக்களிடமிருந்த தானியங்களை எல்லாம் அரசாங் கம் விலை கொடுத்து வாங்கிச் சேமித்து வைத்திருக்கின் றது. நிச்சயமற்ற நிலைமை தலைநகரில் மட்டுமல்ல, நாடு பூராவுமே நிலவுகிறது. சக்கரவர்த்தியாரின் ஆணைப்படி பெரும்பகுதி சேனைகள் எல்லைப் பாதுகாப்புக்குப் போயிருக்கின்றன. எஞ்சியிருந்தவர்களும் நேற்று கோச லத்தின் எல்லைக்கு விரைந்து அனுப்பப்பட்டிருக்கிறார் கள். தலைநகர மக்களில் பெரும் பகுதியினர் இப்படிப் போர்க் கோலம் பூண்டு வெளியேறிய பின்னர் வீதிகள் வெறிச்சென்றிருப்பதில் என்ன ஆச்சரியம்?'' என்றான் முகுந்தன்.

''ஓ! இப்பொழுது புரிகிறது. சக்கரவர்த்தியா ரின் நேரடியான உத்தரவுகளை அனுசரித்துத்தான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''ஆமாம் ஐயா! தாங்கள் திரும்புவதற்குள் விப ரீதங்கள் நடந்துவிடக் கூடாதென்பதற்காக படைத் தலைவர்களைக் கலந்து கொண்டு மன்னர் பெருமான் இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்'' என்றான் முகுந் தன்.

''ஜனகனைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''ஒரு தகவலும் இல்லை. வசுமதிதேவியார் விதர்ப் பத்திற்குப் போய்ச்சேர்ந்ததைப் பற்றியும் தகவல்இல்லை. கோசலச் சக்கரவர்த்தி மகதத்தில்தான் இப்பொழுது இருப்பதாக வதந்தியாக இருப்பினும் அவரைப் பற்றி யும் நிச்சயமான தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. நமது எல்லைக் காவற்படைகளின் கூற்று சரியாயிருக்கு மானால் சக்கரவர்த்தி பிரசன்னஜித் இதுவரை மகதத்தில் நுழைந்திருக்க முடியாது'' என்றான் முகுந்தன்.

இதைக் கேட்டு, உக்கிரசேனர் உள்ளூரச் சிரித்துக் கொண்டார். பேசிக்கொண்டே அவர்கள் அரண்மனை முற்றவெளியை அடைந்து குதிரைகளிலிருந்து கீழே இறங்கி அரண்மனைக்குள் பிரவேசித்தார்கள்.

உக்கிரசேனர் அரண்மனைக்கு வந்த சமயம் சக்கர வர்த்தி பிம்பிசாரன் மந்திராலோசனை மண்டபத்தில் உப சேனாதிபதி நந்திவர்மனுடன் எல்லைப் பாதுகாப்பைப் பற்றி யோசனை கலந்து கொண்டிருந்தான். உக்கிர சேனரைக் கண்ட மாத்திரத்தில் அவர் ஆசனத்தைவிட்டு எழுந்து வந்து, ''வந்துவிட்டாயா?வா, வா; உன்னை எதிர் பார்த்து, எதிர்பார்த்து என் கண்கள் பூத்துப் போய்விட் டன'' என்று சொல்லி மகிழ்ச்சியோடு வரவேற்றார்.

பிம்பிசாரன் உக்கிரசேனரைப் பார்த்த மாத்திரத் தில் தனது அந்தஸ்துகூட அவருக்கு மறந்து போய்விட் டது. ஆபத்துக் காலங்களில் சிலருக்கு என்ன செய்கின் றோம், ஏன் செய்கின்றோமென்பது தெரிவதில்லை. கடலில் தத்தளித்துக் கொண்டு உயிருக்கு மன்றாடுபவன் கையில் ஒரு சிறு மரக்கட்டை கிடைத்தாலும் உடும்புப் பிடியா கப் பற்றிக் கொள்ளுவான். அந்தக் கட்டையைக்கொண்டு தான் உயிர்பிழைக்க முடியுமா? என்பதைப் பற்றி நினை யாமல் அதுவேனும் தன்னைக் காப்பாற்றாதா என்ற துடிதுடிப்பில் கிடைத்ததைப் பற்றிக் கொள்ளுவது மனி தனுக்கு இயற்கையாக ஏற்பட்ட குணம். அதைப்போல மகதத்தை நாலாபுறங்களிலும் பேராபத்து சூழ்ந்திருக் கும் நெருக்கடியான தருணத்தில் அந்த ஆபத்துக்களி லிருந்து நாட்டைப் பாதுகாக்கும் சக்தி உக்கிரசேனர் ஒருவருக்குத்தான் உண்டு என்று சக்கரவர்த்தியார் நினைத் திருக்க வேண்டும்.

சேனாதிபதியிடம் பிம்பிசாரன் வழக்கத்தைவிட அதிக மான அன்பு காட்ட இன்னொரு முக்கியமான காரணமும் இருந்தது. அண்டையிலுள்ள கோசலத்தில் பிரசன்னஜித் தின் ஆட்சியைக் கவிழ்த்து விதூர்த்தனின் கொடியை

உயர்த்தியவர் அந்நாட்டுச் சேனாதிபதியேதான். அதே போல நமது சேனாதிபதியும் துரோகம் செய்துவிடாமல் இருக்க வேண்டுமேயென்ற ஒரு பீதி பிம்பிசாரனுக்கு உள்ளூர இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகையால்தான் அளவு மீறிய அன்புக்கு அவரைக் கட்டுப் படுத்தி வைக்கவேண்டுமென்று அவர் நினைத்தாரோ என்னவோ? தமது அந்தஸ்தையெல்லாம் ஒதுக்கி வைத்து, உக்கிரசேனரை மார்புறத் தழுவிக்கொண்டு, "அப்பாடா! நீ வந்தவுடன் எனக்கு புதிய தெம்பு ஏற்பட்டுவிட்டதைப் போலிருக்கிறதடா உக்கிரசேனா? எங்கே உன் வருகை தாமதப்பட்டுவிடுமோ? அதற்குள் பல விபரீதங்களெல்லாம் நிகழ்ந்துவிடுமோ என்று அஞ்சிக் கொண்டிருந்தேன், கடவுள் உன்னை சரியான சமயத்தில் கொண்டு வந்து சேர்த்துவிட்டார்!" என்று ஏதேதோ ஆனந்த மிகுதியில் சொன்னார். உக்கிரசேனரைக் கரம்பிடித்து அழைத்துப் போய் அருகிலுள்ள ஒரு ஆசனத்தில் உட்காரச் செய்த பின்னர் "நீங்கள் இருவரும் போகலாம். அழைக்கும் பொழுது வரும்படி அரண்மனையிலேயே இருங்கள்" என்றார் சக்கரவர்த்தி.

உப சேனாதிபதியும் முகுந்தனும் அவ்விடத்தைவிட்டுப் போனபிறகு, "குழந்தை ஆஜாத்சத்ரு எங்கே உக்கிரசேனா? அவனும் உன்னுடன் வருவான் என்றல்லவா எண்ணியிருந்தேன்? அவனை மங்களகிரியில் தனிமையில் விட்டுவிட்டா வந்திருக்கிறாய்? அந்நாட்டு இராணியைப் பற்றி நான் கேள்விப்படுபவை அவ்வளவு திருப்தியாக இல்லையே" என்றார் சக்கரவர்த்தி.

"இளவரசரை மங்களகிரியில் விட்டு வரவில்லை பிரபு. இருவரும் சேர்ந்துதான் திரும்பினோம், முகுந்தன் எங்களைச் சந்திக்க வந்த பொழுது இளவரசரும் என்கூடத்தான் இருந்தார்" என்றார் உக்கிரசேனர்.

''ஆச்சரியமாயிருக்கிறதே! முகுந்தனால் இளவரசரைப் பார்க்கவில்லை. உன்னை மட்டுந்தான் பார்த்தேனென்றான். இளவரசனை அழைத்து வருகிறேனென்று நீ சொல்லியனுப்பியதாக அல்லவா அவன் சொன்னான்'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

''பேசவேண்டிய அதிமுக்கியமான விஷயங்கள் பல இருக்கின்றன. அவை எல்லாவற்றுக்கும் பூர்வாங்கமாக உங்கள் முன்னிலையில் முகுந்தனிடம் சில கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டும்'' என்றார் உக்கிரசேனர்.

''நீ பேசுவதின் பொருள் எனக்குப் புரியவில்லை. ஆஜாத்சத்ரு ஏன் வரவில்லை என்று கேட்டால் முகுந்தனை விசாரிக்க வேண்டுமென்கிறாய். என்னைக் குழப்பாதே உக்கிரசேனா? அவன் எங்கே என்பதை முதலில் சொல்லு'' என்று பிம்பிசாரன் கேட்ட பொழுது அவருடைய குரல் சற்று தடுமாறியது. அந்தத் தடுமாற்றம் அவன் மனதிற்குள் நடைபெற்றுக் கொண்டிருந்த, ஏதோ விபரம் புரியாத ஒரு போராட்டத்தைப் பிரதிபலிப்பதைப் போலத் தென்பட்டது.

''என்னை மன்னிக்கவேண்டும் மகாப் பிரபு! என்னிடம் தங்களுக்கு நம்பிக்கையிருந்தால் தயவுசெய்து நான் சொல்லவேண்டியதை என் போக்கின்படி சொல்ல அனுமதியுங்கள். முகுந்தன் வாயினால் இரண்டொரு விஷயங்களைச் சொல்லச் சொல்லிவிட்டு பாக்கியைப் பிறகு நான் சொல்லுகிறேன்.'' என்றார் உக்கிரசேனர்.

பிம்பிசாரனுக்கு இப்பொழுது கிட்டத்தட்ட தலை சுற்றுவதைப் போலிருந்தது. அருகிலிருந்த மணியை அடித்து முகுந்தனை அழைத்துவரச் செய்தான்.

முகுந்தன் வந்தவுடன், உக்கிரசேனர்தான் அவனுடன் பேசினார். ''முகுந்தா நான் கேட்கும் சில கேள்விகளுக்கு சக்கரவர்த்தியார் முன்னிலையில் சரியான பதில்

சொல்ல வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த இடத்தை விட்டு அகலும் பொழுது இங்கு பேசியதைப் பற்றி எவரிடமும் மூச்சுப் பேச்சுக் காட்டக் கூடாது. தெரிகிறதா?'' என்றார்.

''நல்லது'' என்றான் முகுந்தன்.

''நீ என்னைச் சந்தித்த பொழுது என்னுடன் இன்னும் வேறு யார் இருந்தார்கள்? கேட்ட கேள்விக்கு மட்டும் சுற்றி வளைக்காமல் பதில் சொல்லு'' என்றார் உக்கிரசேனர்.

''எல்லைப் படைத் தலைவர் துன்முகியும் இன்னொருவரும் இருந்தனர்'' என்றான் அவன்.

''அந்த இன்னொருவர் யாரென்பதை உன்னால் அறிய முடிந்ததா?'' என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டார் உக்கிரசேனர்.

''முடியவில்லை'' என்றான் அவன்.

''அவர் யாரைப் போலிருந்தார்?'' அந்த முகத்தை எங்காவது பார்த்ததாக உனக்கு நினைவிருக்கிறதா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

முகுந்தன் யோசனையில் ஆழ்ந்தான். அவனிடமிருந்து உடன் பதில் வரவில்லை.

''அந்த மனிதரின் காதுகளில் இரண்டு கங்கணங்களை மாட்டி, தலையிலிருந்த முண்டாசைக் கழற்றிவிட்டு ஒரு கிரீடத்தை வைத்து, இடையிலும் வாளைத் தொங்கவிட்டால் அப்போது அவர் உன் கண்களுக்கு எப்படித் தோன்றுவார்? அவருடைய முகத்தை நன்றாக நினைவில் இறுத்திப் பார்த்துச் சொல்லு'' என்றார் உக்கிரசேனர்.

''நான் பெரிய முட்டாள்தனம் செய்துவிட்டேன் பிரபு'' என்று சக்கரவர்த்தியாரை நோக்கிச் சொல்லிய முகுந்தன் ''அவர் இளவரசரேதான். இப்பொழுது எனக்குச் சந்தேகமேயில்லை. அவர் முன்னிலையில் நான்

தாராளமாகப் பேசலாமென்று சொல்லிய பொழுதே சந்தேகித்தேன்'' என்று ஆரம்பித்தான் முகுந்தன்.

''போதும்! கேட்பதற்கு மட்டும் பதில் கொடு முகுந்தா! அம்மனிதர் இடையில் ஒரு தடவை பேசினரல்லவா? அப்பொழுது அந்தக் குரல் யாரை ஒத்திருந்தது?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''அவர் இளவரசர் என்பதில் எனக்கு இப்பொழுது சிறிதும் சந்தேகமில்லை'' என்று அழுத்தமாகச் சொன்ஞன் முகுந்தன்.

''இதைச் சக்கரவர்த்தியாரிடம் சொன்ஞயா?'' என்று உக்கிரசேனர் கேட்ட பொழுது, முகுந்தன் ஒரு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டதைப் போலத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு மௌனம் சாதித்தான். அவனுக்குத் தைரியமளிக்க ''உன் மீது நான் குற்றப் பத்திரிகை படிக்கவில்லை முகுந்தா. சக்கரவர்த்தியாரிடம் என்ன சொன்ஞய் என்றுதான் கேட்கிறேன்'' என்ருர் சேஞதிபதி.

''உன்ஞேடு வேறு யாரோ ஒருவர் இருந்ததாயும் அவர் முன்னிலையில் தாராளமாகப் பேசலாமென்று நீ சொன்னதாயும் முகுந்தன் சொன்ஞன். அந்த மனிதன் எனக்கு மிகவும் வேண்டியவரென்று நீ கூறியதாயும் தெரிவித்தான்'' என்று சக்கரவர்த்தி பிம்பிசாரன் சொல்லவே, ''ஆமாம்! அவரே இளவரசராக இருப்பாரென்று அப்பொழுது நான் நினைக்கவில்லை'' என்ருன் முகுந்தன்.

''மாறுவேடமணிவதில் வல்லவஞன துணைப்படைத் தலைவன் நீ. உன்னையே இளவரசர் எவ்வளவு சாதுர்யமாக ஏமாற்றிவிட்டார் பார்த்தாயா? நல்லது, இனி நீ போகலாம். இப்பொழுது நாம் இங்கு பேசியது எவருக்கும் தெரியக் கூடாது. இதில் ஒரு அபாயகரமான ரகசியம் அடங்கியிருக்கிறது'' என்று உக்கிரசேனர் கூறவும் முகுந்தன் வெளியேறிஞன்.

''ஆஜாத் சத்ரு எதற்காக மாறுவேடமணிந்திருந்தான்? நம் துணைப்படைத் தலைவனைக் கூட அவன் ஏன் இப்படி ஏமாற்ற வேண்டும்? அபாயகரமான ரகசியம் ஏதோ அதில் அடங்கியிருப்பதாக வேறு சொல்லுகிறாய். என்ன அபாயம்? யாருக்கு அபாயம்? குழந்தைக்கு ஒரு ஆபத்தும் இல்லையே உக்கிரசேனா? என் நெஞ்சு இனிப் பொறுக்காது வெடித்துவிடும் போலிருக்கிறது. விஷயத்தை இனியாவது சொல்லு'' என்று பதறினார் பிம்பிசாரன்!

''உங்கள் மகனுக்கு ஒரு அபாயமும் இல்லை பிரபு! ஒரு அபாயமும் இல்லை. அந்த மகன் உங்களுக்கு எமனாக வந்துவிடுவாரோ என்றுதான் நான் அஞ்சுகிறேன்'' என்று உக்கிரசேனர் சொல்லவே, பிம்பிசாரன் விழித்த கண்களை மூடாமல் உக்கிரசேனரைப் பார்த்தபடியே சிலையாகச் சமைந்து போனார்!

தனது மகன் வடபாரதம் முழுவதையும் ஜெயித்து தெற்கே நர்மதை வரையில் மகதக் கொடியைக் கம்பீரமாகப் பறக்கவிடப் போகிறான். அதைக் கண் குளிரப் பார்க்கத்தான் போகிறோம் என்று உறுதியாக நம்பிவந்தார் சக்கரவர்த்தி. பேச்சிலும், மூச்சிலும் அவருக்கு அவன் நினைவைத் தவிர வேறு நினைவு இருந்ததில்லை. உயிரினும் இனியவனாக மதித்து உள்ளத்தின் அடித்தளத்திலே அன்பினால் பூட்டி வைத்துப் பூரித்துக் கொண்டிருக்கும் தனது சொந்த மகனே தனக்கு எமனாக வரக்கூடும் என்று சக்கரவர்த்தியார் உக்கிரசேனரின் மூலம் கேட்டபொழுது, அந்த விஷயம் அவரை அதிர்ச்சியடையச் செய்தது ஆச்சரியமல்ல. இன்னமும் அவருடைய நெஞ்சு வெடிக்காமலிருந்ததே, அதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!

தனது கூற்று சக்கரவர்த்தியாரின் இதயத்தை எந்த மட்டும் தாக்குகிறது என்பதைக் கவனித்துக் கொண்ட உக்கிரசேனர், ''தங்கள் மகனே தங்களுக்கு சத்துருவாக

வந்துவிடாமலிருக்க வேண்டுமென சொல்லியதற்கு என்னை மன்னிக்க வேண்டும் பிரபு! இதே போல இன்னொருவர் தங்கள் முன்னிலையில் சொல்லியிருந்தால், சொல்லி வாய் மூடுவதற்குள் அவருடைய தலை தரையில் உருண்டு கொண்டிருக்குமென்பது எனக்குத் தெரியும். கசப்பான இவ் விஷயத்தை எப்படிச் சொல்லுவதென்று நானும் உள்ளூரக் கவலைப்பட்டுக்கொண்டுதானிருந்தேன். ஆயினும் உள்ளதை உள்ளபடியே அறிந்து அதற்கான பரிகாரம் தேடுவதுதான் விவேகம். ஆகையால் தான் கசப்பான விஷயத்தையும் ஒளிவு மறைவின்றி நான் சொல்ல வேண்டியதாயிற்று'' என்றார் உக்கிரசேனர்.

சக்கரவர்த்தி பதில் ஒன்றும் சொல்லவில்லை. எழுந்து போய் சாளர வழியாக வெளியில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தார். பார்த்துக் கொண்டிருந்தார் என்று கூறுவதைவிட, வெளியே திரும்பிக் கொண்டிருந்தார் என்று சொல்லுவதுதான் இங்கு பொருத்தமாயிருக்கும். கண்ணீரில் மறைந்திருந்த அவரது விழிகள் பார்க்கும் சக்தியை தற்காலீகமாக இழந்திருந்தன.

உக்கிரசேனர் மேலும் தொடர்ந்து பேசினார். ''பிரபு! இளவரசரிடம் தாங்கள் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறீர்களென்பது எனக்குத் தெரியும்! அவரிடம் தாங்கள் உயிரையே வைத்திருப்பதையும் நான் அறிவேன். கோசலாதிபதி பிரசன்னஜித் மட்டுமென்ன? தங்களைப் போலத் தான் விதூர்த்தனிடம் அளவு கடந்த பாசமும் நம்பிக்கையையும் வைத்திருந்தார். இல்லாவிட்டால் இராணுவத்தையே பிள்ளையிடம் அவர் ஒப்படைப்பாரா? அவர் செய்த இந்த ஒரு சிறு தவறு இராணுவத்தைப் பூரணமாகத் தனது விசுவாசத்திற்குப் பாத்திரமாக்கிக் கொள்ளவும், அதே இராணுவத்தின் துணைகொண்டு தகப்பனை நாட்டிலிருந்து துரத்தி ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றவும் உதவியது. பிரசன்னஜித்தைப் போலவே தாங்களும் பட்டத்திளவரசரிடம் அமிதமான நம்பிக்கை வைத்து அங்கத்திற்கு அவரை

ராஜப் பிரதிநிதியாக்கிய பொழுதிலும் நல்ல வேளையாக எமது சைன்யங்களை அவர் பொறுப்பில் விட்டுவைக்க வில்லை. இராணுவம் தங்கள் பக்கம் இருக்கும்வரை தங்களை உலகில் எந்த சக்தியினாலும் அசைக்க முடியாது பிரபு, அசைக்க முடியாது! உங்கள் உப்பைத் தின்று வாழும் உக்கிரசேனர் உடலில் உயிர் ஒட்டிக்கொண்டிருக்கும் வரை இளவரசரின் கனவுகள் மட்டுமல்ல, இன்று வங்கமும், புண்டரமும், சேதியும், கோசலமும் காணும் கனவுகளும் ஒரு போதும் நனவாகாது'' என்றார்.

இப்பொழுதுதான் சக்கரவர்த்தி ஜன்னலிலிருந்து திரும்பிவந்து உக்கிரசேனரை ஏற இறங்கப் பார்த்தார். கண்ணைத் துடைத்துக்கொண்டு ஒரு வரண்ட புன்னகை செய்தார். பிறகு, ''உக்கிரசேனா? நீ இங்குதான் பெரும் தவறு செய்கிறாய்? சிம்மாசனம் என் கையைவிட்டு என் மகன் ஆஜாத்சத்ருவுக்குப் போய்விடுமோ என்று நான் வருந்துவதாக நினைக்கிறாயா? என் உயிரைவிட அருமையாக மதித்துவந்த என் மகனே எனக்குச் சத்துருவாக மாறுவதானால் இந்த சிம்மாசனமும், பட்டமும், பதவிகளும் எனக்கு எதற்கு? மதிப்பில் அடங்காத மாபெரும் பொக்கிஷமே என்னைவிட்டுப் போவதாக இருக்கும் பொழுது, அரசும், அதிகாரமும் எனக்கு வேண்டவே வேண்டாம். கோசலத்தைக் கைப்பற்ற விதூர்த்தன் சதி செய்ததைப் போல மகத சிம்மாசனத்தை அடைய ஆஜாத்சத்ரு பிரயாசப்படத் தேவையேயில்லை. ஆட்சிப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து விடுங்களென்று அவன் ஒரு வார்த்தை சொன்னால் உடனே ஒப்படைக்க நான் தயாராயிருக்கிறேன்! அவன் என்றைக்கு பொறுப்பை ஏற்பானென்று தானே நான் ஏங்கித் தவித்துக் கொண்டு சுமக்க முடியாமல் ராஜ்யப் பொறுப்பை நான் சுமந்து கொண்டிருக்கிறேன்? எனக்கு துரோகியாக மாறித்தான் அவன் பட்டத்திற்கு வரவேண்டுமா? உக்கிரசேனா, உனக்கு

இன்னொன்றும் சொல்லுகிறேன் கேள்! எனக்கும் என் மகனுக்கும் மட்டுமல்ல, என் மகனுக்கும் உலகில் வேறு யாருக்கும் தகராறு என்றாலும் உன் போன்ற மாவீரர்கள் என் மகனுக்குப் பக்கபலமாக இருப்பதைத்தான் நான் விரும்புகிறேன். என் காலமெல்லாம் முடிந்துவிட்டது. இனி வாழ வேண்டியவன் என் மகன். அவன் வாழ்க்கை வளப்பட வேண்டும். உலகில் ஈடு இணையற்ற மாவீரனாக அவன் விளங்க வேண்டும். நாற்றிசைகளிலும் அவன் புகழ் பரவ வேண்டும். அகண்ட பாரதம் முழுவதும் அவன் ஆட்சிக்கு வரவேண்டும். அதைக் கண்டு மகிழும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமென்று கனவு கண்டு கொண்டிருந்தேன். அந்தக் கனவு வெறும் கனவாகவே போய்விடும் போலிருக்கிறது? நான் கொடுத்து வைத்திருப்பது அவ்வளவுதானென்றால் என்ன செய்யலாம்?'' என்று நிதானமாக இதயத்தைத் திறந்து பேசினார் மன்னர்.

சக்கரவர்த்தியாரின் பேச்சு, கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையைப் போலிருந்தது உக்கிரசேனருக்கு. சிம்மாசனத்தை வைத்து அப்பனுக்கும் பிள்ளைக்குமாக வொட்டாமல் செய்ய நாம் திட்டமிடுகையில் சக்கரவர்த்தியாரே பட்டத்திளவரசரை அழைத்து, அரியாசனத்தில் அமர்த்திவிடுவார் போலத் தோன்றவும் உக்கிரசேனருக்கு எதிர்பாராத விதமான அதிர்ச்சியேற்பட்டு உடல் லேசாக நடுங்கியது.

இடுப்புவரை வந்துவிட்ட வெள்ளம் தலைக்கு மேல் போய்விடக் கூடாதென்பதற்காக, ''பிரபு! நான் என்னவோ சொல்லப் போக தாங்கள் என்னவோ கற்பனை செய்து கொண்டு பேசுவதாக நினைக்கிறேன். தங்கள் புதல்வனின் மனதைச் சிலர் கெடுக்கிறார்கள் என்றும், தகப்பனுக்கும் பிள்ளைக்குமிடையே மித்திர துரோகம் செய்ய தீவிரமான முயற்சிகள் நடக்கின்றன என்றும் நான் அறிகிறேன். இம்முயற்சியில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருப்பவள் ஒரு பெண். அதிலும் நிகரற்ற பேரழகியான ஒரு

பெண். நமது இளவரசர் நல்ல வாலிப தசையிலிருப்பவர். ஒப்பற்ற வீரராக விளங்குபவர். அப்பெண்ணே காண்ப போர் சித்தத்தைக் கலங்கச் செய்யும் மகத்தான கவர்ச்சி மிக்கவள். காய்ந்த பஞ்சின் அருகில் ஒரு சிறு நெருப்புப் பொறியை வைத்த கதையாகிவிடக் கூடாதேயென்ற கவலையில் தங்களிடம் நான் என்ன சொன்னேன் என்பதே இப்பொழுது சரியாக என் நினைவில் இல்லை. தாங்களோ ஏற்கனவே பட்டத்திளவரசர் தங்களுடைய சத்ருவாக மாறிப் படையெடுத்து வந்துவிட்டதைப் போல் எண்ணி, பட்டத்தை அவரிடம் ஒப்படைத்து விடுகிறேன், நான் துறவு பூண்டு விடுகிறேன் என்றமாதிரிப் பேசுகிறீர்கள். நான் சற்று தெளிவாகப் பேசுவதற்கு என்னை மன்னிக்க வேண்டும் பிரபு! நீங்கள் நினைப்பது போலவே பட்டத் திளவரசர் தங்கள் எதிரியாக மாறிவிட்டால் அவர் போக்கில் விடுவதுதான் ஒரு தகப்பனாரின் கடமையா? தகப்பனை வீழ்த்தி அரசரைக் கைப்பற்றும் அதர்ம ஆட்சியில் மக்கள் வாழ்வு எப்படிப்பட்டதாக இருக்கும்? மக்களுக்குத்தான் புதிய மன்னனிடம் நம்பிக்கை இருக்குமா? அரசின் அத்தி வாரமே சிதைந்துவிடாதா? நாட்டுக்கும், பெற்ற பிள்ளைக்கும் ஒரு தகப்பன் செய்ய வேண்டிய கடமை இதுதானா?'' என்று ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தினார் உக்கிர சேனர்.

அவர் தெரிவித்த இந்த ஆழ்ந்த கருத்துக்கள் பிம்பி சாரனை சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்த்தியிருந்தன.

''இளவரசன் மனதை யாரோ ஒரு பெண் கெடுப்ப தாகச் சொன்னாயே, யார் அந்தப் பெண்?'' என்று பிறகு அவர் கேட்டார்.

''அவள் பெயர் ஆஷா. மங்களகிரி மன்னன் மலயத் வஜனின் இரண்டாந் தாரம். உலகில் தனக்கு நிகரான பேரழகி வேறுயாருமில்லை என்ற மமதை கொண்டவள். நானும் இளவரசரும் அங்கு சென்றிருந்த பொழுது அவள் இளவரசருடன் சற்று அதிகமாகவே நெருங்கிப் பழகி

னுள். அவளுடைய பேச்சிலிருந்து அவள் எவ்வளவு பயங்கரமான சதிகாரி என்பதை நான் தெரிந்து கொண்டேன். இன்று வங்கமும், புண்டரமும், சேதியும், கோசலமும் மகதத்தை நாலா புறங்களிலுமிருந்து நசுக்கத் தலைப்பட்டிருக்கக் காரணம் அவள் செய்துவரும் சூழ்ச்சிகளேயென்று நினைக்க போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. இவ்விதம் சர்வதேசப் பிணக்குகளைக் கிளப்பிவிட்டதோடல்லாமல் தங்களுக்கும் இளவரசருக்கும் இடையில் பகையூட்டிவிட்டால் தனது திட்டம் சுலபமாக நிறைவேறுமென்று அவள் நினைக்கிறாள் போலிருக்கிறது. வசுமதி தேவியார் தூண்டுதலின் பேரில் ஜனகனுக்குப் பட்டம் சூட்ட தாங்கள் தீர்மானித்திருப்பதாக இளவரசனிடம் ஆஷா சொல்லியதை நான் நேரில் கேட்டேன். இந்தப் படுபாதகமான பொய்யை ஊர்ஜிதப்படுத்த அவள் ஆதாரங்களையும் சோடித்துக் காட்டி, இளவரசர் மனதில் நஞ்சூட்டியிருக்கிறாள். இதன் விளைவாகவே இளவரசர் தலைநகருக்கு வரப் பிரியமின்றி சம்பாவுக்குப் போயிருக்கிறார். ஆஷா பயங்கரமான சதிகாரி. அவள் கூற்றை நம்ப வேண்டாமென்று நான் எவ்வளவு வாதாடியும் இளவரசர் கொண்ட சந்தேகம் முற்றாக நீங்கவில்லை. அதற்காக இளவரசர் ஆஷாவை முற்றாக நம்பிவிட்டாரென்றும் சொல்லிவிட முடியாது. அவ்விருவரும் திரும்பச் சந்திக்க நேரிட்டால் அது பேராபத்தாக முடியும். இந்த ஆபத்தை நினைத்தே தங்கள் பிள்ளை தங்களுக்கு எமனாக வந்துவிடாமலிருக்க வேண்டுமென்று சொன்னேன். காரியம் இன்னும் மிஞ்சிப் போய்விடவில்லை. மகதத்தை எதிர்நோக்கியிருக்கும் மாபெரும் யுத்தம் ஒரு முடிவுக்கு வரும் வரையில் இளவரசரின் மனம் போர் முனையைத் தவிர வேறு எதிலும் செல்லாது. இந்த யுத்தத்தின் பொழுதே ஆஷாவின் சதிகள் அம்பலமாகிவிடும். பிறகு உங்களுக்கு எவ்விதச் சிரமமுமின்றி இளவரசர் தமது தப்பெண்ணங்களுக்கு மனம் வருந்தி தங்கள் திருப் பாத மலர்களில் விழுந்து

வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொள்வார். அதுவரையில் இதைப் பற்றித் தாங்கள் ஏதும் பிரஸ்தாபிக்காமல் இருப்பது நல்லது. இளவரசரின் நடமாட்டங்களைக் கவனித்து அவ்வப்போது தகவல் தெரிவிப்பதற்கு மட்டும் ஏற்பாடு செய்யுங்கள். இதுவும் இளவரசர் மறுபடி ஆஷாவைச் சந்திக்காமலிருக்க வேண்டுமென்பதற்காகத்தான்'' என்றார் உக்கிரசேனர்.

''நல்லது உக்கிரசேனா! அற்ப விஷயங்கள் பெரிது படுத்தப்படும் பொழுது தான் குரங்குப் புண்ணாகிவிடுகின்றன. நீ சொன்னதைப் போல இந்த யுத்தம் முடியும் வரையில் ஆஜாத்சத்ருவின் மனம் வேறு எதிலும் ஈடுபடாது. எதற்கும் அவன் நடமாட்டங்களைக் கவனிக்க நான் ஏற்பாடு செய்கிறேன். இப்பொழுது அவன் சம்பாவுக்குப் போயிருப்பது ஒருவகையில் நல்லதுதான். நானும் அவனை அங்குதான் அனுப்பவேண்டுமென்று எண்ணியிருந்தேன். இந்த யுத்தத்தில் மிகவும் நெருக்கடியான நிலைமையில் இருப்பது அங்கம்தான். அங்கம் நம் கையிலிருந்து நழுவி விட்டால் எதிரிகளுக்கு மகதத்தின் கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்ட மாதிரியாகிவிடும்'' என்றார் சக்கரவர்த்தி.

உக்கிரசேனர் வெளியே வந்ததும் அவர் வருகைக்காக வெளியே காத்திருந்தான் முகுந்தன். சக்கரவர்த்தியார் முன்னிலையில் தன்னை உக்கிரசேனர் குறுக்கு விசாரணை செய்தது அவனுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்திருந்தது. உளவுப் படையின் தலைவனான தன்னால் இளவரசரை அடையாளம் கண்டுகொள்ள முடியாமற் போனதைப்பற்றி சக்கரவர்த்தியார் என்ன நினைப்பார் என்பதை எண்ணிய பொழுது தனது பதவிக்காலம் முடிவுக்கு வந்துவிட்டதைப் போலவே அவனுக்குத் தோன்றியது.

பதவியைப் பற்றி அவன் மனதில் பீதியை உண்டாக்கி அந்தப் பீதியைச் சரியானபடி சூறையாட வேண்டுமென்ற

ஒரு திட்டத்துடனேயே பிம்பிசாரன் முன்னிலையில் முகுந்தனை அழைத்து விசாரித்தார் உக்கிரசேனர். தன்னுடைய இலட்சியம் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளதென்பதை அவன் முகத்தைப் பார்த்தவுடனேயே அவர் தெரிந்துகொண்டுவிட்டார்.

"முகுந்தா, உன்னைத்தான் நான் பார்க்க வேண்டும் என்றிருந்தேன். நல்லவேளையாக நீயே எதிர்ப்பட்டுவிட்டாய். நீ எத்தனை பெரிய உயிராபத்திலிருந்து மயிரிழையில் தப்பிக் கொண்டிருக்கிறாய் என்பது உனக்குத் தெரியுமா? சக்கரவர்த்தியார் நினைத்தபடி செய்திருந்தால் இந்நேரம் உன் தலை தரையில் உருண்டிருக்கும். உன் மனைவியின் மாங்கல்ய பலம்தான் இன்று தெய்வாதீனமாக உயிர் பிழைத்தாய்" என்று ஒரு பெரிய போடு போட்டார் உக்கிரசேனர்.

"என்ன ஐயா சொல்லுகிறீர்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே" என்று தழுதழுத்த குரலில் அழாக்குறையாகக் கேட்டான் முகுந்தன்.

"உனக்குப் புரியாது. எப்படியப்பா உனக்குப் புரியும்? நாட்டில் ஆட்சிப் பீடத்தையே கவிழ்க்க பயங்கரமான சதி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தச் சதி இன்று, நேற்று அல்ல, இரண்டு வருட காலமாக உன் கண் எதிரிலேயே நடக்கிறது. துணைப்படைத் தலைவனென்று பெரிய பதவி வகித்துக் கொண்டு சக்கரவர்த்தியாரின் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமாயிருக்கும் உனக்கு, இதைப்பற்றி ஒன்றுமே தெரியாதென்றால் யாராவது நம்புவார்களென்று நீ நினைக்கிறாயா? எனக்குத் தெரியும் உன்னைச் சுற்றி நடக்கும் பயங்கர சதியைப் பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாதென்பது. ஆனால் சக்கரவர்த்தியார் அப்படி நினைக்க வேண்டுமே! வயிற்றுக்குள் இருப்பதையும் சாதுர்யமாக வெளியே கொண்டுவந்துவிடும் மகா சாமர்த்தியசாலி என்றல்லவா உன்னை அரசர் பெருமான் எண்ணிக் கொண்டிருக்கிறார். உன்னை அசகாய சூரனென்று அரசர் மதிப்பதினால் ஏற்

பட்ட ஆபத்துதான் சற்று முன்னால் உன் தலையைப் பலி வாங்கவிருந்தது. என்னுடைய ஒரு சொல், ஒரே ஒரு சொல் சக்கரவர்த்தியாரின் சீற்றத்திலிருந்து உன்னைக் காப்பாற்றியது'' என்று உக்கிரசேனர் கூறவும் முகுந்தன் கரம் குவித்து வணங்கி நன்றி நிறைந்த கண்களோடு அவரை நோக்கினான்.

முகுந்தன் மனதில் சரியாகப் பயமேற்பட்டிருக்கிற தென்பதை அவன் முகக் குறிப்பிலிருந்து தெரிந்து கொண்ட உக்கிரசேனர், ''முகுந்தா நாம் இங்கிருந்து பேசுவது அவ்வளவு உசிதமில்லை. நான் வணிகர் வீதியி லிருக்கும் என் மாளிகைக்குப் போகிறேன். சிறிது நேரம் கழித்து நீ அங்கு வந்து என்னைப் பார்'' என்று சொல்லி விட்டுப் போனார்.

குறிப்பிட்ட அந்த மாளிகையை உக்கிரசேனர் அடைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் முகுந்தனும் வந்து சேர்ந்தான்.

''முகுந்தா! மங்களகிரியில் உன்னைச் சந்தித்த பொழுதே முக்கியமான பல விஷயங்களை உன்னிடம் சொல்லவிரும்பி னேன். இளவரசர் பக்கத்தில் இருந்ததினால் உன்னிடம் மனம்விட்டுப் பேச முடியவில்லை. கோசலத்தில் என்ன நடந்ததென்பது உனக்குத் தெரியுமல்லவா? அதே நாட கத்தை இங்கும் நடத்த நமது இளவரசர் ஆஜாத்சத்ரு ஒரு பெரிய திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார். இதைப் பற்றி அவரும் மங்களகிரி ராணி ஆஷாவும் பேசக் கேட் டேன்'' என்றார் உக்கிரசேனர்.

''நமது இளவரசர் இப்படியெல்லாம் செய்யக் கூடிய வரா? தந்தையிடம் அவர் மிகுந்த பக்தி விசுவாசம்கொண் டவராயிற்றே'' என்றான் முகுந்தன்.

''ஆசை யாரையப்பா விட்டு வைத்தது? வைகுந் தத்தை அடையவிரும்பி கோரமான தவம் புரிந்த விசுவா மித்திரன் ஒரு மேனகையின் ஆசைக்குப் பலியாகவில்

லையா? நாடாசை கௌரவக் கூட்டம் முழுவதையும் பூண்டோடு அழித்த கதை உனக்குத் தெரிந்த கதை தானே. விதூர்த்தனுக்கு தனது தகப்பன் பிரசன்னஜித் திடம் பக்தியும் பாசமும் இல்லாமலா இருந்தது? ஆசை யென்ற பேய் மனதில் புகுந்துவிட்ட பின்னர் தகப்பன், தாய், மனைவி, மக்கள் என்ற நினைப்பெல்லாம் அறவே மறந்துவிடுவது மனித சுபாவமாயிற்றே? நமது மன்னர் இளையவர் ஜனகருக்கு முடிசூட்டப் போவதாக யாரோ கிளப்பிவிட்ட வதந்தியை நம்பி பட்டத்திளவரசர் ஆஜாத சத்ரு தகப்பனுக்குச் சத்ருவாகிவிட்டார். சக்கரவர்த்தி யைத் தீர்த்துக் கட்டி ஆட்சியைக் கைப்பற்ற அவர் திட்டமிட்டிருக்கிறார். அரசர் ஆக்ஞையின்படி ஒரு முக்கிய மான பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். கவன மாகக் கேள். இளவரசர் சதி செய்கிறாரென்பதில் எனக்கோ அல்லது சக்கரவர்த்திக்கோ கொஞ்சம் கூடச் சந்தேகமில்லை. அவருடைய ஒவ்வொரு நடமாட்டங் களும் கவனிக்கப்பட வேண்டும். உடனே நான்கைந்து கைதேர்ந்த உளவாளிகளை சம்பாவுக்கு அனுப்பிவை. அவர் களிடமிருந்து அடிக்கடி தகவல் வருவதற்கும் ஏற்பாடு செய். நீ அனுப்பும் உளவாளிகளுக்கு சம்பாவுக்கு ஏன் அனுப்பப்படுகிறார்கள் என்பதும், அவர்கள் வேலை என்ன என்பதும் தெரியவேண்டும். இது அரசர் ஆக்ஞை. அரசர் ஆக்ஞை என்பதை மட்டும் உளவாளிகளுக்குச் சொல்லு. என் பெயரோ உன் பெயரோ இதில் அடிபடக் கூடாது. உளவாளிகளில் எவரேனும் அகப்பட்டுக் கொண்டால் நம் இருவருடைய பெயர்களையும் அவர்கள் உயிர் போவதா னல் கூட வெளியிடக் கூடாது. ஏன் தெரியுமா? நாளை என்ன நடக்கும் என்பதை நாம் அறியோம். சக்கரவர்த் திக்கு நாம் விசுவாசமாக இருப்பினும் ஒரு சமயம் வருங்காலத்தில் இளவரசர் கை ஓங்கிவிட்டால் அப்போ தும் நம் தலைகள் பத்திரமாயிருக்க வேண்டும். நான் சொல்லுவதைச் சரியாகப் புரிந்து கொண்டாயா?'' என்றார் உக்கிரசேனர்.

''புரிந்து கொண்டேன். நீங்கள் சொல்லியபடியே செய்கிறேன்'' என்று முகுந்தன் கூறவே, ''சம்பாவுக்கு யார் யார் போகிறார்களென்ற பெயர் விவரங்களை மாலை எனக்குத் தெரிவி. எவ்விதமான ஆபத்திலும் நான் உன் பக்கத்தில் இருப்பேன் என்பதை மட்டும் மறந்துவிடாதே'' என்று சொல்லியனுப்பினார் உக்கிரசேனர். முகுந்தன் நன்றி தெரிவித்துவிட்டுச் சென்ற பிறகு உக்கிரசேனர் பிரசன்னஜித்தை வைத்திருக்கும் கடைசி வீதி மாளிகைக்கு விரைந்தார்.

அவர் மாளிகையை அடைந்த சமயம் கிட்டத்தட்ட நண்பகல் ஆகிவிட்டது. சாப்பாட்டு நேரம் நெருங்கிவிட்டதால் அவர் வருகைக்காக இருவர் மாளிகையின் முன்புறத்தில் உட்கார்ந்து தோட்டப் பாதையை ஆவலோடு நோக்கிய வண்ணமாய் இருந்தனர். இவ்விருவரில் ஒருவர் இளைஞர். வயது சுமார் இருபத்தைந்து இருக்கும். சற்று தூரத்திலிருந்து பார்ப்பவர்கள் அவன்தான் இளவரசன் ஆஜாத்சத்ருவோ என்று நினைத்து ஏமாந்து போவார்கள். தோற்றத்தில் அவன் ஆஜாத்சத்ருவை அப்படியே உரித்து வைத்தமாதிரி இருந்தான்.

அவன் பக்கத்தில் அமர்ந்திருந்தாள் ஒரு யுவதி. முகச் சாயலைக் கொண்டு அவ்விருவரும் அண்ணன், தங்கையாக இருக்க வேண்டுமென்பதைச் சுலபமாக எவரும் ஊகித்துக் கொண்டுவிடலாம். அவ்விருவரும் உக்கிரசேனர் பெற்றெடுத்த செல்வங்களென்று சொன்னால் ஒருவரும் நம்ப மாட்டார்கள். ஆயினும் சில சமயங்களில் உண்மை என்பது கற்பனையைக் காட்டிலும் விசித்திரமானதாக இருக்கும். அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று என்றுதான் சொல்ல வேண்டும். உக்கிரசேனரின் சாயல் அவருடைய இரண்டு மக்கள் செல்வங்களிடமும் அறவே இல்லை.

தூரத்தில் வரும்பொழுதே அவர்களைப் பார்த்துவிட்டார் உக்கிரசேனர், கண்ட மாத்திரத்தில் அவருடைய

நடை ஓட்டமாக மாறியது. ஓடோடியும் வந்தவர், ''மகனே! நீயா? எப்பொழுது வந்தாய்? ஏன் வந்தாய்? கொடுத்த வேலையைவிட்டு யார் உன்னை வரச் சொல்லியது? காரியத்தைக் கடைசி நேரத்தில் பாழாக்கிவிட்டாயே!'' என்றார்.

அந்த இளைஞன் தந்தையின் பேச்சை மிகமிக அமைதியுடன் கேட்டுவிட்டு, ''ஏன் அப்பா! புலிக்குப் பிறந்தது பூனை ஆகியதாக எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'' என்றான்.

''பேச்சில் ஒரு குறைவுமில்லை. முட்டாள்தனமாக நடந்துகொண்டுவிட்டாய். நீ இங்கு வந்திருக்கவே கூடாது. சமணபுரியில் திடுக்கிடும் பல தகவல்களைக் கேட்ட பிறகு கூட உன் திறமையில் அமித நம்பிக்கை வைத்து இறுமாந்திருந்தேன். என்னை முழு முட்டாளாக்கிவிட்டாய்'' என்று உக்கிரசேனர் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே அந்த இளைஞனும் யுவதியும் ஒருவர் முகத்தைப் பார்த்து ஒருவர் சிரித்துக் கொண்டதைக் கண்டு எரிச்சலுடன் ''என்ன சிரிப்பு வேண்டியிருக்கிறது? நிறுத்துங்கள்!'' என்று கத்தினார்.

''அப்பா, அப்பா! என் அண்ணனை சாதாரணமாக நினைத்துவிட்டாய். எள்ளு என்று சொல்லியவுடன் எண்ணெயைக் கொண்டு வருபவன் அல்லவா அண்ணா? உள்ளே வந்து பாருங்கள். அண்ணாவின் சமர்த்து அப்பொழுது தான் தெரியும்'' என்று சொல்லிவிட்டு எழுந்து போனாள் அப்பெண். அவளைத் தொடர்ந்து அவள் அண்ணனும் உக்கிரசேனரும் சென்றார்கள்.

காற்றுக்கூடப் புகமுடியாதபடி சாளரங்களை எல்லாம் இழுத்துச் சாற்றிக் கதவிலும் பலமான பூட்டுப் போட்டிருந்த ஒரு அறையை அடைந்ததும், ''அண்ணா! அறையைத் திறந்து காட்டேன். உள்ளே யார் இருக்கிறார்கள் என்பதை அப்பா பார்க்கட்டும்'' என்றாள் அப்பெண்.

''பூட்டைத் திறந்து உள்ளே போய் பாருங்கள் அப்பா'' என்றான் அவன்.

உக்கிரசேனர் உள்ளே போய்ப் பார்த்தார். பார்த்தவர் ''ஜனகன்'' என்று ஒரே வார்த்தைதான் பேசினார். திறந்த கண்களை மூடாமல் உள்ளே உட்கார்ந்திருந்த இளைஞனை உக்கிரசேனர் ஆச்சர்ய மிகுதியுடன் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

மங்களகிரி ராணி ஆஷாவினால் கடத்திச் செல்லப் பட்டதாகக் கருதப்பட்ட இளவரசர் ஜனகனைத் தன்னுடைய மாளிகையிலே முற்றிலும் எதிர்பாராதவிதமாகக் கண்ட பொழுது உக்கிரசேனர் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவேயில்லை.

பேச நாவெழாமலும், ஜனகன் மீது வைத்த விழியையெடுக்காமலும் அசந்து போய் நின்ற உக்கிரசேனரிடம் ''ஏன் அப்பா இளவரசரைப் பார்த்ததுமே இப்படி அசந்துபோய் விட்டீர்கள். அண்ணா கொண்டுவந்திருக்கும் இன்னொருவரைப் பார்த்தால் மூர்ச்சை போட்டு விழுந்து விடுவீர்களோ என்று பயமாயிருக்கிறது'' என்றாள் அவருடைய மகள். பிறகு அண்ணனைப் பார்த்து ''அண்ணா! நீ கொண்டு வந்திருக்கும் இரண்டாவது மர்மப் பேர்வழியை இன்று காட்ட வேண்டாம். அவரையும் பார்த்தால் அப்பாவுக்கு அதிர்ச்சியில் நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டுவிடும்'' என்று சொல்லிவிட்டு வெள்ளிமணி கிணுகிணுவென்று அடிப்பதைப் போல கன்னங்கள் குமிழச் சிரித்தாள் அப்பெண்மணி.

''மஞ்சு! உன் அருமை அண்ணனின் பெருமை தெரியாமல் அவனைச் சிறுமைப்படுத்திவிட்டேன் அம்மா. என்னை மன்னித்துவிடு'' என்றார் உக்கிரசேனர்.

பிறகு தனது மகனை மார்புறத் தழுவிய உக்கிரசேனர், ''பிரம்மதத்தா! நீ தானடா என் மகன். உன்னை மகனாகப் பெற்றதில் பெருமை அடைந்து பூரித்துப் போகிறே

னடா. எவராலும், ஆஜாத்சத்ருவினுல் கூடச் சாதிக்க முடியாத ஒரு மாபெரும் காரியத்தை நீ சுலபமாகச் சாதித்துவிட்டு ஒன்றுமறியாத அப்பாவிகளைப் போல என் முன் சாதுவாக நிற்கிருய். உன் பிரதாபங்களை எல்லாம் நேரில் கண்டு ஆனந்தப் பரவசமடைய உன் தாய் இல்லை என்பதை நினைக்கும் பொழுதுதான் என் நெஞ்சு பிளந்து விடும் போலிருக்கிறது. பெற்ருலும் பெற்ருள் இரண்டு மாணிக்கங்களைப் பெற்றுக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிருள் உன் தாய்'' என்ருர்.

உக்கிரசேனர் வீரத்திலும் தோள் வலிமையிலும், ராஜ தந்திரத்திலும் எவ்வளவு நிகரற்றவராக இருப்பினும் அவரிடம் ஒரு பலவீனம், மிகப் பெரிய பலவீனம் உண்டு. காலஞ்சென்ற தனது மனைவியின் நினைப்பு வந்துவிட்டால் அவருடைய வீரதீர பராக்கிரமங்களெல்லாம் அவரிடம் இருந்து மாயமாக மறைந்து போய்விடும். வர்ணிக்க முடியாத துக்கம் அவர் நெஞ்சத்தில் குடிகொண்டு, கண்களிலே தாரைதாரையாக கண்ணீர் பெருகத் தொடங்கும்.

''உங்களைச் சிறைப் பிடிக்க வேண்டுமென்ருல் உங்களோடு சண்டை செய்ய வாளை எடுக்கத் தேவையேயில்லை. பயங்கர யுத்தம் நடக்கும் போர் முனையிலே யாராவது அருகில் வந்து அம்மாவின் பெயரைச் சொல்லிவிட்டால் நீங்கள் கத்தி, கேடயங்களை எல்லாம் மறந்து செயலற்றுப் போய்விடுவீர்கள்'' என்று தகப்பனுரிடம் பிரம்மதத்தன் அடிக்கடி தமாஷாகச் சொல்லுவதுண்டு. அவன் தாய் காலமாகி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட அவளின் நினைப்பை உக்கிரசேனரினுல் நெஞ்சைவிட்டு அகற்றவே முடியவில்லை. அத்தனை ஆசையும், பாசமும் வைத்திருந்தார் அவர் தனது மனைவியிடம். அவளுக்குத் தலைவலி என்ருல் உக்கிரசேனருக்கு ஒரு வேலையும் ஓடாது. அவள் இரண்டு மூன்று தினங்கள் வரை பிறந்தகத்துக்குப் போய் வந்தால் அவள் திரும்பும் வரையில் உக்கிரசேனருக்கு

ஆகாரம் கூட வேண்டியிருக்காது. அவருடைய கடின சித்தத்தை மாற்றும் ஒரு மாய சக்தியாக இருந்தது காலஞ் சென்ற அவரது மனைவியின் நினைவும், பெயரும் தான்.

''உன் வீரப் பிரதாபங்களைக் காண உன் தாய் இல்லையே'' என்று உக்கிரசேனர் சொல்லியவுடனேயே அடுத்தபடியாக என்ன நடக்குமென்பது பிரம்மதத்தனுக்கும், மஞ்சுவுக்கும் தெரியும்.

''அம்மா எங்கேயும் போய்விடவில்லை. அவள் பக்கத்திலிருந்து கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறாள்'' என்று சொல்லிய மஞ்சு, உக்கிரசேனரைத் தனது அண்ணனிடமிருந்து பிடித்து இழுத்து, ''வாருங்கள் அடுத்த அறைக்கு! ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. அறைக்குள் ஒரே ஒரு வினாடிதான் பார்க்கலாம். பார்த்தவுடன் வெளியே வந்துவிட வேண்டும். இந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டால் தான் அடுத்த அறையில் இருப்பவரைக் காட்டுவேன்'' என்றாள்.

''சரி ஒரு விநாடிக்குள் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்'' என்று ஒப்புக்கொண்டார் உக்கிரசேனர்.

மஞ்சு அடுத்த அறையின் கதவில் போட்டிருந்த பெரிய பூட்டைத் திறந்து, ''அப்பா! ரொம்ப ரொம்ப ஜாக்கிரதை. உள்ளே இருப்பவர் சாதாரணமான பேர்வழியில்லை. மிகமிகப் பயங்கரமான பேர்வழி. எட்டிப் பார்த்துவிட்டு உடனே வெளியில் வந்துவிட வேண்டும்'' என்றாள்.

உக்கிரசேனர் முன்னெச்சரிக்கையுடன் ஒரு கையை வாளின்மீது வைத்துக் கொண்டு, இடது கையினால் கதவை இலேசாகத் திறந்து பார்த்தார். சற்றுமுன் மஞ்சு சொல்லியதைப் போல உள்ளே பார்த்த காட்சி அவரை மூர்ச்சை போட்டு விழச் செய்யாமலிருந்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியமானது.

நினைத்தபடி உள்ளே உக்கிரசேனர் எட்டிப் பார்த்த பின்னர் அவரை வெளியே இழுத்து பின் கதவை மறுபடியும் பூட்டிச் சாவியை இடுப்பில் பத்திரமாகச் சொருகிக் கொண்டு, "உள்ளே சரியாகப் பார்த்தீர்களா அப்பா? எத்தனை பயங்கரமான பேர்வழி என்பது தெரிகிறதா?" என்று ஒரு விஷமச் சிரிப்புடன் வினவினாள் மஞ்சு.

"தத்தா! ஜனகனைத்தான் கொண்டு வந்தாய். வசுமதியும் எப்படி உன்னிடம் சிக்கினாள்? என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லையே" என்று வியந்தார் உக்கிரசேனர்.

"அண்ணா! நீ ஒன்றும் பேசாதே! ஒரு வார்த்தை கூடப் பதில் சொல்லக் கூடாது தெரியுமா?" என்று கட்டளையிட்ட மஞ்சு, தகப்பனைப் பார்த்து, "அண்ணாவை என்ன கேட்பது? எதிரே நான் இருக்கும் பொழுது அண்ணா மட்டும் பதில் சொல்லிவிடுவானா? அண்ணா இவ்வளவு அசகாயத்தனமான காரியங்களை யெல்லாம் சாதித்து முடிப்பது அவனுக்கு நான் அளிக்கும் தைரியத்தினாலா? அல்லது அவனுடைய சொந்த தைரியத்தினாலா? ஒரு மஞ்சு பக்கத்தில் இல்லையானால் அண்ணா பூனைக் குட்டியாகிவிடமாட்டானா?" என்று மஞ்சு சிரித்துச் சிரித்துப் பேசவும் இருவரையும் இரு கரங்களிலே அணைத்துக் கொண்டு சாப்பாட்டு அறைக்குச் சென்றார் உக்கிரசேனர்.

வழக்கம் போல பிரம்மதத்தன் ஒரு புறமும் மஞ்சு மற்றொரு புறமுமாக உட்கார, உக்கிரசேனர் அவர்களுக்கு நடுவில் உட்கார்ந்து கொண்டு சாப்பிட ஆரம்பித்தார். "பிரம்மதத்தா! இப்பொழுது சொல்லு என்னென்ன நடந்ததென்பதை?" என்று மகனிடம் அவர் விசாரித்தார்.

"என் வெற்றிக்கு முழு முதல் காரணமாயிருந்தது நீங்கள் அளித்த சக்கரவர்த்தியாரின் இலட்சினை பதித்த மோதிரம்தான். அதை வைத்துக் கொண்டு மங்களகிரியின் முக்கியமான பல காரியங்களை நான் சாதிக்க முடிந்தது.

சம்பாவிலிருந்து நீங்களும், பட்டத்திளவரசரும் மங்கள கிரிக்குப் புறப்படுவதற்கு நான்கு தினங்களுக்கு முன்னால் உங்களுடைய ஓலை கிடைத்தவுடன் தாமதமில்லாமல் மங் களகிரிக்கு நான் புறப்பட்டேன். முதலில் ராஜப் பிரதி நிதி விஜயகேசரியைச் சந்தித்து அவரைச் சரிப்படுத்தி னேன். நான் வந்திருப்பதைப் பற்றி யாரிடமும் பேச்சு மூச்சுக் காட்டக் கூடாதென்றும் அவரை எச்சரித்திருந் தேன். ஜனகன் வருகையைப் பற்றி ஒற்றன் கொண்டு வந்த தகவல், ஜனகனை வழிமறித்துவிரட்ட நீங்களும் அவனுக்குப் பாதுகாப்பளிக்க ஆஷாவும் செய்த ஏற்பாடுகள் முதலான சகல விபரங்களையும் அவ்வப்பொழுது விஜயகேசரி உங் களுக்கு அறிவித்ததை நானும் கேட்டேன். அதற்கு வசதி யாக நான் உங்கள் பக்கத்தில் அந்த விடுதியிலேதான் ஒரு காவல் காரனைப் போல இருந்தேன்.''

''விடுதியில் உங்களைப் பிறகு தனிமையில் சந்தித்து நான் யாரென்பதைச் சொல்லிக் கொண்டு பேசியதை விஜயகேசரி ஒட்டுக் கேட்டிருப்பாரோ என்று முதலில் பயந் தேன். நல்ல வேளையாக அவர் ஒட்டுக்கேட்கவில்லை.வசுமதி தேவியார் மங்களகிரியில்தான் இருக்க வேண்டுமென் றும் அவரை எப்படியும் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் சொன்னீர்கள். ஜனகன் எல்லையிலிருந்து விரட்டப்பட்டு ராஜகிருகத்துக்கு திரும்பியிருப்பாரென்றும் தெரிவித்தீர் கள். இரண்டு மூன்று தினங்களுக்குள் ஆஷாவின் சாகஸங் களைப் பற்றி கேள்விப்பட்ட எனக்கு மட்டும் ஜனகனை அவ்வளவு சுலபமாக ஆஷா விட்டிருப்பாளென்று தோன்ற வில்லை. எப்படியும் வசுமதிதேவியாரைக் கண்டு பிடித்தாக வேண்டுமென்று நீங்கள் சொல்லிவிட்டுப் போனீர்களா? நீங்களும் இளவரசரும் புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல் லாம் அரண்மனைப் பணிப்பெண் மாதுரி காளி கோவில் பாதை வழியாக விடுதிக்கு வந்து விஜயகேசரியிடம் ஒரு ஓலையைக் கொடுத்தாள். அந்த ஓலை இதோ என்னிடம் இருக்கிறது'' என்று சொல்லியவாறு இடுப்பில் சொருகிக்

கொண்டிருந்த ஒரு ஓலையைப் பிரம்மதத்தன் உக்கிர சேனரிடம் கொடுத்தான். அதை உக்கிரசேனர் இடது கையால் பிடித்துக் கொண்டு வாசித்தார். அந்த ஓலையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

ஓம் சுத்த சக்தி!

ஆச்சரியமான சில தகவல்கள் சற்று முன்புதான் எனக்குக் கிடைத்தன. மகதப் பேரரசின் இளைய சக்கரவர்த்தினி வசுமதிதேவியார் கடந்த இரண்டுவார காலமாக மங்களகிரியில் இருக்கிறார். ஆஷாதேவியாரின் அழைப்பின் மீதே அவர் இங்கு வந்திருக்கிறார். சந்தேகத்திற்கு இடமிருக்கப்படாதென்பதற்காக வசுமதிதேவியாரை அரண்மனையில் வைக்காமல் ஒரு தளபதியின் வீட்டில் வைத்திருக்கிறார். தெற்குத் தெருவில் எட்டாம் இலக்க வீட்டில் வசுமதிதேவியார் இருப்பதாக அறிகிறேன். சற்று முன்புதான் ஆஷாதேவி அந்த வீட்டுக்குப் போயிருக்கிறார். வசுமதிதேவியார் அனுப்பிய ஓலையின் படியே இளவரசர் ஜனகன் ராஜகிருகத்தைவிட்டு கிளம்பியதாக இப்பொழுது நிச்சயமாகத் தெரிகிறது. கொள்ளைக்காரர்கள் ஜனகனை கடத்திக்கொண்டுபோனால் ஜனகனை அவர்கள் இரவு எங்கு வைத்திருக்கிறார்கள் என்பதைப் பதுங்கியிருந்து கவனித்து எப்படியும் மங்களகிரிக்கு அவனை அழைத்து வந்துவிட வேண்டுமென்பது ஆஷாவின் உத்தரவாதம். ஆகையால் தனது ஆட்கள் ஜனகனை எப்படியும் மங்களகிரிக்குக் கொண்டுவந்து விடுவார்களென்று ஆஷா உறுதியாக நம்புகிறாள்.

ஓம் சுத்த சக்தி.

மேற்படி கடிதத்தை உக்கிரசேனர் படித்து முடித்த பிறகு "இந்த ஓலைகளை அரண்மனையிலிருந்து மாதுரி மூலமாக அனுப்புவது யாரென்பது உங்களுக்குத் தெரியுமா அப்பா?" என்று கேட்டான் பிரம்மதத்தன்.

''தெரியாது. ஆஷாவின் அரண்மனையிலேயே தன்னுடைய ஒற்றர்களிருப்பதாக விஜயகேசரி சொன்னார். அவர்கள் யாரென்று நான் கேட்கவில்லை'' என்றார் உக்கிரசேனர்.

''ஓலை அனுப்பும் ஒற்றர் யாரென்று கேட்டால் நீங்கள் திகைப்பீர்கள் அப்பா. ஆஷாவின் நம்பிக்கைக்குப் பரிபூரணமாகப் பாத்திரமாகி இருக்கும் சர்வோத்தமர் தான் விஜயகேசரியின் ஒற்றர்'' என்று பிரம்மதத்தன் கூறிய பொழுது, ''சர்வோத்தமரா! ஆஷாதேவியின் திட்டங்களுக்கெல்லாம் யோசனைகள் கூறி அவளை ஊக்கப் படுத்துபவர் என்றல்லவா கேள்விப்பட்டேன். அவரா ஆஷாவையும் தூண்டிவிட்டு நமக்கும் உளவு கூறி உதவி புரிகிறார்?'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''பணம் பத்தும் செய்யும், பாதாளத்திற்கும் பாயும் என்ற பழமொழிக்கு உதாரணமாக விளங்குபவர் மந்திரி சர்வோத்தமர். அவருக்கு ஆஷாவிடம் கொழுத்த சம்பளம் கிடைக்கிறது. விஜயகேசரியிடமும் மாதம் ஐநூறு பொற்காசுகள் கைலஞ்சமாகக் கிடைக்கிறது. பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறார் அந்த மகா மந்திரி. ஜனகன் வருவதை உங்களுக்கு அறிவித்து அவனை விரட்டுவதற்கு ஏற்பாடு செய்யத் தூண்டியவர் சர்வோத்தமர். விரட்டுவதற்கு வரும் உங்கள் படைகளை எதிர்க்க மங்களகிரியில் இருந்து ஒரு படையை அனுப்புமாறு ஆஷாவுக்கு யோசனை கூறியவரும் அதே சர்வோத்தமர் இரு தரப்பினர்களுக்கும் வாங்கும் சம்பளத்திற்கு மெய் விசுவாசத்துடன் பணிபுரிவதினால்தான் தனது பெயரைச் சர்வ உத்தமர் என்று வைத்துக் கொண்டிருக்கிறார் போல் இருக்கிறது'' என்றான் பிரம்மதத்தன்.

''வசுமதிதேவியார் மங்களகிரியில் இருப்பதாக சர்வோத்தமர் அனுப்பிய ஓலையில் குறிப்பிட்டிருந்தது எனக்கு மிகவும் சௌகர்யமாக அமைந்துவிட்டது'' என்று கூறிய பிரம்மதத்தன் மேலும் சொன்னான்:—

"என்னை சக்கரவர்த்தியார் மங்களகிரிக்கு ஏன் அனுப்பினரென்பதை இப்பொழுதாவது புரிந்து கொண்டீர்களா?" என்று விஜயகேசரியிடம் நான் கேட்டேன்.

"புரிந்து கொண்டேன். கொஞ்ச காலமாகவே ராஜகிருக அரண்மனைக்குள் ஏதேதோ நடப்பதாக எனக்குத் தகவல்கள் கிடைத்து வருகின்றன. பட்டத்திளவரசர் ஆஜாத்சத்ருவுக்குப் பதிலாக ஜனகருக்கு முடிசூட்ட வசுமதி தேவியார் ஏதோ சதி செய்கிறார் என்று கூட வதந்திகள் அடிபடுகின்றன. ஆனால் அவை எந்தமட்டில் உண்மை, எந்த மட்டில் வீண் வதந்தி என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆயினும் உங்களை சக்கரவர்த்தியார் இங்கு அனுப்பியிருப்பது இளைய ராணி சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்க வேண்டுமென்று இப்பொழுது நினைக்கிறேன்" என்றார் விஜயகேசரி.

"நீங்கள் நினைப்பதில் உண்மையும் இருக்கிறது, தவறும் இருக்கிறது. ராஜகிருக அரண்மனைக்குள் சதிகள் நடப்பது என்னவோ உண்மைதான். அந்தச் சதியில் முக்கிய பாத்திரமாக இருப்பவர் இளையராணி வசுமதிதேவியார். அவரது சதி ஆஜாத்சத்ருவுக்கு எதிராக மட்டுமல்ல, சக்கரவர்த்தியாரையே சிறை பிடித்து தனது மகனை அரியணையில் அமர்த்த இளையராணி திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார். அதற்கு மங்களகிரி ராணி ஆஷாவும் உடந்தையாக இருக்கிறார்" என்று நான் ஒரு பெரிய போடு போட்ட பொழுது சந்தர்ப்ப சூழ்நிலைமை விஜயகேசரியை அப்படியே என் கூற்றை நம்பச் செய்துவிட்டது.

"இளைய ராணியாரைத் தலைநகருக்குத் திருப்பிக் கொண்டு போவது பெரிய காரியமில்லை. சர்வோத்தமனை உடனே சந்தித்து இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்கிறேன்" என்று உறுதி கூறினார் விஜயகேசரி.

மாதுரி மூலமாகவே அரண்மனைக்குச் செய்தி அனுப்பி சர்வோத்தமரை விஜயகேசரி உடனே தருவித்தார். வசு

மதிதேவியார் இருக்கும் வீட்டில் கட்டுக் காவல் அதிக மில்லையென்றும் அவரைக் கடத்திக் கொண்டு போவதா ஞல் உடனே கடத்திக் கொண்டு போகவேண்டுமென்றும் சர்வோத்தமர் கூறினர். அவர் இன்னெரு தகவலேயும் வெளியிட்டார். ''இளவரசர் ஜனகரை கொள்ளேக்காரர் கள் கடத்திக் கொண்டு போய்விட்டதாகக் கிடைத்த தக வலேக் கேட்டு ஏமாந்துவிடக் கூடாது. இரவில் அவர் கள் ஜனகரை எங்கு வைக்கிருர்கள் என்பதை வேவு பார்த்து இரவோடிரவாக இளவரசரை திரும்பக் கடத்தி மங்களகிரிக்குக் கொண்டு வந்துவிட ஆஷா ஏற்பாடு செய் திருப்பதாக அறிகிறேன்'' என்று சர்வோத்தமர் கூறினர்.

இந்தத் தகவலும் எனக்கு நன்கு பயன்பட்டது. சர் வோத்தமர் சொல்லிய திட்டத்தின்படி நள்ளிரவில் சில ஆட்களுடன் வசுமதிதேவியார் இருந்த வீட்டை எதிர் பாராமல் தாக்கி அங்கிருந்து இருவரைக் கட்டிப்போட்டு விட்டு இளேய ராணியை அப்புறப்படுத்தினேன். அவள் கூச்சல் போடாமலிருக்க வாயைக் கட்டி குதிரையில் அவளேப் பிணேத்தேன். நீங்கள் விட்டுச் சென்ற இராணுவ வீரர்களில் நம்பிக்கையான இருபது பேர்களுடன் பாலே வனப் பிரயாணத்தை உடனே துவக்கினேன். சர்வோத் தமர் கூறியதைப்போல ஆஷாவின் ஆட்கள் ஜனகரை மீண் டும் கடத்தி வருவதாயிருந்தால் பாலேவனப் பகுதியில் எப் படியும் அவர்களேச் சந்திக்க முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. காற்றைவிட வேகமாக பாலேவனத்தில் நாங்கள் பறந்து வந்தோம். பௌர்ணமிக்கு மறுதினமாத லால் சந்திரனின் கடாக்ஷம் எங்களுக்குப் பரிபூரணமாக இருந்தது.

''மங்களகிரிக்கும் சமணபுரிக்கும் கிட்டத்தட்ட நடு மத்தியில் ஜனகனே நாங்கள் சந்திக்க நேரிட்டது. அவனே அழைத்து வந்தவர்கள், நாங்களும் ஆஷா அனுப்பியவர் களாகவே இருக்க வேண்டுமென்று நம்பி ஏமாந்து போனர்

கள். அவர்களுக்கு உண்மை தெரிவதற்குள் அவர்களிட மிருந்து ஆயுதங்களை நம்மவர்கள் பறித்துவிட்டனர். ஜன கனையும் ஒரு குதிரையில் பிணைத்துக் கொண்டு பிரயாணத் தைத் தொடர்ந்தோம். பொழுது புலருவதற்குள் சமண புரியை அடைய முடியாதென்பது நிச்சயமாகத் தெரியவே எங்களுக்கு ஒரு புதிய கவலை தோன்றலாயிற்று. பட்டப்பக லில் இளையராணியையும் ஜனகனையும் கைதிகளாக சமண புரிக்கு அழைத்துச் செல்வது சாத்தியமில்லை. அதற்காக மறுபடி இருட்டும்வரை ஒரு நாள் பகல் பொழுது முழு வதையும் பாலைவனத்தில் கழிப்பதும் சாத்தியமில்லை. சமணபுரிக்கு ஒருவனை அனுப்பி உயர்ந்த ஜாதிக் குதிரை கள் பூட்டிய ஒரு மூடு வண்டியைத் தருவித்து அதற்குள் வசுமதிதேவியாரையும், ஜனகனையும் வைத்து கதவைப் பூட்டி சாவியை நான் வைத்துக் கொண்டேன், அந்த வண்டியையும் நானே ஓட்டினேன். மற்றவர்களைத் தனித் தனியாகப் பிரித்து தலைநகருக்கு வரும்படிச் சொல்லி விட்டு மூடுவண்டியுடன் தனியாக நான் கிளம்பினேன், சக்கரவர்த்தியாரின் இலட்சினை மோதிரத்தின் துணை கொண்டு கைதிகளைப் பத்திரமாக நம் மாளிகைக்குக் கொண்டு வந்து சேர்த்தேன்'' என்றான்.

''வசுமதி, ஜனகன் ஆகிய இருவரும் நம் கையில் இருக்கும் வரையில் சக்கரவர்த்தியார் மீது ஆஜாத்சத்ரு வுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம் நீங்காது. இவ்விருவரையும் ஆஜாத்சத்ருவே மறைத்து வைத்திருக்க வேண்டுமென்ற சந்தேகம் சக்கரவர்த்தியாருக்குப் பலமாக ஏற்படும். வசுமதியும், ஜனகனும் நம் கையை விட்டுப் போய்விடாத வாறு கவனித்துக்கொள்ளுவது உன் பொறுப்பு. நம் ஆட் களில் நம்பிக்கையான இருவரை உடனே கோசலத்துக்கு அனுப்ப வேண்டும். யாரை அனுப்பலாம்'' என்று கேட்டார் உக்கிரசேனர்.

''கோசலத்துக்கா? எதற்காக?'' என்று கேட்டான் பிரம்மதத்தன்.

''உனக்குப் பெண் பார்க்க'' என்ருள் மஞ்சு.

''மஞ்சு சொல்லுவதிலும் தவறு இல்லை. விதூர்த்தன் சகோதரி வஜ்ரவல்லியை எப்படியும் உன் அண்ணனுக்கு மணம் முடித்து வைக்கிறேன் பார்''என்று மஞ்சுவிடம் சொல்லிய உக்கிரசேனர், ''தத்தா! கோசலச் சக்கரவர்த்தி பிரசன்னஜித், இப்பொழுது எங்கிருக்கிருர் தெரியுமல்லவா? அவரும் இதே மாளிகையில்தான் இருக்கிருர்'' என்ருர்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் அப்பா! பிரசன்னஜித், நமது மாளிகையிலா இருக்கிருர்?''என்று ஆச்சரியத்தோடு கேட்டான் பிரம்மதத்தன்.

பிரசன்னஜித் அங்கு வந்த வரலாற்றை உக்கிரசேனர் தெரிவித்தார். பிறகு, ''இன்றிரவு பிரசன்னஜித்தை கோசலத்துக்குக் கொண்டுபோக ஏற்பாடு செய்யவேண்டும். அவரை விதூர்த்தனிடம் சேர்த்துவிட்டால் அவனுக்கு நம்மீது, பரிபூரணமான நம்பிக்கை ஏற்படும். அவன் ஆதரவு நமக்கு அவசியம் வேண்டும். ஏற்கனவே துன்முகியைக் கோசலத் தலைநகர் சிராவஸ்திக்கு ஒரு ரகசிய ஓலையுடன் அனுப்பியிருக்கிறேன்''என்ருர் உக்கிரசேனர்.

''துன்முகி எதற்காக அங்கு போயிருக்கிருன்?'' என்று கேட்டான் பிரம்மதத்தன்.

''பிரசன்னஜித்துக்கு நாம் ஆதரவு காட்டி யுத்தத்தை ஆரம்பிப்போமென்று விதூர்த்தனன் நினைக்கிருனும். நாம் தாக்குதலை ஆரம்பிப்பதின் முன்னுல் வலுத் தாக்குதலைத் தானே ஆரம்பிக்க எல்லைப்புறத்தில் அவன் படைகளைக் குவிப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. பிரசன்னஜித்தை மகதம் ஒருக்காலும் ஆதரிக்காது என்றும், அவருக்காகக் கோசலத்தின்மீது ஒருக்காலும் படையெடுக்காதென்றும், விதூர்த்தனுக்கு உறுதிமொழி அளித்துத் துன்முகி மூலம் ஓலையனுப்பியிருக்கிறேன். பிரசன்னஜித் மகதத்தில் தென்

பட்டால் உயிருடனே அல்லது அவருடைய சடலத்தையோ கண்டிப்பாகச் சிராவஸ்திக்கு அனுப்பி வைப்பேன் என்று எழுதிவிட்டு, இன்னொரு முக்கியமான விஷயத்தையும் விதூரர்த்தனுக்கு எழுதியிருக்கிறேன். கோசலத்தில் விதூரர்த்தன் செய்ததைப் போலவே மகதத்தில் ஆஜாத்சத்ரு செய்யப்போவதாயும், அடுத்த சில வாரங்களுக்குள் பிம்பிசாரன் கொலையுண்டு ஆஜாத்சத்ரு பட்டத்துக்கு வந்துவிடுவாரென்று ஆஜாத்சத்ருவை இவ் விஷயத்தில் நான் பலமாக ஆதரிப்பதாயும் ஓலையில் எழுதியிருக்கிறேன். இந்த ஓலையைப் பார்த்தபிறகு விதூர்த்தனன் எல்லாப் படைகளைத் திரும்ப அழைத்துக்கொண்டுவிடுவான். இப்பொழுது பிரசன்னஜித்தையும் சிராவஸ்திக்குத் திருப்பி அனுப்பி விதூர்த்தனிடம் ஒப்படைத்துவிட்டால் அவன் ஆதரவு நம் பக்கத்தில் இருப்பது நிச்சயத்திலும் நிச்சயம். பிரசன்னஜித்தைக் காட்டுகிறேன் வா!'' என்று சொல்லி மனைவியும், மகளையும் அழைத்துப்போனார் உக்கிரசேனர்.

பிரசன்னஜித்தை வைத்திருந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு அவர்கள் உள்ளே சென்று பார்த்தபொழுது அவர்களுக்கு ஒரு மிகப் பெரிய அதிர்ச்சி அந்த அறைக்குள் காத்திருந்தது.

உக்கிரசேனர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் பிரசன்னஜித்துக்கு வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது. அதோடு தலையிலும் சுற்றல் ஏற்பட்டது. கட்டிலை விட்டு எழுந்து ஜல பாத்திரத்தை எடுப்பதற்காகச் சென்றவர் தள்ளாடிக் கீழே விழுந்தார். விழுந்தசமயம் அவரது தலை, எதிரிலிருந்த பளிங்கு மேசையின்மீது பலமாக மோதவே தலையின் முன்புறம் பிளந்து இரத்தம் பெருகியது. அந்த நிலையில் உடன் அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் ஒருவேளை அவர் பிழைத்திருக்கலாம். பிரக்ஞையற்ற நிலையில் விழுந்த பிரசன்னஜித் திரும்பவும் சுயநினைவு ஏற்படாமலே உயிர்நீத்து விட்டார்.

"அடடா! கையில் சிக்கிய ஒரு பறவை பறந்துபோய் விட்டதே! பிரசன்னஜித்தை உயிரோடு விதூர்த்தனிடம் ஒப்படைத்து, அவன் நன்றியையும், ஆதரவையும் பெறலா மென்று திட்டமிட்டிருந்தேன். நல்ல சந்தர்ப்பத்தில் பிர சன்னஜித்தின் விதி, எனக்குச் சதி செய்துவிட்டது" என்று துயரப்பட்டார் உக்கிரசேனர்.

"இப்பொழுதும் பிரமாதமாக ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை அப்பா! பிரசன்னஜித்தை உயிரோடு பெறுவதைவிட, பிணமாகப் பெறுவதையே விதூர்த்தன் அதிகம் விரும்புவான். அப்பனைக் கொன்ற பாவம் அவனைச் சேராமலிருக்கும்படி செய்ததற்கு உண்மையில் அவன் நன்றி செலுத்துவான். சடலத்தைச் சுத்தம் செய்து ராஜ ரீக உடைகளை அணிவித்து, பெட்டியில் பத்திரமாக வைத்து அனுப்புவோம். இன்றிரவே கோசலத்துக்கு நம்[illegible]யான ஒருவரை அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்" என்[illegible] பிரம்மதத்தன்.

"அண்ணா சொல்வதும் சரிதான். பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட தகப்பனுக்குத் துரோகம்செய்து அரசைக் கைப்பற்றினாலும், அந்தத் தகப்பனைப் படுகொலை செய்யும் பாபமாவது, தன்னைச் சாராமல் காப்பாற்றியதற்கு விதூர்த் தன் உங்களுக்கு நன்றி செலுத்துவான்" என்றாள் மஞ்சு.

அன்று காலை உக்கிரசேனருடன் பேசிய பிறகு, சக்கர வர்த்தி பிம்பிசாரன் மன நிலைமை மிகவும் அமைதியற்று இருந்தது. மகதத்தை நாற்றிசைகளிலும் சூழ்ந்து கொண் டிருக்கும் பேராபத்துக்களைக் காட்டிலும், ஆஜாத்சத்ருவைப் பற்றி உக்கிரசேனர் வெளியிட்ட திடுக்கிடும் தகவல்கள் சக்கரவர்த்தியாருக்கு மிகுந்த அதிர்ச்சியைக் கொடுத் திருந்தன. உக்கிரசேனர் கூற்றை அப்படியே நம்பிவிட அவரால் முடியவில்லை. அதேசமயம் உக்கிரசேனரின் ராஜ பக்தியைச் சந்தேகிக்க அதுவரை ஒரு சந்தர்ப்பமும் இல் லாதபடியினால் அவருடைய கூற்றை நம்பாமல் விடவும் முடியவில்லை.




சக்கரவர்த்தி பிம்பிசாரன் காலத்திய
வட பாரதம்.

சக்கரவர்த்தி மனம் இப்படிக் கொந்தளிக்க, இவரது கண்கள் குடம் குடமாகக் கண்ணீரைச் சொரிந்துகொண் டிருந்தன. அந்தச் சமயம், கோசலாதேவியும் தலைநகரில் இல்லாமல் அங்கத்தில் இருந்தது, ஆறுதல்கூற யாருமற்ற ஒரு அநாதையின் நிலைமைக்குச் சக்கரவர்த்தியாரை உட் படுத்தியிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இராணுவ மகாநாடு செய்த முடிவுகளை அறிவிக்க சேனாதிபதி உக்கிரசேனரும் உப சேனாதிபதி நந்திவர்மனும் அங்கு வந்தார்கள்.

சேனாதிபதியும், உப சேனாதிபதியும் வந்திருப்பதாக காவலன் உள்ளே நுழைந்து அறிவித்ததும் சக்கரவர்த்தி யார் எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டார். சேனாதி பதிகளிடமிருந்து கண்ணீரைத்தான் அவரால் மறைக்க முடிந்தது. எரிமலையைப்போல குமுறும் உள்ளப் [illegible] முகத்தில் பிரதிபலிப்பதை அவரால் எப்படி மறைக்க முடியும்? காலையில் பார்த்த சக்கரவர்த்திக்கு மாலைக்குள் பத்து, பதினைந்து வயது கூடிவிட்டதுபோல தோன்றியது சேனாதிபதிக்கு. இதன் காரணத்தை உக்கிரசேனர் மட் டும் அறிவாரேயன்றி, நந்திவர்மனுக்கு ஏதும் தெரியாதா கையினால், அடுத்துவரும் யுத்தம் அவரைப் பெருங் கவலை யில் ஆழ்த்தியிருக்க வேண்டுமென்று அவன் நினைத்தான்.

இராணுவ சபை செய்த தீர்மானங்களை உக்கிரசேனர் ஒவ்வொரு அம்சமாகச் சக்கரவர்த்திக்கு எடுத்துச் சொன் னார். புண்டரம், சேதி ஆகிய இரு நாடுகள்மீதும் இரு திசை வலுத் தாக்குதலை ஏன் நடத்த வேண்டும் என்ப தற்குப் பல நியாயங்களை எடுத்து வாதாடினார். எதிரிகளை நம் வீட்டுக்குள் அனுமதித்துவிட்டு, பிறகு விரட்டத் தலைப்படுவதைக் காட்டிலும் வீட்டு வாசலிலேயே வைத்து விரட்டியடிப்பதுதான் மகதத்தின் கௌரவத் துக்குப் பொருத்தமானதென்று அவர் வாதித்தார். மக தத்தின் படைப் பலத்தைப் புள்ளி விபரங்களோடு எடுத்துக் காட்டினார்.

"புண்டரத் தாக்குதலை நந்திவர்மன் நடத்தட்டும். சேதி நாட்டு எல்லைக்கு நான் போகிறேன்" என்று உக்கிர சேனர் சொல்லியபொழுது, "நல்லது! எனக்கும் மன நிம்மதி இல்லை. தலைநகரில் நான் தங்குவது என்னுடைய மனநோயை அதிகரிப்பதாகவே இருக்கும். சேதிநாட்டு எல்லைக்கு நானும் வருகிறேன். யுத்தம் என் கவலைகளுக் கெல்லாம் ஒரு அருமருந்தாக அமையும்" என்றார் பிம்பி சாரன்.

சக்கரவர்த்தியிடமிருந்து இதையே உக்கிரசேனர் எதிர்பார்த்தார். தாம் அழைக்காமலே சக்கரவர்த்தியார் சேதிப் போர்முனைக்கு வருவதாகச் சொல்லியது பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப்போலிருந்தது அவருக்கு. எனினும் "தாங்கள் எதற்காக போர்முனைக்கு வரவேண் டும் பிரபு? நாங்கள் இருக்கும்பொழுது தங்களுக்கு ஏன் இந்தச் சிரமம்!" என்றார்.

"இல்லை உக்கிரசேனா! கடந்த காலங்களில் யுத்தம் தான் என் துயரங்களுக்கெல்லாம் தலைசிறந்த ஔஷத மாக இருந்தது. இப்பொழுது என் மனநோய்க்கு அதுவே சிறந்த மருந்தாக இருக்குமென்று நினைக்கிறேன்" என்றார்.

உக்கிரசேனரும், நந்திவர்மனும் உடனே வெளியில் வந்தார்கள். உக்கிரசேனர் மாத்திரம் திரும்பவும் சக்கர வர்த்தியைத் தனிமையில் காண விரும்பி உள்ளே வந்தார். அவரைக் கண்டதும், "உக்கிரசேனா! நீ என்ன பேச விரும்புகிறாய் என்பது எனக்குத் தெரியும். எனக்கு யாரும் ஆறுதலோ, சமாதானமோ கூறவேண்டியதில்லை. காலை யில் நீ தெரிவித்த விஷயங்களைத் திரும்பவும் எப்பொழு துமே எனக்கு நினைவுபடுத்தக் கூடாது. இது என் ஆணை. நீ போகலாம்!" என்றார் சக்கரவர்த்தி.

சவுக்கினால் ஓங்கி அடிபட்ட காளைமாடு ஓட்டம் பிடிப் பதைப்போல உக்கிரசேனர் அதன்பிறகு அரைக்கணமும்

அரச சன்னிதானத்தில் தாமதியாமல் திரும்பினர். திரும்பும்பொழுது, ''அப்படியா! நல்லது சக்கரவர்த்தியாரே, நல்லது!'' என்று தனக்குள் சபதம் போட்டுக்கொண்டார் பிரதம சேனபதி.

இதற்குள் பிரசன்னஜித்தின் சடலத்தை கோசலத்துக்கு அனுப்ப பிரம்மதத்தன் ஏற்பாடுகளையெல்லாம் செய்திருந்தான்.

''தத்தா! நாம் போட்ட புள்ளி தவறிவிட்டது. கோசலத்தின் எல்லையிலுள்ள பாதுகாப்புப் படைகளை வாபஸ்பெறச் சக்கரவர்த்தி சம்மதிக்கவில்லை. ஆகையால் நம் நாட்டு எல்லை வழியாகக் கோசலத்துக்கு, பிரசன்னஜித்தின் சடலத்தைக் கொண்டுபோக முடியாது. சேதி நாட்டுக்குள் இப்பொழுது நுழைந்து கோசலம் போவதும் பத்திரமானதில்லை. ஒரே ஒரு வழி, வைதேஹிக்குச் சென்று அவ் வழியாகக் கோசலத்துக்குப் போவதுதான். பிரசன்னஜித் இங்கு வருகையிலும் அவ் வழியாகவே வந்திருக்க வேண்டும். அவரது சடலம் போவதும் அதே வழியாகப் போகட்டும்!'' என்றார் உக்கிரசேனர்.

''நானும் இப்படிச் செய்வதுதான் நல்லதென்று நினைத்து ஏற்பாடு செய்திருக்கிறேன். கோசலத்துக்கு யார் போகிறார்கள் தெரியுமல்லவா? நம் சமையற்காரியின் புருஷன் மேகநாதன் போகிறான். அவனுடன் அந்த ஊமையும் போகிறேன் என்கிறது. இருவரும் தம்பதிகளாகப் போவது ஒருவிதத்தில் நல்லதுதான். யாத்ரீகர்களைப்போல அவர்கள் போய்ச் சேர்ந்துவிடுவார்கள்!'' என்றான் பிரம்மதத்தன்.

உக்கிரசேனர் சற்று யோசித்தார். பிறகு, ''மேகநாதன் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பானென்று நினைக்கிறாயா?'' என்று சந்தேகத்துடன் அவர் கேட்டார்.

"அவனைப் போன்றவர்கள் போனால்தான் சந்தேகத்துக்கு இடமிருக்காது. நம்மிடம் வேலைக்கு வருவதின் முன்னால் அவன், கோசல அரண்மனையில் தோட்டக்காரனாக இருந்தவனென்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா அப்பா! பிரசன்னஜித்தின் சடலத்தை ஒரு கோணிப் பைக்குள் அடக்கம் செய்திருக்கிறேன். மேகநாதனைப் போன்றவர்கள் தான் இந்த வேலைக்குத் தகுதியுடையவர்கள்" என்றான் பிரம்மதத்தன்.

"அவன் தான் போகிறானென்றால் அவன் மனைவிக்கு என்ன வேலை?" என்று கேட்டார் உக்கிரசேனர்.

"பெண்டாட்டியோடு போகவேண்டுமென்று ஆசைப் படுகிறான். அவள் ஊமையென்றாலும் அவனுக்கு அருமை மனைவிதானே! போய் வரட்டுமே, நமக்கு என்ன நஷ்டம்?" என்று பிரம்மதத்தன் கூறவும் அத்துடன் அப் பேச்சு முடிந்துவிட்டது. அன்றிரவு பிரசன்னஜித்தின் சடலத்தோடு மேகநாதனும், அவன் மனைவியும் கோசலத்துக்குப் பிரயாணப்பட்டார்கள். ஒரே நாளில் பல முக்கியமான காரியங்களைச் சாதித்துவிட்ட திருப்தியோடு உக்கிரசேனர் படுக்கச் சென்றார்.

மறுநாட் காலை உக்கிரசேனர் சாப்பாட்டு அறைக்கு வந்தபொழுது, அன்று காலை, உணவு பரிமாறும் பொறுப்பை மஞ்சு மேற்கொள்ள வேண்டியதாயிற்று. கோசலத்துக்குச் சென்றுவிட்ட ஊமைப் பெண்ணின் ஸ்தானத்திலிருந்துகொண்டு மஞ்சு, அண்ணனுக்கும், தகப்பனுக்கும் பலகாரங்களை எடுத்து வைத்துவிட்டு தானும் அவர்களோடு உட்கார்ந்தாள்.

சாப்பாட்டு அறையின் வெளிக் கதவைப் பலமாக யாரோ தட்டும் சப்தம் கேட்டது.

சாப்பிடுகையில், யாரும் தொந்தரவு செய்யக்கூடாதென்ற வழக்கத்துக்கு விரோதமாகக் கதவு தட்டப்படவும் மஞ்சு எழுந்துபோய்ப் பார்த்துவந்தாள்.

"அரண்மனையிலிருந்து அழைப்பு வந்திருக்கிறது. சக்கரவர்த்தியார் உடனே அப்பாவைப் பார்க்கவேண்டுமாம்" என்ருள் திரும்பி வந்த மஞ்சு.

உக்கிரசேனரும், பிரம்மதத்தனும் ஒருகணம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"காலையில், அரசர் இவ்வளவு அவசரமாக ஏன் அழைக்க வேண்டும்?" என்ருன் பிரம்மதத்தன்.

"எல்லைப்புறங்களில் இருந்து எதிர்பாராத தகவல்கள் ஏதாவது கிடைத்திருக்கலாம். அல்லது நிம்மதியற்ற மனத்துடன் படுக்கச் சென்றவருக்குப் புதிய யோசனைகள் ஏதாவது தோன்றியிருக்கும். எதற்கும் நான் அரண்மனைக்குப் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அரண்மனைக்குக் கிளம்பினுர் உக்கிரசேனர்.

சேனுதிபதி வந்தசமயம் சக்கரவர்த்தியாரும், உபசேனுதிபதி நந்திவர்மனும், துணைப் படைத் தலைவன் முகுந்தனும் இருந்தார்கள். அவ்விருவரையும் அழைத்து வைத்துக்கொண்டு அரசர் தன்னைக் கூப்பிட்டு அனுப்பியது உக்கிரசேனருக்கு உள்ளூரப் பெருங் கலக்கத்தைக் கொடுத்தது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பதைப்போல முக்கியமாக முகுந்தனின் பிரசன்னம் உக்கிரசேனரின் மனதை என்னபாடு படுத்தியிருக்குமென்று நாம் சொல்லத் தேவையில்லை.

"அழைத்தீர்களா?" என்று கேட்டுக்கொண்டு அருகில் வந்தார் உக்கிரசேனர்.

"ஆமாம் உக்கிரசேனு! நீ வந்தபிறகு பேசலாம் என்பதற்காகவே உனக்கு முன் இவர்களையும் அழைத்து வைத்துக்கொண்டிருக்கிறேன். நேற்றிரவெல்லாம் தூக்கமின்றி யுத்தத் திட்டங்களைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். அஷ்டக்கிரக சேர்க்கை வட பாரதத்துக்கு மகத்தான சேதங்களை விளைவிக்கப் போவதாகச் சோதிடர்

களும், நமது ராஜகுருவும் இடைவிடாமல் எச்சரித்துக் கொண்டிருப்பதைப் பற்றியும் சிந்தித்துப் பார்த்தேன். எது எப்படி இருப்பினும், தற்பாது காப்புக்கு ஒரு சிறு படை கோசல எல்லையில் இருந்தால் போதும். மற்றவர்களை உடனே திருப்பி அழைத்துவிடு. சுமார் பத்தாயிரம் வீரர்கள் ஏற்கனவே புண்டர எல்லைக்குள் போயிருக்கிறார்கள். அப் பகுதிக்கு அவர்கள் போதும். நந்திவர்மன் அவர்களை வழி நடத்தட்டும். சேதியின் வட பாகத்தில் ஐயாயிரம் வீரர்கள் இருக்கின்றனர். இன்னும் இரண்டாயிரம் பேர்களை நீ அழைத்துக் கொண்டு போ. முகுந்தனின் உளவுப் படையினர் தலைநகரிலும், கோசல எல்லையிலும் கவனம் செலுத்தட்டும். நான் சமணபுரியை பாசறையாகக் கொண்டு சேதியின் தென் பகுதியைப் பார்த்துக்கொள்ளுகிறேன். மங்கள கிரியிலிருந்து ஆஷா ஏதாவது விஷமம் செய்வதாயிருந்தாலும் அதை முளையிலேயே நசுக்க நான் சமணபுரியிலிருப்பது நல்லதென்று முடிவுக்கு வந்திருக்கிறேன்'' என்று சொல்லிய பிம்பிசாரன், ஆசனத்தைவிட்டு எழுந்தார்.

அவர் ஆசனத்தைவிட்டு எழுந்துவிட்டால் எதிரிலிருப்பவர்கள் போய்விட வேண்டுமென்பது சபா மண்டப நியதி. உக்கிரசேனர், நந்திவர்மன், முகுந்தன் ஆகிய மூவரும் வணக்கம் தெரிவித்துவிட்டு வெளியே வந்தனர். மற்ற இருவரையும் வெளியேவிட்டு, உக்கிரசேனர்மட்டும் திரும்பவும் உள்ளே வந்து, ''ஒரு வார்த்தை!'' என்றார் சக்கரவர்த்தி முன்னிலையில் வாய் புதைத்து நின்று.

''நீ என்ன சொல்ல விரும்புகிறாயென்பது எனக்குத் தெரியும்! அதை மறக்கவே நான் போர்முனைக்குச் செல்லுகிறேன். ஆஜாத்சத்ருவைப் பற்றி ஏதும் கேட்க நான் விரும்பவில்லை'' என்று கண்டிப்புடன் சொன்னார் சக்கரவர்த்தி.

"அதைப்பற்றிச் சொல்லவில்லை பிரபு! நமது திட்டங்களை இளவரசருக்கும் அறிவிக்க வேண்டுமல்லவா என்று கேட்கத்தான் வந்தேன்" என்றார் சேனாதிபதி.

"ஆமாம், உக்கிரசேனா, ஆமாம்! நமது திட்டங்களை விவரமாக, உடனே அவனுக்கு ஒரு விசேஷ தூதுவன் மூலமாக அறிவிக்கவேண்டும். புண்டரத்தின் தென் பகுதியை அவன் கவனிக்க வேண்டுமென்றும், வடபகுதியை நந்திவர்மன் பார்த்துக் கொள்ளுவானென்றும் நான் சொன்னதாகச் செய்தியனுப்பு. சமணபுரி எல்லைப் படைத் தலைவன் யார்? துன்முகி என்று சொன்னாய்?" என்று கேட்டார் பிம்பிசாரன்.

"ஆமாம் பிரபு! ஆனால் அவன் இப்பொழுது அங்கு இல்லை. மங்களகிரிக்குப் போயிருக்கிறான்" என்றார் உக்கிர சேனர்.

"நமது எல்லைப்படைத் தலைவனுக்கு மங்களபுரியில் என்ன வேலை? யாருடைய அனுமதியோடு எல்லைக் சாவலை விட்டுப் போனான்?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

"நான்தான் அனுப்பியிருக்கிறேன் பிரபு. மங்களகிரிப் படைகளில் அவனுக்கு வேண்டியவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள்மூலம் படையெடுப்பு நடத்தும் எண்ணம் ஆஷாவுக்கு இருக்கிறதா என்பதை அறிந்துவர துன்முகியை அனுப்பினேன். அவனுடைய இடத்தில் எல்லைப் பாதுகாப்புக்குத் தேவையான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறேன்" என்றார் உக்கிரசேனர்.

"நல்லது. ஆஜாத்சத்ருவுக்கு நமது திட்டங்களை விவரமாகச் சொல்லியனுப்ப ஏற்பாடு செய்" என்று சக்கரவர்த்தி கூறியதும், உக்கிரசேனர் வணக்கம் தெரிவித்து விட்டு வெளியே வந்தார்.

அரண்மனைக்கு வெளியில் காத்திருந்த முகுந்தனை அழைத்துக்கொண்டு முதல்வீதியில் உள்ள தமது உத்தியோக வாசஸ்தலத்துக்குச் சென்றார் உக்கிரசேனர்.

## அத்தியாயம் — 5

# தாயும் சேயும்

சமணபுரியில் உக்கிரசேனரை விட்டுப் பிரிந்து பிரயாணப்பட்ட பட்டத்திளவரசன் ஆஜாத்சத்ரு வழியில் எங்கும் நில்லாமல் நேராகச் சம்பாவுக்கு வந்து சேர்ந்தான். நகரில் பிரவேசித்த உடனேயே யுத்தபீதி மக்களிடையில் ஏற்படுத்தியிருந்த பரபரப்பை அவனால் காண முடிந்தது. தலைநகரத்தைவிட்டு அவன் கிளம்பிய சமயம் யுத்தம் ஏற்படக் கூடுமென்ற பேச்சுகள் ஒரு சிலரிடையில் மட்டும் அடிபட்டுக் கொண்டிருந்ததென்றாலும் மக்களின் மனதில் பீதியூட்டும் அளவுக்கு வதந்தி பரவியிருக்கவில்லை. ஒரு சில தினங்களுக்குள்ளாக நிலைமை முற்றாக மாறியிருப்பதை இப்பொழுது அவனால் அவதானிக்க முடிந்தது.

அரண்மனையை அடைந்ததும் அவன் நேராகச் சென்றது தன் தாய் கோசலாதேவி இருக்கும் அந்தப்புரத்திற்குத்தான். அவன் நடந்து சென்ற வேகத்தையும் எதிரில் தென்பட்டவர்கள் யாரையும் பொருட்படுத்தாமல் சென்ற முறையையும் கவனித்த பொழுது தாயைச் சந்தித்துப் பேசுவதன் முன்னால் வேறு எவருடனும் அவன் பேச விரும்பாததைப் போலத் தோன்றியது. ஸ்நானம் செய்து நெற்றியில் வட்டவடிவமாகப் பெரிய குங்கும திலகமிட்டுக் கொண்டு கண்ண பரமாத்மாவின் திருவுருவப் படத்தின் முன்னால்விழுந்து வணங்கிவிட்டு எழுந்து நின்றாள் கோசலா தேவி.

''பகவானே! ஊரெல்லாம் யுத்தப் பேச்சாய் இருக்கிறது. சக்கரவர்த்தியாரைப் பற்றி சோதிடர்கள் சொல்லுவதைக் கேட்டால் உள்ளூரப் பயமாயிருக்கிறது. எதிர்த்து வரும் கடும் சோதனைகளை எல்லாம் சமாளிக்க அவருக்கு மனோ வலிமையையும் உடல் வலிமையையும் அளிக்க வேண்டும்பிரபு! அவரையும் என் மகன் ஆஜாத்சத்ருவையும் காத்தருளுவது உன் பொறுப்பு கண்ணா!''

இப்படிக் கோசலாதேவி மாதவனிடம் மனம் உருக வேண்டிக் கொண்டிருக்கையில் உள்ளே பிரவேசித்தான் ஆஜாத்சத்ரு.

''அங்கேயானால் உனக்கும் எனக்கும் சேர்த்து பெரிய குழியாக வெட்டுகிறார் உன் கணவர். இங்கேயானால் அவரைக் காத்தருள வேண்டுமென்று ஆண்டவனிடம் நீ முறையிடுகிறாய்'' என்று மனக்கசப்பை வெளியிடும் முறையில் சொன்னான் ஆஜாத்சத்ரு.

கண்ணன் படத்தின் மீது வைத்திருந்த பார்வையைக் கோசலாதேவி பளிச்சென்று பிள்ளையின் மீது திருப்பினாள். ஒரு முறை ஆஜாத்சத்ருவை அவள் ஏறத்தாழப் பார்த்தாள். பிறகு ''என்ன சொன்னாய்? என் கணவரென்றா சொன்னாய்? அந்த என் கணவர் உனக்கும் அப்பா!'' என்று ஏளனம் நிறைந்த குரலில் கூறினாள் கோசலா தேவி.

''அவரா? எனக்குத் தகப்பனல்ல, எமன்'' என்றான் ஆஜாத்சத்ரு. அதை அவன் சொல்லி வாய் மூடியதும் அவன் கன்னத்தில் பளார் என்று ஒரு அறை விழுந்தது. அடி விழுந்த கன்னத்தைத் தடவிக் கொண்டு பார்த்தான். அவன் எதிரில் கோசலாதேவி நிற்கவில்லை. மளமளவென்று அவள் உள்ளே போய்க் கொண்டிருந்தாள்.

ஆஜாத்சத்ரு மகதப் பேரரசின் பட்டத்து இளவரசர். சக்கரவர்த்தி பிம்பிசாரனின் மூத்த மகன், அங்கத்தை ஆறே தினங்களில் அடிபணியச் செய்த மாவீரன். வாட்

போரில் தனக்கு நிகர் எவருமில்லை என்ற புகழ் பெற்றவன். இத்தனை பெருமைகளுக்கும் உரியவனாக இருப்பினும் அவன் கோசலாதேவி சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு பிள்ளைதான். அவன் சம்பந்தப்பட்டமட்டில் அகிலத்தில் ஆகச் சிறந்தது என்று கருதக்கூடிய அத்தனையும் ஓர் உருவில் வந்த உத்தமத்தாய் கோசலாதேவி.

கோபத்தில் அவள் மகனை அடித்துவிட்டது உண்மைதான். மண்டலமே புகழும் ஒரு மாவீரனை வெறியில் கன்ணம் வீங்கிப் போகுமளவு வேகத்துடன் அவள் அடித்தது உண்மைதான். ஆனால் அணைத்த கரமும் அடித்த அதே கரம்தான். அடிபட்ட அந்த மாவீரன்தான் என்ன செய்தான் தெரியுமா? அடி விழுந்த வேகத்திலும் அதிர்ச்சியிலும் ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனான். கன்னத்தைத் தடவிக் கொண்டு பார்த்த பொழுது தாய் பக்கத்திலில்லை. கோபத்தோடு போகிறாள் என்பதைக் கண்டதும் பட்டத்திளவரசனாகிய நான், பல்லாயிரக் கணக்கானவர்கள் குற்றேவல் புரிந்து என் கடைக்கண் பார்வைக்காகக் காத்திருக்கும் பெருமை படைத்த நான், பெரும் படைகளைக் கதிகலங்கச் செய்யும் பராக்கிரமசாலி யென்று பாரெல்லாம் போற்றும் நான், கேவலம் அடித்து அவமதித்த ஒரு பெண்ணைத் தொடர்ந்து போவதா என்று நினைக்கவில்லை. "அம்மா! அம்மா!" என்று கதறிக் கொண்டே அவள் பின்னால் ஓடினான் ஆஜாத்சத்ரு.

தாயின் கோபம் எந்தளவுக்குப் போயிருந்தால் அவள் கைநீட்டி அப்படி அடிப்பாளென்பதை எண்ணிய பொழுது தனது தந்தை செய்வதாகக் கேள்விப்பட்ட சதிகளைக் காட்டிலும் தான் மனதை நோகடித்துவிட்டோமேயென்ற வேதனைதான் அப்பொழுது அவனிடம் மேலிட்டிருந்தது. உலகில் தாய்க்கு நிகரான தெய்வம் வேறு எதுவுமில்லை என்று எண்ணும் பண்புமிக்க பட்டத் இளவரசனுக்கு அத்தெய்வம் கோபப்பட்டுக் கொண்டிருப்

பதைக் காட்டிலும் அந்தக் கோபம் தீர இன்னும் நான்கு அறை அறைந்துவிட்டால் தேவலை போலிருந்தது.

ஆஜாத்சத்ரு பின்னல் ஓடிவர, கோசலாதேவி மள மளவென்று தன் அறையை நோக்கி வேகமாக நடந்தாள். அந்த அசாதாரணமான காட்சியைப் பார்த்துக் கொண்டு எதிரில் வந்தான் சம்பாவின் பிரதம சேனுதிபதியும் மகா மந்திரியுமான அனுருத்தன். அவனைக் கண்டதும் கோசலா தேவி சட்டென்று நின்றுள். தனக்கும் தனது மகனுக்கும் எத்தகைய பிணக்கு ஏற்பட்ட பொழுதிலும் அதை மூன் ருவது மனிதர் அறிவதை எப்பொழுதுமே அவள் விரும்பு வது கிடையாது. எதிரே வந்த் சேனுதிபதி ஏதும் நினைத் துக் கொண்டுவிடக் கூடாதே என்பதற்காக அவள் நின்ற பொழுதிலும் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ப தைப் போல அவள் முகத்தில் செந்தணலாகக் கொதித்த கோபம் தாய்க்கும் பிள்ளைக்கும் ஏதோ தகராறு நடந்திருக்க வேண்டுமென்பதை சேனுதிபதிக்குத் தெளிவாக அறிவுறுத் திக் காட்டிவிட்டது. ஆஜாத்சத்ருவிடம் தென்பட்ட பரபரப்பும் 'அம்மா, அம்மா' என்று அழாக் குறையாக அவன் அழைத்துக் கொண்டு பின்னல் வந்ததும் சேனுதி பதியின் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்திவிட்டன.

எப்படியிருந்தாலும் இருக்கட்டுமென்று எண்ணிய அனுருத்தன் "தாயே அவர் உங்கள் மகன். தாங்கள் பெற்றெடுத்து அருமை பெருமையாக வளர்த்து வரும் தங்களுடைய குழந்தை. கைவிரல் கண்ணைக் குத்திவிட்ட தென்பதற்காக விரலிடம் நொந்துகொள்வார் உண்டா?" என்று சொல்லி வைத்தான்.

அவனுடைய இந்தக் கூற்று அனுருத்தனுக்கும் ஓரளவு விஷயம் தெரியுமென்று மகாராணியை எண்ணும்படியா கச் செய்திருக்க வேண்டும்.

"அனுருத்தா! இவன் என்னுடைய மகனென்று இன் னெருதடவை சொல்லாதே! இவர் பட்டத்து இளவர சர்! அங்கத்தின் ராஜப் பிரதிநிதி! ஆகாயத்திலிருந்து

குதித்த அசகாய சூரர். உன்னுடைய எஜமானர் வந்து விட்டார். என் பொறுப்பு நீங்கிவிட்டது. இதோ இப்பொழுதே நான் ராஜகிருகத்திற்குப் போகிறேன். ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால்தான் மரியாதை. இடம்விட்டு இடம் மாறி வந்தால் இப்படித்தான்'' என்று முழங்கினுள் கோசலா தேவி.

''அனுருத்தா! நீயே அம்மாவிடம் கேள். இப்படி என்னை பிள்ளையல்லவென்று சொல்லி திரஸ்கரிக்க அவ்வளவு பெரிய பாபம் என்ன செய்துவிட்டேனென்று கேள்'' என்முன் ஆஜாத்சத்ரு.

''இன்னும் என்ன செய்ய வேண்டும்? பெற்ற தகப்பனை எமன் என்று நாவு கூசாமல் பேசும் பிள்ளை எதற்குத்தான் து... மாட்டானென்று நீயே கேள். அனுருத்தா, நீயே கேள். இவனுக்குச் சக்கரவர்த்தியார் எமன் என்முல் நா...னும் எமன் தான். அவர் ஒரு விதமாகவும் நான் ஒருவித ...வும் எந்தக்காலத்திலுமே சிந்திக்க முடியாது. அவரு... விருப்பு வெறுப்புகள் தான் என்னுடைய விருப்பு வெறுப்புகள். இந்தப் பிள்ளை பண்பு கெட்டவன். பித்ருதுரோகி என்று அவர் எண்ணத் தலைப்பட்டால் என்னுடைய திருஷ்டியில் எந்த வகையிலும் இவன் உயர்ந்தவனுகி விடமாட்டான். பிரத்யட்ச தெய்வமென அல்லும் பகலும் நான் வழிபடும் சக்கரவர்த்தியாரை நிந்தித்த இவன் முன்னிலையில் இன்னும் நான் நிற்கிறேன் பார். அதைவிடப் பெரிய பாபம் எனக்கு வேறு எதுவுமில்லை. ராஜகிருகத்திற்கு நான் உடனே புறப்பட ஏற்பாடுகள் நடக்கட்டும்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போக முயற்சித்தாள் கோசலாதேவி.

மகா மந்திரி அருகில் இருப்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் ஆஜாத்சத்ரு தாயின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து அவள் கால்களைப் பிடித்துக் கொண்டான்.

''என்னை மன்னித்து விடு அம்மா! இனி மறுபடி ஒரு பொழுதும் அந்த வார்த்தையைச் சொல்ல மாட்டேன். நான் கேள்விப்படுவதைப் போல என்னைச் சிறைப் பிடிப்பதும் தீர்த்துக் கட்டுவதும் சக்கரவர்த்தியாருடைய இலட்சியமாயிருந்தால் கூட சந்தோஷமாக அவருடைய விருப்பத்தை நான் நிறைவேற்றுவேன். மகதப் பேரரசின் மணி முடியையும் அரியாசனத்தையும் விட உன் அன்பும் ஆசியும்தான் எனக்குப் பெரிது. உன் மனம் நோகாமலிருக்க எந்தவிதமான தியாகத்தையும் நான் முகமலர்ச்சியோடு செய்வேன். இது சத்தியம் அம்மா! சகல தெய்வங்களின் சாட்சியாகவும் சத்தியம். ஆசையும் அகந்தையும் என் திருஷ்டியை சற்றே மறைத்துவிட்ட என்னை இந்த ஒரு தடவை மன்னித்துவிடு'' என்று கதறினர் இளவரசர்.

ஆஜாத்சத்ருவை இரு கரங்களினலும் வாரியெடுத்த கோசலாதேவி, கண்ணில் கண்ணீர் பெருக ''பார் ... ருத்தா பார்! என் பிள்ளையைப் போன்ற ஒரு உ... ரனை ஈரேழு பதினன்கு உலகங்களிலும் நீ ... யுமா? அல்லது சுதைகளிலே கேள்விப்பட்டிருக்கத் ... முடியுமா? இவனைப் பெற்றெடுத்த தாய் நான் என்பதில் எத்தனை பெருமையடைகிறேன் தெரியுமா? எத்தனையோ ஜன்மங்களில் செய்த புண்ணியங்களின் கூட்டுப் பலனக நான் பெற்றெடுத்த மாணிக்கமடா. அனுருத்தா, மாணிக்கம் இந்தப் பிள்ளை'' என்ருள்.

அந்த உருக்கமான காட்சியை, ஒரு மாவீரன் தாயின் அரவணைப்பில் பூனையைப் போல ஒடுங்கியிருக்க, அந்தத் தாய் பிள்ளையின் பெருமையிலே பூரித்துப் போகும் அற்புதமான காட்சியைக் கண்ட அனுருத்தனுக்கு அவனை அறியாமலேயே கண்கள் நீரைச் சுரந்துவிட்டன.

''உங்கள் இருவரைக் காட்டிலும் அதிகம் பெருமைப் பட வேண்டியவன் நான்தான் தாயே. இத்தகைய ஒரு அன்னைக்கும் பிள்ளைக்கும் பணி புரியும் வாய்ப்பைப் பெற்ற நானே பெரும் பாக்கியசாலி'' என்ருன்.

''குழந்தை! பலமாக அடித்துவிட்டேனு? ஐயையோ கன்னம் வீங்கிவிட்டதே'' என்று ஆஜாத்சத்ருவின் கன்னத்தைத் தடவிப் பார்த்து அங்கலாய்த்தாள் கோசலா தேவி.

''போர் முனைகளில் ஈட்டிகளையும் அம்புகளையும் தாங்கிப் பழக்கப்பட்ட இந்த சரீரத்திற்கு மென்மையான உன் திருக் கரங்கள் தடவிக் கொடுத்ததினுல் வலித்துவிடாதம்மா. ஆனுல் உன் மனதை நோகச் செய்துவிட்டதைத் தான் என்னுல் பொறுக்கவே முடியாது. இனி மேல் இதைப் பற்றி உன்னிடம் நான் பேசவே மாட்டேன். என்ன நடக்கப் போகிறது? அது எப்படி எப்படியெல்லாம் நடக்கப் போகிறதுஎன்பதெல்லாம் எனக்குத் தெரியும்.எனக்குத் தெரிந்தது எனது மனதுக்குள்ளேயே இருக்கட்டும். எ[illegible]ப்படி நடந்தாலும் சக்கரவர்த்தியாரின் விருப்ப[illegible]ப்பவைகளுக்கு நான் சிரம் பணிவதாக இன்று [illegible]யில் விரதம் செய்து கொள்கிறேன்'' என்[illegible]த்ரு.

'முட்டாள்! நீ என்ன சொல்லுகிறுய்? எதைப் பற்றிச் சொல்லுகிறுயென்பது எனக்குத் தெரியும். உன் கலக்கத்தின் காரணத்தை நான் அறிவேன். சாவதானமாகப் பேசுவோம் வா. அனுருத்தா உனக்கும் இந்த விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டும். நீயும் எங்களுடன் வா'' என்று சொல்லிவிட்டு அந்தப்புர அறையை நோக்கி நடந்தாள் கோசலாதேவி. ஆஜாத்சத்ருவும், சேனுதிபதி அனுருத்தனும் பின்னுல் சென்றுர்கள்.

கோசலாதேவி தன்னுடைய அறையை அடைந்ததும் ஆஜாத்சத்ருவையும் அனுருத்தனையும் உட்காரச் சொல்லிவிட்டு அவர்களுக்கு எதிரே தானும் அமர்ந்தாள். பிறகு, ''உன் அப்பாவைப் பற்றி அசட்டுத்தனமாக ஏதோ உளறினுயே. உனக்கு யார் அப்படியெல்லாம் துர்ப்போதனை செய்தது? முதலில் அதைச் சொல்லு. பிறகு எனக்குத்

தெரிந்ததைச் சொல்லுகிறேன்'' என்று தன் மகனிடம் கேட்டாள் மகாராணி.

''அம்மா! கசப்பான அந்த விடயங்களைப் பற்றி மறுபடி நான் பேசவிரும்பவில்லை. பட்டத்திலிருந்த பற்றையே நான் துறந்துவிட்ட பிறகு என்னிடமிருந்து அதைப் பறிக்க முயற்சிப்பவர்களைப் பற்றி இனி எனக்கு என்ன கவலை?'' என்முன் ஆஜாத்சத்ரு.

''மகனே! அத்தனை சுலபமாகப் பட்டத்தை நீ துறந்துவிட முடியாது. பட்டத்திற்கு வருவதும் பட்டத்தைத் துறப்பதும் நமது வம்சத்திலே இளவரசர்களின் கையில் இல்லை. சட்டத்தின்படி நீ பட்டத்து இளவரசன். அந்த பொறுப்பை நிறைவேற்றும் கடமையொன்று உனக்கு இருக்கிறது. அதை நீ திரஸ்கரித்துவிட மகதப் பெருங் குடி மக்கள் இவ்வளவு சுலபமாக உன்னை [illegible] விட மாட்டார்கள். நீ சொல்லாவிட்டாலு[illegible]ல லுகிறேன் கேள். உன் அப்பா உன் சிற்றன்னை[illegible]டம் கொஞ்சம் அதிகமான அக்கறை காட்டுகிமுர். அந்த அக் கறை வெளித் தோற்றத்திற்கு என்னை அவர் அலட்சியம் செய்வதைப் போல சிலருக்குத் தோன்றுகிறது.''

கோசலாதேவி இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் ''இந்தப் பேச்சு வேண்டாமென்முலும் என்னை விட மாட்டேன் என்கிமுய். அப்பா உன்னை அலட்சியம் செய்யவில்லை என்று மனச்சாட்சியோடு நீ சொல்லுவாயா, அம்மா?'' என்று கேட்டான் ஆஜாத்சத்ரு.

''வசுமதியிடம் கொஞ்சம் அதிகமாக அக்கறை காட்டுகிமுரென்பதற்காக என்னை உன் அப்பா அலட்சியம் செய்கிமுரென்று கூறுவது சரியா மகனே? என்னிடம் என்றுமே அவர் குறைவற்ற அன்பும், மதிப்பும் வைத்திருக்கிமுர். உன்னிடமோ அவர் தனது உயிரையே வைத்திருக்கிமுர். இதைவிட நீ அறியாவிட்டாலும் நான் அறிவேன். வருடத்தில் ஏழெட்டு மாதம் உன்னேடு நான் தங்கியிருப்பதுதான் இந்த தப்பெண்ணங்களுக்கெல்லாம் காரணமென்று நினைக்

கிறேன். இனி நான் இருக்க வேண்டிய இடம் சம்பாவல்ல. ராஜகிருகமென்பது இப்பொழுதுதான் தெரிகிறது'' என்றாள் கோசலாதேவி.

''அம்மா நீ எதை மூடிமறைக்கப் பார்க்கிறாயோ அதை உன் அண்ணா சவிஸ்தமாகச் சொன்னார். அவர் சொல்லியது மட்டுமில்லை. மங்களகிரிக்குப் போயிருந்த பொழுது பிரத்யட்சமாக நானே பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். நம் குடும்ப விவகாரம் மங்களகிரி அந்தப்புரம் வரையில் பரவியிருக்கிறது'' என்றான் ஆஜாத்சத்ரு.

''ஓஹோ! உன் நெஞ்சில் நஞ்சு ஊட்டியவன் உக்கிரசேன[illegible]தானா? என்னிடமே இரண்டொரு தடவை அவன் [illegible]கப் பேசியிருக்கிறான். அமைதியான நம் குடும்[illegible]ம் விளைவிக்க மறுபடி முயற்சித்தால் உன் அ[illegible]சொல்லவேண்டி இருக்குமென்று எச்சரித்த பிற[illegible]ன் [illegible]வாயை மூடிக்கொண்டான். இப்பொழுது உன்னைக் கிளப்பிவிட்டிருக்கிறான் போலிருக்கிறது ஆஜா! என் பேச்சைக் கேள். உன் தாய் உனக்கு ஒருபோதும் கெட்டதைச் சொல்லமாட்டாள். ஜனகனுக்கு முடிசூட்ட உன் அப்பா திட்டமிடுவதாக உக்கிரசேனன் கற்பனை செய்வதில் சிறிதும் உண்மையில்லை. உன் அப்பாவை அவனைவிட நான் நன்கு அறிவேன். அந்த உத்தமருக்குக் களங்கம் கற்பிக்க மனதினால் நினைப்பதே மிகப் பெரிய பாவம். உக்கிரசேனர் ஏன் இப்படி தகப்பனுக்கும் பிள்ளைக்கும் ஆகவொட்டாமல் செய்ய முயற்சிக்கிறான் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இதில் ஏதாவது அந்தரங்கம் இருக்க வேண்டும். போகப்போக அது தெரியாமலா போய்விடும். நீண்ட தூரம் பிரயாணம் செய்துவிட்டு வந்திருக்கிறாய். ஸ்நானம் செய்துவிட்டு சாப்பிட வா. வேண்டாத விடயங்களை எல்லாம் எண்ணி மனதை அலட்டிக் கொள்ளாதே'' என்று சொல்லியனுப்பினாள் கோசலாதேவி,

ஆஜாத்சத்ருவும் அனுருத்தனும் வெளியே வந்த பிறகு, ''உங்களுடன் நான் மனம்விட்டுப் பேசவேண்டும். என்னுடன் வாருங்கள்'' என்று சொல்லி அனுருத்தனை தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றான் ஆஜாத்சத்ரு.

இந்த சந்தர்ப்பத்தில் அனுருத்தனைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லுவது அவசியமாகும். அனுருத்தன் நடுத்தர வயதுள்ளவன். சக்கரவர்த்தியாரின் தூரத்து உறவினன்! ராஜ குடும்பத்தில் அளவுமிக்க விசுவாசமுடையவன். முக்கியமாக கோசலாதேவியிடம் அளவுமிக்க பக்தி உடையவன். தனது தாயாரின் பூரண நம்பிக்கைக்கு பாத்திரமானவன் என்ற முறையில் அனுருத்தனிடம் ஆஜாத்சத்ரு எப்பொழுதும் மனம் விட்டுப் பேசுவான். சம்பாவில் ஆஜாத்சத்ருவை ராஜப் பிரதிநிதியாக சக்கரவர்த்தி நியமித்த பொழுது அங்கப் போரில் முக்கியமான பங்கு கொண்டிருந்த அனுருத்தனையே தனது மகனுக்கு மந்திரியாகவும் சேனாதிபதியாகவும் அவர் நியமித்தார். அங்கத்தில் அமைதியையும் நல்லாட்சியையும் நிலைநிறுத்திய பெருமை ஆஜாத்சத்ருவைப் போலவே அனுருத்தனுக்கும் உண்டு.

அனுருத்தனை அழைத்துச் சென்ற ஆஜாத்சத்ரு அவனிடம் மனம் திறந்து பேசினான். உக்கிரசேனர் சொல்லிய விவரங்களையும், மங்களகிரியில் நடைபெற்ற சம்பவங்களையும் சவிஸ்தாரமாக எடுத்துச் சொன்னான். சொல்லிய பின் இவ்வளவு ஆதாரங்களையும் அலட்சியம் செய்துவிட்டு நான் நிம்மதியுடனிருக்க முடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஜனகனுக்கு முடிசூட்ட வேண்டுமென்று அப்பா வாய் திறந்து ஒரு வார்த்தை சொன்னால் நானாகவே என்னுடைய வாரிசுரிமையைத் தியாகஞ் செய்திருக்கமாட்டேனா?'' என்று கேட்டான்.

இதை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த அனுருத்தன் ''இளவரசே! நீங்கள் கூறிய விஷயங்கள் அனைத்தும் அப்படியே உண்மையாக இருக்க வேண்டும் போலவே

இருக்கின்றன. சந்தர்ப்ப சாட்சியங்களும் அவைகளை ஊர்ஜிதப்படுத்துவதாகத் தோன்றுகின்றன. ஆனால் என் மனம் சக்கரவர்த்தியாருக்கு களங்கம் கற்பிக்க மறுக்கிறது. இதில் ஏதோ ஒரு பெரும் விஷமம் இருக்கவேண்டுமென்று என்னுடைய அந்தராத்மா எனக்குக் கூறுகிறது. இதைக் கவனிக்கும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள். இதற்கிடையில் கடமை நம்மைப் போர்முனைக்கு அழைக்கிறது. வங்கமும் புண்டரமும் போர் முரசு கொட்டிக்கொண்டு கிளம்பியிருக்கின்றன. நீங்கள் சொல்லுவதைக் கவனித்தால் இப்பொழுது மங்களகிரியையும் அலட்சியம் செய்யக் கூடாதென்று தோன்றுகிறது. மிகப் பெரிய வேலைகள் நம்மை எதிர்நோக்கியிருக்கின்றன. இந்த நேரத்தில் மகதத்தின் வருங்காலச் சக்கரவர்த்தி யார் என்பது பிரச்சினையல்ல. மகதத்தின் மானம் காப்பாற்றப்படவேண்டும். அதன் எல்லைகள் பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டுக்கே பேராபத்து நாலாபுறமும் சூழ்ந்து கொண்டு வரும் பொழுது நாட்டை நாளை ஆளப்போவது யார் என்பதைப்பற்றி யாராவது கவலைப்படுவார்களா? ஆள்வதற்கு நம்நாடு நம்கையிலிருக்க வேண்டாமா? நாட்டைக் காப்பாற்றி எதிரிகளைச் சின்னபின்னப்படுத்தி ஜயக்கொடி நாட்டிய பிறகுதான் இதர விஷயங்கள் எதுவும் தங்கள் மனதில் இடம்பெற வேண்டும். ஸ்நானம் செய்து சாப்பிடுங்கள்? யுத்தத் திட்டங்களைப்பற்றி பிறகு பேசுவோம்', என்று சொல்லிவிட்டுப் போனான் அனுருத்தன்.

அடுத்த மூன்று நான்கு தினங்கள் வரையில் ஆஜாத்சத்ருவோ அல்லது அனுருத்தனோ சதியைப்பற்றி மறுபடி பேசவேயில்லை. அவர்களுடைய முழுக் கவனமும் யுத்த ஏற்பாடுகளிலேயே ஈடுபட்டிருந்தது. இந்த யுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு அங்கத்தையும், புண்டரத்தையும் மகதத்துடன் இணைத்துக்கொண்டுவிட வேண்டுமென்பது ஆஜாத்சத்ருவின் திட்டம். அனுருத்தனோ புண்டரகத்தில் அதிக கவனம் செலுத்தாமல் வங்கத்திலும், மங்களகிரி

யிலும் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கருதினான். வங்கம், மங்களகிரி ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் அங்கம் இருப்பதினால் இவ்விரு நாடுகளில் எதனுடைய கை ஓங்குவதும் அங்கத்திற்கு ஆபத்து என்பது அவன் கருத்து.

இந்த சந்தர்ப்பத்தில்தான் சக்கரவர்த்தி பிம்பிசாரனின் போர்த் திட்டங்களை அறிவிக்க உக்கிரசேனர் அனுப்பிய தூதுவனும் அங்குவந்து சேர்ந்தான். தங்களுடைய திட்டத்திற்குப் பொருத்தமாக சக்கரவர்த்தியாரின் திட்டமும் அமைந்திருப்பது ஆஜாத்சத்ருவுக்கும் அனுருத்தனுக்கும் திருப்தியைக் கொடுத்தது.

மறுநாள்காலை யுத்தத்திற்குப் புறப்பட ஆஜாத்சத்ரு ஆயத்தம் செய்து கொண்டிருக்கையில்தான் உக்கிரசேனர் அனுப்பிய இரண்டாவது தூதுவன் வந்து சேர்ந்தான் ஆஜாத்சத்ருவின் பார்வைக்காக உக்கிரசேனர் அனுப்பியிருந்த ஓலையை அவன் கொடுத்தான். ராஜகிருக அரண்மனையில் சதியாலோசனை புதிய உருவெடுத்திருக்கிறதென்றும் ஆஜாத்சத்ருவைச் சிறைப் பிடிக்கவும் அது முடியாவிட்டால் கொன்றுவிடவும் சக்கரவர்த்தி ஏற்பாடு செய்திருப்பதாயும் துணைப்படைத் தலைவன் முகுந்தன் மூலமாக இதை அறிந்ததாயும் உக்கிரசேனர் அந்த ஓலையில் குறிப்பிட்டிருந்தார். சக்கரவர்த்தியாரின் இந்த உத்தரவோடு, தலைநகரிலிருந்து சிலர் சம்பாவுக்குப் புறப்பட்டிருப்பதாகத் தெரிவதினால் மிகமிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று ஆஜாத்சத்ருவை உக்கிரசேனர் எச்சரித்திருந்தார்.

அதைப் படித்த பிறகு, "சேனாதிபதி இப்பொழுது எங்கிருக்கிறார்?" என்று ஆஜாத்சத்ரு வினவினான்.

"சேதிநாட்டு எல்லைக்குப் படைகளை இட்டுச் சென்றிருக்கிறார்! புறப்படுவதின் முன்னால் இந்த ஓலையைத் தங்களிடம் சேர்க்குமாறு கொடுத்துவிட்டுப் போனார்" என்றான் தூதன்.

''நல்லது! நீ உடனே சேதிநாட்டு எல்லைக்குப் போய் சேனாதிபதியைச் சந்திக்க வேண்டும். அவருடைய செய்தியைப் படித்ததாயும், அதன்படி கவனமாக நடந்துகொள்ளுவேன் என்றும் நான் சொன்னதாக அவரிடம் தெரிவிக்க வேண்டும், புரிந்ததா?'' என்றான் இளவரசன்.

''அப்படியே செய்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அவன் விடை பெற்றுச் சென்றான்.

உக்கிரசேனர் அனுப்பிய ஓலையை எடுத்துக் கொண்டு நேராக தனது தாயாரிடம் போனான் ஆஜாத்சத்ரு. அவளிடம் ஓலையைக் கொடுத்து, ''இதில் மாமா எழுதியிருப்பது உண்மையா? அல்லது பொய்யா? என்பதைப் பற்றிப் பேசுவதற்காக நான் வரவில்லை. எப்படியிருந்தாலும் அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. உனக்கும் நடப்பவை தெரிந்திருக்க வேண்டுமென்பதற்காகவே இந்த ஓலையைக் காட்டுகிறேன்'' என்றான்.

அதேசமயம் கோசலாதேவியிடம் விடைபெற்றுச் செல்லுவதற்காக அனுருத்தனும் அங்கு வந்து சேர்ந்தான்.

''சரியான சமயத்தில்தான் நீங்களும் வந்தீர்கள். மாமா என்னைக் கடுமையாக எச்சரித்து ஒரு ஓலை அனுப்பியிருக்கிறார்'' என்றான் ஆஜாத்சத்ரு.

இதற்குள் ஓலையைப் படித்துமுடித்த கோசலாதேவி, அதை அனுருத்தனிடம் கொடுத்தாள். அனுருத்தனும் படித்தான்.

''இளவரசே! இதில் நிச்சயம் ஏதோ ஒரு சூது இருக்கிறது. அரசர் தங்களைச் சிறைப்பிடிக்க எண்ணியிருந்தால், யுத்தத் திட்டங்களை அறிவிக்க நேற்று ஒரு தூதுவனை ஏன் அனுப்பவேண்டும்? அந்தத் தூதுவனை அரசர் சொல்லிய படி அனுப்பியதும் சேனாதிபதியேதான். இந்த ஓலையை அனுப்பியிருப்பதும்சேனாதிபதியேதான் என்கிறீர்கள்! இரண்டும் பொருத்தமாக என் மனதுக்குப் படவில்லை. யாரோ இடையில் விஷமம் செய்கிறார்கள். இந்த ஓலையைக்

கொண்டுவந்த மனிதனை நீங்கள் சுலபமாக விட்டிருக்கக் கூடாது. அவன் வாயிலிருந்தே உண்மையைக் கவர்ந்திருக் கலாம்'' என்ருன் அனுருத்தன்.

''எனக்கும், இதில் ஏதோ வஞ்சகம் இருக்க வேண்டும் என்றுதான் தோன்றுகிறது ஆஜா!'' என்று கோசலாதேவி பேச ஆரம்பித்தபொழுது, ''எது எப்படியிருந்தாலும் இருக்கட்டும். எனக்கு கவலையே இல்லை. இதோ நானும் அனுருத்தனும் போர்முனைக்குக் கிளம்பிக்கொண்டிருக்கின் ருேம். எங்களை ஆசீர்வதித்து அனுப்பு அம்மா! நாங்கள் எங்கு இருந்தாலும் உன் அன்பு, இரும்புக் கவசம்போல எங்களைக் காத்துக் கொண்டிருக்கும். வெற்றிவாகையுடன் விரைவில் வந்து சேருவோம்'' என்ருன் ஆஜாத்சத்ரு.

''ஆஜா! கொஞ்சம் அமைதியாகச் சிந்தித்துப் பார்க் கும்பொழுது, உனக்கும் உன் அப்பாவுக்கும் இடையில் பகையூட்ட யாரோ திட்டமிட்டுச் சதி செய்கிருர்கள் என்றே தோன்றுகின்றது. காலம் உண்மையை அதி சீக் கிரத்தில் வெளிப்படுத்தும். கடவுள்மீது பாரத்தைப் போட்டுக் கடமையைச் செய். வெற்றியோடு திரும்பிவா! போவதற்கு முன்ஞல் எனக்கு ஒரு உறுதிமொழி கொடுத்து விட்டுப் போகவேண்டும்'' என்ருள் கோசலாதேவி.

''என்ன உறுதிமொழி அம்மா? இந்த ஓலை உண்மை யாக இருந்து என்னைச் சிறைப்பிடிக்க, அப்பா யாரையா வது அனுப்பினுல் எதிர்ப்பின்றி நான் சரணடைய வேண்டு மென்றுதானே கேட்கப் போகின்ருய்? இதை நீ கேட்ப தின் முன்னதாகவே உறுதியாகச் சொல்லுகிறேன். அப்பா வின் ஆணை எதுவாயிருப்பினும் எதிர்ப்பின்றி அதற்குநான் பணிவேன். அதுவரையில் என் கடமையைச் சற்றும் தவருமல் செய்துவிடுவேன். இப்பொழுது உனக்குத் திருப்தி தாஞ?'' என்ருன் ஆஜாத்சத்ரு.

''என் மனதைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிருய் ஆஜா! இந்த ஓலை, உன் அப்பாமீது உனக்கு வெறுப்பை உண்டுபண்ணுவதற்காக வேண்டுமென்றே சதிகாரர்கள்

தயாரித்தனுப்பிய சூழ்ச்சிச் செய்தியென்றுதான் என் அந்தராத்மா சொல்லுகிறது. இதற்கு மாருக உண்மை யாகவே உன்னைச் சிறைப்பிடிக்க அவர் விரும்பிஞல், எதிர்ப்பின்றிச் சரணடைவதுதான் உன் கடமை. எந்தச் சோதனையிலும் தகப்பன் விருப்பத்தை மீருத தனயனுக நீ விளங்க வேண்டும். கடமை உணர்ச்சியோடு போய், வீரலட்சுமியுடன் திரும்பி வா. எல்லாம் வல்ல இறைவன் எப்பொழுதும் உன்னுடனிருப்பார்!'' என்று வாழ்த்தி அனுப்பிஞள் கோசலாதேவி.

சங்கங்களும், பேரிகைகளும் இடியோசையென முழங்க, அணி அணியாக வீரர்கள் குதிரைகளிலும், கால் நடையாகவும் அணிவகுத்துச் செல்ல, பட்டத்திளவர சன் ஆஜாத்சத்ருவுடன் அவனுடைய சேனுதிபதி அனு ருத்தனும் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டார்கள் யுத்தக் களங்களை நோக்கி.

அடுத்த ஏழெட்டுத் தினங்கள் வரையில் ஆஜாத்சத்ரு வும், அனுருத்தனும் ஒருவரை ஒருவர் சந்திக்கவேயில்லை ஒரு பெரிய சேனைக்குத் தலைமைதாங்கி வங்கத்தின்மீது கடுமையான தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தான் ஆஜாத்சத்ரு. அனுருத்தனே புண்டரத்தின் தென் பகுதியை உக்கிரமாகத் தாக்கிப் போர் புரிந்துகொண் டிருந்தான். இவ்விரு நாடுகளுமே இந்தத் தாக்குதல்களை எதிர் பார்த்திருந்தமையால் அவைகளும் ஆயத்தமாக இருந்தன. புண்டரக நாடு, சேனைகள் சொல்லிவைத்த மாதிரி இருமுனைத் தாக்குதல்களை எதிர்பார்த்து, எல்லை முழுவதிலும் படைகளை நிறுத்தியிருந்தமையால் வடபகுதி யில் வலுத் தாக்குதலை ஆரம்பித்த நந்திவர்மனுக்கும் கடுமையான எதிர்ப்பு இருந்ததென்று கூறவேண்டும். சேதி எல்லையிலும் உக்கிரசேனர் நிலைமை சுலபமானதாயில்லை யென்பதை அங்கிருந்து தினசரி வந்த தகவல்களிலிருந்து அறிய முடிந்தது.

ஒருநாள் நடுராத்திரியில் ஆஜாத்சத்ருவின் பாசறைக்கு வெளியே அமைதி நிலவியது. இராக் காவலர்களைத் தவிர, மற்றவர்கள் பகலெல்லாம் போராடிய களைப்புத் தீர அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்த நேரம் அது. ஆஜாத்சத்ருவின் முகாமில் மட்டும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பட்டத்திளவரசனும், அவனுடைய முக்கிய தளபதிகளும், மறுநாள் யுத்தத் திட்டங்களைப்பற்றிக் கலந்தாலோசித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று கூடாரத்துக்கு வெளியில் குதிரைகளில் பலர் வந்திறங்கும் சப்தம் அவர்களுக்குக் கேட்டது. அந்த நேரத்தில் வருவது நண்பர்களாகவே இருக்கவேண்டுமென்ற நம்பிக்கையுடன் கூடாரத்திலிருந்தவர்கள் ஆவலோடு காத்திருந்தார்கள்.

முதலில் நந்திவர்மனும், அவனுக்குப் பின்னால் அனுருத்தனும். அந்த இருவருக்கும் பின்னால் இரண்டு கரங்களும் சேர்த்துப் பிணைக்கப்பட்டு துன்முகியும் உள்ளே நுழைவதைக் கண்டு, ஆஜாத்சத்ரு திகைப்படைந்தான் என்று கூறுவதைக் காட்டிலும், திடுக்கிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். புண்டரம் போர் முனையிலிருந்து இரு சேனாதிபதிகளும் ஏக காலத்தில் இராணுவ நிலையங்களை விட்டு வந்திருப்பதுடன் அவர்களோடு எங்கோ இருக்க வேண்டிய எல்லைப் படைத் தலைவன் துன்முகியையும் காணவே, ஆஜாத்சத்ருவுக்கு அவனுடைய கண்களையே நம்ப முடியவில்லை. அதிலும் துன்முகி, ஒரு கைதியாகக் கைகள் பிணைக்கப்பட்டு கொண்டுவரப்பட்டிருந்தது அவனுடைய ஆச்சரியத்தை மேலும் அதிகரித்தது.

ஆஜாத்சத்ரு, "இவன் துன்முகியல்லவா?" என்று கேட்கவும், நந்திவர்மன் குறுக்கிட்டு, "இளவரசே! தயவு செய்து இப்பொழுது ஒன்றும் பேசாதீர்கள். முதலில் இங்குள்ள தங்களுடைய படைத் தலைவர்களையெல்லாம் வெளியே போகச் சொல்லுங்கள். ஒரு அதி பயங்கரமான இரகசியத்தைப் பற்றிப் பேச, அனுருத்தனையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன்" என்றான்.

அவர்கள் பேசப்போவது எதைப்பற்றியென்பதை இதற்குள் ஆஜாத்சத்ரு ஊகித்துக்கொண்டுவிட்டான். அந்த விஷயம் கூடியமட்டில் பிறருக்குத் தெரிவதை அவனும் விரும்பவில்லையாகையால் தனது படைத் தலைவர்களை வெளியேறச் சொல்லிவிட்டு நந்திவர்மனையும் அமரச் செய்தான்.

பிறகு, "நல்லது. துன்முகியைப்பற்றிச் சொல்லுங்கள். இவனை ஏன் சிறைப்பிடித்தீர்கள்?" என்று கேட்டான் ஆஜாத்சத்ரு.

"கோசலத்தில் இருந்துவரும் நிலைமைதான் தங்களுக்குத் தெரியும். நாம் புண்டரம், வங்கம், சேதி ஆகிய மூன்று நாடுகள்மீதும் யுத்தம் நடத்திக் கொண்டிருக்கையில், கோசலமோ அல்லது வைதேஹியோ திறந்த வீட்டுக்குள் நுழைவதைப்போல மகதத்தில் பிரவேசித்துவிடக் கூடாதென்பதற்காக அவ்விரு நாட்டு எல்லைகளிலும் தற்பாதுகாப்புக்குச் சிறு படைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவன் வைதேஹியில் இருந்து, நம் நாட்டுக்குள் சந்தேகப்படக்கூடிய நிலைமையில் நுழைந்ததால், காவலர்கள் பிடித்து விசாரித்தபொழுது சரியான பதில் சொல்லவில்லை. சந்தேகத்தின்மீது இவனைக் காவலர்கள் சோதனை போட்டிருக்கிறார்கள். கோசலச் சக்கரவர்த்தி விதூர்த்தனின் இலட்சினையுடன் கூடிய ஓலையொன்று இவனிடம் இருந்தது" என்றான் நந்திவர்மன்.

"ஊஹூம், அப்புறம்?" என்றான் ஆஜாத்சத்ரு.

"அந்த ஓலையைக் காவலர்கள் பிரித்துப் பார்க்க முயற்சித்தபொழுது அவர்களை இவன் கடுமையாக எச்சரித்திருக்கிறான். பிரதம சேனாதிபதியோ, அல்லது பட்டத்து இளவரசரோ தவிர வேறு யார் அந்த ஓலையைப் படித்துப் பார்த்தாலும் உயிரிழக்க நேரிடுமென்று இவன் சொன்னானாம். அதன்பிறகு ஓலையைப் பார்க்க யாருக்கும் துணிவில்லை. இவனைக் காவலருடன் என்னிடம் கொண்டு

வந்தார்கள். தலைநகருக்குப் போவதைக் காட்டிலும், அருகில் நான் இருப்பதினால் என்னிடம் இவனை ஒப்படைத்து விடுவது நல்லதென்று அழைத்து வந்தார்கள் போலிருக்கிறது. என்னையும், காவலர்களை எச்சரித்தது போலவே துன்முகி எச்சரித்தான். புண்டரத்தின் தென்பகுதிப் பாசறையில் தாங்கள் இருக்கலாமென்று எண்ணி இவனை அங்கு அழைத்து வந்தேன். ஆனால் அனுருத்தர் மட்டும் தான் அங்கிருந்தார். அவருக்கும் துன்முகியை அடையாளம் தெரியவில்லை. இவனால் தங்களுக்கு விசுவாசப்பிரமாணம் செய்திருப்பதாயும், தங்களிடம் அழைத்துக்கொண்டு போகும்படியும் இடைவிடாமல் சொல்லிக்கொண்டிருந்தான். ஆகையால்தான் இருவரும் சேர்ந்து இவனைக் கொண்டுவந்திருக்கிறோம். இவன் கைவசமிருந்த ஓலை இதோ இருக்கிறது'' என்று கூறி, கோசல மன்னன் விதூர்த்தனனிடம் இருந்து, துன்முகி கொண்டுவந்த ஓலையை ஆஜாத்சத்ருவிடம் கொடுத்தார்.

ஒரு அழகான வெள்ளிக் குழலுக்குள் அடக்கம் செய்யப்பட்டிருந்த, அச் செய்திக் குழலுக்கு மேலே கோசலத்தின் இலட்சினை பதிக்கப்பட்டிருந்தது. அதைத் திறப்பதற்கு முன்னால் ஆஜாத்சத்ரு, துன்முகியைப் பார்த்து, ''இவர் சொல்வதெல்லாம் உண்மைதானா? நீ ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் சொல்லு'' என்றான்.

''அவர் சொல்லியது அவ்வளவும் உண்மை. ஒரு சிறு தவறுகூட இல்லை. நான் கோசலத்துக்கு ஏன் போனேன் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தங்கள் உத்தரவுப்படி கோசலத் தலைநகர் சிராவஸ்திக்கு என்னை அனுப்புவதாகச் சொல்லிய உக்கிரசேனர், ஒரு ஓலையைக் கொடுத்தனுப்பினார். அதற்கு விதூர்த்தர் கொடுக்கும் பதிலை ராஜகிருகத்துக்கு வந்து தன்னிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்பது அவருடைய உத்தரவு'' என்றான் துன்முகி.

''அப்படியானால் ஓலையை உக்கிரசேனரோ அல்லது நானோ இருவரில் ஒருவர்தான் படிக்கலாமென்று ஏன் சொன்னாய்? விதூர்த்தன் எழுதியிருப்பது உக்கிரசேனருக்குத்தானே?'' என்று கேட்டான் ஆஜாத்சத்ரு.

"அது எனக்குத் தெரியாது இளவரசே! யாருக்கு விதூர்த்தர் எழுதியிருக்கிறார், என்ன எழுதியிருக்கிறார் என்பதை நான் பார்க்கவில்லை. விதூர்த்தருக்கு அனுப்பிய செய்தியில் உக்கிரசேனர் என்ன எழுதியிருந்தாரென்பதும் எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரியும். இது நமது நாட்டுக்கு நன்மை புரிவதாயிருக்குமே தவிர, தீமை புரிவதாக இருப்பதற்கில்லை, கோசலம் நம்மீது படையெடுக்காதபடி எப்படியும் கவனித்துக் கொள்ளுவதாகப் பிரதம சேனாதிபதி அன்று நம்மிடம் சொல்லவில்லையா? சமணபுரியில் நாம் சந்தித்துப் பேசியதை சற்று நினைவுபடுத்திப் பாருங்கள். கோசலத்தின் நட்பைச் சம்பாதித்து அதன் இடையூறு இல்லாமல் கவனித்துக் கொள்ளுவது நம்முடைய பொறுப்பு என்று உக்கிரசேனர் அன்று உறுதிகூறினார். அதற்காக விதூர்த்தருக்கு ஒரு முக்கியமான செய்தி அனுப்புவதாகக் கூறி செய்தியுடன் என்னைச் சிராவஸ்திக்கு அனுப்பினார். தங்களுக்குத் தெரிந்து, தங்களுடைய யோசனையின்மீது என்னைச் சிராவஸ்திக்கு அனுப்புவதாகத்தான் அவர் சொன்னார். இந்த வேலையை நான் வெற்றியோடு முடித்துக்கொண்டு வந்தால், தங்களிடம் சொல்லித் தலைநகரில் எனக்குப் புதிய பெரிய உத்தியோகம் வாங்கிக் கொடுப்பதாயும் அவர் சொன்னார்" என்றான் துன்முகி.

"துன்முகியின் கட்டுகளை அவிழ்த்துவிடுங்கள்! அவனைப் பூரணமாக நான் நம்புகிறேன். தவிர, கோசலத்தின் பகையில்லாதபடி கவனித்துக் கொள்ளுவதாக உக்கிரசேனர் என்னிடம் உறுதி கூறியது உண்மைதான். அதற்காக இவன் மூலம் ஒரு ஓலை அனுப்பியிருப்பார். அதற்கு விதூர்த்தன் பதில் அனுப்பியிருப்பான். இதில் தலைபோகிற ஆபத்தோ அல்லது நீங்கள் நினைப்பதுபோலப் பயங்கரமான அபாயமோ ஏதுமில்லை! உடல், பொருள், ஆவி மூன்றையும் என் சேவைக்கு அர்ப்பணிப்பதாக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டிருப்பவன் துன்முகி!" என்று ஆஜாத்சத்ரு கூறவும், துன்முகியின் கைக் கட்டுகளை நந்திவர்மன் அவிழ்த்துவிட்டான்.

இதற்கிடையில் துன்முகி கொண்டுவந்த வெள்ளிக் குழலைத் திறந்து, அதற்குள் இருந்து தங்கத்தில் கடைந்தெடுத்த அழகிய குறுந்தடி ஒன்றை ஆஜாத்சத்ரு வெளியில் எடுத்தான். அதில் சுற்றியிருந்த வெண்பட்டில் விதூரத்தனின் செய்தி இருந்தது. அச் செய்தியைப் படித்துக் கொண்டிருக்கையில் ஆஜாத்சத்ருவின் முகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு நந்திவர்மனும் மற்றவர்களும் அவனை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

செய்தியைப் படித்து முடித்தபின்னர் இளவரசர் சற்று நேரம் ஒன்றுமே பேசவில்லை. இடது கரத்தில் முகவாய்க் கட்டையைப் புதைத்தவண்ணம், செயலற்றுப்போய்க் கையிலிருந்த செய்தியைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். பிறகு, அச் செய்தியை நந்திவர்மனிடம் கொடுக்க, அதை நந்திவர்மன் வருமாறு படித்தான்:—

''மகத சாம்ராஜ்ய பிரதம சேனாதிபதி ஸ்ரீலஸ்ரீ உக்கிரசேனருக்கு, கோசலச் சக்கரவர்த்தி ஸ்ரீலஸ்ரீ விதூரத்தர் அனுப்பும் ஸ்ரீமுகம்.

தாங்கள் அனுப்பிய ஸ்ரீமுகம் கிடைக்கப்பெற்றோம். எம்மிடம் தாங்கள் காட்டும் அன்பையும், விசுவாசத்தையும் பாராட்டுகிறோம். நாம் பட்டத்துக்கு வந்ததில் தாங்கள் மகிழ்ச்சி தெரிவித்திருப்பதற்கு நன்றி.

எமது தந்தை மகதத்தில்தான் இருக்கவேண்டுமென்பதில் எமக்குச் சந்தேகமில்லை. அவருக்கு மகதம் ஆதரவு காட்டித் திரும்பவும் அரசுரிமையை அவருக்குப் பெற்றுத் தருவதற்காக மகதப் பேரரசர் பிம்பிசாரர் படையெடுப்பு நடத்துவாரென்ற எண்ணம் எமக்கு அறவே இல்லை. எமக்கு இவ்வித சந்தேகம் இருப்பதாகவும் அதை

முன்னிட்டு யுத்த ஏற்பாடுகளை நாம் செய்து கொண்டிருப்பதாயும் மகதத்தில் வதந்திகள் பரவியிருப்பதாக நாம் கேள்விப்படுகிறோம். இந்த வதந்திகளைக் கிளப்பி விட்டவர்கள் யாரென்பதை நாம் அறியோம். கோசலத்தின் உள்நாட்டு விவகாரத்தில் மகதம் தலையிடாது என்ற நம்பிக்கை எமக்கு எப்பொழுதுமே உண்டு. தங்களுடைய ஸ்ரீமுகம் இந்த நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்வதாயிருப்பதைக் காண நாம் திருப்தியடைகிறோம்.

எமது தந்தையை மகதத்தில் கண்டுபிடித்தால், உயிருடனோ அல்லது பிணமாகவோ எம்மிடம் கண்டிப்பாகத் திருப்பி ஒப்படைப்பதாக உறுதி கூறியிருக்கிறீர்கள். அரசைத்தான் நாம் விரும்பினோமே தவிர, எமது தந்தையின் உயிரையல்ல. ஆகவே அவரை, உயிருடன் தக்க பாதுகாப்போடு நம்மிடம் ஒப்படைப்பதையே நாம் விரும்புகிறோம்.

மகதப் பேரரசர் பிம்பிசாரனையும், அவரது புதல்வர் ஆஜாத்சத்ருவையும் ஒழித்துக்கட்டி, தங்கள் மகன் பிரம்மதத்தனை அரியணையில் ஏற்றப் போவதாயும், அதற்கு எமது ஆதரவு வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். எங்கள் நாட்டு விவகாரத்தில் மகதம் தலையிடுவதை நாம் எப்படி விரும்பவில்லையோ அதேபோல மகதத்தின் உள்நாட்டு விவகாரங்களிலும் நாம் தலையிட விரும்பவில்லை. தங்களுடைய திட்டங்களுக்கு எமது ஆதரவோ அல்லது எதிர்ப்போ இரண்டும் இருப்பது சாத்தியமில்லை.

தங்களுடைய மகளைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதையும் கவனித்தோம். அந்த விஷயம் இப்பொழுது தீர்மானிக்கப் படக்கூடியதல்ல என்பது தங்களுக்குத் தெரி

யும். அதைப்பற்றிப் பிறகு யோசிக்கலாம். தங்களுடைய தூதுவனுக்கு, தங்களுடைய செய்தியில் அடங்கிய விஷயம் என்னவென்பது தெரியாதென்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதேபோல நாமும் அவனுக்கு ஏதும் தெரிவிக்கவில்லை. இந்த ஸ்ரீமுகத்தை முத்திரையிட்டு அனுப்பி இருக்கிறோம்.

விதூரர்த்தன்.''

இந்தச் செய்தியை நந்திவர்மன் படித்து முடித்ததும் சற்று நேரம்வரையில் ஒருவருமே பேசவில்லை. ஒவ்வொருவரும் விடும் சுவாசம் தெளிவாகக் கேட்கும் அளவுக்கு நிசப்தம் அந்தக் கூடாரத்தில் குடிகொண்டிருந்தது. முதலில் துன்முகிதான் பேசவாரம்பித்தான்.

''பிரபு! இந்தச் சதியில், எனக்கு எந்தவிதமான சம்பந்தமுமில்லை. தங்களுக்குச் சேவை புரிவதாக எண்ணியே கோசலத்துக்கு நான் போனேன். தங்களுக்குக் கோசல மன்னரின் ஆதரவைக் கொண்டுவருவதாக எண்ணியே இந்தச் செய்தியைச் சிராவஸ்தியில் இருந்து கொண்டு வந்தேன். தங்களுடைய திருநாமத்தைச் சொல்லி, சேனாதிபதியார் என்னை எவ்வளவு பயங்கரமாக ஏமாற்றியிருக்கிறாரென்பது இப்பொழுதுதான் தெரிகிறது. என்னை மன்னிக்கவேண்டும் பிரபு! நான் நிரபராதி'' என்று அவன் முறையிட்டான்.

''துன்முகி! உன்னை எப்பொழுதுமே நான் சந்தேகிக்கவில்லை. விதூரர்த்தனின் செய்தியைப் படிப்பதின் முன்னதாகவே என்னிடம், நீ விசுவாசம் மிக்கவனென்று நான் சொல்லவில்லையா? இது பேசுவதற்குச் சமயமல்ல. எந்த நிமிடமும் சேனாதிபதியினால் சக்கரவர்த்திக்கு அபாயம் நேரிடலாம். நீ உடனே ஒரு காரியம் செய்யவேண்

டும். இந்தச் செய்தியைத் திரும்பவும் முத்திரையிட்டுக் கொண்டுபோய் உக்கிரசேனரிடம் கொடுத்துவிடவேண்டும். எங்களைச் சந்தித்ததையோ அல்லது இந்தச் செய்தியை நாங்கள் பார்த்ததையோ அவர் அறியக்கூடாது. அவர் சந்தேகம் கொள்ளச் சற்றும் இடமளிக்காவண்ணம் நடந்துகொள். சக்கரவர்த்தியார் இப்பொழுது சமணபுரியில் இருக்கிறார். உன்னை உடனே சமணபுரிக்கு உக்கிரசேனர் அனுப்புவார். சமணபுரியில் சக்கரவர்த்தியாரை இடைவிடாமல் பாதுகாப்பது உன்பொறுப்பு. அவருக்கும் இந்த விஷயங்கள் தெரியவேண்டாம். பாக்கியை நான் கவனித்துக் கொள்ளுகிறேன். உடனே நீ புறப்படு!'' என்றான் ஆஜாத்சத்ரு.

இப்படிச் சொல்லியதோடு நில்லாமல், அவன் அவசரம் அவசரமாக விதூரத்தனின் செய்தியுடன் சேதி நாட்டு எல்லைக்குப் பிரயாணப்படுத்தி வைத்தான். அவன் உயர்ந்த ஜாதிக் குதிரையொன்றில் வாயுவேகமாகப் பறந்து செல்வதை ஆஜாத்சத்ருவும், நந்திவர்மனும் அனுருத்தனும் கூடாரத்துக்கு வெளியே நின்று கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவன் தலை மறைந்து, கூடாரத்துக்குத் திரும்பும் சமயத்தில், துன்முகி சென்ற திசையில் இருந்து குதிரைக் குளம்புச் சப்தம் அவர்களுக்குக் கேட்டது.

''போனவன் எதற்காகத் திரும்பி வருகிறான்?'' என்று ஆஜாத்சத்ரு கேட்டான். அந்தக் கேள்விக்கு நந்திவர்மனோ, அல்லது அனுருத்தனோ பதில் சொல்லவேண்டிய அவசியமில்லாதபடி, எதிரில் வருவது ஒருவரல்ல, பலர் என்பதைக் குளம்புச் சப்தம் அவர்களுக்கு அறிவுறுத்தியது.

''அங்கத்திலிருந்து வருகிறார்கள் போலிருக்கிறது. அம்மாவிடமிருந்து ஏதாவது செய்தி கொண்டு வருகிறார்களோ'' என்று கேட்டான் ஆஜாத்சத்ரு.

''அவர்கள் அங்கத்திலிருந்து வருவதாக இருக்க வேண்டுமென்றே எனக்கும் தோன்றுகிறது. ஏழெட்டுப் பேர்களல்லவா வருகிறார்கள்? மகாராணியிடமிருந்து செய்தி கொண்டு வருவதாயிருந்தால் அதற்கு ஏழெட்டுப் பேர்கள் வருவானேன்?''என்றார் நந்திவர்மன்.

''இதோ சற்று நேரத்தில் வந்துவிடுவார்கள். நாம் ஏன் அதற்குள் குழப்பிக்கொண்டு சிரமப்பட வேண்டும்'' என்றார் அனுருத்தன்.

எதிரில் வருபவர்களை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே அவர்கள் கூடாரத்துக்கு வெளியில் நின்றனர். சிறிது நேரத்திற்கெல்லாம் அறுவர் குதிரைகளில் வந்து இறங்கினார்கள். அவர்களில் நால்வர் படைவீரர்கள். ஒருவர் பெண்மணி. மற்றொருவர் ஒரு சாதாரண தொழிலாளியைப் போல இருந்தார். அந்தத் தொழிலாளியின் குதிரைமீது ஒரு பெரிய சாக்கு மூட்டையும் இருந்தது. உக்கிரசேனரின் சமையற்காரியும், அவளுடைய புருஷனுமே மற்ற இருவரென்பதைச் சாக்குமூட்டையைக் குறிப்பிட்டவுடனேயே வாசக நேயர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள். பிரசன்னஜித்தின் சடலத்தை ஒரு கோணிப் பைக்குள் போட்டு அடக்கம் செய்து, விதூர்த்தனிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காகப் புறப்பட்டவர்களே இப்பொழுது, இராணுவப் பாதுகாப்புடன் ஆஜாத்சத்ருவின் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள். ''நீங்கள் யார்? எங்கு வந்தீர்கள்?'' என்றெல்லாம் விவரிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை அவர்கள் வைக்கவில்லை. இராணுவ வீரர்களில் ஒருவன் முன்வந்து, முழந்தாழிட்டு வணங்கி, 'இருவரையும் மகாராணியார் தங்களிடம் அனுப்பினார்கள். இதோ மகாராணியார் அனுப்பிய செய்தி.

அவர்கள் அவசரமாகச் சமணபுரிக்குப் புறப் பட்டுப் போயிருக்கிறார்கள்'' என்றான்.

''அம்மா சமணபுரிக்கா போயிருக்கிறார்?'' என்று ஆஜாத்சத்ரு கேட்டபோது, ''ஆமாம் பிரபு! தக்க பாது காப்புடன் மகாராணியார் சமணபுரிக்குப் போயிருக்கிறார் கள். சம்பாவை விட்டு அவசரமாய்ப் போகும் கார ணத்தை இந்தச் செய்தியில் எழுதியிருப்பதாகச் சொல் லிச் சென்றார்கள்'' என்று கூறி, கோசலாதேவி கொடுத் தனுப்பிய செய்தியை இளவரசனிடம் கொடுத்தான் இராணுவ வீரன்.

''நமக்குத் தகவல் கிடைப்பதின் முன்னரே அம்மா வுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இல்லாவிட்டால் அப்பா இருக்கும் இடத்திற்கு அம்மா இப்படி விரைந்து செல்லத் தேவையில்லை. இதற்குள் சமணபுரியில் ஏதும் விபரீதம் நடந்துவிடாமல் இருக்க வேண்டும்'' என்று சொல் லிக்கொண்டே, கோசலாதேவி அனுப்பிய செய்தியை ஆஜாத்சத்ரு பிரித்துப் படித்தான். மகாராணி கோசலா தேவி சுருக்கமாகத்தான் எழுதியிருந்தாள். ஆயினும் அக் கடிதத்தின் ஒவ்வொரு வார்த்தையிலும் அவளுடைய பதட்டமும், பரபரப்பும் தெளிவாகப் பிரதிபலித்தது. மற்றவர்களுக்கும் கேட்கும்படி அதை ஆஜாத்சத்ரு பின்வரு மாறு படித்தான்.

மகனே ஆஜா!

அஷ்டகிரக சேர்க்கை உன் அப்பாவுக்கு மிகவும் கெட்டதென்று ராஜகுரு எச்சரித்தது நிஜமாகிவிடும்போல் இருக்கிறது. என்ன எழுதுவது, எப்படி எழுதுவது என்றே புரியாமல் தவிக்கிறேனடா ஆஜா. உன் அப்பா சமணபுரி யில் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இதோ இப் பொழுதே உன் அப்பாவின் அருகிலிருக்க நான் புறப்பட் டுப் போகிறேன். அவரைக் காப்பாற்ற வேண்டுமென்று வழி நெடுகிலும் பிரார்த்தித்துக்கொண்டே போவேன்.

மகனே ஆஜா! என் உடன் பிறந்த அண்ணன் உக்கிர சேனனே நம் குடும்பத்துக்கு எதிரியாக வருவானென்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவன் வீட்டுச் சமையற்காரியும், தோட்டக்காரனும் சொல்லும் தகவல்களைக் கேட்டால் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது. அவர்களை நீயே விசாரித்துக்கொள். உக்கிரசேனனை அடக்கி வைக்க உடனே நீ வேண்டியதைச் செய். உலகில் உன் அப்பாதான் உனக்குத் தெய்வம். அவருக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் பிறகு உயிரோடு என்னை நீ பார்க்க மாட்டாய். நான் வருகிறேன். கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும்.

கோசலை.

இப்படிப் படித்த பிறகு, இராணுவ வீரர்களின் பாதுகாப்பில் வந்த இருவரையும் பார்த்து, ''இவர்கள்தான் சேனாதிபதியின் வீட்டில் பணி புரிபவர்களா?'' என்று விசாரித்தான் ஆஜாத்சத்ரு.

''ஆமாம். நான்தான் தோட்டவேலை செய்பவன். என் பெயர் மேகநாதன். இவள் என் மனைவி. பெயர் கௌரி. பிறவியில் கௌரி ஊமை. என்றாலும் எழுதத் தெரிந்தவள். அவள் ஊமையாதலால் காதினால் கேட்பதை எவரிடமும் சொல்ல முடியாதென்று எண்ணி, அவளைச் சேனாதிபதி சமையல்காரியாகவும், சாப்பாடு பரிமாறவும் அமர்த்திக்கொண்டிருந்தார். கௌரி தங்கள் அன்னையாரான மகாராணியாருக்கு மிகவும் கடமைப்பட்டவள். மகாராணியாரின் செவிலித் தாயைப்போல ஒரு பாட்டி இருக்கிறாரே அவரைத் தெரியுமல்லவா?'' என்று கேட்டுவிட்டுநிறுத்தினான் மேகநாதன்.

''ஆமாம்! என்னை எடுத்து வளர்த்த மூதாட்டி அவர் தான். அவருக்கு என்ன இப்பொழுது?'' என்று கேட்டான் ஆஜாத்சத்ரு.

''அந்த மூதாட்டியார்தான் தங்களுடைய அன்னை யாரையும் வளர்த்தவர் இளவரசே. இதை நினைவிற் கொண்டு அந்த மூதாட்டியை அரசியார் எத்தனையோ கௌரவமாகவும், வசதியாகவும் வைத்திருக்கிறார்கள். அந்த மூதாட்டியின் பேத்திதான் என் மனைவி கௌரி'' என்று கூறிவிட்டு, உக்கிரசேனரும், அவர் மகன் பிரம்ம தத்தனும் பேசிக்கொண்ட விவரங்களைத் தனக்கு கௌரி எழுதிக் காட்டியபடியே எடுத்துச் சொன்னான் மேகநாதன்.

''பிரசன்னஜித்தின் சடலத்தைக் கோசலத்துக்கு அனுப்ப அவர்கள் ஏற்பாடு செய்ய நினைப்பது தெரிந்ததும் நான் என் பாட்டியாரைப் பார்க்கக் கோசலம் போக வேண்டுமென்று ரஜா கேட்பதுபோல பிரம்மதத்தனிடம் கேட்டேன். சடலத்தைக் கொண்டுபோக என்னை அவன் அமர்த்துவானென்று எதிர்பார்த்தே ரஜா கேட்டேன். நான் நினைத்தபடியேயாயிற்று. பிரசன்னஜித்தின் சட லத்தை, விதூர்த்தனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும் பொறுப்பை, பிரம்மதத்தன் என்னிடம் ஒப்படைத்தான். அதோடு கௌரியை அழைத்துப் போய் வரவும் அனுமதித் தான். நேராக அங்கத்துக்குப் புறப்பட்டு வந்து அரசியா ரிடம் நடந்ததையெல்லாம் சொன்னேன். தங்களிடமும் சொல்லுமாறு எங்களை அனுப்பி வைத்தார்கள். இதோ பிரசன்னஜித்தின் சடலம் இருக்கிறது. உக்கிரசேனரின் திட்டம், பிரமதத்தனை அரியணையில் ஏற்றி, அவனுக்கு விதூர்த்தன் சகோதரி வஜ்ரதேவியை மணம் செய்து வைப்பது, விதூர்த்தனுக்கு மஞ்சுவையும் மணம் செய்து வைக்க அவர் திட்டம் போட்டுக்கொண்டிருக் கிறார். விதூர்த்தனுக்கு அவர் அனுப்பிய செய்தியும் இதோ இருக்கிறது'' என்று கூறி, ஒரு வெள்ளிக் குழலை ஆஜாத்சத்ருவிடம் கொடுத்தான் மேகநாதன்.

அதை வாங்கி, மூடியைத் திறந்து செய்தியை வெளி யில் எடுத்து மனதுக்குள் படித்துக்கொண்டு திரும்பவும் குழலுக்குள்ளேயே போட்டு, மேகநாதனிடம் திருப்பிக்

கொடுத்தான் ஆஜாத்சத்ரு. பிறகு, ''மேகநாதா! உன்னுடையவும், உன் மனைவியினுடையவும் ராஜபக்தியை வெகுவாக மெச்சுகிறேன். சமயத்தில் கௌரி செய்த இந்தப் பேருதவியை, என் உயிர் உள்ளவரையில் நான் மறக்க மாட்டேன். இந்தா என் இலட்சினை பதித்த மோதிரத்தை வைத்துக்கொள். எப்பொழுது, எந் நேரத்தில் விரும்பினாலும் நீங்கள் இருவரும் அரண்மனைக்கு தாராளமாக வந்து என்னைப் பார்க்கலாம். என் நன்றியை எப்படித் தெரிவிப்பதென்பதைப் பிறகு சொல்லுகிறேன். இதற்கிடையில் சேனாதிபதி சொல்லியபடி நீயும், கௌரியும் கோசலத்துக்குப் போய், விதூர்த்தனிடம், அவன் தகப்பன் சடலத்தையும், சேனாதிபதி கொடுத்த செய்தியையும் ஒப்படையுங்கள். இடையில் எங்களைச் சந்தித்ததையும் அவனுக்குச் சொல்லுங்கள். துன்முகிமூலம் விதூர்த்தன் அனுப்பிய செய்தியையும் நான் பார்த்ததாயும், அவனுடைய பெருந்தன்மையை நான் பாராட்டியதாயும் அவனிடம் சொல்லுங்கள்'' என்றான். பிறகு, அவனுக்கு வழித் துணையாக வந்த இராணுவ வீரர்களைப் பார்த்து, ''நீங்கள் இங்கு கேட்ட விஷயங்கள் உங்கள் மனதுக்குள்ளேயே இருக்க வேண்டும். இவர்களுக்கு வைதேகி எல்லை வரை வழித் துணையாகப் போய்விட்டு வாருங்கள்'' என்றான்.

இளவரசன் கொடுத்த மோதிரத்தை வாங்கிக் கண்ணில் ஒத்திக்கொண்டான் மேகநாதன். கௌரியுடனும், துணை வீரர்களுடனும் அவன் உடனே அங்கிருந்து பிரயாணப்பட்டான்.

அவர்கள் போனபிறகு, ''நந்திவர்மரே! என் மாமன் செய்யும் மாபெரும் துரோகம் இப்பொழுது உங்களுக்குத் தெளிவாகப் புரிகிறதல்லவா? என் தாய்கூடப் பிறந்தவனாயிற்றே என்ற இரத்தபாசம்கூட அவருக்கு இல்லாமல் போயிற்றே!'' என்று ஆஜாத்சத்ரு சொல்லியபொழுது அவன் குரல் தழுதழுத்தது.

''இப்படி ஏதோ நடக்கப் போகிறதென்பதை நான் எதிர்பார்த்தேன் இளவரசே! கொஞ்சக் காலமாக உக்கிர சேனரின் போக்கு நூதனமாக இருப்பதாய் எனக்குத் தோன்றியது. இதற்குள் விபரீதம் ஏதும் ஏற்பட்டுவிடாமல் இருக்க வேண்டுமேயென்று பயமாகவிருக்கிறது'' என்றார் நந்திவர்மன்.

''இனிப் பேசிக்கொண்டு நேரத்தைக் கடத்துவதில் பிரயோசனமில்லை. நாம் மூவரும் உடனே சமணபுரிக்குப் புறப்பட்டுப் போயாக வேண்டும். என் மாமன், தனது திட்டத்தைத் தானே நேரில் நிறைவேற்ற வேண்டுமென்பதில்லை. அவர், சேதி எல்லையில் இருந்துகொண்டே சமணபுரியில், படுபாதகத்தைச் செய்யக் கைக்கூலிகளை அமர்த்தியிருக்கலாம். அபாயம் ஏற்படுவதின் முன்னால் விரைந்து சென்று அதைத் தடுக்க வேண்டும். நாம் திரும்பும்வரை யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த தூதுவர்களை உத்தரவுடன் அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள். ராஜகிருகத்திலிருக்கும் படைத் தலைவருக்கு, பிரம்மதத்தனை உடனே சிறைப்பிடிக்கும்படியும், அவர்களது எல்லா மாளிகையையும் சோதனையிடும்படியும் உத்தரவனுப்புங்கள். சிறிது நேரத்தில் நாம் சமணபுரிக்குப் புறப்பட வேண்டும்'' என்றான் ஆஜாத்சத்ரு.

அவன் சொல்லியபடியே உத்தரவுகளோடு போர் முனைக்கும், தலைநகருக்கும் தூதுவர்கள் பறந்தார்கள். பொழுது புலருவதற்கு முன்னதாகவே, ஆஜாத்சத்ரு, அனுருத்தன், நந்திவர்மன் ஆகிய மூவரும், அதி வேகமாகச் செல்லக்கூடிய குதிரைகளில் சமணபுரியை நோக்கிப் பிரயாணத்தைத் தொடங்கினார்கள்.

## அத்தியாயம் — 6

# இரகங்கள் நடத்திய
# கோர விளையாட்டு!

அங்கத்தின் தலைநகரான சம்பாவிலிருந்து சமண புரிக்குச் சாதாரணமாக அரைநாள் பிரயாணந்தான். இரண்டுக்குமிடையில் தங்குதடையற்ற விசாலமான ராஜ பாட்டை இருக்கிறது. இந்த ராஜபாட்டையும், மகதத் தின் ஊடாகச் செல்லுவதினால் வழியில் தடங்கல் ஏற் பட எவ்வித நியாயமும் இல்லை. ஆனால் இப்பொழுது ஆஜாத்சத்ருவும், மற்றிரு சேனாதிபதிகளும் புறப்பட்டது சம்பாவிலிருந்து அல்ல. அங்கத்தைத் தாண்டி, வங்கத்தி னுள் நெடுந்தூரம் ஊடுருவியிருந்த பாசறையிலிருந்து அவர்கள் புறப்பட்டிருந்தார்கள்.

அவர்கள் சம்பாவை அடைந்த சமயம் கிட்டத்தட்ட நண்பகல் இருக்கும். அவர்கள் அரண்மனை வாசலில் இறங்குவதற்கும், மங்களகிரியிலிருந்து அமரகோசன் வரு வதற்கும் சரியாக இருந்தது. இளவரசனின் மங்களகிரி விஜயத்தின்பொழுது அவனுடைய மெய்ப் பாதுகாவல னான அமரகோசனும் கூடச் சென்றிருந்ததையும், திரும் பும்பொழுது அமரகோசனை மங்களகிரியிலேயே இளவரசன் விட்டு வந்ததையும் வாசக நேயர்கள் மறந்திருக்க மாட் டார்கள்.

அமரகோசனை முற்றிலும் எதிர்பாராத விதமாகச் சந்திக்கவும், ''அமரகோசா! மங்களகிரியில் ஏதாவது விசேஷமுண்டா? ராணி ஆஷா எப்படியிருக்கிருள்? விஜய கேசரி விசேஷ சேதி ஏதும் அனுப்பினுரா?'' என்று விசாரித்தான் ஆஜாத்சத்ரு.

''செய்தியா? ஒன்றல்ல, இரண்டல்ல எத்தனையோ செய்திகளுடன்தான் வந்திருக்கிறேன் இளவரசே! மங்களகிரி மன்னன் மலயத்வஜன் படுகொலை செய்யப்பட்டு விட்டார்!'' என்ருன் அமரகோசன்.

''மலயத்வஜன் கொல்லப்பட்டுவிட்டானு? அடபாவமே! அவனைக் கொலை செய்தது யார்? ஆஷாதானு?'' என்று ஆஜாத்சத்ரு கேட்டபொழுது, அவன் குரலில் ஆச்சரியமும் பரபரப்பும் தொனித்தது.

''கொலைகாரர்கள் யார் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கவனித்தால் ஆஷாவே தனது திட்டங்களுக்கெல்லாம் முட்டுக்கட்டையாயிருந்து வரும் கணவனைத் தீர்த்துக்கட்டியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஒரு நாள் அரச தம்பதிகள் பரிவாரங்களோடு வேட்டைக்குச் சென்ருர்கள். மலயத்வஜனுடன் அவனுடைய முதல் மனைவியின் பிள்ளையான பட்டத்திளவரசனும் கூடச் சென்ருன். காட்டில் மூலைக்கு ஒருவராகச் சிதறிப்போய் வேட்டையாடினுர்களாம். ஒருபுறம் மலயத்வஜனும், மற்ருெரு இடத்தில் அவன் மகனும் நஞ்சு கலந்த அம்புகளுக்குப் பலியாகிச் செத்துக் கிடந்ததைக் கண்டுபிடித்தார்களாம். ஆஷா, ''குய்யோ முறையோ'' என்று கதறித் தீர்த்ததாக பக்கத்தில் இருந்தவர்கள் சொல்லுகிருர்கள். ஆனுல் அவ்வளவும் நீலிக் கண்ணீர் என்றும், அவளே கொலைகாரி என்றும் நமது ராஜப் பிரதிநிதி விஜயகேசரி கருதுகிருர். ராஜ்யப் பொறுப்பை ஆஷா இப்பொழுது பரிபூரணமாக ஏற்றுக் கொண்டிருக்கிருள்'' என்ருன் அமரகோசன்.

''அஷ்டக் கிரகச் சேர்க்கைக்கு மலயத்வஜன் முதல் பலி போலிருக்கிறது, பாவம்! மகதத்திடம் விசுவாசம் மிக்க ஒருவரை நாம் அநியாயமாக இழந்துவிட்டோம். ஆஷாவைச் சமாளிப்பது நமக்கு வருங்காலத்தில் சுலப மாயிருக்கப் போவதில்லை. வேறு ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று கேட்டான் இளவரசன்.

''கணவன் இறந்ததைக்கூடப் பொருட்படுத்தாமல் ஆஷா யுத்த முஸ்தீபுகளை முன்னதைக் காட்டிலும் அதிக தீவிரமாகச் செய்துவருகிறாளாம். அவளுடைய இலட்சி யம் என்னவென்பது தெரியவில்லை. உடனடியாக உத் சலத்தை அவள் ஆக்கிரமித்துக் கொள்ளலாமென்று விஜய கேசரி கருதுகிறார். அவள் அபாயகரமான சத்துருவாத லால் எதற்கும் முன்னெச்சரிக்கையுடனிருப்பது நல்ல தென்று தங்களிடம் தெரிவிக்குமாறு சொல்லியனுப்பி ஞர்'' என்றான் அமரகோசன்.

''நல்லது! அஷ்டக்கிரகச் சேர்க்கை மங்களகிரியில் நிகழ்ந்ததைப் போலவே நமது சாம்ராஜ்யத்திலும் மாபெரும் அநியாயத்தைச் செய்ய திட்டமிட்டுக் கொண் டிருக்கிறது. அதைத் தடுக்கவே நாங்கள் சமணபுரிக்கு விரைகிறோம். நீயும் எங்களுடன் வா'' என்று ஆஜாத் சத்ரு கூறியபொழுது, ''சமணபுரிக்கா? அங்கிருந்துதான் நானும் வருகிறேன். சக்கரவர்த்தி இப்பொழுது அங்கு தான் இருக்கிறார். மங்களகிரியில் நிகழ்ந்ததை அவருக்குத் தெரிவித்துவிட்டு, அவருடைய உத்தரவின் மீதே தங் களைச் சந்திக்க வங்கப் போர்முனைக்கு புறப்பட்டு வந்து கொண்டிருந்தேன்'' என்றான் அமரகோசன்.

''சக்கரவர்த்தி சௌக்கியமாக இருக்கிறாரா அமர கோசா! உன்னுடன் அவர் சந்தோஷமாகப் பேசினாரா? சமணபுரியில் அசாதாரணமாக எதையேனும் நீ கவனித் தாயா?'' என்று ஆவலுடன் கேட்டான் இளவரசன்.

''சக்கரவர்த்தியார் சௌக்கியமாகத்தான் இருக்கி றார். ஆனால் அவரது முகத்தில் மாத்திரம் பழைய உற்

சாகத்தை நான் காணவில்லை! இளவரசே! பல திசைகளிலும் நடந்து கொண்டிருக்கும் யுத்தங்கள் அவருக்குச் சற்று கவலையைக் கொடுத்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். இதைத் தவிர அசாதாரணமாக வேறு எதையும் நான் காணவில்லை. சக்கரவர்த்தியாரின் மேற்பார்வையில் சேதிநாட்டின் தெற்கு எல்லையிலும் சண்டை நடந்து கொண்டிருக்கிறது'' என்றான் அமரகோசன்.

இந்த சம்பாஷணையை இடையில் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்த நந்திவர்மன், ''ஆஷாவை தாங்களே பயங்கரமான எதிரியென்று வர்ணிப்பதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தாங்கள் எதிரியென மதிக்கும் அளவுக்கு பராக்கிரமம் வாய்ந்தவளா அந்த ஆஷா'' என்று கேட்டார் நந்திவர்மன்.

''அம்மாடியோ! அவளை ஒரு தடவை நீங்கள் சந்தித்தால் தெரிந்து கொள்ளுவீர்கள் எப்படிப்பட்ட சூனியக்காரி ஆஷா என்பதை! வாள் முனையில் நீங்களும் நானும் சாதிக்க முடியாதவைகளை அவள் மதியினாலே சாதித்து விடும் சாமர்த்தியம் பெற்றவள். ஒப்பற்ற அழகி, அதே சமயம் ஆணவத்தின் இருப்பிடம். அசகாய தைரியம் படைத்தவள். ஆயினும் பார்வைக்குப் பெண்ணினத்தின் மென்மையும், பொலிவும் பூரணத்துவம் பெற்றவளைப் போல விளங்குவாள். சர்ப்பத்தின் தோல் பளபளப்பும் வழுவழுப்பும் உடையதுதான். அதற்குள் எப்படி கொடிய நஞ்சு இடம்பெற்றிருக்கிறதோ, அதே போன்றவள் மங்களகிரியின் மகாராணி ஆஷா! அவளை விரைவில் நீங்களும் சந்திக்கும்படியாக நேரத்தான் போகிறது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. மகதத்தின் கழுத்தைச் சமயம் பார்த்து அறுக்க கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கும் அந்த மோகினியைப் போர் முனையில் நீங்கள் சந்திக்க நேரிடும் பொழுது அவள் எப்படிப்பட்டவளென்பதை அப்பொழுது தெரிந்து கொள்ளுவீர்கள்'' என்றான் அஜாதசத்ரு.

நண்பகல் போசனத்தை அரண்மனையில் முடித்துக் கொண்டு, குதிரைகளையும் மாற்றிக் கொண்டு சமண புரியை நோக்கி அவர்கள் பிரயாணத்தை மீண்டும் தொடங்கினுர்கள்.

''என் மனம் ஏனே என்றுமில்லாதபடி குழம்புகிறது. விதூரத்தனுக்கு மாமா அனுப்பிய செய்திகளை எல்லாம் கவனித்தால் அவர் சேதி போர்முனையில் இருப்பாரென்று எனக்குத் தோன்றவில்லை. அவரும் சமணபுரியில்தான் தலைமறைவாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். நாம் சமணபுரியை அடையும் வரையில் ஒரு விபரீதமும் ஏற்படாதபடி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'' என் றுன் ஆஜாத்சத்ரு.

''சக்கரவர்த்தியார் நல்ல மனம் படைத்தவர்கள். அவருக்கு ஆண்டவன் ஒரு தீமையும் செய்யமாட்டான். கவலைப்படாதீர்கள்'' என்று நந்திவர்மனும், அனுருத்த னும் தேற்றினுர்கள்.

அவர்கள் சமணபுரியை அடைந்தபொழுது அர்த்த ராத்திரியிருக்கும். அன்று அமாவாசை. கடந்த பௌர்ணமியன்று ஆஜாத்சத்ருவும், உக்கிரசேனரும் மங்களகிரி அரண்மனையில் இருந்தார்கள். தன் ஒருவன் பொருட்டே வாழ்வதாக இரண்டு வாரங்களுக்கு முன்னுல் சர்க்கரை யாகப் பேசிய அதே மாமன் இன்று தனக்கும், தனது ராஜவம்சத்திற்கும் மிகக் கொடிய எதிரியாக மாறிவிட் டதை எண்ணியபொழுது ஆஜாத்சத்ருவுக்கு மனித இயல் பிலேயே நம்பிக்கையற்றுப் போய்விட்டது. மண்ணுசை மனிதனை எவ்வளவு பயங்கரமான படுபாதகங்களுக்கெல் லாம் தூண்டுகிறது. உடன் பிறந்த தங்கையை அமங்கலி யாக்கி, அவள் புருஷனையும், பிள்ளையையும் கொன்று தீர்த்து தன் மகனை அரியணையிலேற்றும் அளவுக்கு பண்பு மிக்கவரென்றும், அன்பு கொண்டவரென்றும் இத்தனை காலமும் எண்ணி வந்த மாமன் மிலேச்சனுகிவிட்டாரே

என்ற நினைப்பு ஆஜாத்சத்ருவுக்கு நெஞ்சத்தைப் பிழிந்தெடுப்பதாக இருந்தது. இந்த வேதனை ஒருபுறமும், தந்தைக்கு ஒன்றும் நேரிட்டுவிடாமலிருக்க வேண்டுமே என்ற கவலை மற்றொருபுறமுமாக கனத்த மனதுடன் சமணபுரி அரண்மனையை நோக்கி அனுருத்தனும், நந்திவர்மனும், அமரகோசனும் பின்தொடர விரைந்தான் பட்டத்து இளவரசன் ஆஜாத்சத்ரு.

அரண்மனையில் நுழைந்தவர்கள் பூங்காவைக் கடந்து உள்ளே சென்றதும் அன்னை கோசலாதேவி வந்துவிட்டாரா என்றுதான் ஆஜாத்சத்ரு முதலில் விசாரித்தான். அன்று மாலையில்தான் மகாராணி வந்ததாக அறிவித்த காவலாளி, ''சக்கரவர்த்தியாருடன் மகாராணி பேசிக்கொண்டிருக்கிறாரென்று நினைக்கிறேன். அவர்களது அறையில் விளக்கு எரிவதைச் சற்று நேரத்துக்கு முன்பு கண்டேன்'' என்றான்.

''சக்கரவர்த்தியார் விழித்துக் கொண்டிருந்தால் இப்பொழுதே அவரை நாம்...'' என்று ஆரம்பித்த நந்திவர்மன், பார்ப்பது நல்லது என்று சொல்லி முடிப்பதற்குள் அந்த அரண்மனையே கிடுகிடுத்துப் போகும் வண்ணம் ஒரு அலறல் சப்தம் உள்ளேயிருந்து வந்தது. கணப்பொழுதில் அது தன் தாய் கோசலாதேவியின் கூக்குரல் தானென்பதை ஆஜாத்சத்ரு அறிந்துகொண்டான். ''ஐயோ! தெய்வமே! எதைத் தடுக்க நான் பறந்து கொண்டு வந்தேனோ அது நடந்துவிட்டதா?'' என்று கத்திக்கொண்டே கூக்குரல் வந்த திசையை நோக்கி பாய்ந்து ஓடினான். மற்றவர்களும் காவலர்களும் தலைதெறிக்க இளவரசன் பின்னால் ஓடினார்கள்.

சக்கரவர்த்தியாரின் அறையை நெருங்கிய சமயம் ''அதோ! அதோ! யாரோ ஒருவன் ஓடுகிறான்'' என்று கத்தினான் அனுருத்தன்.

ஓடிக்கொண்டிருந்த இளவரசன் சட்டென்று நின்று பார்த்து, ''யார் அது? நில்! உடனே நில்!'' என்று கத்தி

ஞன். அதற்குள் அருகிலிருந்த ஒரு சாளரத்தின் வழியே ஒரு உருவம் தோட்டத்தில் குதித்து ஓடியது. மறுகணம் இளவரசன் இடுப்பிலிருந்த பிச்சுவாக் கத்தியை எடுத்துக் குறிபார்த்து வீசினான். அவ்வளவுதான் ஓடிய உருவம் ''ஐயோ'' என்று அலறிக்கொண்டு கீழே விழுந்தது.

''நந்திவர்மரே! அவன் பாசாங்குக்கு கத்திக்கொண்டு விழுந்திருக்கலாம். ஓடிப்போய் அவனைப் பிடியுங்கள். தப்ப விடாதீர்கள்'' என்று சொல்லிவிட்டு திறந்து கிடந்த சக்கரவர்த்தியாரின் சயனக்கிருகத்துக்குள் அம்பு போல பாய்ந்தான் ஆஜாத்சத்ரு.

அந்த அறைக்குள் கண்ட கோரக் காட்சி அவனை ஒரு கணம் செயலற்று ஸ்தம்பித்துப் போகச் செய்துவிட்டது. கட்டிலில் சக்கரவர்த்தியார் படுத்திருந்தார். அவருடைய நடு மார்பில் ஒரு கத்தி ஆழமாகப் பாய்ந்து குபு குபு என்று இரத்தம் பீறிட்டு வெளிவந்து கொண்டிருந்தது. அதே கட்டிலில் கோசலாதேவியாரும் படுத்திருந்தார். விளக்கின் வெளிச்சத்தில் அவர் அகலக் கண் விழித்துக் கொண்டிருந்ததைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அவ்வறையின் எல்லாச் சாளரங்களும் திறந்து கிடந்தன.

கட்டிலின் அருகில் வந்து பார்த்து, பேச்சிழந்த நிலைமையில் பிரமை பிடித்துப் போய் நின்ற பட்டத்திளவரசன் ஒரு சில விநாடிதான் அப்படியிருந்தான். உடனே ''ஐயோ! அப்பா!'' என்று கதறிக் கொண்டு சக்கரவர்த்தியாரின் மீது விழுந்து அலறினான்.

அவனைப் போலவே சற்றுநேரம் அதிர்ச்சி அடைந்திருந்த அனுருத்தன், அதிர்ச்சி நீங்கியதும், ''உடனே அரண்மனை வைத்தியரைக் கொண்டு வாருங்கள்'' என்று பக்கத்தில் இருந்தவர்களிடம் சொல்லிவிட்டு இளவரசனைப் பிடித்திழுத்தான்.

''இதென்ன முட்டாள்தனம்! சக்கரவர்த்தியார் மீது விழுந்து புரண்டு இருக்கக் கூடிய உயிரையும் போக்கடித்து

விடாதீர்கள். இப்படி நகர்ந்து நில்லுங்கள்'' என்று சற்றுக் கடுமையான தொனியிலேயே உத்தரவிடுவதைப் போலச் சொன்னான். ஆஜாத்சத்ரு அதை காதில் வாங்கிக் கொள்ளாமல் சக்கரவர்த்தியைக் கட்டித் தழுவிக் கொண்டு கதறவும், ''நான் சொல்லுவது காதில் விழவில்லை. ஏன் உங்கள் தகப்பனை இப்படிக் கொல்லுகிறீர்கள்? ஒட்டிக் கொண்டிருக்கக் கூடிய உயிரையும் விரட்டிவிடாதீர்கள்'' என்று அனுருத்தன் மீண்டும் கத்தவே, ஆஜாத்சத்ருவுக்கு அப்பொழுதுதான் ஒரு வேளை சக்கரவர்த்தியாருக்கு உயிர் இருந்தாலும் இருக்கலாமென்று தோன்றியது.

சட்டென்று எழுந்திருந்தவன் சக்கரவர்த்தியின் மார்பில் பாய்ந்திருந்த கத்தியைப் பலமாக வெளியில் இழுத்துப் பிடுங்கினான். பிடுங்கிய இடத்திலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டு வருவதை தனது இடது கையினால் அழுத்திப் பிடித்துத் தடுத்த வண்ணம் வெளியில் எடுத்த கத்தியைக் கவனித்தான். ''அட பாவி! என் தகப்பனைக் கொல்ல என்னுடைய கத்தியையே உபயோகித்திருக்கிறான் பார், அனுருத்தா! இது என் கத்தி. என் பிறந்த தினங்களில் ஒன்றின் போது அப்பா அன்போடு எனக்களித்த வெகுமதிக் கத்தி. இது அரண்மனையில்தான் இருந்தது. கொலை செய்தவன் நான்என்று நினைக்க வேண்டும் என்பதற்காக என் கத்தியைக் கொண்டே இந்தப் படுபாதகத்தைச் செய்திருக்கிறான் மகா பாபி'' என்று கதறினான் இளவரசன்.

இதற்குள் அரண்மனை வைத்தியர் ஓடோடியும் வந்தார். சக்கரவர்த்தியின் கைநாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டுத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார். சக்கரவர்த்தியார் இனித் திரும்பிவர முடியாத இடத்திற்குப் போய்விட்டாரென்பது நிச்சயமாகியதும் கேவிக்கேவிக் கதறினான் இளவரசன். அவனை அடக்கி சமாதானப் படுத்துவது அனுருத்தனுக்கும் மற்றவர்களுக்கும் பிரம்மப் பிரயத்

தனமாகிவிட்டது. சற்றுநேரம் உணர்ச்சி வசப்பட்டுக் கதறிய இளவரசன் சட்டென்று அழுகையை நிறுத்திவிட்டு எழுந்தான். அவன் திடீரென்று அழுகையை நிறுத்திய காரணம் அங்கிருந்த ஒருவருக்கும் புரியவில்லை. தகப்பன் திடீர் மறைவில் தாயை மறந்திருந்த ஆஜாத்சத்ருவுக்கு அந்த அறையில் இத்தனை அமர்க்களங்கள் நடந்தும் அதே கட்டிலில் படுத்திருக்கும் கோசலாதேவி அசைவின்றிப் படுத்திருந்தது, அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது.

கட்டிலைச் சுற்றிக்கொண்டு மறுபுறமாக ஓடித் தாயின் பக்கத்தை அடைந்து, இளவரசன் படுத்திருந்த கோசலா தேவியை உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை ஏறத் தாழ ஒரு முறை பார்த்தான். அவள் மீது எவ்விதமான காயமும் இருப்பதாகத் தெரியவில்லை. அவளுடைய விழித்த கண்கள் விழித்தபடியே இருந்தன. ஓலமிட்டுக் கதறிய வாய், திறந்தபடியே இருந்தது. கண் இமைகள் கூட அசைய வில்லை.

''வைத்தியரே! சீக்கிரம் இப்படி வந்து அம்மாவைப் பாருங்களேன்'' என்று கத்தினன் ஆஜாத்சத்ரு.

வைத்தியர் கோசலாதேவியின் கை நாடியைச் சோதித்துப் பார்த்தார். அதிர்ச்சியில் இதயம் நின்றுவிட்டதாயும், கணவருடன் மகாராணியாரும் இறைவனடி சேர்ந்துவிட்டார் என்றும் சொல்ல முடியாமல் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டு சொன்னார் வைத்தியர். உயிருக்குயிரான தாயும் தன்னைவிட்டுப் போய்விட்டாளென்பதைக் கேட்டதும் புழுவைப் போலத் துடித்துத்துடித்துக் கதறினன் இளவரசன். எந்தத் தாயின் உள்ளம் நொந்து போகக்கூடாதென்பதற்காக பட்டம், பதவிகளை மட்டுமல்ல, சக்கரவர்த்தி விரும்பினல் தனது உயிரையே தியாகம் செய்வதாக ஆஜாத்சத்ரு வாக்களித்தானே, எந்தத் தாயின் கோபத்தைத் தணிக்க அவனுடைய திருப்பாதக் கமலங்களைக் கண்ணீரினல் கழுவி அவள் உள்ளம் குளிரச் செய்தானே, அந்தத் தாய் தன்னை அறவே விட்டுப் போய்

விட்டாளே என்ற தாங்க முடியாத துயரம் அவன் உடலிலுள்ள ஒவ்வொரு சிறு நரம்பையும் உலுக்கிப் பிழிந்தது.

அவனுடைய கதறும் சப்தத்திற்கு ஊடே ''நிறுத்துங்கள்! இதோ அந்தப் பாவி!'' என்ற ஒரு உரத்த சப்தம் கதவின் அருகிலிருந்து கேட்டது. கணீரென்றும், சற்று அதிகாரத் தோரணையிலும் பிறந்த அந்த சப்தத்தைக் கேட்டு, அழுது புலம்பிக் கொண்டிருந்த இளவரசனும் அழுகையை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

நந்திவர்மன் உருவிய வாளுடன் முன்னால் வர, நால்வர் ஒரு மனிதனை பிரேதம் போல தூக்கிச் சுமந்து கொண்டு உள்ளே வந்தார்கள்.

கட்டிலின் மறுபுறம் தாயின் பக்கத்திலிருந்த ஆஜாத் சத்ரு ''இதோ இருக்கிறான் அந்தப் பாவி'' என்ற குரல் கேட்டதும் கட்டிலின் மறுபுறத்திற்குத் திரும்பி வந்தான்.

அதற்குள் பிரேதத்தைப் போல ஒரு மனிதனைத் தூக்கி வந்தவர்கள் அம்மனிதனைத் தரையில் கிடத்தினார்கள். அவன் தலையிலிருந்து கால் வரை முக்காடிட்டுப் போர்த்திக் கொண்டிருந்தான். அந்தப் போர்வையின் மீது சர்ப்பச் சின்னங்கள் பதிக்கப்பட்டிருந்தன. சர்ப்பச் சின்னம் மங்களகிரியின் ராஜச் சின்னம். இளவரசனின் கவனம் முதலில் அந்தச் சின்னத்தின் மீதுதான் பதிந்தது.

''அட பாவி! ஆஷாவா இந்தப் படுபாதகத்தைச் செய்தவள்?'' என்றான் இளவரசன்.

''இல்லை இளவரசே, இல்லை! மங்களகிரிச் சின்னம் பதித்த போர்வைக்குள் இருப்பது ஆஷாவின் ஒற்றனல்ல, இந்த வேஷத்தில் வந்து படுகொலை செய்த மகாபாவி தங்களுடைய மாமன் உக்கிரசேனர்தான். பழியை ஆஷா மீது சுமத்த இந்த மாறுவேஷத்தில் வந்திருக்கிறான்'' என்று பிரதம சேனாதிபதிக்குரிய மரியாதையைவிட்டு ஒருமையில்

பேசிய நந்திவர்மன், கீழே கிடந்த மனிதனின் முகத் திரையை விலக்கிக் காட்டினார். அது உக்கிரசேனர்தான் என்பதை ஆஜாத்சத்ருவும் மற்றவர்களும் பார்த்துத் தெரிந்து கொண்டார்கள்.

"கொலைக் குற்றத்தை என் மீது சுமத்த என்னுடைய கத்தியை உபயோகித்த மகாபாவி, வெளித்தோற்றத்திற்கு ஆஷாவின் ஒற்றனாக வேடமணிந்து வந்திருக்கிறான். பாருங்கள் இந்த அநியாயத்தை நந்திவர்மரே, ஒரே நேரத்தில் தாயையும், தந்தையையும் இழந்துவிட்டேன் நந்திவர்மரே!" என்று மீண்டும் குமுறிக் குமுறி அழவாரம்பித்தான் ஆஜாத்சத்ரு.

நந்திவர்மனும் அனுருத்தனும் வெகுவாகப் பிரயாசைப் பட்டு, இளவரசனை அப்பால் அழைத்துச் சென்றார்கள். அவர்கள் எத்தனை சமாதானம் சொல்லியும் சுலபமாகத் தேற்றக்கூடிய துக்கமா இந்தத் துக்கம்? பொழுதுபுலரும் வரையில் தாய், தந்தையின் அருமை பெருமைகளையும், உக்கிரசேனரின் சூழ்ச்சிகளையும் பற்றிச் சொல்லிச் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தான் இளவரசன். கண்களில் கண்ணீர் வற்றி, தொண்டையிலும் சக்தி குறைந்து போகும்வரை அவன் அழுது தீர்த்தான்.

கடைசியில், "இளவரசே! ராஜ குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு தாய், தந்தை, குழந்தைகள் எல்லாமே நாட்டு மக்கள்தான். அவர்களுடைய நலனைக் கவனிப்பதைக் காட்டிலும் பெரிய கடமை ராஜ குடும்பத்தவர்களுக்கு வேறு எதுவுமே கிடையாது. சொந்த ஆசாபாசங்களையெல்லாம் துறந்து பணியாற்றப் பிறந்தவர்கள் அவர்கள். எல்லாம் தெரிந்த உங்களுக்கு இதை நானா சொல்லவேண்டும்? வழிவழியாக வந்து, சிறப்புடன் உங்கள் தந்தை அரசாண்ட மகதத்தைச் சின்னாபின்னப்படுத்த எதிரிகள் நாற்புறங்களிலும் முரசு கொட்டிக்கொண்டு நிற்கிறார்கள். அபாயகரமான இந்த நேரத்தில் காலஞ்சென்ற உங்கள் தந்தைக்கு நீங்கள் செய்ய வேண்டிய முதல் பணி அவ

ருடைய பெருமைக்கும், இவரது மூதாதையர்களின் பெருமைக்கும் காரணமாயிருந்த அவர்களுடைய ராஜ்யத்தைக் காப்பதுதான். தங்கள் தந்தையின் ஆன்மாவுக்கு இதுவே சாந்தியளிக்கக் கூடியது'' என்று நந்திவர்மன் இதமாகச் சொல்லி இளவரசனை ஒருவாறு தேற்றினர்.

அன்று நண்பகலே ராஜதம்பதிகளின் சடலங்களை ராஜகிருகத்திற்குக் கொண்டு போவதென்று ஏற்பாடாயிற்று. தலைநகரில் செய்யவேண்டிய காரியங்களைக் கவனிக்க நந்திவர்மன் முன்னதாகவே புறப்பட்டுச் சென்றார். முக்கிய நகரங்களுக்கெல்லாம் துக்கச் செய்தியை உத்தியோகபூர்வமான தூதுவர்கள் தாங்கிக் கொண்டு நாற்றிசைகளுக்கும் கிளம்பிச் சென்றார்கள்.

அலங்கரிக்கப்பட்ட ஒரு இரதத்தில் ராஜதம்பதிகளின் சடலங்கள் வைக்கப்பட்டு, முன்னும் பின்னும் இராணுவத்தினர் பின்தொடர பிரேத ஊர்வலம் சமணபுரியில் இருந்து தலைநகரத்துக்குக் கிளம்பிச் சென்றது. சமணபுரியிலிருந்து ராஜகிருகம் வெகு வேகமாகச் செல்லும் குதிரையில் சென்றால் இரண்டரை நாள் பிரயாணமென்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். பிரேத ஊர்வலம் மெதுவாகவே செல்ல வேண்டியிருந்ததினல் தலைநகரை அடைய ஆறு தினங்களாகிவிட்டன. நந்திவர்மர் மூலமாக ஏற்கனவே துக்கச் செய்தியைக் கேள்விப்பட்ட தலைநகர மக்கள், ராஜதம்பதிகளின் சடலங்களை மரியாதையுடன் ஏற்க ஆயத்தங்களைச் செய்தனர்.

கொலை செய்தது உக்கிரசேனர்தான் என்பதை எல்லோரும் அறியும் வண்ணம் செய்ய நந்திவர்மன் பறையறிவித்தாரென்றாலும், ''கொலை நடந்த சமயத்தில் வங்கத்திலிருக்க வேண்டிய இளவரசரும், புண்டரத்தில் இருக்கவேண்டிய நந்திவர்மரும், அனுருத்தரும், சேதி எல்லையில் இருக்கவேண்டிய உக்கிரசேனரும் சமணபுரிக்கு எப்படி வந்தார்கள்? ஏன் வந்தார்கள்?'' என்ற கேள்வி

மக்கள் மனதில் பெரும் குழப்பத்தை உண்டு பண்ணத்தான் செய்தது. ஒரு நாள் முன்போ, அல்லது ஒரு நாள் பின்போ வராமல், சரியாகக் கொலை நடந்த சமயம் பார்த்து பட்டத் திளவரசர் சமணபுரி அரண்மனைக்கு சொல்லி வைத்த மாதிரி எப்படி வந்தார்? அவர் கத்தியை வீசிக் கொலை செய்ததாகக் கூறப்படுவது உண்மையில் உக்கிரசேனர் தானு? அல்லது உக்கிரசேனரை மறைத்துவிட்டு, அவ ருடைய பெயரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிருர்களா? என்ற கேள்வியும் சிலரிடம் அடிபடாமலில்லை. படுபாதகம் நடைபெற்ற சமயத்தில் நந்திவர்மன், அனுருத்தன், உக் கிரசேனன், இளவரசர் ஆகிய நால்வரும் சமணபுரியில் இருந்தது பலமாதிரியான பேச்சுகளுக்கு இடமளிப்பது தவிர்க்க முடியாததாயிருந்தது. ஆயினும் இந்தச் சந்தே குங்களும், வதந்திகளும் காலஞ்சென்ற சக்கரவர்த்திக்குச் செய்ய வேண்டிய கடைசி மரியாதைகளுக்குத் தடையாக இருக்கவில்லை.

சக்கரவர்த்தியாரின் பிரேத ஊர்வலம் தலைநகரில் பிரவேசித்த பொழுது இளவரசன் ஆஜாத்சத்ரு இடுப்பில் ஒரு வேஷ்டியும், தோளில் ஒரு துண்டுமட்டும் அணிந்து சோகத்தின் சின்னமாக ஊர்வலத்தின் முன்ஞல் நடந்து வந்தான். அவனுக்குப் பின்ஞல் அலங்கரித்த இரதத்தில் சக்கரவர்த்தியாரின் சடலமும், கோசலாதேவியாரின் சடலமும் வந்தன. எல்லாவற்றுக்கும் பின்ஞல் உக்கிர சேனரின் சடலம் ஒரு வண்டியில் வந்தது. ஆயிரக்கணக் கான மக்கள் வீதியின் இருமருங்கிலும் சாரி சாரியாக நின்று மௌனமாகக் காலஞ்சென்ற சக்கரவர்த்திக்கு தங்களுடைய கடைசி மரியாதையைச் செலுத்தினர். ராஜ குருவும் அரண்மனைப் புரோகிதருமானவர் தலைநகர வாச லிலேயே இரதத்தில் ஏறி உட்கார்ந்து சடலங்களின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அரண்மனை வாசலை பிரேத ஊர்வலம் அடைந்ததும் சக்கரவர்த்தியாரின் மற்ற மூன்று மனைவிகளான வசுமதி, வசந்திரா,

கௌனந்தி ஆகியோரும் அலறித் துடித்தார்கள். ஒரு புறம் ஜனகன் கேவிக்கேவி அழுதுகொண்டு நின்றான். அவனைக் கண்டதும் ஆஜாத்சத்ரு அருகில் சென்று அணைத்துக் கொண்டு, "அழாதே தம்பி! நம்முடைய பிராப்தம் அவ்வளவுதான்" என்று தேற்றினான்.

வசுமதியையும், ஜனகனையும் அங்கு கண்டது ஆஜாத் சத்ருவுக்கு வியப்பாக இருந்த பொழுதிலும், சந்தர்ப்ப சூழ்நிலைமை பேச்சுக்கு இடம் கொடுக்கவில்லை. சிற்றன்னைமார்கள் மூவரும் ஆஜாத்சத்ருவை மாறிமாறித் தழுவிக் கொண்டு புலம்பினார்கள். சடலங்களின் மீது விழுந்து புரண்டு துடித்தார்கள். அந்தச் சோகக் காட்சி சுற்றி நின்றவர்கள் அவ்வளவு பேர்களுடைய கண்களையும் கலங்கச் செய்தது.

அடுத்த மூன்று தினங்கள் வரையில், சக்கரவர்த்தியாரதும், கோசலாதேவியினதும் சடலங்கள் பொதுஜன மரியாதைக்காக அரண்மனைப் பூங்காவில் வைக்கப்பட்டிருந்தன. நான்காவது நாட் காலை சமய ஆசாரப்படி தகனக் கிரியைகள் நடைபெற்றன. அதே போல பிரம்மதத்தனும் கட்டுக்காவலுடன் தனது தகப்பன் உக்கிரசேனருக்கு அந்திமக் கிரியைகளைச் செய்து முடித்தான். உக்கிரசேனன், சக்கரவர்த்தியைப் படுகொலை செய்த பாதகன் என்றாலும், அவன், நாட்டின் சேனாதிபதியாக இருந்தவன் என்ற காரணத்தையும் இறந்து விட்டவனிடம் பகை பாராட்டுவது தர்ம விரோதமென்ற முறையிலும் அவனுடைய அந்திமக் கிரியைகளையும் ஆஜாத்சத்ரு அனுமதியோடு ராஜகுருவே குறையேதுமின்றிச் செய்தார். சக்கரவர்த்தி, உக்கிர சேனன் ஆகிய இருவருக்குமே மிருத்யு யோகம் இருப்பதாகத் தாம் சொல்லிய சோதிடம் எத்தனை கொடூரமாகப் பலித்துவிட்டது என்பதை எண்ணிய பொழுது அவருக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. தகனக் கிரியைகள் நடைபெற்ற அன்றுதான் அஷ்டக்கிரகச் சேர்க்கையும் நிகழ்ந்தது. அஷ்டக்கிரகச் சேர்க்கை விளைவித்த

விபரீதங்களைப் பற்றியே நாடெங்கும் பேச்சாயிருந்தது. கோசலத்தில் பிரசன்னஜித், மகதத்தில் பிம்பிசாரன் ஆகிய இரு சக்கரவர்த்திகளின் தலைகள் உருண்டுவிட்டதென்றும் பல திசைகளிலும் யுத்தங்கள் மும்முரமாக நடந்து கொண்டிருப்பதும் சோதிடத்தை எள்ளிநகையாடி வந்தவர்களுக்குக்கூட அதில் ஒரு திடமான நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருந்தது.

அடுத்த சில தினங்கள் வரையில் விசேஷ நிகழ்ச்சிகள் ஏதும் நிகழவில்லை. அனுருத்தர் புண்டரப் போர் முனைக்குப் போய்விட்டார். வங்கம், சேதி போர்முனைகளில் தளபதிகளே யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்கள். நந்திவர்மன் தலைநகரிலேயே இருக்கவேண்டியதாயிற்று. ராஜ்யப் பொறுப்புகளில் பெரும் பகுதி இப்பொழுது அவரைச் சார்ந்திருந்தது. பட்டத்திளவரசர் ஆஜாத்சத்ருவின் பெயரினால் நந்திவர்மரே நாட்டை ஆண்டு வந்தாரென்று கூடச் சொல்லலாம். ஆஜாத்சத்ரு எதிலும் பட்டுக்கொள்ளாமலும் அரண்மனையில் தன்னுடைய பகுதியைவிட்டு வெளியில் வராமலும் காலத்தைக் கழித்துக்கொண்டு வந்தான், நந்திவர்மன் ராஜ்ய விவகாரங்களைப் பற்றி என்ன கேட்டாலும், ''உங்களுக்குத் தெரியாத விஷயமா? நீங்களே பார்த்துச் செய்யுங்களேன்'' என்று பிடிகொடுக்காமல் சொல்லுவது அவன் வழக்கமாகி விட்டது.

வசுமதிக்கும், ஜனகனுக்கும் அவனுடைய இந்தப் போக்கு சிறிது சிறிதாகத் தங்களைச் சித்திரவதை செய்து கொல்லுவதைப் போலிருந்தது. தலைநகரிலிருந்து பல தினங்கள் வரை காணுமற் போயிருந்து கடைசியில் உக்கிரசேனரின் பாதாளச் சிறையிலிருந்து மீட்கப்பட்ட தங்களை ஆஜாத்சத்ரு ஒரு வார்த்தைகூட விசாரிக்காதது அவர்களது நெஞ்சத்தைப் புண்ணுக்கிக் கொண்டிருந்தது. இதற்கிடையில் வசுமதியையும் ஜனகனையும் பற்றி ஆஜாத்

சத்ருவிடம் உக்கிரசேனர் சொல்லிய விபரங்களும் அவற்ருல் ஆஜாத்சத்ருவுக்கும், சக்கரவர்த்தியாருக்குமிடையில் ஏற்பட்ட மனத்தாங்கலும் லேசாக வசுமதியின் காதில் பட்டன. இது அவளுடைய மனவேதனையை மேலும் பன்மடங்கு அதிகரித்தது.

ஒரு நாள் காலை ஆஜாத்சத்ருவும், நந்திவர்மனும் பேசிக் கொண்டிருந்த சமயம் பார்த்து, வசுமதி தன்மகன் ஜனகனையும் அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். அரண்மனைக்குத் திரும்பி வந்தது முதல் இன்று வரை சிற்றன்னையைச் சந்தியாமலிருந்த ஆஜாத்சத்ரு, எதிர்பாராத முறையில் அவளே தன்னை நாடி வரவும், எழுந்திருந்து மரியாதை செலுத்தினுன்.

"ஆஜா! உன்னிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு போகத்தான் வந்திருக்கிருேம். என் பிறந்தகத்திற்கு ஜனகனையும் அழைத்துப் போகிறேன்" என்று குனிந்த தலையை நிமிராமல் அறிவித்தாள் வசுமதி. இதை அவள் சொல்லுகையில், ஜனகனும் ஆஜாத்சத்ருவைப் பார்க்கவில்லை. சுவரில் தொங்கிய சக்கரவர்த்தியின் வர்ண ஓவியமொன்றை அவன் பார்த்துக் கொண்டு நின்ருன்.

வசுமதியின் பக்கம் பளிச்சென்று திரும்பி, "அம்மா என்ன சொன்னீர்கள்? பிறந்தகத்திற்குப் போகிறேன் என்ரு சொன்னீர்கள்? அப்பாவும், பெற்றெடுத்த அம்மாவும் திரும்பாத இடத்திற்குப் போய்விட்டார்கள். எனக்குத் தாயும்தந்தையுமாய் இருக்க வேண்டிய நீங்களுமா என்னை விட்டுப் போகிறேன் என்கிறீர்கள்? நான் அவ்வளவு பெரிய பாபம் என்ன செய்தேன் அம்மா?" என்று கேட்டான்.

"இல்லை ஆஜா! நாங்கள் இங்கிருப்பது இனியும் அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை" என்று வார்த்தைகளை மென்று விழுங்கினுள் வசுமதி.

"புகுந்த நாட்டில் இருப்பது உசிதமா அல்லது பிறந்த நாட்டிலிருப்பது பெண்களுக்கு உசிதமா? எல்லாம்

தெரிந்த நீங்களா இப்படிச் சொல்லுகிறீர்கள்? தம்பி! நீயாவது அம்மாவுக்குச் சொல்லக் கூடாது? உங்களுக்கு நான் என்ன அபராதம் செய்தேன்? அப்பா உயிரோடு இருக்கையில் உங்களிடம் அவர் எத்தனை அன்பு வைத்திருந்தார் என்பது எனக்குத் தெரியும்? அவர் மறைந்த பின்னர், அவருடைய நாட்டில் அவரது அன்புக்குப் பாத்திரமானவர்கள் சந்தோஷமாக வாழ நான் வழிசெய்யா விட்டால் எவ்வளவு கொடுமையான நரகம் எனக்காகக் காத்திருக்கும்? ஏனம்மா எனக்கு இந்தத் தண்டனை?'' என்றான் ஆஜாத்சத்ரு.

''அண்ணா! அம்மா சொல்ல விரும்பாமல் மூடிமறைப்பதை நான் சொல்லுகிறேன். நாங்கள் விதர்ப்பத்திற்கு ஏன் போகிறோமென்பது உனக்குத் தெரியத்தான் வேண்டும். விதர்ப்பத்திற்குப் போவதாகச் சொல்லிக்கொண்டு மீண்டும் நாங்கள் மங்களகிரிக்குப் போகிறோமோ என்று நீ சந்தேகிப்பதாயிருந்தால், வழித்துணையோடு எங்களை விதர்ப்பத்திற்கு நீ அனுப்பி வைப்பதில் ஆட்சேபமில்லை. அப்பாவின் தகனக்கிரியையின் பிறகு நாங்கள் எப்படி உன் மாமாவினால் சிறை பிடிக்கப்பட்டோம்? ஏன் சிறை பிடிக்கப்பட்டோம்? என்பதைப் பற்றியெல்லாம் நீ விசாரிப்பாய். உன் மனதில் இருக்கக் கூடிய தப்பெண்ணங்கள் நீங்கிவிடுமென்று இத்தனை நாட்கள் காத்திருந்தோம். நீயானால் எங்களுடன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. நாங்கள் பட்ட துன்பங்களைப் பற்றி, சற்றும் அனுதாபப் படுவதாகவே தெரியவில்லை. இதிலிருந்து உன் தப்பெண்ணங்களை மாற்றிக் கொள்ள நீ தயாரில்லை என்பது தெரிகிறது. இதன் பிறகு எங்களுக்கு இங்கு என்ன வேலை? இந்த நிலையில் நாங்கள் மகதத்தில் இருப்பதினால் உனக்கும் அமைதியில்லை. ஆகையால்தான் போய்விடுகிறோம் என்கிறோம். போகும் பொழுது ஒன்று மட்டும் சொல்லி விட்டுப் போகிறேன். அரசை உன்னிடமிருந்து பறித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் எனக்கு நினைவு தெரிந்த

காலத்திலிருந்து என்றைக்குமே இருந்தது கிடையாது. அந்த துர் ஆசை அம்மாவுக்கு கனவில் கூடத் தோன்றியது கிடையாது. இதற்குமாருக இராமனுக்கு லட்சுமணனைப் போல உனக்கு நான் இருக்க வேண்டுமென்றுதான் அம்மாவும், அப்பாவும் எப்பொழுதுமே எனக்குப் போதித்து வந்தார்கள். உனக்குப் பணிவிடை செய்யும் பாக்கியத்தையும், விதி இப்பொழுது என்னிடமிருந்து பறித்துவிட்டது. காலம் இதற்கெல்லாம் ஒரு நல்ல முடிவு காட்டும். அதுவரையில் நாங்கள் விதர்ப்பத்திலிருப்பதென்று தீர்மானித்திருக்கிறோம்'' என்ருன் ஜனகன்.

''தம்பி! உன்னையும், அம்மாவையும் பற்றி நான் தப்பெண்ணம் கொண்டிருப்பதாகச் சொன்னுய், உண்மை! அதை நான் மறுக்க மாட்டேன். மாமாவின் துர்ப்போதனை உங்கள் மீது எனக்குத் தப்பெண்ணங்களை உண்டு பண்ணியது என்னவோ வாஸ்தவம். இதை என் தாயிடம் சொல்லிய பொழுது, அவள் என் கன்னம் வீங்கும்படி அடித்ததை நீ நேரில் பார்த்திருந்தால் இப்படிச் சொல்ல மாட்டாய். எத்தனையோ அநியாயங்களைச் செய்த மாமா தான், உங்கள் மீது தப்பெண்ணம் ஏற்படும் முறையில் சூழ்நிலைமையை உருவாக்கியிருப்பாரென்று எண்ணியே இதைப் பற்றி ஏதும் கேட்காமலிருந்தேன். காலஞ் சென்ற புனிதவதியான என் தாய்க்கு சகல தெய்வங்களின் சாட்சியாகவும் நான் ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். அதை எப்படியும் நான் நிறைவேற்றியாக வேண்டும். அது உன் மூலமாகவே நிறைவேற வேண்டும். தம்பி! உன் மூலமாகவே நிறைவேற வேண்டும். அதற்குள் நீ, விதர்ப்பத்திற்குப் போக முடியாது'' என்ருன் ஆஜன்.

''நான் அதற்கு என்ன செய்ய வேண்டும்? சொல்லு அண்ணு! செய்துவிட்டுப் போகிறேன்'' என்ருன் ஜனகன்.

''தனக்கு அடுத்தபடியாக நீ, பட்டத்திறகு வரவேண்டும் என்பது அப்பாவின் இஷ்டமானதால் அவருடைய

விருப்பத்தை என் உடலில் உயிர் உள்ளவரையில் நிறைவேற்றப் பாடுபடுவேன் என்று பிரமாணம் செய்திருக்கிறேன் தம்பி! இதை உன்னிடமும், அம்மாவிடமும் எப்படிச் சொல்லுவதென்று புரியாமல்தான் இவ்வளவு நாட்களும் தயங்கிக் கொண்டு மௌனமாக இருந்தேன். காலஞ்சென்ற என் தாயின்மீது ஆணையாகச் சொல்லுகிறேன் ஜனகா! நாடாளும் ஆசையைப் பல தினங்களுக்கு முன்பே நான் இழந்துவிட்டேன். பிறந்ததின் கடமையைச் செய்யவே வங்கப் போர் முனையில் யுத்தம் செய்தேன். அதுவும், நமது நாட்டை அபாயம் ஏதுமின்றி அடுத்த வாரிசிடம் ஒப்படைப்பது என் கடமையென்று அம்மா அறிவுறுத்தியதினால்தான் போர் முனைக்குச் சென்றேன். அப்பாவின் விருப்பத்தை நிறைவேற்றிவிட்டால் நான் நிம்மதியாக ஊர்ஊராகச் சென்று க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு என் காலத்தைக் கடத்திவிடுவேன் தம்பி'' என்ருன் ஆஜன்.

இதை அவன் சொல்லிய பொழுது உணர்ச்சி சிறிதுமின்றி கடமையைச் செய்யும் ஒரு கர்ம வீரன் பேசுவதைப் போலவே விரக்தியுடன் அவன் சொன்னான். வசுமதிக்கும், ஜனகனுக்குமே தழுதழுத்த அவனுடைய குரல் அந்த வார்த்தைகள் உதட்டுக்கு மேலிருந்து அல்லாது இதயத்தின் அடிவாரத்திலிருந்து வருவது தெரிந்தது.

''ஆஜா! பெற்ற தகப்பனிடம் பேரன்பும், பக்தியும் கொண்ட ஒரு சற்புத்திரன் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி நீ இருப்பதில் நான் பெருமையடைகிறேன். உன் போன்ற ஒரு மாணிக்கத்தைப் பெற்ற கோசலையின் ஆன்மாவும், இப்பொழுது நீ சொல்லியதைக் கேட்டுப் பூரிப்படையும். சக்கரவர்த்தியாரின் விருப்பத்தை நீ நிறைவேற்றுவதாகக் கோசலையின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிருய். இதிலிருந்து நிச்சயம் நீ மாறமாட்டாயே? உன் வார்த்தையை நான் உறுதியுடன் நம்பலாமா?'' என்று கேட்டாள் வசுமதி. சற்று முன்பு வரை சோகம் நிறைத்

இருந்த அவளுடைய தொனியில் இப்பொழுது ஒரு புதிய உறுதியும், சக்தியும் பிறந்திருந்தன.

"நிச்சயமாக என்னை நம்பலாம் அம்மா! இதோ.. இப்பொழுதே... உன் எதிரிலேயே உத்தரவிடுகிறேன் பார்?" என்று சொல்லிய ஆஜன், சேனதிபதி நந்திவர்மன் பக்கம் திரும்பி, "நந்திவர்மரே! நான் பெரிய பாக்கியசாலி! தகப்பன் வார்த்தையைக் காப்பாற்ற இராமன் காட்டுக்குப் போனன் என்று கதைகளிலே நீங்கள் படித்திருக்கிறீர்கள். ஆனல் அப்படி நடந்ததை நேரில் யாரும் பார்த்ததில்லை. இதோ அன்று இராமன் செய்ததை இன்று ஆஜன் செய்தானென்று வருங்கால சரித்திரத்தில் என்னுடைய பெயர் நிலையாக இடம்பெறப் போகிறது. அன்று இராமனுக்குப் பெயரையும், புகழையும் கொடுத்த புனிதவதி அவனுடைய சிற்றன்னை கைகேயி, இன்றும் அதே போல என் சிற்றன்னையே எனக்கு என்றென்றும் மறையாத, அமரத்துவமான பெரும் புகழைத்தேடித்தருகிறுர். என்னைவிடப் பெரிய பாக்கியசாலி புராணகால இராமனைத் தவிர வேறுயார் இருக்க முடியும் நந்திவர்மரே? என்னைப் பெற்ற தாயின் மனம் இப்பொழுது எவ்வளவு குளிரும்? என் தந்தையின் ஆன்மா எத்தனை சாந்தியடையும்? அதைக்காட்டிலும் நித்திய பேரின்பநிலை எனக்கு என்ன கிடைக்க முடியும்? அப்பாவின் மனோரதம் உடனே நிறைவேறட்டும். நாளையே நிறைவேறட்டும். நாளைக் காலை மங்களமான நேரத்தில் ஜனகனுக்குப் பட்டாபிஷேகம் என்று நாடெங்கும் பறைசாற்றுங்கள்! வீடு வீடாகச் சென்று தலைநகரை தேஜோ மயமாக அலங்கரிக்கச் சொல்லுங்கள். அரண்மனைப் புரோகிதரை அழைத்து வேண்டியதை உடனே செய்யச் சொல்லுங்கள்! மகுடாபிஷேகம் எவ்விதக் குறைவுமின்றி நடக்க துரிதமாக எல்லா ஏற்பாடுகளும் நடக்கட்டும்" என்று மூச்சுவிடாமல் பொழிந்து கொட்டினன் ஆஜாதசத்ரு. துக்கமும் கவலையும் சேர்ந்து கிழவனுக்கியிருந்த அவன் சரீரத்தில் இப்

பொழுது ஒரு புதிய தெம்பும், மினுமினுப்பும், பழைய பிரகாசமும் ஏற்பட்டன.

இதைச் சொல்லிவிட்டு ஜனகன் பக்கம் திரும்பி, ''மகதப் பேரரசின் சக்கரவர்த்தி ஜனகர் வாழ்க!'' என்று ஆஜாத்சத்ரு கோஷமிட்டான்.

ஆஜாத்சத்ரு பேசி வாய் மூடுகையில், ''வாழ்க! வாழ்க! புதிய சக்கரவர்த்தி பல்லாண்டு வாழ்க'' என்று கோஷித்துக் கொண்டு ஒருவர் உள்ளே நுழைந்தார். அவர் ஒருவரைத் தவிர வேறு எவரும் எதிர்க்கோஷம் எழுப்பாதபடியினுல் ஆச்சரியத்துடன் எல்லோரும் கத வின் பக்கம் திரும்பினுர்கள். அரண்மனையின் ராஜகுரு தான் முகமலர்ச்சியோடு வந்துகொண்டிருந்தார்.

''பட்டாபிஷேகத்திற்கு நாள் குறித்தாகிவிட்டதுபோல் இருக்கிறதே! வாழ்த்தொலியின் பொருள் அதுதானே'' என்று கேட்டவண்ணம் அருகில் வந்தார் அவர்.

''ஆமாம் ஸ்வாமி! நாளை உதயத்தில் மகுடாபி ஷேகம். தங்களுக்கு நானே சொல்லியனுப்ப நினைத்தேன். நீங்களே வந்துவிட்டீர்கள்'' என்று ஆஜன் கூறியபொழுது ''ராஜகுருவும் சரியான சமயத்தில் வந்திருக்கிருர்'' என் ருள் வசுமதி.

''அம்மா! மற்ற விஷயங்களை நந்திவர்மனிடமும், ராஜகுருவிடமும் சொல்லி, வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் நீங்களே செய்யுங்கள். பிறகு நாம் சந்திப்போம் என்று சொல்லிவிட்டு ஆஜன் எழுந்த பொழுது, ''அண்ணு!'' என்று ஜனகனும், ''ஆஜா!'' என்று வசுமதியும் ஏக காலத்தில் சற்றுக் கடுமையான தொனியில் அழைத்தார்கள்.

''ஏன் அம்மா, இன்னும் நான் என்ன செய்யவேண் டும்? இதோ நந்திவர்மர் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுவார் அம்மா'' என்று சொல்லிக்கொண்டு தயங்கினுன் ஆஜன்'

''அவசரப்படாதே ஆஜா! சற்று நில். ராஜகுருவிடம் நான் சில கேள்விகளைக் கேட்பதற்கு, அவர் சொல்லும் பதிலையும் கேட்டுவிட்டுப் போ!'' என்ற வசுமதி, ராஜ குருவின் பக்கம் திரும்பி, ''சுவாமி! இந்தக் குடும்பத் துக்கு இது ஒரு சோதனையான கட்டம். கடவுள்போலச் சரியான சமயத்தில் நீங்கள் வந்திருக்கிறீர்கள். தயவு செய்து நான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும். ஆஜனைத் தவிர வேறு எவரையும் தனது அடுத்த வாரிசாக சக்கரவர்த்தியார் நினைத்த துண்டா? தயவுசெய்து சொல்லுங்கள்?'' என்றாள்.

''இதென்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு! ஆஜ னிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, ஓய்வுபெற வேண்டுமென, பிம்பிசாரன் எத்தனை தடவை என் முன் னால் உன்னிடமே சொல்லியிருக்கிறான்?'' என்றார் ராஜகுரு.

''அப்பொழுதெல்லாம் நான் என்ன சொன்னேன் என்பதையும் ஆஜனுக்கு சொல்லுங்கள் அய்யா!'' என் றாள் வசுமதி.

''நீ என்ன சொல்லுவாய்? அந்த நல்ல காரியத்தை உடனே செய்யுங்களென்றுதான் நீ அடிக்கடி சொன்னாய். தோளுக்கு மிஞ்சியவன் தோழன். ஆஜனுக்கும் வயதாகி விட்டது. இனி அவனை அரியணையில் அமர்த்துவதுதான் நியாயமென்று சொல்லிவந்தாய். பட்டாபிஷேகத்துக்கு ஆஜன் சம்மதித்து, நாட் குறிப்பிட்டபிறகு, இந்தப்பேச் செல்லாம் இப்பொழுது எதற்கு?'' என்றார் ராஜகுரு. அவர், இதைச் சொல்லியபொழுது, அவர் வாழ்த்திக் கொண்டு உள்ளே வந்தது, ஆஜனையே தவிர ஜனகனை அல்லவென்பதை அங்கிருந்தவர்கள் புரிந்துகொண்டார் கள்.

''சேனாதிபதியாருக்கும் சில கேள்விகள். என்னைச் சக்கரவர்த்தியார் விதர்ப்பத்துக்குப் போய்வருமாறு அனுப்பினரே, ஏன் அனுப்பினர்? யாருடைய யோசனை மீது அனுப்பினர்?'' என்று கேட்டாள் வசுமதி.

''நீங்கள் விதர்ப்பத்துக்குப் போய், உங்கள் தமய னிடம் படை உதவியை நாடுவது நல்லதென்று உக்கிர சேனர் இடைவிடாமல் யோசனை சொல்லிவந்தார். அதைக் கேட்டுக்கொண்டே சக்கரவர்த்தியார் உங்களை விதர்ப்பத்துக்கு அனுப்பினார்'' என்றார் நந்திவர்மன்.

''நான் போய்ச் சாதிக்கக்கூடியது ஒன்றுமில்லை என்று நான் சக்கரவர்த்தியாரிடம் சொல்லியபொழுது நீங்களும் இருந்தீர்களே, நினைவிருக்கிறதா?'' என்று கேட்டாள் வசுமதி.

''ஆமாம் நினைவிருக்கிறது. நீங்கள் முதலில் போய்ப் பேசவேண்டுமென்றும், பிறகு ஒரு விசேஷ தூதுவனை அனுப்புவதாயும் சக்கரவர்த்தி பதில் சொன்னார்'' என் றார் நந்திவர்மன்.

''இதை ஆஜனுக்கு நீங்கள் இதுவரையில் ஏன் சொல்லவில்லை?'' என்று கேட்டாள் வசுமதி.

''சர்க்கரவர்த்தியார் சொல்லியே நீங்கள் விதர்ப் பத்துக்குப் போனீர்கள் என்பது தெரியும். ஆனால் நீங்கள் விதர்ப்பத்துக்குப் போய்ச் சேரவில்லை என்பதும் பிறகு நிகழ்ந்த சில சம்பவங்களும் இளவரசனைப் போலவே எனக்கும் கலக்கமேற்படுத்தி விட்டன. ஆகையால்தான் மௌனம் சர்வார்த்த சாதனமென்று இருந்துவிட்டேன்'' என்றார் நந்திவர்மன்.

''நான் சொல்லுகிறேன், எல்லோரும் கேளுங்கள். மகதப் பேரரசு, விதர்ப்பத்திடம் படை யாசகம் கேட் பதை நான் விரும்பவில்லை. ஆகையால் படை உதவி கேட்பதற்காகப் பிறந்தகம் போய்வர நான் பிரியப்பட வில்லை. உக்கிரசேனரும், சக்கரவர்த்தியும் வற்புறுத்திய தினால்தான் நான் புறப்பட்டுச் சென்றேன். ஒரு பெரும் சதிக்கு என்னை உக்கிரசேனர் உட்படுத்துகிறாரென்பது அப்பொழுது எனக்குத் தெரியாது. ஒரு சிறு வழித் துணைப் படையுடன் நான் விதர்ப்பத்துக்குப் புறப்பட்டுச்

சென்றேன். சமணபுரியைத் தாண்டிக் கொஞ்சத் தூரம் சென்றதும் முகமூடியணிந்த ஒரு கூட்டம் எங்களை நாலா புறமும் சுற்றி வளைத்துக்கொண்டு தாக்கியது. நாங்கள் எல்லோரும் சிறைப்படுத்தப்பட்டோம். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் இன்னொரு எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. குதிரைகளில் சுமார் நாற்பது ஐம்பது வீரர்கள் ஆயுதபாணிகளாக வந்தார்கள். அவர்களைக் கண்டதும் நான் ''உதவி உதவி'' என்று ஓலமிட்டேன். அவர்களுக்கும், என்னைச் சிறைப்படுத்தியவர்களுக்கும் மறுபடி சண்டை நடந்தது. முதலில் என்னைச் சிறைப்படுத்தியவர்கள் எல்லோரும் குதிரைகளில் வந்தவர்களிடம் சிறைப்பட்டார்கள். நான் யார் என்பதை அவர்களுக்குச் சொன்னேன்.

''நாங்கள் மங்களபுரியைச் சேர்ந்தவர்கள். மகாராணி ஆஷாவிடம் தங்களை அழைத்துப்போகிறோம். தக்க பாதுகாப்புடன் அவர், தங்களை விதர்ப்பத்துக்கு அனுப்பி வைப்பார்'' என்று சொல்லி அவர்கள் என்னை மங்களகிரிக்கு அழைத்துப் போனார்கள்.

''ஆஷாவை சந்தித்த பொழுது எனக்குப் பல திடுக்கிடும் உண்மைகள் தெரியவந்தன. என்னுடன் வழித்துணைக்கு வந்தவர்களும், அவர்களுடன் சண்டையிடுவது போலப் பாசாங்கு செய்தவர்களும் எல்லோரும் உக்கிரசேனரின் சொந்த ஆட்கள் என்பதையும், என்னை யாரோ கள்வர்கள் தாக்கி, கடத்தி விட்டதைப்போல கடத்திக்கொண்டு போய்ப் பதுக்கி வைப்பதுதான் உக்கிரசேனரின் திட்டமென்பதையும் ஆஷா சொன்னாள். என்னுடன் வந்த ஆட்களை இம்சித்து, இந்த உண்மையைக் கண்டுபிடித்ததாக அவள் கூறினாள்.

''இந்த ரகசியம் வெளியே வந்தால், சக்கரவர்த்தியாருக்கே பேராபத்தாயிருக்கும். உங்கள் பிள்ளை ஜனகனை உடனே மங்களகிரிக்கு வரச்சொல்லி, அவன்மூலம் உண்மையைச் சக்கரவர்த்தியாருக்குத் தெரிவிக்கச் சொல்லு

வோம். அதுவரையில் பாதுகாப்பாக நீங்கள் இங்கு இருப்பதுதான் நல்லது'' என்று ஆஷா எனக்குச் சொன்னாள். அவள் சொல்லியதும் சரியென்றே எனக்குப் பட்டது. என்னைக் கடத்திப் போக உக்கிரசேனன் திட்டமிட்டது உண்மையாயிருந்தால், நான் தப்பிச் சென்றது தெரிந்தால், சும்மாயிருக்க மாட்டான். தனது அந்தரங்கம் என் மூலமாக வெளிவந்துவிடுமோ என்ற பயத்தில் தனது திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்ற முற்படுவான், ஆகையால்தான் ஜனகனை உடனே மங்களகிரிக்குத் தருவிக்க ஏற்பாடு செய்தேன். சம்பாவுக்குப் போயிருந்த உக்கிரசேனன் ராஜகிருகத்துக்குத் திரும்பியிருப்பானோ என்று அஞ்சி, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் மங்களகிரிக்குப் புறப்பட்டு வருமாறு ஜனகனுக்கு செய்தி அனுப்பினேன். மங்களகிரியில் என்னையும், பாலைவனத்தில் ஜனகனையும் உக்கிரசேனரின் மகன் பிரம்மதத்தன் சிறைப்பிடித்து பாதாளச் சுரங்கத்தில் அடைத்து வைத்திருந்தான். உக்கிரசேனர் மாளிகைகளைச் சோதனை போட்டபோது, நான் விடுவிக்கப்பட்டேன். ஜனகனையும் அதே மாளிகையில்தான் வைத்திருக்க வேண்டுமென்று நினைத்து, காவலர்களிடம் சொன்னேன். அவர்கள் மீண்டும் சோதனை போட்டு, வேறு இடத்திலிருந்து ஜனகனை விடுவித்தார்கள். நடந்தது இவ்வளவுதான்'' என்று கூறி முடித்தாள் வசுமதி.

மௌனமாக இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஆஜாத் சத்ரு, ''அம்மா! நீங்கள் விதர்ப்பத்துக்குப் புறப்பட்டுப் போனது, எத்தனை விபரீதங்களை ஏற்படுத்தி விட்டதென்பது உங்களுக்குத் தெரியாது. மாமாவே, அப்பாவிடம் சொல்லி, உங்களை விதர்ப்பத்துக்கு அனுப்பிவிட்டு, நீங்கள், ஜனகனுக்கு முடி சூட்டுவதற்காக விதர்ப்பத்துக்கோ அல்லது மங்களகிரிக்கோ போய்ச் சதி செய்வதாக என்னிடம் சொன்னார். அரண்மனைக்குள்ளேயே சதி நடக்கிறதென்று ஆஷாவும் என்னிடம் சொல்லியது, மாமாவின் கூற்றை ஊர்ஜிதம் செய்வதாயிருந்தது'' என்று சொல்லு

கையில், நந்திவர்மன் குறுக்கிட்டு, ''இளவரசரே! மங்கள கிரியிலிருந்து நமது ராஜப்பிரதிநிதி, உங்களைப் பேட்டி காண்பதற்காகப் பத்துத் தினங்களாய் இங்கு காத்திருக்கின்றார். அவர் சொல்லும் தகவல்களைக் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்'' என்றான்.

''அவர், அப்படி என்ன சொல்லுகிறார்?'' என்று விசாரித்தான் ஆஜாத்சத்ரு.

''நீங்களும், உக்கிரசேனரும் மங்களகிரியில் இருந்த பொழுது, சக்கரவர்த்தியாரின் இலச்சினை மோதிரத்துடன் சக்கரவர்த்தியாரின் விசேஷத் தூதனென்று சொல்லிக் கொண்டு ஒருவன் மங்களகிரிக்கு வந்தானும். அவனுடைய அங்க அடையாளங்களைப் பற்றி அவர் வர்ணித்ததைக் கேட்டதும், அந்தத் தூதன் உக்கிரசேனர் மகன் பிரம்மதத்தனை இருக்கவேண்டுமென்றே எனக்குத் தோன்றியது. விஜயகேசரியை சிறைச்சாலைக்கு அழைத்துப் போய், பிரம்மதத்தனைக் காட்டினேன். மங்களகிரிக்கு வந்தவன் அவனேதானென்று விஜயகேசரி சத்தியம் செய்து கூறுகிறார்'' என்றார் நந்திவர்மன்.

''நாங்கள் அங்கிருக்கையில், பிரம்மதத்தனுக்கு மங்களகிரியில் என்னவேலை?'' என்றான் ஆஜாத்சத்ரு.

''விஜயகேசரி வெளியில்தான் நிற்கிறார். எப்படியும் உங்களைச் சந்திக்க அனுமதி பெற்றுத் தருவதாகச் சொல்லி அழைத்து வந்திருக்கிறேன். உத்தரவு கொடுத்தால் உள்ளே அழைத்து வருகிறேன். அவன் சொல்ல வேண்டியதை அவன் வாயிலிருந்தே கேட்பது நல்லது'' என்றான் நந்திவர்மன்.

ஆஜாத்சத்ரு, ''சரி, அழைத்துவாருங்கள்'' என்று சொல்லவும், நந்திவர்மன் வெளியில் காத்திருந்த விஜயகேசரியை உள்ளே அழைத்து வந்தான்.

''நாங்கள் மங்களகிரியில் இருக்கும்பொழுது பிரம்மதத்தனும் அங்கு வந்திருப்பதை ஏன் எங்களுக்குச் சொல்லவில்லை?'' என்று விஜயகேசரியிடம் வினவினான் இளவரசன்.

"வந்த தூதுவன், சேனாதிபதி உக்கிரசேனரின் மகன் பிரம்மதத்தன் என்பது எனக்கு நேற்றுத்தான் தெரியும். அதுவரையில், அவன் யாரென்பது எனக்குத் தெரியாது. சக்கரவர்த்தியின் இலச்சினை மோதிரத்தைக் காட்டி, அவருடைய ஆணைப்படி வந்திருப்பதாயும், தனது வருகை, யாருக்கும் தெரியக்கூடாதென்றும் அவன் சொன்னான். சக்கரவர்த்தியாரின் ஆணையென்று அவன் சொல்லிய பிறகு, அவன் உத்தரவுக்குக் கீழ்ப்படிவதைத் தவிர, வேறு வழி இல்லை. நீங்களும், சேனாதிபதியும் மங்களகிரியிலிருந்து புறப்பட்டபிறகு, வசுமதி தேவியாரை, ஆஷா சிறை வைத்திருக்கும் தகவல் எனக்குக் கிடைத்தது. அதைப் பிரம்மதத்தனுக்குச் சொன்னேன். தங்களுக்கும், சக்கரவர்த்தியாருக்கும் விரோதமாக, ஆஷாவுடன் சேர்ந்து சதி செய்யவே இளைய ராணி மங்களகிரிக்கு வந்திருப்பதாயும், அவரைக் கைது செய்து தலைநகருக்குக் கொண்டுவரவே சக்கரவர்த்தியார் தன்னை அனுப்பியதாயும் பிரம்மதத்தன் சொன்னான். அதன்படி இளைய ராணியாரை, ஆஷாவிடம் இருந்து விடுவித்து, பிரம்மதத்தனுடன் அனுப்பினேன். சமணபுரியில் சக்கரவர்த்தியாரை, சேனாதிபதி படுகொலை செய்துவிட்டாரென்ற தகவல் மங்களகிரிக்கு எட்டியதும், அப்படி நடக்குமென்பதும் ஆஷாவுக்குத் தெரியுமென்று சர்வார்த்தர் சொன்னார். உத்தியோக முறையில் துக்கம் தெரிவிப்பதற்காக ஆஷா என்னைச் சந்தித்தபொழுது, இதை அவளும் நேரில் சொன்னாள். இந்தமாதிரி அநியாயம் நடக்கப் போவது உங்களுக்கு எப்படித் தெரியுமென்று நான் கேட்டேன். "எப்படித் தெரியுமென்று கேட்கிறீர்கள்? என் பாதுகாப்பில் இருந்த வசுமதிதேவியை தலைநகருக்குக் கடத்திப்போக உதவினீர்களே, அப்பொழுதே இந்தக் கேள்வியை என்னிடம் நீங்கள் கேட்டிருக்க வேண்டும். வசுமதிதேவியாரை நான் பாதுகாப்பில் வைத்திருக்கக் காரணமென்ன என்று அப்பொழுது கேட்டிருந்தால், உங்கள் சேனாதிபதியின் யோக்கியதையை உடனே சொல்லியிருப்பேன். சக்கரவர்த்தியாரின் உயிரும் காப்பாற்றப்பட்

டிருக்கலாம். எல்லாம் நடந்து முடிந்துவிட்டபிறகு சாவ காசமாகக் கேட்கிறீர்கள்'' என்று கேலி செய்தாள் ஆஷா.

"அன்று மாலை, அவளுடைய சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த பத்து மகத நாட்டவர்களைக் காவலுடன் என்னிடம் அனுப்பி, ''இவர்கள் ராஜ விசுவாசம் மிக்க மகதநாட்டுப் போர்வீரர்கள். சேனாதிபதியின் உத்தரவின் மீது இளைய ராணியைக் கடத்திக்கொண்டு போக நினைத்தவர்கள். தெய்வாதீனமாக என் ஆட்கள் இவர்களைச் சிறைப்படுத்தி இளைய ராணியை என்னிடம் அழைத்து வந்தனர். இந்தக் கைதிகளை விசாரியுங்கள். பல உண்மைகள் உங்களுக்குத் தெரியும்'' என்று ஆஷா சொல்லி அனுப்பியிருந்தாள். அவள் அனுப்பிய கைதிகளை அடித்து இம்சித்தபொழுது, அவர்கள் உக்கிரசேனரின் ஆட்களென்பதும், வசுமதிதேவியாரைக் கடத்திக் கொண்டு வந்து உக்கிரசேனரின் மாளிகைகளில் ஒன்றில் சிறை வைக்க வேண்டுமென்பது சேனாதிபதியின் உத்தரவென்பதும் தெரிந்தது. பிரம்மதத்தனை சக்கரவர்த்தியாக்கச் சேனாதிபதி திட்டமிட்டிருப்பதையும் அவர்கள் சொன்னார்கள். ஆஷா சொல்லியதைப்போல, இந்த விவரங்கள் வசுமதி தேவியாரை விடுவித்த தினமே எனக்குத் தெரிந்திருந்தால் சக்கரவர்த்தியாரை நாம் காப்பாற்றியிருக்கலாம். ஆனால், இலட்சினை மோதிரம், என்னை, பிரம்மதத்தனுக்கு உடந்தையாக்கிவிட்டது. மங்களகிரியில் சிறை வைக்கப்பட்டிருந்த உக்கிரசேனரின் ஆட்களையெல்லாம் இங்கு கொண்டு வந்து சிறைக்கு அனுப்பியிருக்கிறேன். தங்களை நேரில் கண்டு, இந்த விபரங்களைச் சொல்லப் பத்துத் தினங்களாக அரண்மனையில் காத்திருக்கிறேன். பேட்டி கிடைக்கவில்லை.''

விஜயகேசரி இப்படிச் சொல்லியதும்; வசுமதியும், ஜனகனும் குற்றமற்றவர்கள் என்பது ஆஜாத்சத்ருவுக்கு தெளிவாகத் தெரிந்துவிட்டது. கண்களில், கண்ணீர் மல்க, வசுமதிதேவியின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி,

"அம்மா! என்னை மன்னித்துவிடு. எத்தனையோ துன்பங்களை அனுபவித்துவிட்ட உன்னை, நானும் வேதனைக்கு உட்படுத்தி விட்டேன்" என்றான்.

வசுமதி அவனைத் தூக்கி நிறுத்தி, "ஆஜா, போனது போகட்டும். நமக்கெல்லாம் இது மிகவும் சோதனையான காலம் போலிருக்கிறது. உன் மாமன், எத்தனையோ நல்லவராகத்தான் இருந்தார். அவருடைய மனதையே மண்ணாசை பாழாக்கிவிட்டது. எப்படியோ எங்கள்மீது இருந்த களங்கம் நீங்கிவிட்டது. இனி மன நிம்மதியோடு விதர்ப்பத்துக்குப் போவேன். நானோ, உன் தம்பியோ உனக்கு கனவிலும் துரோகம் நினைத்தவர்களில்லை. நாங்கள் எங்கு இருந்தாலும் உன் நல்வாழ்வே எங்களுடைய பிரார்த்தனையாக இருக்கும். எங்களுக்கு விடை கொடுத்து அனுப்பு ஆஜா!" என்றாள் வசுமதி.

"அம்மா! இன்னமுமா விதர்ப்பத்துக்குப் போகும் எண்ணத்தை விடவில்லை? தம்பி ஜனகா! நீயாவது அம்மாவுக்குச் சொல்லக்கூடாதா? ஏனடா பேசாமல் மௌனமாயிருக்கிறாய்? நம்மையே சந்தேகித்த இந்த அண்ணனின் முகத்தில்கூட விழிக்காமல் போய்விட வேண்டுமென்று நீயும் நினைக்கிறாயா ஜனகா? என்னை அம்மாவும், அப்பாவும் விட்டுப் போய்விட்டார்கள். நீங்களும் என்னை அநாதையாக்கிவிட்டுப் போகத் தீர்மானித்துவிட்டீர்களா? பேசடா ஜனகா! பேசு" என்று தம்பியை அணைத்துக் கொண்டு முறையிட்டான் ஆஜாதசத்ரு.

"அண்ணா! நாங்கள் இருக்கவேண்டுமென்றால் ஒரு நிபந்தனை. உன்னுடைய மகுடாபிஷேகத்துக்கு உடனே ஏற்பாடு செய்ய வேண்டும். சம்மதமானால் சொல்லு; இருக்கிறோம். அப்படித்தானே அம்மா?" என்று வசுமதியைப் பார்த்துச் சொன்னான் ஜனகன்.

"ஆமாம், ஆஜா! நீ மணிமுடி தரித்துக் கொண்டால் தான், நாங்கள் மன நிம்மதியோடு இங்கிருக்க முடியும்.

பற்றற்றவனைப்போல நீ நடந்து கொள்ளுவது எங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்திரவதை செய்து கொள்ளுகிறது'' என்றாள் வசுமதி.

''சரி அம்மா, அப்படியே செய்கிறேன்'' என்று ஆஜாத் சத்ரு சம்மதிக்கவும், வசுமதி ராஜகுருவின் பக்கம் திரும்பி, ''நாளை முகூர்த்தம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டாள்.

''நாளைதானே? பேஷான நாள். முகூர்த்த நாளாகவே அமைந்திருக்கிறது'' என்றார் ராஜகுரு.

''அதெப்படி முடியும் அம்மா? நமது ராஜகுடும்ப சம்பிரதாயத்தை மறந்து விட்டாயா? மலையப்பனை மறந்தால் நாம் வாழமுடியுமா அம்மா?'' என்றான் ஆஜாத்சத்ரு.

''மலையப்பனை மறந்தால் நாம் வாழமுடியுமா அம்மா?'' என்று ஆஜாத்சத்ரு கேட்டவுடன், அங்கிருந்தவர்கள் அனைவரும் ஒரு குரலில் ''ஓம்! ஓம்! ஹரே ஓம்!'' என்று கரம் குவித்து சிரம் குவிந்த வண்ணம் மந்திரோச்சாடனம் செய்தார்கள்.

பிறகு, ''ஆஜா! எங்கள் மீதுள்ள சந்தேகம் நீங்கி, நீ ராஜ்ய பாரத்தை ஏற்க வேண்டுமென்ற துடிப்பில் மலையப்பரை மறந்துவிட்டேன். திருமலைத் தரிசனத்துக்கு நாளையே புறப்படு. திருமலையிலிருந்து நீ திரும்பிய பிறகு தான் பட்டாபிஷேக ஏற்பாடுகள் எதையும் தொடங்க வேண்டும்!'' என்றாள் வசுமதி.

''ஆமாம், இளவரசே! நாளையே நீங்கள் புறப்படுவது தான் நல்லது. நாளைக் காலை, அரண்மனை முகப்பில் ராஜப் பிரமுகர்களைக் கூட்டிப் பிரகடனத்தைப் படிக்க ஏற்பாடு செய்கிறேன். நண்பகல் புறப்பட்டு விடலாம்'' என்றார் நந்திவர்மன்.

''அந்தக் கூட்டத்துக்குப் பிரம்மதத்தனையும், அவன் தங்கையையும் கொண்டுவாருங்கள். சக்கரவர்த்தியாரைக்

கொலை செய்த சேனுதிபதியை ராஜப் பிரமுகர்கள் பார்க்க முடியாவிட்டாலும், அந்தக் கொலைக்கு உதவியாகவும், உடந்தையாகவும் இருந்த பிரம்மதத்தனையும், அவன் தங்கையையும் பார்க்கட்டும். துன்முகி, அமரகோசன், மேகநாதன், கௌரி ஆகியோரும் கூட்டத்தில் சமுகமாயிருக்கட்டும். பட்டாபிஷேகப் பிரகடனத்தைப் படிப்பதின் முன்னுல் சக்கரவர்த்தியார் கொலை செய்யப்பட்ட சதியையும், பொதுஜனங்களுக்கு ஓரளவு எடுத்துச் சொல்லுவது நல்லதென்று நினைக்கிறேன். என்மீது படிந்திருக்கக்கூடிய களங்கமும் துடைக்கப்பட வேண்டும். சக்கரவர்த்தியார் உயிரைக் குடித்த கத்தி, என்னுடைய கத்தியாக இருந்தது, மக்களிடையில் தப்பெண்ணங்களை உண்டு பண்ணியிருப்பது சாத்தியமே'' என்ருன் ஆஜாத்சத்ரு.

மறுநாட் காலை அரண்மனைக்கு முன்னுல் ராஜப் பிரமுகர்கள் அனைவரும் வந்து கூடவேண்டுமென்று பறையறிவிக்கப்பட்டது. இரவோடிரவாக நூற்றுக்கணக்கானவர்கள் வேலை செய்து, அரண்மனைக்கு முன் பிரமாண்டமானதொரு பந்தலை அமைத்தனர். கூட்டம் நடப்பதற்கு சிறிது நேரத்துக்கு முன்னுல் பாதாளச் சிறைக் கதவுகள் திறக்கப்பட்டன. பிரம்மதத்தனும், அவன் தங்கை மஞ்சுவும் வெளியே அழைத்துவரப்பட்டார்கள். முன்னுல் இருவரும், பின்னுல் இருவரும் ஆயுதபாணிகளாக காவலுக்கு வர, அவ்விருவரும் வீதியோடு அழைத்துச் செல்லப்பட்டனர். அன்று ராஜப் பிரகடனம் வெளிவரப் போவதை அறிந்து வீதியெங்கும் ஜனத்திரள் காணப்பட்டது. சாரி சாரியாக மக்கள் அரன்மனையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். அக் கூட்டத்துக்கு நடுவே பிரம்மதத்தனும் மஞ்சுவும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஒரு திருப்பத்தில் அவர்கள் திரும்பிய சமயம், பெரிய சீமான் குடும்பத்தைச் சேர்ந்தவளைப் போலிருந்த ஒரு இளம் பெண், மளமளவென்று ரஸ்தாவின் குறுக்கே ஓடி வந்தாள். பிரம்மதத்தன் முகத்தை நெருங்கிப் பார்க்க

விரும்புகிறவளைப் போல அவனை அணுகினாள். முன்னும் பின்னும் வந்த காவலர்களுக்குக் கேட்காதவண்ணம் "பத்தாவது இலக்கத் தெரு, பத்தாம் இலக்க வீடு. இதை நினைவில் வைத்துக்கொள்" என்று பிரம்மதத்தன் காதில் சொல்லிவிட்டு, வெளிப்படையாக, உரத்த குரலில், "அட பாவி! எங்கள் சக்கரவர்த்தியை அநியாயமாகக் கொன்றுவிட்டாயே! நீ நன்றாய் இருப்பாயா" என்று சபித்தாள். அவள் இப்படிச் சொல்லியதுதான் தாமதம், சக்கரவர்த்தியைக் கொலைசெய்த குற்றவாளிகள் வருகிறார்கள் என்ற செய்தி அண்மையிலிருந்தவர்கள் மூலம் மளமளவென்று பரவிவிட்டது, நடந்து சென்று கொண்டிருந்தவர்களெல்லாம் நின்றுகொண்டு பார்க்கவும், நின்று கொண்டிருந்தவர்கள் நெருங்கிவந்து பார்க்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களை விலக்கிக்கொண்டு பிரம்மதத்தனையும், மஞ்சுவையும் அழைத்துச் செல்வது காவலாளிகளுக்குப் பெரும் பிரயாசையாகிவிட்டது.

பிரம்மதத்தனுக்கோ தன்னை அணுகி, அந்தரங்கம் பேசிய பெண் யார் என்பது எவ்வளவு கடுமையாக யோசித்துப் பார்த்தும் நினைவுக்கு வரவில்லை. அவளை எங்கும், எந்தச் சந்தர்ப்பத்திலும் பார்த்ததாக அவனுக்கு ஞாபகமில்லை. "பத்தாம் இலக்கத் தெரு, பத்தாம் இலக்க வீடு" என்று அவள் சொல்லிவிட்டுப் போனது புதிர்போட்ட மாதிரி இருந்தது. பத்தாம் இலக்கத் தெருவில் பத்து முதல் இருபத்தைந்து இலக்கம் வரையுள்ள வீடுகள், விலைமாதர்களின் இல்லங்கள் என்பது மட்டும் அவனுக்குத் தெரியும். தலைநகரிலுள்ள விலைமாதர்களில் அவனுக்குத் தெரியாதவர்கள் அநேகமாக யாரும் இல்லை. அந்தப் பட்டியலிலும், ரகசியம் பேசிவிட்டுப் போன பெண் சேர்ந்தவளாகத் தெரியவில்லை. நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருப்பின், ஒரு விலைமாதின் வீட்டின் இலக்கத்தைச் சொல்ல வேண்டிய காரணம் என்ன? சக்கரவர்த்தியைப் படுகொலை செய்த உக்கிரசேனரின் பிள்ளை நானென்பது இவளுக்குத் தெரிந்திருக்கிறது. இந்தக் கொலைக்கு உடந்தையாக இருந்த

நான், தூக்கிலிடப்படுவேன் என்பதும் நிச்சயம் இவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். சாவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என்னிடம், ஒருவீட்டின் தனி இலக்கத்தை எதற்காக அவள் சொல்லிவிட்டுப் போகிறுள்? இப்படிக் குழம்பிக்கொண்டே நடந்தான் பிரம்மதத்தன்.

அரண்மனைக்கு முன்னுள்ள பந்தலில், தலைநகரிலுள்ள முக்கியமான பிரமுகர்களெல்லாம் வீற்றிருந்தார்கள். பிரகடனத்தைக் கேட்க, சுற்றிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் திரண்டு நின்றனர். அரண்மனை வாசலையொட்டிப் பந்தலில் ஒரு உயர்ந்த மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேடையின்மீது அரண்மனை அதிகாரிகளும், படைத் தலைவர்களும் அமர்ந்திருந்தனர். துன்முகி, அமரகோசன், மேகநாதன், கௌரி ஆகியவர்களும் மேடைமீது இருந்தார்கள். அதே மேடையின் ஒரு கோடியில் பிரம்மதத்தனும், மஞ்சுவும் காவலர்களுக்கிடையில் நின்றுர்கள், மகதப் பேரரசர் என்ற அந்தஸ்தில் இருந்துகொண்டு பார்க்க நினைத்த நாம், ராஜ்யப் பிரமுகர்களை, ஒரு கைதியாக நின்று பார்க்கிறேமே என்று பிரம்மதத்தன் உள்ளூரப் புளுங்கிக் கொண்டிருந்தான். வீதியில் தன்னை நெருங்கிப் பேசிய பெண், அந்தக் கூட்டத்தில் எங்கேயாவது இருக்கிருளா என்பதைப் பார்க்க அவன் சுற்றும் முற்றும் கண்ணோட்டம் விட்டுக் கவனித்தான். அவனுக்கு மிக மிக அருகிலேயே மேடையின் பக்கத்தில், பெண்களின் வரிசையின் முதல் வரிசையிலேயே அவள் உட்கார்ந்திருந்தாள். அவளைப் பிரம்மதத்தன் கவனித்தபொழுது, ஒரு கண்ணை மூடி, மற்ெருரு கண்ணை வெட்டி அவள் ஏதோ சமிக்ஞை செய்தாள். ஆனல் அவள் கொடுக்கும் சமிக்ஞையின் பொருள் என்ன? அவள் எதைப்பற்றிச் சமிக்ஞை கொடுக்கிருள்? அவள் யார்? என்ற ஒரு விபரமும் பிரம்மதத்தனுக்குத் தெரியவில்லை. ஆயினும் சந்தேகத்துக்கு இடமளிக்காமலிருக்க வேண்டுமென்பதற்காக அவன் வேறு திசையில் திரும்பிக்கொண்டு இடையிடையே அப் பெண்ணைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஆஜாத்சத்ருவும், நந்திவர்மர், ஜனகன், ராஜகுரு முதலியோரும் மேடைக்கு வந்தார்கள். ஆஜாத்சத்ருவைக் கண்டதும் கூட்டத்தினர் எழுந்து நின்று வாழ்த்தி ஒலித்தனர். கூட்டத்தினர் அமைதி அடைந்ததும், ஆஜாத்சத்ரு உட்கார்ந்தான். அவன் சார்பில் பேசுவதாகச் சொல்லிக்கொண்டு, அவன் தம்பி ஜனகன் மேடையின் விளிம்பில் வந்து நின்றுகொண்டு பேசினான். வசுமதிதேவியார் விதர்ப்பத்துக்குப் போவதற்காகத் தலைநகரில் இருந்து புறப்பட்ட சமயத்திலிருந்து ஆரம்பித்து, திருமலைக்கு ஆஜாத்சத்ரு சென்று வருவதென்று முடிவு செய்த வரையில் ஒரு துப்பறியும் தொடர் கதையை எடுத்துச் சொல்லுவதைப்போல ஜனகன் எடுத்துச் சொன்னான். மக்கள் அறியவேண்டுமென்பதற்காக ஆஜாத்சத்ரு, நந்திவர்மன், ராஜகுரு, வசுமதி, துன்முகி ஆகியோர் தன்னிடம் விரிவாகத் தெரிவித்திருந்த எல்லா விவரங்களையும் அவன் கூறினான். இடையிடையே சம்பந்தப்பட்டவர்களான துன்முகி, அமரகோசன், பிரம்மதத்தன், மேகநாதன், கௌரி ஆகியவர்களையும் முன்னால் கொண்டுவந்து நிறுத்தி, அவர்களைக் கூட்டத்தினருக்குக் காட்டிப் பேசினான். உக்கிரசேனரின் பாதாளச் சிறையில் தங்களுக்கு உணவு பரிமாறிய காவலர்களையும் மேடைக்குக் கொண்டு வந்து நிறுத்தி, அவர்களுடைய வாயினாலேயே தன்னுடைய கூற்றை அவன் நிரூபித்தான். தன்னைப் பாலைவனத்தில் சிறையெடுத்த உக்கிரசேனரின் ஆட்களும் இவ்வாறே மேடைக்கு ஏற்றி மக்களுக்குக் காட்டப்பட்டனர். உக்கிரசேனரின் சதித் திட்டம் அக் கூட்டத்தில் அக்கு வேறு, ஆணிவேறாக எடுத்துக் காட்டப்பட்டது.

இதன் பின்னர் புதிய பிரதம சேனாதிபதி என்ற முறையில், நந்திவர்மன் எழுந்து, ஆஜாத்சத்ரு ராஜ்யப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு விட்டதையும், அன்று பகல் திருமலைக்குப் புறப்படுவதையும், திரும்பிய மூன்றாவது தினத்தில் பட்டாபிஷேகம் கோலாகலமாக நடைபெறுமென்பதையும் அறிவித்தார். கடைசியாக, வந்திருந்தவர்

களுக்கு ஆசி கூறுவதற்காக ராஜகுரு எழுந்த சமயம், பிரம்மதத்தன், தனக்கு இடதுபுறமாக மேடைக்குக் கீழே உட்கார்ந்திருந்த பெண் எழுந்திருப்பதைக் கவனித்தான். அவள் எதற்காக எழுந்திருக்கிருள்? என்ன செய்ய எழுந்திருக்கிருள் என்பதை அவன் நினைத்துக்கூடப் பார்க்க அவகாசமில்லாதபடி அந்த இடமே கிடுகிடுத்துப் போகுமாறு, ''ஐயோ! பாம்பு!'' என்று அவள் கத்தினுள். மேடையின்மீது ஒரு நீண்ட சர்ப்பம் வளைந்து ஏறிக்கொண்டிருந்தது. பாம்பு என்று அவள் கத்தியதுதான் தாமதம். அதுவரை அமைதியுடனிருந்த அந்த மாபெரும் கூட்டத்தில் ஒரு மிகப் பெரிய அமளி துமளி ஏற்பட்டது.

பாம்புக்குப் படையும் கலங்குமென்பது பழமொழி. அரண்மனைக்குமுன் திரண்டிருந்த கூட்டத்தில் 'பாம்பு' என்ற பயங்கரமான ஓலம் மிகப் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியதென்ருல் அதில் ஆச்சரியம் ஏதுமில்லை. பாம்பு என்று ஒரு பெண் கத்திய குரல் பல திசைகளிலும் பல நிமிடம் பிரதிபலித்தது. நெருக்கியடித்துக்கொண்டும், ஒருவரையொருவர் தள்ளி மிதித்துக் கொண்டும், நெரிச்சல் தாங்காமல் ஓலமிட்டுக்கொண்டும் மூலைக்கு ஒருவராக ஓடத் தலைப்பட்டார்கள். சாதாரண பொதுஜனங்கள் மட்டுமல்ல, பந்தலின் மத்தியில் அமர்ந்திருந்த ராஜப் பிரமுகர்களும் மேடையை நோக்கிப் பாய்ந்து ஓடினுர்கள். அமளி கட்டுக்கடங்காது போகவே இளவரசர்களும், மந்திரிகளும், சேனுதிபதிகளும் அரண்மனைக்குள் செல்ல வேண்டியதாயிற்று. இந்த அமளியில் பிரம்மதத்தனையும், மஞ்சுவையும் கவனிப்பாரில்லை. மேடைமீது பாய்ந்து வந்த் கூட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய பிரம்மதத்தன், மஞ்சுவை இழுத்துக்கொண்டு மளமளவென்று மேடையைவிட்டுக் கீழே குதித்தான். கூட்டத்தோடு கூட்டமாக அவ்விருவரும் மறைந்துவிட்டார்கள்.

அரண்மனைப் பிரதேசத்தை விட்டு வெகுதூரம் விலகிச் சென்றதும், ''அண்ணு! வரும் வழியில் ஒரு பெண், உங்க

ளிடம் நெருங்கி வந்து ஏதோ சொன்னளே, நினைவிருக்கிறதா?'' என்று கேட்டாள் மஞ்சு.

''ஆமாம் மஞ்சு, ஆமாம்! அவள்தான் நாம் தப்புவதற்குக் காரணமாக இருக்க வேண்டுமென்று நினைக்கின்றேன். மேடையின் இடதுபுறம் உட்கார்ந்திருந்த அப்பெண்தான் மேடைமீது எதையோ வீசி எறிந்துவிட்டு பாம்பு, பாம்பு என்று கத்தினள். அவள் நிஜமாகவே ஒரு பாம்பை மேடைமீது எறிந்துவிட்டுக் கத்தினளா? அல்லது வெறுமனே கத்தினளா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனல் அவள், நம்மைத் தப்புவிக்க வேண்டுமென்ற திட்டத்துடன்தான் யார் அனுப்பியோ வந்திருக்கிருள். இல்லாவிட்டால் அவள், அரண்மனைக்கு நாம் கொண்டு போகப்படுகையில் வழியில் நம்மைச் சந்தித்து, ''பத்தாம் இலக்கத் தெரு, பத்தாவது இலக்க வீடு. நினைவில் வைத்துக்கொள்'' என்று ஏன் சொல்ல வேண்டும்? அவள் இப்படிச் சொல்லியதின் பொருள் இப்பொழுதுதான் விளங்குகிறது. உங்களைத் தப்புவிக்கப் போகிறேன். தப்பியவுடன், பத்தாம் இலக்கத் தெருவில் பத்தாவது இலக்க வீட்டில் என்னை வந்து பார் என்று சொல்லியிருக்கிருள். அவள் யார்? யார் அனுப்பி வந்திருக்கிருள்? நம்மைத் தப்புவிப்பதில் அவளுக்கோ அல்லது அவளை அனுப்பியவருக்கோ ஏன் இத்தனை சிரத்தை? ஒரு வேளை அவள் கோசலத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. அவள் குறிப்பிட்ட வீட்டுக்குக் கூட்டத்தோடு கூட்டமாக நாம் போவோம்'' என்று சொல்லிக்கொண்டு ஓட்டமும் நடையுமாகச் சென்றுன் பிரம்மதத்தன். மஞ்சுவும் அவனைப் பின்தொடர்ந்தாள்.

அவர்கள் பத்தாவது இலக்கத் தெரு, பத்தாம் இலக்க வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டுவதா வேண்டாமா என்று ஒருகணம் தயங்கிக்கொண்டு நின்றபொழுது, கதவைத் தட்டவேண்டிய அவசியமே அவர்களுக்கு இல்லா

மல் கதவு திறந்துகொண்டிருந்தது. "வாருங்கள், உள்ளே வாருங்கள். உங்களுக்காக அம்மா காத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லி ஒரு சிறுமி அவர்களை வரவேற்றாள். அவர்கள் உள்ளே நுழைந்ததும், கதவை இழுத்து உட்புறமாகத் தாழிட்டுக்கொண்டு பிரம்மதத்தனையும், மஞ்சுவையும் அச் சிறுமி மாடிக்கு அழைத்துப் போனாள். தாங்கள் வருவதை, அவ் வீட்டுக்காரப் பெண், மாடியிலிருந்து சாளர வழியாகக் கவனித்து விட்டே சிறுமியை அனுப்பிக் கதவைத் திறக்கச்சொல்லியிருக்க வேண்டுமென்று பிரம்மதத்தன் நினைத்துக்கொண்டான்.

மாடியில் அழகுற அலங்கரிக்கப்பட்ட அறையொன்றில் ஒரு யுவதி அனாயாசமாக அமர்ந்திருந்தாள். உள்ளே நுழைந்தவுடன் அந்தப் பெண் யாரென்பதை அறிந்து கொள்ள பிரம்மதத்தனுக்கும், மஞ்சுவுக்கும் அதிக நேரம் பிடிக்கவில்லை. கைதிகளாக அரண்மனைக்குத் தாங்கள் அழைத்துச் செல்லப்படுகையில், வழியில் சந்தித்த அதே பெண்தான் அவளென்பதை அறிந்ததும், "உங்களுக்கு நானும், என் தங்கையும் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்" என்றான் பிரம்மதத்தன்.

"எனக்கா? நீங்களா கடமைப்பட்டிருக்கிறீர்கள்? உண்மையில் அதை நான்தான் திருப்பிச் சொல்லவேண்டும். உங்களைத் தப்புவிப்பதற்காக நான் செய்த உபாயத்தை நீங்கள், சரிவரப் பயன்படுத்திக்கொண்டு தப்பியிராவிட்டால் எனக்கு அல்லவா முட்டாள் பட்டம் கிடைத்திருக்கும். சுமித்திரை ஒரு காரியத்தில் இறங்கினால் என்றைக்குமே தோல்வியைக் கண்டது கிடையாது. இம்முறை என்னுடைய இந்தப் பெருமை குலைந்துபோய் விடுமோ என்று அஞ்சிக்கொண்டிருந்தேன். என் பெருமையைக் காப்பாற்றிய உங்களுக்கு நானல்லவா கடமைப்பட்டவளாயிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, மஞ்சுவின் பக்கம் திரும்பி, 'உன் பெயர் மஞ்சு இல்லையா? இப்

படிப் பக்கத்தில் வந்து உட்கார் அம்மா! என்று பரிவோடு கூறினுள் அந்தப் பெண்.

சுமித்திரை என்று தன்னுடைய பெயரைத் தான் வெளியிட்டாளே தவிர. தான் யாரென்பதை அவள் சொல்லாதபடியினுல், ''எங்களிடம் உங்களுக்கு இத்தனை அக்கறையும் பரிவும் இருப்பது எங்களுடைய பாக்கியம் தான். தங்களுடைய பெயரைச் சொன்னீர்கள்! ஆனுல் தாங்கள் யாரென்பதைச் சொல்லவில்லையே? எங்கள் பெயர்களையும், நாங்கள் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்படவிருப்பதையும் தெரிந்துகொண்டு நடுவழியில் எங்களைச் சந்தித்து உதவிய உங்களை அவசியம் நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டு''மென்ருன் பிரம்மதத்தன்.

''ஏன் ஒருமாதிரியாகப் பார்க்கிறீர்கள்? முன் பின் பரிச்சயமில்லாத யாரோ ஒருவள் திடீரென்று தங்களுடன் உறவு கொண்டாடுகிறேனே என்று நினைக்கிறீர்களா? நீங் களும், உங்கள் தந்தையாரும் போட்டிருந்த திட்டங்களை மனப்பூர்வமாக ஆதரிக்கும் மங்களகிரி மகாராணி ஆஷா வின் ஒற்றர் படையைச் சேர்ந்தவள் நான். நமது திட் டம் என்று பொதுப்படையாக நான் சொல்லியதின் பொருளை இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? வசுமதி யையும், ஜனகரையும் சிறைப்படுத்தி வைத்து, ஆஜாத் சத்ருவுக்கும், அவர் தகப்பனுக்கும் இடையில் மித்திர துரோகம் செய்து, மகதத்தில் பெரும் குழப்பத்தை உண்டுபண்ணவும், பிம்பிசாரனையும், அவன் மகன் ஆஜாத் சத்ருவையும் பூண்டோடு ஒழிக்கவும் எங்கள் இராணி திட்டமிட்டாள். உங்களுடைய இலட்சியம் இதுவாகத் தானிருந்தது. இருவரும் கையாண்ட முறைகள் தான் வெவ்வேருக இருந்ததே தவிர, இறுதி இலட்சியம் ஒன்று தான். இப்பொழுது உங்களுடைய திட்டம் படு தோல்வி அடைந்துவிட்டது. அடுத்தபடியாக நீங்கள் புத்திசாலி யாக இருந்தால் செய்யவேண்டியது என்ன? மனச்சோர்வு அடைந்துவிடாமலும், இறுதி இலட்சியத்தில் நம்பிக்கை வைத்தும், மாற்றுத் திட்டம் உள்ளவர்களுடன் மன

மொப்பி ஒத்துழைப்பதுதானே? உங்கள் தந்தையான மாவீரர் உக்கிரசேனரைக் கொன்ற ஆஜாத்சத்ருவைப் பழிக்குப்பழி வாங்க வேண்டாமா? மகதத்தின் மணி மகுடத்தை உங்கள் சிரத்தில் சூட்டிப் பார்க்க வேண்டு மென்று ஆசைப்பட்டார் உங்கள் தந்தை. அவருடைய இந்த ஆவல் நிறைவேருவிட்டால் அவரது ஆன்மா சாந்தியடையுமா? எங்கள் ராணி சம்பந்தப்பட்டவரையில் மகதத்தை இணைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இல்லவே இல்லை. அங்கம், வங்கம், உக்கலம், கலிங்கம் ஆகியவற்றைக் கைப்பற்றிக்கொண்டு, மங்கள கிரி ஒரு சாம்ராஜ்யமாக விளங்குவதற்கு மகதம் முட்டுக் கட்டையாக இருக்கக்கூடாது. மகதத்தில் பிம்பிசாரனும் ஆஜாத்சத்ருவும் இருக்கும்வரையில் மங்களகிரியின் கனவு நனவாவதற்கில்லை. இக் காரணத்தைக் கொண்டே பிம்பி சாரனையும், ஆஜாத்சத்ருவையும் தீர்த்துக்கட்ட எங்கள் இராணி திட்டமிட்டாள். மகதத்தின் மணிமுடி தங்கள் சிரத்தை அலங்கரிப்பதை எங்கள் ராணி மனப்பூர்வ மாக ஆதரிக்கிருர். அவருடன் ஒத்துழைத்தால் உங்கள் வாழ்வு வளம்பெறும். என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டாள் சுமித்திரை.

''சுமித்திரை! தெய்வம் போல வந்து எங்களை நீ சிறைமீட்டாய். கிட்டத்தட்ட தூக்குமரத்திலிருந்து எங் களை நீ காப்பாற்றியிருக்கிருய். உனக்கும், உங்கள் ராணி ஆஷாவுக்கும் நாங்கள் மிகவும் கடமைப்பட் டிருக்கிருேம். ஆஷாவின் கட்டுக்காவலில் இருந்து, வசு மதியை நான் கடத்தி வந்தபடியினுல் என்னிடம் ஆஷா வுக்குக் கோபமிருக்குமென்று எதிர்பார்த்தேன். இதற்கு மாருக, அதே ஆஷா எங்களுக்கு உயிர்ப்பிச்சை அளித் திருக்கிருள். அவளுக்கு நாங்கள் என்றென்றும் கடமைப் பட்டிருப்போம். ஆஷாவின் விருப்பம் எதுவோ அதை நிறைவேற்ற என்றென்றும் நான் ஆயத்தமாயிருப்பேன். மகதத்தின் மணிமுடியைப் பற்றிய ஆசை எனக்கு இப் பொழுது இல்லை. ஆஷாவாகப் பார்த்து மகதத்தை எனக்

குக் கொடுப்பதாயிருந்தால் கொடுக்கட்டும். இல்லாவிட்டால் அதுவும் வேண்டாம். இப்பொழுது என்னுடைய ஒரு இலட்சியம், ஒரே இலட்சியம் என் தந்தையைக் கொன்ற ஆஜாத்சத்ருமீது வஞ்சம் தீர்ப்பதுதான். அந்த ஒரு இலட்சியத்தைத் தவிர, வேறு எதுவும் என் மனதில் இல்லை. இது நிறைவேற ஆஷா உதவி புரிந்தால், நான் அவளுக்கு மிகவும் கடமைப்பட்டிருப்பேன்'' என்றான் பிரம்மதத்தன்.

இதைக்கேட்ட சுமித்திரை, தனது மனோரதம் நிறைவேறிவிட்டதை எண்ணிப் பெருமிதத்துடன் ஒரு மந்தகாசமான புன்முறுவலைப் படரவிட்டுக்கொண்டே பளிச் சென்று எழுந்து நின்று, ''மகதப் பேரரசர் வாழ்க!'' என்று முழங்கினாள். வெளிக் கதவை நோக்கியவாறு அவள் இவ்விதம் வாழ்த்தொலி எழுப்பியதினால், பிரம்மதத்தனும் மஞ்சுவும் கலவரத்துடன் வெளிக் கதவைத் திரும்பிப் பார்த்தார்கள். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் கதவு இலேசாகத் திறந்துகொண்டது. ''மகதப் பேரரசர் வாழ்க!'' என்று பதில் கோஷம் செய்துகொண்டு ஒருவர் உள்ளே நுழைந்தார்.

உள்ளே நுழைந்த மனிதர் யாரென்பதை பிரம்மதத்தனும், மஞ்சுவும் ஆவலோடும், மிகுந்த பரபரப்புடனும் ஊன்றிக் கவனித்தார்கள். ஆனால் அவர்கள் ஏமாற்றமடைய வேண்டியதாயிருந்தது. வந்த மனிதர் உச்சந்தலையிலிருந்து, உள்ளங்கால்வரையில் சிகப்பு அங்கியினால் தன்னை மூடிக்கொண்டிருந்தார். கண் பார்வைக்கு இருந்த இரண்டு துவாரங்கள், அந்த மனிதரின் கண்களுக்கு நேராக இருந்தன. உள்ளே வந்ததும், ''சுமித்திரை! இன்றுமுதல் உனக்கும், எனக்கும், மகதநாட்டுப் பெருமக்களுக்கும் மன்னர், பிரம்மதத்தன்தான்'' என்றான் அவன்.

''ஆமாம், நண்பரே! ஆமாம்! நாம் சம்பந்தப்பட்டவரையில் மட்டுமல்ல, மங்களகிரி சம்பந்தப்பட்டவரையில்கூட இனி பிரம்மதத்தரே மகதத்தின் பேரரசர்.

அதுமட்டுமா! நீங்கள்தான் அவருடைய சேனுதிபதி" என்று சொல்லிய சுமித்திரை, பிரம்மதத்தன் பக்கம் திரும்பி, "இந்த அன்பர் யார் என்பதை இப்பொழுது கேட்கா தீர்கள். காலம் வரும்பொழுது அவரை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். அதுவரையில் அவரை நாம் 'செம்புலி' என்று அழைப்போம். ராஜகிருக அரண்மனையில் மிகமிக நம்பிக்கையான ராணுவப் பதவியை வகிப்பவர் இந்த செம்புலி. இன்று காலை நீங்கள் சிறைச்சாலையில் இருந்து அரண்மனை வாசலில் நடந்த கூட்டத்திற்குக் கொண்டு போகப்பட இருந்ததையும், எந்த வீதிகள் வழியாக நீங்கள் கொண்டுபோகப்படுவீர்களென்பதைப் பற்றியும் தகவல் கொடுத்தவர் இந்தச் செம்புலிதான். உங்களை எப்படித் தப்புவிக்க வேண்டுமென்பதற்கு யோசனை கூறிய பெருமையும் இவரைத்தான் சார்ந்தது. ஆகையால் உங்களைத் தப்புவிக்க பெருமளவு காரணமாயிருந்தவர் இந்த அன்பர். அவர் மூலமாக அரண்மனையில் நடக்கும் விஷயங்கள் அவ்வப்பொழுது நமக்குத் தெரியும். அது நமது திட்டங்களுக்கு மிகவும் உதவியாயிருக்கும். இன்று மாலை ஆஜாத்சத்ரு மலயப்பர் தரிசனத்திற்குப் புறப்படுகிருர். தலைநகருக்கு அவர் திரும்பிவர ஏழெட்டு தினங்கள் பிடிக்கும். இந்த எட்டு தினங்களுக்கிடையில் நாம் அடுத்த படியாகச் செய்ய வேண்டியதைப் பற்றி சாவகாசமாக யோசிக்கலாம். நீங்கள் இருவரும் இந்த மாளிகையிலேயே தங்கியிருங்கள். வெளியில் நீங்கள் தாராளமாய்ப் போய் வருவதற்கும் நான் தகுந்த ஏற்பாடுகள் செய்கிறேன். நீங்கள் மிகவும் களைப்புற்று இருப்பீர்கள். முதலில் ஸ்நானம் செய்து உடை மாற்றிக் கொண்டு, காலைப் போஜனம் செய்துவிட்டு ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" சுமித்திரை.

அரண்மனைக்கு வெளியில் ஏற்பட்ட குழப்பம் ஒரு மாதிரியாக அடங்கும் வரையில் எல்லோரும் பரபரப் படைந்திருந்தபடியினுல் பிரம்மதத்தனையும் மஞ்சுவையும்

பற்றி யாருமே கவனிக்கவில்லை. ஓரளவு அமைதி ஏற்பட்ட பிறகுதான், ''பிரம்மதத்தன் எங்கே? அவனை விட்டுவிட்டீர்களே'' என்றான் ஆஜாத்சத்ரு. உடனே காவலர்கள் மூலைக்கு மூலை ஓடினார்கள். வீதிகள் தோறும் மக்கள் கூட்டம் கூட்டமாக நெருக்கியடித்துக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தமையால் பிரம்மதத்தனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

''அவனை எப்படியாவது ஆஷா காப்பாற்ற முயற்சிப்பாள் என்று நான் எதிர்பார்த்தேன். நினைத்தபடியே நடந்துவிட்டது'' என்று ஏமாற்றத்துடன் சொன்னான் ஆஜாத்சத்ரு.

''அவனை ஆஷாதான் காப்பாற்றியிருப்பாளென்று நினைக்கிறீர்களா?'' என்று அனுருத்தர் கேட்டபொழுது, ''ஆமாம்! இதில் எனக்குச் சந்தேகமேயில்லை, சர்ப்பம் அவளுடைய இலட்சினை. 'பாம்பு' என்று கூச்சலிட்டுக் குழப்பத்தை விளைவித்தது, பிரம்மதத்தனைத் தப்புவிப்பதற்காக ஆஷாவின் ஒற்றர்கள் செய்த வேலையாக இருக்க வேண்டும். பாம்பு என்று கூச்சலிட்ட பெண் யாரென்பதைக் கண்டுபிடித்தால், பிரம்மதத்தனையும் நாம் சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். கூச்சலிட்ட பெண் யார் என்பதைக் கண்டுபிடிக்க விசாரித்துப் பாருங்கள். இதற்கிடையில், மலயகிரிக்கு நான் பிரயாணப்பட ஏற்பாடுகள் நடக்கட்டும், ராஜகுரு குறித்துச் சொல்லியபடி நண்பகல் சாப்பாட்டுக்குப் பின்னும் சூரியாஸ்தமனத்துக்கு முன்னரும் நான் தலைநகரிலிருந்து மலயகிரிக்குக் கிளம்பியாக வேண்டும்'' என்றான் ஆஜாத்சத்ரு.

அத்தியாயம் 7

# மான்விழியாள் விடுத்த மர்மச் சவால்

மலயகிரி என்பது மகதம், மங்களகிரி, அங்கம் ஆகிய மூன்று நாட்டு எல்லைகளும் சந்திக்கும் இடத்திலுள்ள ஒரு மலைப்பிரதேசம். அந்தப் பிரதேசமும் இதைச் சுற்றியுள்ள அடர்ந்த கானகப் பிரதேசமும் சேர்ந்ததே மலயகிரி என்பது. கிட்டத்தட்ட ஒரு தனி சுதந்திர குட்டி ராச்சியத்தைப் போன்ற மலயகிரி, வடகிழக்கு பாரதத்திலுள்ள சகல நாடுகளுக்கும் மிகமிகப் புனிதமான க்ஷேத்திரத்தைப் போன்றது. வடக்கு, வடமேற்கு பாரதத்தில் உள்ளவர்களுக்கு வாரணசி என்ற காசி க்ஷேத்திரம் எத்தனை புனிதத்தன்மையுடையதாய் இருந்ததோ, அதே போன்ற நிலைமையிலுள்ளது வடகிழக்கு பாரத மக்களுக்கு மலயகிரியும்.

மலயகிரியைச் சுற்றியுள்ள எல்லா அரசுகளும் ஒரு நடுநிலைமைத் தேசமாக மதித்துவந்தன. அந்த நாட்டுக்குப் போகிற யாத்ரீகர்கள் கையில் வெள்ளைக் கொடி தாங்கிச் செல்ல வேண்டுமென்பதும், வெள்ளைக் கொடி

யுடன் செல்லும் யாத்திரீகர்களை எந்த நாட்டவரும் எக் காரணத்தை முன்னிட்டும் தடை செய்யவோ இம்சிக் கவோ கூடாதென்பதும் நியதி. மலயகிரிக்குப் போவ தாகச் சொல்லிக் கொண்டு வெள்ளைக் கொடியுடன் ஒருவர் சென்றால் அவருக்கு எந்த நாட்டின் வழியாகவும் எந்த நேரத்திலும் போக உரிமையிருந்து வந்தது. அண்மையி லுள்ள நாடுகளில் அரசர்கள் முடிசூட்டிக் கொள்வதாய் இருந்தாலும் சரி, அல்லது குடும்பத்தில் கல்யாணம் போன்ற முக்கிய காரியங்களைச் செய்வதாயிருந்தாலும் சரி, மலயப்பரைத் தரிசித்து, அவருடைய ஆசியையும் அருளையும் பெற்ற பிறகே செல்வதென்பது தொன்று தொட்டு இருந்து வந்த வழக்கத்தை அனுசரித்தே ஆஜாத் சத்ரு பட்டாபிஷேகத்திற்கு நாள் குறிப்பதின் முன்னால் மலயகிரிக்கு யாத்திரை போய் வருவதென்று தீர்மானித் தான்.

நண்பகல் போசனத்திற்குப் பின்னர், ஆஜாத்சத்ரு தனது சிற்றன்னைமார்களை வணங்கி அவர்களின் ஆசியைப் பெற்றுக் கொண்டு மலயப்பரைத் தரிசிக்க, பரிவாரங் களுடன் பிரயாணமானான். ராஜரீக உடையுடனும் அதே சமயம் யாத்ரீகன் என்ற முறையில் வெள்ளைக் கொடி ஏந்தியும் கிளம்பிய ஆஜாத்சத்ரு இதுபோன்ற புனித யாத்திரையின் பொழுது பாதுகாப்புப் படைகள் ஏதுமின்றியே செல்லவேண்டும். ஆயினும் பிரம்மதத்தனை யும், மஞ்சுவையும் தப்புவித்தது உள்ளிட்டு, மகதத்தின் விவகாரங்களில் மங்களகிரி ராணி ஆஷா இடைவிடாமல் தலையிட்டு வருவதினால் அவள் நாட்டு எல்லையிலிருக்கும் மலயகிரிக்குப் பாதுகாப்பின்றிப் போவது அவ்வளவு உசித மாக அவனுக்குத் தோன்றவில்லை. மலயகிரி நடுநிலைமை நாடு என்பதும் அங்கே அயல்நாட்டவர்கள் யாரும் ஆயுத பாணிகளாகப் பிரவேசிக்கக் கூடாதென்பதும் பரம்பரை யான பழக்கமாக இருந்தால்கூட ஆஷா எதற்கும் துணிந் தவளென்று ஆஜாத்சத்ரு நினைத்தான். கட்டிய கண வனையே கொலைசெய்தவள் என்னதான் செய்யமாட்டா

ளென்று அவனுக்குத் தோன்றியது. ஆகவே மலயகிரிக்குள் படைகளை அழைத்துச் செல்வது தவறாயிருப்பினும் அவசரத்திற்கு உதவும் வகையில் மலயகிரி எல்லை வரையில் போதிய பாதுகாப்புடன் செல்வது புத்திசாலித்தனமென்று கருதி துன்முகி தலைமையில் பொறுக்கியெடுத்த சில வீரர்களை அவன்கூட அழைத்துச் சென்றான்.

ஆலயச் சூழலை நெருங்கும் வரை நெளிபட்ட யாத்திரீகர்கள் கூட்டம் ஆலயத்தின் அருகில் இல்லாததைக் கண்டு, "வழிநெடுக ஏராளமான யாத்திரீகர்கள் வந்தார்களே, அவர்கள் எல்லாம் இப்பொழுது எங்கே போனார்கள்? கோயிலின் அருகில் ஏன் இன்று அதிகக் கூட்டமில்லை?" என்று இடையில் சந்தித்த ஒருவரிடம் விசாரித்தான் ஆஜாத்சத்ரு.

"இன்று வெள்ளிக்கிழமை. காலையிலிருந்து நண்பகல் மட்டுமே சாதாரண மக்கள் சுவாமி தரிசனம் செய்யலாம். நண்பகலிலிருந்து சூரியாஸ்தமனம் வரையில் பெரிய இடத்தைச் சேர்ந்தவர்களுக்கு என்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட நேரம். சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு பார்த்தால் ஆலயப்பகுதி முழுவதும் ஒரே ஜனசமுத்திரமாகத்தான் இருக்கும்" என்றார் அம்மனிதர்.

"ஓ! அப்படியானால் நாம் சரியான நேரம் பார்த்துத்தான் ஆலயத்திற்கு வந்திருக்கிறோம்" என்று ஆஜாத்சத்ரு துன்முகியிடம் சொல்லிய பொழுது அதைக் கேட்டுக் கொண்டிருந்த அம்மனிதர், நீங்கள் அரண்மனையைச் சேர்ந்தவர்களா?" என்றார்.

"ஆமாம்!" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான் ஆஜாத்சத்ரு.

அந்த ஆலயம் மலையடிவாரத்தில் நாலாபுறங்களிலும் பிரமாண்டமான மதில் சுவர்கள் சூழ நடுவில் அமைந்திருந்தது. மதில் சுவரில் கிழக்கு நோக்கி ஒரு வாசல். அதில் இரண்டு ஆள் உயரத்திற்கு ஒரு பெரிய கதவு. அந்த

வாசலின் வழியாகவே எவரும் ஆலயத்திற்குள் நுழைய வேண்டும். ஆஜாத்சத்ரு வந்த சமயம் அந்தக் கதவு மூடப்பட்டிருந்தது. வெளியே சற்று தூரத்திற்கு அப்பால் ஒரு மூடு பல்லக்கு கீழே வைக்கப்பட்டிருப்பதையும், அதன் அருகில் பல்லக்கைச் சுமந்து வந்த ஆட்கள் கைகள் கட்டிக் கொண்டு நிற்பதையும், ஆஜாத்சத்ரு கவனித்தான். பல்லக்கில் வந்திருப்பவர் தன்னைப் போலவே உயர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவராக இருக்க வேண்டும் என்றும் கோயிலின் கதவு திறக்கப்படுவதற்காக அவர் பல்லக்கில் காத்திருக்கவேண்டுமென்றும் அவன் நினைத்தான். பல்லக்கில் இருப்பவர் ஒன்று பெண்ணாக இருக்க வேண்டும். அல்லது வயோதிபராக இருக்க வேண்டும். இல்லாவிடில் அவர் மூடு பல்லக்கில் வரக் காரணமில்லை. ஆனால் வந்தவர் ஆலயத்துக்குள் போகாமல் ஏன் வெளியிலேயே காத்திருக்கிறார்? பெரிய இடத்தைச் சேர்ந்தவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஆலயத்தின் கதவு ஏன் மூடப்பட்டிருக்கிறது?

இப்படிச் சிந்தித்த வண்ணம் ஆஜாத்சத்ரு ஆலயக் கதவின் அருகில் நின்ற பொழுது பல்லக்கைச் சுற்றி நின்றவர்களில் ஒருவன் அவனருகில் வந்து ஒரு மணியைச் சுட்டிக் காட்டி, ''அதோ அந்த மணியை அடியுங்கள். குருக்கள் பேசுவார்'' என்று சொல்லிவிட்டுப் போனான். பல்லக்கில் இருப்பது யார்? என்று கேட்கநினைத்த ஆஜாத்சத்ருவுக்கு அவகாசமளிக்காமலே, அவன் 'விர்' என்று போய் விட்டான்.

அவன் சுட்டிக் காட்டிய மணியை ஆஜாத்சத்ரு அடித்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தப் பெரிய கதவு மத்தியில் ஒருவனுடைய முகம் மாத்திரம் தெரியுமளவிற்கு ஒரு சின்னஞ்சிறிய கதவு திறந்தது. அதற்குள்ளேயிருந்து, ''வந்திருப்பது யார்?'' என்ற கேள்வி பிறந்தது.

''மகத மன்னர் பிம்பிசாரனின் மூத்த மகன் ஆஜாத்சத்ரு, மலையப்பரின் அருளை நாடி யாத்திரிகனாக வந்திருக்

கிருன் என்று பிரதம குருவிடம் தெரிவியுங்கள். ஒரு சாதாரண யாத்திரீகளுக வந்திருக்கும் என்னை, தெய்வ சந்நிதியில் ஒரு சாதாரண மனிதனுகவே நடத்த வேண்டு மென்று விரும்புகிறேன். ஆடம்பரம் ஏதுமின்றி ஆதி நாராயாணப் பெருமானைத் தரிசிக்க அனுமதிக்க வேண்டு மென்று தயவுசெய்து பிரதம குருவிடம் சொல்லுங்கள்'' என்ருன் ஆஜாத்சத்ரு.

அவன் இதைச் சொல்லி முடித்ததும் சிறிய கதவு மறுபடியும் மூடப்பட்டது. உள்ளேயிருந்து பேசிய மனிதர் பிரதம குருவிடம் தகவல் தெரிவிக்கச் சென்றிருப் பார் என்று எண்ணி, ஆஜாத்சத்ரு வெளியே காத்திருந் தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் கதவில் பொருத்தியிருந்த மணிகளெல்லாம் கலகலவென்று இனிமையான நாதம் எழுப்பிக் கொண்டு ஒலிக்க, அந்தப் பெரிய கதவு இரு பகுதிகளாகத் திறந்து கொண்டது, உள்ளே ஒரு வயோ திப மனிதர் நின்று கொண்டிருந்தார்.

மலையகிரி ஆலய குருக்களை நேரில் கண்டால் அவருக்கு உடனே மரியாதை செய்ய எவரையும் தூண்டும். வயதில் மட்டுமல்ல, தோற்றத்திலும் அவர் மரியாதைக்குரிய வராக இருந்தார். பார்ப்பவர்களுக்கு தீட்சண்யமான அவருடைய இரண்டு கண்கள் மட்டுமே தெரிந்தது. தும் பைப் பூவைப் போல வெள்ளை வெளேரென்று நரைத் திருந்த கேசம் அவருடைய புருவம் வரையில் சரிந்து விழுந்து நெற்றியை மறைத்திருந்தது, நரைத்த தாடி யும் மீசையும் முகத்தின் மற்றப் பாகத்தை மூடிமறைத் துக் கொண்டிருந்தன. கஷாய அங்கி உடல் முழுவதை யும் மறைத்துக் கொண்டிருந்தது. சங்கும், சக்கரமும் பொறித்த ஒரு நீண்ட வெள்ளித் தடியை அவர் தரை யில் ஊன்றிக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னுல் அவ ருடைய சீடர்களைப் போல இருவர் பயபக்தியுடன்

கைகட்டி வாய் புதைத்துக் கொண்டு நின்றார்கள். ஆலயத்தின் வெளி வாசற்கதவு மங்கள மணியோசையுடன் திறந்ததும், ஆஜாத்சத்ருவும், துன்முகியும் அங்கு கண்ட காட்சி இதுதான்.

விஷ்ணு சின்னங்களான சங்கு, சக்கரம் பொறித்த வெள்ளித்தடியுடன் கூடிய வயோதிபரே ஆலய பிரதம குருக்களாக இருக்க வேண்டுமென்பதை ஊகித்த ஆஜாத்சத்ரு அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து எழுந்து, "மகத மன்னர் பிம்பிசாரனின் மகன் ஆஜாத்சத்ரு நமஸ்கரிக்கிறேன் சுவாமி!" என்றான்,

"மாதவன் அருளினால் மக்களுக்குச் சேவை செய்து கொண்டு பல்லாண்டு வாழ்வாய் மகனே! சுவாமி தரிசனத்திற்கு நீ வந்திருக்கும் நாள் மிகவும் புனிதமான தினம். வைகாசி விசாகமாகப் பார்த்து வந்திருக்கிறாய். பகவானின் அருள் உனக்குப் பரிபூரணமாக இருக்கும்! உன்னுடன் வந்திருப்பது யார்?" என்று கேட்டார் அந்த முதியவர்.

"அவன் என்னுடைய மெய்ப் பாதுகாவலன். பெயர் துன்முகி" என்றான் ஆஜாத்சத்ரு.

"இந்த நேரத்தில் ஆலயத்திற்குள் நீ மட்டுந்தான் வரலாம் மகனே! ஆயிரமாயிரமாண்டுகளாக வழக்கத்தில் இருந்துவரும் நியதியை நாம் மீறலாமா?" என்று பிரதம குருக்கள் சொல்லிய பொழுது, "நல்லது சுவாமி! அப்படியே செய்கிறேன். துன்முகி இங்கு வெளியில் காத்திருப்பான்" என்றான் ஆஜாத்சத்ரு.

"நீ ஒரு உதவி செய்ய வேண்டும் ஆஜாத்சத்ரு! அதோ அந்தப் பல்லக்கில் சுவாமி தரிசனத்திற்காக ஒரு உயர் குலப்பெண் வந்து காத்துக்கொண்டிருக்கிறாள். ஆண் துணையில்லாமல் பெண்கள் தனியாக இந்த ஆலயத்திற்குள் நுழையக் கூடாது என்பது நியதி. அந்தப் பெண்

னுக்கு உன்னால் உதவிபுரிய முடியுமென்றால் அவளையும் அழைத்துக் கொண்டு வா. கதவைத் தாண்டி உள்ளே நுழைந்த பிறகு இருவரும் தனித்தனியாக சுவாமி தரிசனம் செய்யலாம். நுழையும் போதுதான் பெண்கள் தனியாக நுழையக் கூடாது'' என்றார் முதியவர்.

''விசித்திரமான விதியாக இருக்கிறதே! தனித்தனியாக சுவாமி தரிசனம் செய்யலாமென்று சொல்லும் பொழுது உள்ளே நுழையும்போது மட்டும் ஏன் பெண்கள் ஆண் துணையின்றி தனியே வரக்கூடாது?'' என்று மனதிற்குள் கேட்டுக்கொண்ட ஆஜாத்சத்ரு, ''நல்லது சுவாமி! ஒரு பெண்ணுக்கு சுவாமி தரிசனம் செய்து வைக்கும் புண்ணியமும் அதிர்ஷ்டவசமாக எனக்குக் கிடைக்கிறது'' என்றான்.

''மகனே, அடியார்களின் பணியே ஆண்டவன் பணியென்பதுதான் வைஷ்ணவ தத்துவம். ஆண்டவனை வழிபடும் அடியார்களுக்குத் தொண்டு புரிவதையே இறைவன் மகிழ்ச்சியோடு ஏற்கிறான். அடியார்களுக்கு ஆண்டவனே தொண்டனாக வந்து பெருமையுடன் பணி செய்திருப்பதாக நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. வைகாசி விசாகத்தில் நீ சுவாமி தரிசனம் செய்வதோடு, இன்னொருவருக்கு சுவாமி தரிசனம் செய்து வைக்கும் வாய்ப்பும் உனக்குக் கிடைத்திருக்கிறது. நீ மிகப் பெரிய பாக்கியசாலி! அந்தப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு ஆலயப் பிரகாரங்களைச் சுற்றிக் கொண்டு வா! எங்கு எங்கு என்னென்ன செய்ய வேண்டுமென்பதை சீடர்கள் சொல்லுவார்கள்'' என்று சொல்லிவிட்டுப் போனார் முதியவர். அவருடைய இரண்டு சீடர்களில் ஒருவன் குருக்களுடன் போய்விட்டான். மற்றொருவன் மட்டும் அவர்களை அழைத்துச் செல்ல காத்திருந்தான்.

''துன்முகி! நீ வெளியே இரு. நான் மட்டும் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு போய்விட்டு வருகிறேன்'' என்று சொல்லிய ஆஜாத்சத்ரு பல்லக்கை நோக்கி நடந்தான். இப்பொழுது மூடு பல்லக்கின் கதவு திறந்திருந்தது.

ஆனால் கதவுக்குப் பதிலாக ஒரு பட்டுத்திரை தொங்கிக் கொண்டிருந்தது. பல்லக்கை நெருங்கிய ஆஜாத்சத்ரு ''என் பெயர் ஆஜாத்சத்ரு! மகத நாட்டைச் சேர்ந்தவன். விரும்பினால் என்னுடன் நீங்கள் ஆலயத்திற்குள் வரலாம்.''

பல்லக்கில் அமர்ந்திருந்த அப்பெண்மணி சிறிது நேரத்திற்கெல்லாம் பல்லக்கைவிட்டு வெளியே வந்தாள். அவள் எல்லாப் பெண்களையும் போல சாதாரணமாகத் தென்பட்டிருந்தால் அவள் யாரென்பதை அறிய வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டிருக்க மாட்டாது. காஷ்மீர் பட்டு உடுத்து கரங்களிலே நல்முத்து வளையல்களும், கழுத்தில் நவரத்தின மாலைகளும் அணிந்து எடுப்பான தோற்றமளித்த அம்மங்கை முகத்தை மட்டும் திரையிட்டு மறைத்துக் கொண்டிருந்தாள். கழுத்துக்குக் கீழே கடைந்தெடுத்த தந்தச் சிலையைப் போலிருந்த அவ்விளம் பெண் முகத்தைத் திரையிட்டு மறைத்துக்கொண்டிருந்தது ஆஜாத்சத்ருவுக்கு வியப்பாக இருந்தது.

''நீ யார்?'' என்று நேருக்கு நேராகக் கேட்பது இங்கிதமில்லை என்று எண்ணிய ஆஜாத்சத்ரு ''யாரை அழைத்துச் செல்லும் கௌரவம் எனக்குக் கிடைத்திருக்கிறதென்பதை நான் அறியலாமா?'' என்று கேட்டான்.

இக்கேள்விக்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக முகத்திரைக்குள்ளே 'களுக்' என்ற ஒரு சிரிப்பொலி கேட்டது.

''சிரிப்பதின் பொருள் எனக்கு விளங்கவில்லை. தங்கள் பெயரைக் கேட்டது தவறானால் தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள்'' என்று ஆஜாத்சத்ரு சொல்லவும், அவர்கள் ஆலய வாசற் கதவை அடையவும் சரியாக இருந்தது.

''இதோ இடது பக்கமாகப் பிரகாரத்தை ஒரு முறை சுற்றிக் கொண்டு மீண்டும் இதே இடத்திற்கு வாருங்கள். உள்ளே அழைத்துப் போகிறேன்'' என்றான் சேடன்.

முகத்திரையணிந்த பெண்மணி முன்னே செல்ல, அவள் பின்னால் ஆஜாத்சத்ருவும் தொடர்ந்து சென்றான். பிரகாரத்தின் மறுபுறத்தை அடையும் வரையில் அவர்கள் ஒருவரோடொருவர் ஏதும் பேசவில்லை.

''தங்களுடைய பெயரைக் கேட்டதில் வருத்தமா? இந்தப் பக்கத்துப் பெண்கள் யாரும் முகத்திரை அணிந்ததை நான் பார்த்ததில்லை. அதிசயமாக இருந்ததினால்தான் யார் என்று கேட்டேன். தயவுசெய்து மறந்துவிடுங்கள்'' என்றான் ஆஜாத்சத்ரு.

''பரவாயில்லை!'' என்று சொல்லுவதற்கு அடையாளமாக அவள் தலையை மட்டும் அசைத்துவிட்டு நடந்தாள். சீடன் இருந்த இடத்தை வந்தடைவதற்குள் ஆஜாத்சத்ரு மேலும் ஓரிரண்டு முறை அவளிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். ஆனால் அவள் பதில் பேசுவதாயில்லை. அப்பொழுதுதான் அழகுப் பதுமையான அந்த இளம் பெண் பிறவியில் ஒரு ஊமையாக இருப்பாளோ என்ற ஒரு எண்ணம் அவன் மனதில் உண்டாயிற்று. அப்பொழுது, ''ஐயோ பாவம்! கொள்ளை அழகைச் சேர்த்து பெண்ணுருவில் இவளைப் படைத்த இறைவன் பேசும் சக்தியை மட்டும் இவளுக்கு அளிக்காமலிருந்தால் அதைவிடப் பெரிய கொடுமை வேறு என்ன இருக்க முடியும்?'' என்று உள்ளூர இரங்கியது அவன் மனம். பச்சாத்தாபப்பட்ட அந்த நேரத்தில்கூட, எப்படியாவது அவளுடைய முகத்தை ஒரு தடவையாவது பார்த்துவிடவேண்டுமென்ற ஆசை அனலாக அவன் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்தது.

இருவரும் சீடன் நின்ற இடத்திற்குத் திரும்பவும் வந்தடைந்த பொழுது அவன் அவ்விருவரையும் உள்ளே அழைத்துச் சென்றான்.

வாசலிலிருந்து அவர்கள் பிரமாண்டமான பல மண்டபங்களைத் தாண்டிச் சென்றார்கள். கடைசியாக அவர்கள் கர்ப்பக்கிரகத்தை நெருங்கியதும் அதற்கு வெளியில் மேடைமீது ஒரு குருக்கள் உட்கார்ந்திருந்தார்.

''குருக்களிடம் காணிக்கை செலுத்திவிட்டுத் தான் கர்ப்பக்கிரகத்திற்குள் போக வேண்டும்'' என்று சொல்லி விட்டு சிஷ்யன் ஒதுங்கிக் கொண்டான்.

முதலில் ஆஜாத்சத்ருவைப் பார்த்து, ''உங்கள் பெயர், தேசம், வகுப்பு'' என்று கேட்டார் குருக்கள்.

''பெயர் ஆஜாத்சத்ரு, தேசம் மகதம், வகுப்பு க்ஷத்திரிய வகுப்பு'' என்றான் ஆஜாத்சத்ரு. மகத சாம்ராஜ்யத்தின் அடுத்த சக்கரவர்த்தியான தன்னுடைய பெயரைக் கேட்டவுடன் அந்தக் குருக்கள் பரபரப்படைந்து போவாரென்று அவன் எதிர்பார்த்தான். அதற்குமாறாக அவர் சற்றும் ஆச்சரியம் அடைந்ததாகக் காட்டிக் கொள்ளாதது அவனுக்கு வியப்பாயிருந்தது. அவன் சொல்லிய விபரங்களை வேறுயாருக்கோ அறிவிப்பதைப் போல அந்தக் குருக்கள் உரத்த குரலில் திருப்பிச் சொன்னார். பிறகு 'காணிக்கை' என்று கேட்டார். இடுப்பில் சொருகியிருந்த ஒரு பட்டுப் பையை எடுத்து மேடை மீது வைத்தான் இளவரசன்.

''இதில் எவ்வளவு இருக்கிறது?'' என்று கேட்டார் குருக்கள்.

''ஆயிரம் பொற்காசுகள்'' என்று ஆஜாத்சத்ரு பதிலளிக்கவும், அதையும் குருக்கள் உரத்தகுரலில் திருப்பிச் சொன்னார். பிறகு ''சற்று ஒதுங்கியிருங்கள்'' என்று ஆஜாத்சத்ருவிடம் சொல்லிவிட்டு, ''அடுத்தவர் அருகில் வரலாம்'' என்றார்.

முகத்திரை அணிந்தவள் அருகில் வந்ததும், ''தெய்வ சந்நிதியில் முகத்திரை கூடாது. முதலில் அதை அகற்றிவிட்டு பெயர், தேசம், வகுப்பு ஆகியவற்றைச் சொல்லுங்கள்'' என்றார் குருக்கள்.

''பாவம்! அவளால் பேசமுடியாது போலிருக்கிறது சுவாமி'' என்று குறுக்கிட்டுச் சொன்னான் ஆஜாத்சத்ரு.

அவள் ஊமையாக இருக்கவேண்டுமென்பதைச் சொல்லாமல் சொல்லிக் காட்டினன் அவன். அவ்வளவுதான்! முகத்திரையை விலக்கிய அப்பெண்மணி மைதீட்டிய இரு கருவிழிகளை உருட்டி தீட்சண்யமாக அவனைப் பார்த்தாள். அந்த முகமும், பார்வையும் குதிரைச் சவுக்கைக் கொண்டு பலம் கொண்ட மட்டும் ஓங்கி அடித்தால் எப்படியிருக்குமோ, அத்தகைய உணர்ச்சியை அவனுக்கு ஏற்படுத்தியது. ஆலயத் தூண்களிலிருக்கும் ஆயிரக்கணக்கான கருங்கற் சிலைகளிலொன்றைப் போல, அதிர்ச்சியில் ஆஜாத்சத்ரு சிலையாகச் சமைந்து நிற்கையில் ''என் பெயர் ஆஷா. தேசம் மங்களகிரி.வகுப்பு க்ஷத்திரிய குலம்'' என்றுள் அவள்.

இதை உரக்கச் சொல்லிவிட்டுக் ''காணிக்கை'' என்று கேட்டார் குருக்கள்.

இரண்டு பட்டுப் பைகளை மேடையில் வைத்து, அவற்றில் எவ்வளவு இருக்கிறதென்று கேட்க வேண்டிய அவசியத்தை குருக்களுக்கு வைக்காமல், 'இரண்டாயிரம் பொற்காசுகள் இருக்கின்றன. எனக்கு முந்தியவர் வழங்கியதைப் போல இரண்டு மடங்கு காணிக்கை'' என்றுள்

''காணிக்கை இரண்டாயிரம் பொற்காசுகள்'' என்று குருக்கள் உரக்கச் சொல்லியபொழுதுதான் ஆஜாத்சத்ரு அதிர்ச்சியிலிருந்து விடுபட்டு சுய நிலையை அடைந்தான்.

''என்ன இறுமாப்பு! நான் வழங்கிய காணிக்கை, ஆயிரம் பொற்காசுகள் என்று தெரிந்து என்னை அவமதிப்பதற்காகவென்றே இரண்டாயிரம் பொற் காசுகளை வழங்கியிருக்கிறுள் இந்தக் கர்வம் பிடித்தவள்!'' என்று ஆஜாத்சத்ரு உள்ளூரக் கொதித்துக் கொண்டிருக்கையில், ''ஆஜாத்சத்ரு காணிக்கையை அதிகரிப்பதானல் அதிகரிக்கலாம்'' என்று அறிவித்தார் குருக்கள்.

ஆஜாத்சத்ரு இடுப்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டபின், கையில் கொண்டு வந்தது ஒரு பட்டுப்

யைதானென்பது தெரிய வந்ததும், "இல்லை; மன்னிக்க வேண்டும்" என்றான் அவன். ஆண்டவனை அமைதியுடன் தொழுது ஆசி பெறுவதற்காக வந்த இடத்தில்கூட நச்சுப் பாம்பென்ற ஆஷா தோன்றி, தன்னை அவமதிப்பதை எண்ணியபொழுது அவன் நெஞ்சம் எரிமலையைப் போலக் குமுறியது. அலட்சியத்துடன் ஓரக் கண்களினால் அவனைப் பார்த்து ஆஷா ஒரு விஷமச் சிரிப்புச் சிரித்தாள். தாங்கள் இப்படி ஈசுவர சன்னிதானம் என்பதை ஆஜாத்சத்ரு மறக்காமலிருந்தபடியினால் ஆஷா அளித்த அவமதிப்புச் சன்மானங்களையெல்லாம் பதில் பேசாமல் பொறுமையோடு வாங்கிக் கொள்வதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லாமல் இருந்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் கர்ப்பக்கிரகத்துக்கு உள்ளிருந்து மணியோசை கிணீரென்று வந்தது. மேடையில் அமர்ந்திருந்த குருக்கள், "அதிகக் காணிக்கை வழங்கிய ஆஷா முதலில் உள்ளே போகலாம். ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு ஸ்வாமியிடம் வேண்டிய வரங்களைக் கேளுங்கள். ஸ்வாமியின் அருளும், ஆசியும் ஓலையில் எழுதிவரும்" என்று அறிவித்தார். ஆஷா திரும்பி ஆஜாத்சத்ருவை மீண்டும் விஷமப் பார்வையோடு ஒருமுறை பார்த்துவிட்டு, லேசாகச் சிறிது திறந்திருந்த கதவின் வழியே சர்ப்பக்கிரகத்துக்குள் பிரவேசித்தாள்.

அவள் கர்ப்பக்கிரகத்திலிருந்து திரும்பியதும் ஆஜாத்சத்ருவைப் பார்த்து ஒரு இளமுறுவல் செய்துவிட்டு மளமளவென்று போய்விட்டாள். அடுத்தபடியாக ஆஜாத்சத்ரு உள்ளே நுழைந்தான். கதவின் பின்புறம் கஷாயம் அணிந்த ஒரு துறவி நின்று, ஆஜாத்சத்ருவை அழைத்துப் போனார். கர்ப்பக்கிரகத்தின் நடு மத்தியிலே ஒரு அக்கினிக்குண்டம். அந்த அக்கினிக் குண்டத்தில் தீ மூட்ட விறகோ அல்லது வேறு எந்தவிதமான எரிபொருள்களுமோ போடப்பட்டதாகத் தெரியவில்லை. பாறைகளின் இடைவழியிலிருந்து தீப் பிழம்பு வெளிப்பட்டு, கர்ப்பக்கிரகம் முழுவதிலும் ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது.

''இதுதான் காலாக்கினி! அனுதியாக, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்த அக்கினி அணையாமல் பூமித் தாயின் மடியிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. இதைப் பிரதட்சணம் செய்துவிட்டு வாருங்கள்'' என்றார் துறவி. ஆஜாத் சத்ரு குவித்த கரங்களுடன் காலாக்கினியை பிரதட்சணம் செய்துவிட்டு வந்தான்.

''இப்பொழுது ஆதி நாராயணப் பெருமானின் சன்னதிக்கு நாம் போகிறோம். பகவானின் சந்நிதானத்தில் உங்களுக்கு வேண்டியதை வாய்விட்டுக் கேட்கலாம். இந்த இடத்தில் வியாபித்திருக்கும் அசரீரி தனது பதிலையும் ஆசியையும் சாட்சாத் பிரகஸ்பதியைப் போல வீற்றிருக்கும் குருமகராஜியிடம் தெரிவிக்கும். அதை அவர் ஓலையில் எழுதியனுப்புவார்'' என்று அறிவித்த அந்தத் துறவி, ஆஜாத்சத்ருவை சந்நிதிக்குள் அழைத்துச் சென்றார்.

எம்பெருமான் ஆதிநாராயணன் சயனக் கோலத்தில் அளித்த அந்தக் காட்சியை வர்ணிக்க வார்த்தைகளுக்குச் சக்தியில்லை. வலது கரத்தில் சிரத்தை வைத்து, இடக்கரம் இடுப்பின்கீழ் நீண்டு கிடக்க ஆஜானுபாகுவாக யோக நித்திரையில் இருந்தார் மூலவர். அவர் முன்னிருந்த உற்சவர் கட்டித் தங்கத்தில் சிற்ப சாஸ்திரிகளின் கைவண்ணத்துக்கு ஒரு அழியாச் சின்னமாக வார்த்தெடுக்கப்பட்டிருந்தார். அந்த அற்புதமான காட்சியை மெய்மறந்து அனுபவித்துக் கொண்டிருந்த ஆஜாத்சத்ருவுக்கு நேரம் போனதே தெரியவில்லை.

''கேட்க வேண்டியதைக் கேட்கலாம்'' என்று துறவி அறிவித்தபொழுதுதான் ஆஜாத்சத்ருவுக்கு சுய நினைவு திரும்பியது. அதுவரையில் இறைவன்பால் அவன் மனம் இரண்டறக் கலந்து ஒன்றிப் போயிருந்தது.

கேட்பதற்கு என்ன இருக்கிறது பெரியவரே! எனக்காக என்று எதையும் எம்பெருமானிடம் நான் யாசிக்க விரும்பவில்லை. கேட்டுக் கொடுப்பவரல்ல மலையப்பர். அவரவர் தகுதிக்கு ஏற்ப கொடுக்க வேண்டியதை அவரே பார்த்துக்

கொடுப்பார். எனது ஆட்சியில் மக்கள் குலம் வளம் பெற்று வாழவேண்டும். தெய்வநெறி நாட்டில் வளர வேண்டும். எல்லோரும் எப்பொழுதும் நல்லவர்களாக நடக்க வேண்டும். இதற்கு எம்பெருமான் அருள்பாலிக்க வேண்டும்'' என பிரார்த்தித்தான் ஆஜாத்சத்ரு.

''இப்படி வாருங்கள்! தயவுசெய்து ஆலயத்துக்கு வெளியே சற்றுநேரம் காத்திருங்கள். எம்பெருமான் ஆசியை அசரீரி வாயிலாக குரு மகாராஜ் எழுதியனுப்புவார்'' என்று சொல்லி ஆஜாத்சத்ருவை வெளியே அழைத்து வந்தார் துறவி.

ஆஜாத்சத்ரு கண்குளிர, மனம் குளிர, ஸ்வாமியை மீண்டும் ஒருமுறை தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்தார்.

ஆலயத்துக்கு வெளியிலே பல்லக்கின் அருகில் மங்கள கிரி ராணி ஆஷா ஆலயத்துக்கு உள்ளிருந்து அவன் வருவதை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றாள். அதைக் கவனித்த ஆஜாத்சத்ரு துன்முகியைக் கதவின் அருகிலேயே காத்திருக்கச் சொல்லிவிட்டு ஆஷாவை நோக்கி நடந்தான்.

அவன் பேசுவதற்குக் கட்டாயம் வருவானென்று எதிர் பார்த்ததைப் போலவே ஆஷா பல்லக்கின் வெளியில் காத்திருந்தாள்.

அருகில் வந்த ஆஜாத்சத்ரு, ''ராணி, என்னை அவமதிப்பதில் உங்களுக்கு ஏன் இத்தனை சந்தோஷம்?'' என்று பேச்சை ஆரம்பித்தான்.

''உங்களை அவமதிக்கிறேனா? நீங்கள் ஏன் இப்படி நினைக்க வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை'' என்றான் அவள்.

''நான் ஆயிரம் பொற்காசு கொடுத்ததும், நீங்கள் இரண்டாயிரம் பொற் காசுகளை எடுத்து வைத்தீர்கள்.

இது வேண்டுமென்றே செய்ததில்லையென்று மனட்சாட்சியோடு சொல்லுவீர்களா?'' என்று அவன் கேட்டான்.

வெள்ளி மணியோசையைப் போல அவள் குமுத வாயைத் திறந்து கலகலவென்று சிரித்தாள். பிறகு, ''அப்பாடா! நான் என்னவோ, ஏதோவென்று நினைத்தேன் இதைத்தான் அவமதிப்பு என்கிறீர்களா? எங்கள் நாடு தான் உங்களுடைய அடிமை நாடு என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். ஆண்டவன் சந்நிதியில் விருப்பம் போல நேர்த்திக் கடன் செலுத்துவதற்குக்கூட எங்களுக்கு உரிமை இல்லையா? இரண்டாயிரம் பொற்காசுகளைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்க எண்ணிக் கையில் எடுத்து வந்தேன். எடுத்து வந்ததைக் கொடுத்தேன். நீங்கள் பத்தாயிரம் பொற் காசுகளைக் கொண்டு வந்து குருக்களின் முன் குவித்திருந்தால் யார் ஏனென்று கேட்கப்போகிறீர்கள்?'' என்றாள் ஆஷா.

''என்னைவிட அதிக காணிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்றே செய்த காரியமல்ல என்றா சொல்லுகிறீர்கள்?'' என்று அவன் விடாப் பிடியாகக் கேட்டபொழுது, ''அப்படி நான் சொல்லமாட்டேன். வேண்டிக் கொண்டபடி செய்தேன்'' என்றாள் அவள்.

''மங்களகிரியில் சமீபத்தில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றி ஏதேதோ என் காதுக்கு எட்டுகிறது!'' என்று பேச்சை மாற்றினான் ஆஜாத்சத்ரு. மன்னன் மலயத்வஜனை நீயே கொலை செய்ததாக நாட்டு மக்கள் பேசிக் கொள்வது என் காதுக்கும் எட்டியிருக்கிறதென்பதை மறைமுகமாக அவன் இப்படிச் சொன்னான்.

ஆமாம்! மகதத்தைப் பற்றியும் திடுக்கிடும் செய்திகள் பலவற்றை நான் கேட்டேன். சக்கரவர்த்தியார் கொலை செய்யப்பட்டது உங்களுடைய கத்தியினால் என்பதை நாடெல்லாம் அறிந்திருக்கையில், அதைத் தங்கள் தம்பி ஜனகர் தமது உரையில் ஏன் குறிப்பிடவில்லையோ? எல்லா

வற்றையும் சொல்லியவர் அதையும் சொல்லியிருக்கலா மென்று என் பக்கத்திலிருந்தவர்கள் பேசிக்கொண்டார் கள்'' என்ருள் ஆஷா.

ஆஜாத்சத்ரு அவளை ஒருமுறை ஏறத்தாளப் பார்த் தான். பிறகு, ''பக்கத்திலிருந்தவர்கள் பேசிக் கொண்டார் களென்ருல்...''? அன்றைய கூட்டத்தில் மங்களகிரி மகா ராணியாரும் சமூகமாயிருந்தார்களோ?'' என்ருன்.

''இல்லாவிட்டால் எனக்கு எப்படித் தெரியும்? ஒரு சிறிய குட்டிப் பாம்புக்கு வீரம் செறிந்த மகதநாட்டு மாவீரர்கள் அலறியடித்துக்கொண்டு மூலைக்கு ஒருவராக ஓடிய பரிதாபக் காட்சியை நான் நேரில் கண்டேன்! மக தத்தைப் பற்றி நான் கொண்டிருந்த மேலான எண்ணங் களையெல்லாம் நொடிப் பொழுதில் மண்ணுக்கிவிட்டார்கள் பேரரசின் மாண்பு மிக்க பிரஜைகள்?'' என்று கூறிவிட்டு ஏளனமாக ஆஜாத்சத்ருவைப் பார்த்தாள் ஆஷா.

''ஓஹோ! பிரம்மதத்தனைக் காப்பாற்ற மகாராணி யாரே மங்களகிரியிலிருந்து வந்திருந்தாரோ? குழப்பம் விளைவிக்கப் பாம்பை உபயோகித்ததை அறிந்ததுமே அது மங்களகிரியின் விஷமமாக இருக்குமென்று நினைத்தேன்!'' என்ருன் ஆஜாத்சத்ரு.

''பாம்பைக் கண்டு அஞ்சுவதைப் போல, மங்களகிரி யைக் கண்டு மகதம் அஞ்சுவதாகக் கேட்பது புதுமையா யிருக்கிறதே! உங்களது நாட்டுச் சந்து பொந்துகளிலிருக் கும் பாம்புகளைப் பார்க்கும் பொழுதெல்லாம் எங்களை நீங் கள் நினைவுபடுத்திக் கொள்ளுவதாயின் நாங்கள் பாக்கிய சாலிகள்'' என்ருள் ஆஷா.

''பிரம்மதத்தன் உங்கள் பாதுகாப்பில் சௌக்கிய மாக இருக்கிருனு?'' என்று அவன் கேட்கவும், ''பாம்பைப் போட்டதாக நீங்கள் கற்பனை செய்த பெண்ணின் மாளி கையைச் சோதனை போடப் போனுர்களே உங்கள் வீரர் கள்; அவர்களிடம் கேட்டிருக்கக் கூடாதா இந்தக் கேள் வியை?'' என்ருள் ஆஷா.

''இவ்வளவு தூரம் எங்கள் அரண்மனை விவகாரங்களை நீங்கள் அறிந்திருப்பது ஆச்சரியமாயிருக்கிறது'' என்றான் ஆஜாதசத்ரு.

''எங்கள் அரண்மனை ரகசியங்களை அவ்வப்போது அறிய உங்கள் ராஜப் பிரதிநிதி ஏற்பாடு செய்திருக்கையில், அவர் செய்வதையே நானும் திரும்பச் செய்வதில் முறை தவறு ஏதுமில்லையே! உங்களுக்குத் தெரியாவிட்டால் நான் சொல்லுகிறேன் கேளுங்கள். தாஸி சுமித்திரையின் வீட்டை நந்திவர்மரே நேரில் வந்து சோதனை போட்டார். ஆனால் பிரம்மதத்தனையும், மஞ்சுளையும் அங்கு அவர் காண முடியவில்லை. நிரபராதியான ஒரு பெண்ணை அவர் பயமுறுத்திவிட்டுப் போயிருக்கிறார். நிராயுதபாணிகளான பெண்களை வாள்முனையில் வெருட்டுவதுதான் மகதத்தின் பண்போ என்று உங்களிடம் கேட்பதாக நந்திவர்மரிடம் அன்று சொன்னேன். அவரிடம் சொல்லியபடியே இன்று உங்களிடமும் கேட்டுவிட்டேன்'' என்றாள் ஆஷா.

''ஓ! நந்திவர்மன் சோதனையிட்ட வீட்டில்தான் மகாராணியாரும் தங்கியிருந்தார் போலிருக்கிறது? மகதத்திற்கு நீங்கள் திடீரென்று விஜயம் செய்த நோக்கம்...?'' என்றான் அவன்.

''எங்கள் நாட்டுக்கு வந்தபொழுது மகதத்தின் வல்லமையைப் பற்றி வானளாவிப் பேசினீர்களே! அதை நேரில் பார்க்கலாமென்று வந்தேன். ஏமாற்றத்தோடு திரும்புகின்றேன் என்றாள் அவள்.

''ஆஷா! நான் சொல்லுவதைக் கேளுங்கள். மகதத்துடன் மோதிக் கொள்ளுவதினால் உங்களுக்குத் துன்பமே தவிர இலாபமில்லை. இதுவரை நீங்கள் செய்த விபரீதச் செயல்களையெல்லாம் நான் மறந்துவிடுகிறேன். படை திரட்டுவதைக் கைவிட்டு இனியாவது இருப்பதில் திருப்தியுடன் அமைதியாக வாழப் பழகிக் கொள்ளுங்களென்று யோசனை சொல்லுகிறேன்'' என்றான் ஆஜன்.

''இது என் சுபாவத்துக்கே மாறுனது. இளவரசரே, என் சுபாவத்துக்கே மாறுனது!''என்று அவள் சொல்லிய பொழுது, ''நான் இளவரசனில்லே. இப்பொழுது சக்கரவர்த்தி''என்று அவன் அவளைத் திருத்திஞன்.

''இந்த ஆசை உங்களுக்கு நீண்டகாலமாக இருந்திருக்கலாம்; ஆனல் இன்னும் நீங்கள் சக்கரவர்த்தியாக முடிசூடவில்லே. அதுவரையில் எப்பொழுதும் போல இளவரசர் என்று குறிப்பிடுவதுதான் பொருத்தமென்று சொன்னேன். தவருனல் மன்னித்துவிடுங்கள். என் கணவர் இருந்த பொழுதும் நான் மகாராணி! இன்றும் மகாராணி. என்றைக்கும் மகாராணி! என்னே மகாராணி என்று நீங்கள் குறிப்பிட்டதில் தவறு இல்லே?'' என்ருள் ஆஷா.

''சக்கரவர்த்தியாகும் ஆசை நீண்டகாலமாக உங்களுக்கு இருந்திருக்கலாம்'' என்று அவள் சொல்லிய பொழுது ஆஜாத்சத்ருவின் கண்கள் கோபத்தில் கொவ்வையைப்போலச் சிவந்தன.

''ராணி! நான் விரும்பிஞல் உன்னுடைய திமிரடித்தனத்துக்கு இந்த விஞடியே முற்றுப்புள்ளி வைக்க முடியுமென்பதை அறிந்துதான் பேசுகிருயா! உன்னேச் சிறைப்பிடித்துக் கொண்டு போக எனக்கு அதிக நேரமாகாது!'' என்று முழங்கிஞன் ஆஜாத்சத்ரு.

ஆஷா அவனேப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாள். ''பெண்களிடத்தில் வீரம் காட்டும் மகதத்தின் பண்பை நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன் இளவரசே! உங்கள் பேச்சு இப்பொழுது அந்தப் பண்பை ஊர்ஜிதப்படுத்தி ராஜாங்க முத்திரையிடுகிறது! மாபெரும் சாம்ராஜ்யத்தை கட்டியாண்ட மகதப் பேரரசு சுக்குநூருக நொறுங்கிப் போகும் காலம் சமீபித்து விட்டதென்பதற்கு இனி வேறு ஆதாரங்களே எனக்குத் தேவையில்லே. எதை நேரில் கண்டறிய ராஜகிருகத்துக்கு நான் வந்தேனே அதை அங்கும் கண்டேன். இதோ இங்கும் காண்கிறேன். இப்பொழுது

நாம் இருப்பது தெய்வ சந்நிதானம் மட்டுமல்ல, நடுநிலைமைப் பிரதேசமும் ஆகுமென்பதை நான் நினைவுபடுத்த வேண்டுமா?'' என்றாள் ஆஷா.

''மகதத்தின் முடிவு நெருங்கி விட்டதாகக் கனவு கண்டு அந்தக் கனவிலே சஞ்சரிக்கிறீர்கள். மனிதர்கள் மறைவார்கள். ஆனால் மகதம் மறையாது. அதற்கு அழிவே இல்லை. இது நினைவில் இருக்கட்டும்!'' என்றான் ஆஜன்.

''இறக்கப் பிறந்த மனிதனைப் போன்றவைதான் அவன் கட்டியெழுப்பிய சாம்ராஜ்யங்களும் என்பது நான் படித்த சரித்திரப் பாடம். மனிதனைப் போல வாழவேண்டிய காலத்தில் அவன் எழுப்பும் பேரரசுகளும் வாழுகின்றன. மனிதனைப் போலவே காலத்தை வெல்லச் சக்தியற்றவைகள் சாம்ராஜ்யங்கள்; கௌரவப் பேரரசும், கண்ணன் கட்டியெழுப்பிய பாண்டவப் பேரரசும் இப்பொழுது எங்கே? சாமராஜ்யம் கூட மறைந்துவிட்டது. அதைக் காட்டிலும் பெருமை வாய்ந்ததா மகத சாம்ராஜ்யம்?'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கையில் ஆலயத்துக்கு உள்ளேயிருந்து வந்த துறவி, அவ்விருவரிடமும் ஒவ்வொரு ஓலையைக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்ட ராணி ஆஷா பல்லக்கினுள் ஏறியபொழுது, ''இருப்பதைக் கொண்டு திருப்தியடையுங்கள். இறுதியாக உங்களை எச்சரிக்கின்றேன்'' என்றான் ஆஜன்.

பல்லக்கில் ஏறி உட்கார்ந்து கொண்டு, ''பல்லக்கு புறப்படட்டும்'' என்றாள் ஆஷா. சுமைதாங்கிகள் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு புறப்படும் தறுவாயில், பல்லக்கின் பட்டுத் திரையை நீக்கி முகத்தை மட்டும் வெளியே காட்டி, ''இளவரசருக்கும் நான் ஒன்று சொல்லிவிட்டுப் போக விரும்புகிறேன். இருப்பதைக் கொண்டு திருப்தியடைபவர்கள் பேடிகள். மங்களகிரியில் பேடிகள் என்று சால்ல யாருமே கிடையாது. அவர்களை மகதத்திலிருந்து

தரிவித்துக் கொள்ளவும் நாங்கள் தயாரில்லை!" என்று சொல்லிவிட்டுத் திரையை மூடிக்கொண்டாள். பல்லக்கு புறப்பட்டுவிட்டது!

கண்ணுக்கு மறையும் வரையில் பல்லக்கை விறைத்துப் பார்த்துக்கொண்டிருந்த ஆஜாத்சத்ரு அது மறைந்ததும், "துன்முகி! வா போகலாம்" என்று அழைத்தான்.

அவர்கள் சிறிது தூரம் சென்றதும், எதிரில் புழுதி மண்டலத்தைக் கிளப்பிக்கொண்டு குதிரையில் சிலர் வருவது தெரிந்தது. ராஜகிருகத்திலிருந்து இவ்வளவு அவசரமாக வரக் கூடியவர்கள் யாராக இருக்குமென்பதைப் பற்றி ஆஜாத்சத்ரு சிந்திக்கையில், குதிரையில் முன்னதாக வந்த மனிதன் யாத்ரீகர்களுக்குரிய வெள்ளைக் கொடியையும், அத்துடன் கோசலத்தின் கொடியையும் தாங்கி வருவதைக் கண்டான் ஆஜாத்சத்ரு.

"துன்முகி! விநோதமான சூழ்நிலைமையில் விதூர்த்தனை நாம் சந்திக்கப் போகிறோம். பட்டாபிஷேகத்துக்கு முன்னர் குல வழக்கப்படி அவனும் மலயப்பர் தரிசனத்துக்காகவே வருகிறான் போலிருக்கிறது. ஒருவகையில் அவனைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்ததும் நல்லதுதான்" என்று சொல்லியவாறு ஆஜாத்சத்ரு குதிரையிலிருந்து கீழே இறங்கினான். அவனைப் பின்பற்றித் துன்முகியும் மற்றவர்களும் இறங்கினார்கள். அதேபோல எதிரில் வந்தவர்களும் மளமளவென்று குதிரைகளிலிருந்து இறங்கி நடந்து வந்தனர்.

ஆஜாத்சத்ரு நினைத்ததைப் போலவே எதிரில் வந்தவர்கள் விதூர்த்தனும் அவனுடைய பரிவாரங்களும்தான். விதூர்த்தன் நெருங்கி வந்ததும் அவனை ஆஜாத்சத்ரு மார்புடன் அணைத்துக்கொண்டு, "நீங்கள் வருகையில் தலைநகரிலே நான் இல்லாமற் போனதற்கு மிகவும் துயரப்படுகிறேன். உங்களை வரவேற்று உபசரிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்காமற் போய்விட்டது" என்று உபசார வார்த்தைகள் சொன்னான்.

"உங்கள் சேனதிபதி நந்திவர்மன் எங்களுக்கு ஒரு குறைவுமில்லாமல் கவனித்துக் கொண்டார். அவர் மூலமாக உக்கிரசேனர் நடத்திய கோர நாடகத்தைக் கேள்விப்பட்டு மிகவும் துயரப்பட்டேன். உக்கிரசேனர் உங்கள் தந்தையை மட்டுமல்ல, என் தந்தையையும் படுகொலை செய்த மகா பாவி. நந்தி வர்மருடன் பேசியபொழுதுதான் விளங்காமலிருந்த பல புதிர்கள் எனக்கு விளங்கின" என்றுன் விதூர்த்தன்.

"உங்கள் தந்தையின் மரணத்திற்கும் உக்கிரசேனரு காரணம்? ஆச்சரியமாய் இருக்கிறதே" என்றுன் ஆஜாதசத்ரு. தகப்பனை விரட்டி ஆட்சியைக் கைப்பற்றிய கொடியவனென்று விதூர்த்தனைத் தான் எண்ணியிருக்க அவன் பழியை உக்கிரசேனர் மீது போட்டது ஆஜாதசத்ருவுக்கு விளங்காத புதிராக இருந்தது.

"ஆமாம்! நண்பரே! இந்த சோக நாடகங்கள் ஆச்சரியமானவைகள்தான். காலஞ்சென்ற பிம்பிசாரர் மார்பில் தங்களுடைய கத்தி பாய்ந்திருந்ததினுல் கொலை செய்தது தாங்களே என்ற எண்ணம் கோசலத்தில் மட்டுமல்ல, எங்கள் நாட்டிலேயே பலரிடம் நிலவியிருக்கிறது. இது எத்தனை படுபாதகமான அபாண்டப் பழி யென்பது உங்களுக்கும் உங்களைச் சேர்ந்தவர்களுக்கும் உக்கிரசேனர் திட்டங்களை அறிந்த எனக்கும் தெரியும். ஆனல் இது எல்லோருக்கும் தெரியாது. அதே போல நான் ஆட்பீடத்தில் அமர்ந்ததும், எனது தகப்பனுர் மகதத்திற்கு ஓடிவந்ததும், அங்கு கொலையுண்டதும்தான் பொதுஜனங்களுக்குத் தெரியுமே தவிர, இதற்கெல்லாம் யார் காரணமாய் இருந்தார்களென்பது ஒருவருக்கும் தெரியாது. என் தம்பிக்கு முடி சூட்டவும், அதற்கு மகதத்தின் உதவியை நாடவுமே என் தந்தை உல்லாசப் பிரயாணத்துக்குப் போய் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு, மகதத்தின் உதவியை நாடப் போயிருப்பதாக கோசலத்தில் பலத்த வதந்திகள் கிளப்பிவிடப்பட்டன. கோசலத்தைத் தாக்க மகதம்

ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறதென்று மகதத்திலிருந்து பல தூதுவர்கள் அடிக்கடி வந்து எச்சரித்துக் கொண்டிருந் தார்கள். பொதுஜனங்களுக்கிடையில் கிட்டத்தட்ட ஒரு குழப்பபடியான நிலைமையை உக்கிரசேனரும், மங்கள கிரி ராணி ஆஷாவும் விளைவித்துக் கொண்டு வந்தார்கள். இந்த உண்மையை ஆரம்பத்தில் நான் அறியவில்லை. தற் பாதுகாப்பின் பொருட்டும் எனது அரசுரிமையைப் பாது காத்துக் கொள்ளவும் இராணுவ உதவியுடன் நான் அர சைக் கைப்பற்றினேன். நான் விரும்பியது என்னுடைய அரசுரிமையைப் பாதுகாத்துக் கொள்ளுவதே தவிர என் தந்தையின் உயிரையல்ல. ஆனால் படுபாவி உக்கிரசேனர் தம்மிடம் தஞ்சமடைந்த என் தகப்பனரை படுகொலை செய்து பிணமாக என்னிடம் அனுப்பிவைத்தான். அவ னிடமிருந்து எனக்கு இரண்டு செய்திகள் வந்தன. இதன் பிறகுதான் நான் அவனைப் 'பற்றித் தீவிரமாக விசாரணை செய்தேன். சிறைப்படுத்தியிருந்த பல ஒற்றர்களை இம் சித்து விசாரித்துப் பார்த்தேன். எனக்குத் துரோகம் செய் யும் எண்ணம் என் தந்தைக்கு இருந்ததேயில்லை என் பதையும் எனக்கும், அவருக்கும் இடையில் பகையை வளர்த் தவர்கள் உக்கிரசேனரும், ஆஷாவும்தான் என்பதையும் இப்பொழுதுதான் திட்டவட்டமாக அறிந்திருக்கிறேன். இனி அவற்றை அறிந்து என்ன பயன்? காலஞ் சென்று விட்ட என் தந்தையின் உயிர் மீண்டுவிடப் போகிறதா? இந்தச் சதிகளையெல்லாம் உக்கிரசேனனும், ஆஷாவும் ஒன்று சேர்ந்து திட்டமிட்டுச் செய்தார்களா அல்லது தனித் தனியே வெவ்வேறு இலட்சியங்களோடு செய்தார்களா என் பது நிச்சயமாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயமாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன், இரண்டு நச்சுப் பாம்புகளில் ஒன்று மடிந்துவிட்டது. மற்றொன்றான ஆஷாவையும் அடித்துக் கொல்லாதவரை தென் கிழக் குப் பாரதத்தில் ஒருபோதும் அமைதி நிலவமுடியாது'' என்றான் விதூர்த்தன்.

"கண்ணினால் கண்டதையும், காதினால் கேட்பதையும் நம்பாமல் தீர விசாரிப்பதையே நம்பவேண்டுமென்று நம் முன்னோர்கள் சொல்லியது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பார்த்தீர்களா நம் இருவருடைய விஷயத்திலும்? மலயப்பர் அருள்தான் நம்மை இங்கு சந்திக்கச் செய்தது. அவருடைய அருளினால் நமது நட்பு என்றென்றும் நீடிக்க வேண்டும். உங்களுடைய உதவி மட்டும் எனக்கு இருக்குமானால் ஆஷாவை நிச்சயமாக நான் அடக்குவேன். மலயப்பரைத் தரிசித்துவிட்டுத் திரும்புகையில் நீங்கள் கண்டிப்பாக ராஜகிருகத்தில் சில தினங்கள் தங்கி எங்கள் உபசாரத்தை ஏற்றுக் கொண்டு போகவேண்டும்" என்று வற்புறுத்தினான் ஆஜாத்சத்ரு.

சிறிது நேரம் அளவளாவிவிட்டு அவர்கள் பிரிந்தார்கள். விதூர்த்தன் மலயகிரியை நோக்கியும், ஆஜாத்சத்ரு ராஜகிருகத்தை நோக்கியும் பயணமாயினர்.

ஆஜாத்சத்ரு ராஜகிருகத்தை அடைந்த பொழுது அவனுக்குக் கவலையையும், கலக்கத்தையும் தரும் இரண்டு செய்திகள் காத்திருந்தன. இரண்டுமே ஆஷா சம்பந்தப் பட்டவைகள்.

மலயகிரிக்கு அவன் புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் ஆஷா ஆஜாத்சத்ருவின் பெயருக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தாள். செய்தியிலும் அதே திகதியிடப்பட்டிருந்தபடியினால் அவள் ராஜகிருகத்திலிருந்துகொண்டே அதை எழுதியிருக்கிறாளென்பது தெளிவாகத் தெரிந்தது.

மங்களகிரி மகதத்தின் ஆதிபத்திய அதிகாரத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சர்வ சுதந்திர தேசமாக பிரகடனப்படுத்திக்கொண்டதாயும், மகதம் விரும்பினால் அதனுடன் சரிசமமதையான அந்தஸ்தில் தோழமை கொள்ள மங்களகிரி தயாராயிருப்பதாயும், மங்களகிரியிலிருக்கும் மகதத்தின் ராஜ்யப் பிரதிநிதி இனி மகதத்தின் சாதாரணப் பிரதிநிதியாக மட்டுமே இருப்பாரென்றும் ஆஷா அந்தச் செய்தியில் குறிப்பிட்டிருந்தாள்.

செய்தியை ஒரு தடவைக்கு இரு தடவை நிறுத்தி நிதானமாக வாசித்த ஆஜாத்சத்ரு ஒரு நெடுமூச்செறிந்தான். பிறகு "இது எதிர்பார்த்ததுதான். ஆஷா நமக்கு அடங்கியிருக்கச் சம்மதித்தால்தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும். போர் முனையிலிருந்து ஏதாவது செய்தியுண்டா?" என்று கேட்டான்.

கிழக்கிலிருந்து பெரும் ஏமாற்றமளிக்கும் செய்திகள் வந்திருக்கின்றன. மங்களகிரிப் படைகள் எதிர்பாராத விதமாக அங்கத்தில் ஊடுருவி வங்கத்தின் வட எல்லை வரையிலுள்ள பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டனவாம். அதாவது அங்கத்தின் சரிபாதியான தென் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டு வங்கத்தினுள்ளே அவை பாய்ந்து முன்னேறுகின்றன. வங்கத்திலுள்ள நம் படைகள் ஒரு புறம் மங்களகிரி சேனைகளும் மற்றொருபுறம் வங்கப் படைகளும் தாக்க அந்த இடுக்கித் தாக்குதலைச் சமாளிக்கமாட்டாமல் புண்டரத்திற்கு ஓடிவிட்டன. வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியாமல் சேதி நாட்டில் கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அங்கத்திலிருந்து செய்தி கிடைத்தவுடன் ஒரு பெரும் படையுடன் மங்களகிரியின் மீது தாக்குதல் நடத்த நானே புறப்பட வேண்டுமென்று நினைத்தேன். எதற்கும் தங்கள் அனுமதியில்லாமல் ஏதும் செய்யக் கூடாதென்றுதான் பொறுமையோடு காத்திருக்கிறேன்" என்றார் நந்திவர்மர்.

இப்படி நந்திவர்மன் கூறுகையில், ஆஜாத்சத்ருவுக்கு ஆலயக் குருக்கள் கொடுத்த அசரீரியின் ஓலை நினைவுக்கு வந்தது. அதை எடுத்து வாசித்துப் பார்த்தான் அவன். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"மகத மன்னர் ஆஜாத்சத்ருவுக்கு திருவருள் துணை நிற்கும். கொந்தளிப்புகளைக் கண்டு கலங்காதே! ஏமாற்றங்கள் வெற்றியின் படிகள். இறுதி வெற்றி உனதே. துணிச்

சலும் அதேசமயம் அவசியமான நேரங்களில் பொறுமையும் உனக்குத் துணையாக இருக்கட்டும். உன் ஆட்சியில் மகதத்தின் புகழ் வானளாவ வளருமென்பதை நம்பு! நீயும் உன் அரசும் வாழ்க!''

''பொறுமை! ஆம். இன்று நமக்கு அவசியமாகத் தேவைப்படுவது பொறுமைதான். ஆத்திரம் அறிவைக் கெடுக்கும். ஆஷாவைக் கவனிக்க வேண்டிய சமயத்தில் கவனிப்போம். தற்சமயத்துக்கு அவளை வசப்படுத்த பலாத்காரத்தை விட்டு வேறு வழிகளைக் கையாளுவோம்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் ஆஜாத்சத்ரு.

## அத்தியாயம் – 8

# காதல் கன்னியர்

# கயல் விழி காட்டிவிட்டால்...

இதே சமயத்தில் மங்களகிரியில் ஆஷாவும் அசரீரியின் செய்தியை ஐம்பதாவது தடவையாகத் திரும்பப் படித்துக்கொண்டிருந்தாள்.

மங்களகிரி அரண்மனைப் பூங்காவில் பளிங்குக் கற்களினால் அமைத்த செயற்கைத் தடாகத்தில் ராணி ஆஷா தேவி அப்பொழுதுதான் ஸ்நானம் செய்துவிட்டு கரையேறினாள். பத்தரைமாற்றுப் பசும்பொன்னில் வார்த்தெடுத்து ஒருமுறைக்கு இருமுறை மெருகூட்டிய பொற்சிலைபோல் இருந்த அந்தப் பேரழகியைத் தாதிப் பெண்கள் மிருதுவான துணிகொண்டு துடைத்துவிட்டுக்கொண்டிருந்தனர். கமகமவென்று மணம்வீசும் கூந்தல் தைலத்துடன் ஒருவளும், பாதங்களை அழகுபடுத்தும் செம்பஞ்சுக் குழம்புடன் மற்றொருவளும், கச்சை வஸ்திரங்களுடன் வேறொருவளும், ஆபரணாதிகளுடன் சிலருமாக அழகுப் பதுமையை அலங்காரப் பதுமையாக்கப் பலர் காத்துக் கொண்டு நின்றார்கள். ஈரம் போக உடம்பு துடைத்து விடப்பட்டதும் அலங்கார வேலைகள் மளமளவென்று ஆரம்பமாயின. உண்மையைச் சொல்லப்போனால் பதுமையை அலங்

கரிப்பது போலவே வெறுமனே மகாராணி நிற்க, அவளைப் பணிப் பெண்கள் அலங்கரிப்பது வழக்கம். அதே போல அன்றுபணிப்பெண்கள் தங்கள் கடமையைச் செய்ய, ஆஷா மீண்டும் ஒரு தடவை அசரீரி கொடுத்த ஓலையைப் படிக்கத் தொடங்கினாள். அவளுக்குக் கொடுத்த ஓலையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

''மங்களகிரி ராணிக்கு மங்களங்கள் உண்டாகட்டும்! உன் முயற்சிகளில் பல தடங்கல்கள் ஏற்படலாம். ஆயினும் மன உறுதியுடன் முன்னேறு. மண்டலமே புகழும் படியான உன்னத நிலைமை உனக்காகக் காத்திருக்கிறது. உலகமுள்ளவரையும் உன் பெயர் நிலைத்திருக்கும். அஞ்சாமல் முன்னேறு! வெற்றி உன் பக்கத்திலிருக்கும். வாழ்க மங்களகிரி மகாராணி!''

இந்தச் செய்தியைத் திரும்பத் திரும்ப எவ்வளவு முறைபடித்தும் ஆஷாவுக்கு மனத் திருப்தி ஏற்படவில்லை. ஒவ்வொரு தடவையும் வாசிக்கையில் அவளுக்குப் புதிய தெம்பும், உற்சாகமும் மனதில் ஊற்றெடுத்துப் பெருகுவதைப் போலிருந்தது.

மலயத்வஜனை மணந்த நாள் முதற்கொண்டு அரசியலில் அவனைவிட அதிகமான ஈடுபாடு கொண்டிருந்த ஆஷாவுக்குப் படைத்த கடவுளைப்பற்றிச் சிந்திக்கவே நேரம் இருந்தது கிடையாது. அரசியல் சதுரங்கமே அவள் கவனம் முழுவதையும் கவர்ந்திருந்தது. சற்று ஓய்வு கிடைத்தால் ''வா! வா!'' என்று வேட்டைக்கு வருந்தி அழைக்கக் கானகம் காத்திருந்தது. அரசியல், யுத்த முஸ்தீபுகள், இவ்விரண்டும் இல்லாவிட்டால் வேட்டையாடுவதைத் தவிர அவளுக்கு வேறு சிந்தனையே இல்லாதிருக்கையில், தெய்வ சிந்தனைக்கு அவளிடம் இடம் ஏது? ஆயினும் மணி மகுடம் தரிப்பதின் முன்னால் மலயப்பரைத் தரிசனம் செய்ய வேண்டுமென்ற புராதன பழக்கத்தை மீறிப் பொதுஜனங்களின் அதிருப்தியைக் கட்டிக் கொள்ளக் கூடாதென்பதற்காகவே அவள் யாத்திரையை ஆரம்பித்தாள்.

மங்களகிரியிலிருந்து மலயகிரிக்கு ஒருநாள் பிரயாணம் தான். ஆனுல் நேராக அங்கேயிருக்கும் மலயகிரிக்குப் போகாமல் யாத்திரைக் கோலத்துடன் ராஜகிருகத்துக்குப் போய்விட்டு, அங்கிருந்து மலயகிரிக்குச் செல்லுவதென்று அவள் தீர்மானித்திருந்தாள். சாதாரண சந்தர்ப்பங்களில் மகதத்தினுள் நுழைவது பேராபத்து என்றுலும் யாத்திரைக் கோலத்தில் போவதை விடப் பாதுகாப்பானது வேறு எதுவுமில்லை என்பது அவளுக்குத் தெரியும். பிரம்மதத்தனைத் தப்புவிக்கும் முயற்சியில் சுமித்திரை எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறுள் என்பதை நேரிற் கண்டறிவது, மகதத்தின் இராணுவ நிலைமையைப் பற்றி நிரந்தரமான உளவுகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்வது, மங்களகிரியையும் தன்னையும்பற்றி ஆஜாத்சத்ருவும் மற்றவர்களும் என்ன நினைக்கிறுர்கள் என்பதைப்பற்றியும் புலன் விசாரிப்பது முதலான பல திட்டங்களோடு யாத்திரைக் கோலத்தில் அவள் பிரயாணப்பட்டாள். அதற்கு முன்ஞல் அங்கத்தின்மீது திடீர்த் தாக்குதலை நடத்த அவள் ஏற்பாடுகளும் செய்திருந்தாள்.

"ராஜகிருகத்துக்கும், மலயகிரிக்கும் போய்விட்டு தலைநகருக்குத் திரும்பி, மணிமகுடத்தை நான் தரிக்கும் பொழுது, மங்களகிரிக்கு மட்டுமல்ல அங்கத்தின் ராணியாகவும் நான் மகுடம் தரிக்க வேண்டும்" என்ற உத்தரவுகளோடு மின்வேகத் தாக்குதலை நடத்தப் படைகளை அனுப்பிவிட்டே அவள் ராஜகிருகத்துக்குப் பிரயாணப்பட்டாள். பிரம்மதத்தனும் மஞ்சுவும் காப்பாற்றப்பட்டு சுமித்திரை வீட்டுக்கு வந்ததும், பிறகு நந்திவர்மர் சுமித்திரை வீட்டுக்கு வந்து அவளை மிரட்டியதும் ஆஜாத்சத்ருவுக்குத் தெரியும். அப்பொழுது அவள் சுமித்திரை வீட்டில்தான் தாதி வேடத்தில் இருந்தாள்.

ஆஷா மங்களகிரியை விட்டுப் புறப்பட்ட சமயம் மகத ராஜப் பிரதிநிதி விஜயகேசரி ராஜகிருகத்தில் இருந்தார். ஆகையால் ஆஷாவின் நடமாட்டங்களைப் பற்றியோ

அல்லது அங்கத்துக்கு அவள் படைகளை அனுப்பியிருப்பது பற்றியோ ராஜகிருகத்துக்கு எவ்விதமான தகவலும் எட்டாமலிருந்தது. இது ஆஷாவுக்கு மிகவும் சௌகரியமாக இருந்தது.

பிரம்மதத்தன் காணுமற் போகவும், ஆஷாவின் ஒற்றர்கள் மங்களகிரிக்கு அவனைக் கடத்திப் போயிருக்கலாமென்று சந்தேகித்து விஜயகேசரியை நந்திவர்மர் மங்களகிரிக்கு அவசரமாகத் திருப்பி அனுப்பி வைத்தார். பட்டாபிஷேகத்துக்கு தலைநகரில் இல்லாமல் போகிறோமே யென்பதில் விஜயகேசரிக்கு உள்ளூரத் துக்கம்தான். என்றாலும் பிரதம சேனாதிபதியின் உத்தரவை மறுத்துப் பேச முடியாமல் அவர் மங்களகிரிக்குப் போனார். அங்கு சென்றவுடன் மந்திரி சர்வார்த்தர் மூலமாக அவருக்குத் திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன. இரண்டு தினங்களுக்குள்ளாக ஆஷாவின் படைகள் அங்கத்தில் சரி பாதியைக் கைப்பற்றிக்கொண்டு வங்கத்தினுள் வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பதாயும், ஆஷா மலயகிரிக்குப் போயிருப்பதாயும் சர்வார்த்தர் சொல்லியதைக் கேட்டு விஜயகேசரி அசந்து போனார். ஆஷா மலயகிரிக்குப் போயிருப்பாளென்பதை மட்டும் அவர் நம்பவில்லை. யாத்திரை போயிருப்பதாகச் சொல்லிவிட்டு அவள் படைகளுக்குத் தலைமை தாங்கிப் போயிருக்க வேண்டுமென்றே அவர் நினைத்தார். ராஜகிருகத்துக்கு உடன் தகவல் அனுப்பி விட்டு நிலைமையை அவர் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஆஷா மங்களகிரிக்குத் திரும்பிவிட்டாளென்ற தகவல் கிடைத்ததும் அவளை உடன் பார்ப்பதற்கு அவர் அரண்மனைக்கு விரைந்தார். அந்தச் சமயத்தில்தான் ஆஷா பளிங்குத் தடாகத்தில் ஸ்நானம் செய்துவிட்டு பணிப்பெண்கள் அலங்காரம் செய்கையில் அசரீரியின் ஓலையை வாசித்து அகமகிழ்ந்து கொண்டிருந்தாள்.

விஜயகேசரி வெகு நேரமாகக் காத்திருக்கிறார் என்ற தகவலை ஒரு பணிப்பெண் அங்கு வந்து சொன்னாள்.

''சபாமண்டபத்தில் இருக்கச் சொல்லு. சர்வார்த்தர் எங்கு இருந்தாலும் கண்டுபிடித்து சபா மண்டபத்துக்கு வரச்சொல்லிவிட்டு எனக்குத் தகவல் கொடு'' என்றாள் ஆஷா. விஜயகேசரி எப்போது அரண்மனைக்கு வந்தாலும் ஆஷாவின் பேட்டி சுலபமாக அவருக்குக் கிடைப்பதில்லை. அவரை வெகுநேரம் வரையில் காத்திருக்க வைத்துவிட்டுப் பிறகு சந்திப்பதில் ஆஷாவுக்கு ஒரு ஆத்ம திருப்தி. அதே போல் இன்றும் விஜயகேசரி பொறுமையை இழந்து பேட்டி வேண்டாமென்றெண்ணி எழுந்திருந்த சமயம், ஆஷா சர்வாலங்கார பூஷிதையாய் அவருக்குக் காட்சி கொடுத்தாள்.

''வெகு நேரமாகக் காத்திருக்கச் செய்துவிட்டேனே, மன்னிக்க வேண்டும். போர்முனையிலிருந்து கிடைத்த அவசரச் செய்திகளை உடன் கவனிக்க வேண்டியிருந்தது. உங்கள் புதிய சக்கரவர்த்தியார் சௌக்கியம்தானா?'' என்று குசலப் பிரச்னம் செய்தாள் ஆஷா.

''தாங்கள் மலயகிரிக்குச் சென்றிருந்ததாகக் கேள்விப்பட்டேன். நான் கேள்விப்பட்டது உண்மையாயிருந்தால் அங்கு சக்கரவர்த்தியாரைச் சந்தித்திருக்க வேண்டுமே'' என்றார் விஜயகேசரி.

''ஆம் சந்தித்தேன். இருவரும் சேர்ந்துதான் மலயப்பர் கோயிலுக்குள் போனோம்'' என்று ஆஷா கூறிய பொழுது, ''சக்கரவர்த்தியார் சுகம்தானா? என்ற கேள்வியை உங்களிடம்தான் நான் கேட்கவேண்டும்? எனக்குப் பிறகு கடைசியாக நீங்களே அவரைச் சந்தித்திருக்கிறீர்கள்'' என்றார் விஜயகேசரி.

''நான் மங்களகிரிக்குத் திரும்பிய பொழுது தான் அவரும் ராஜகிருகத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தார். ஏனோ தெரியவில்லை. என்னைக் கண்டாலே அவருக்குக் கசப்பாக இருக்கிறது'' என்றாள் ஆஷா.

"உங்களுடைய காரியங்கள் அவருக்கு இனிக்குமென்று எதிர்பார்க்கிறீர்களா ராணி" என்று ஒரு கேள்வியைப் போட்டார் விஜயகேசரி.

"ஏன்? அவருக்கு நான் என்ன செய்துவிட்டேன்?" என்று ஒரு விசமச் சிரிப்புடன் அவள் கேட்ட பொழுது "இன்னும் என்ன செய்ய வேண்டும்? அவருடைய சிற்றன்னையை சிறை வைத்திருந்தீர்கள். ஜனகரை இங்கு தருவித்து ஆஜாத்சத்ருவை அவமதிக்கத் திட்டமிட்டீர்கள். மகதத்தைப் பற்றி அண்டை நாடுகளிலெல்லாம் அபாண்டமான வதந்திகளைக் கிளப்பிவிட்டு ஒரு மிகப் பெரிய யுத்தத்தை மூட்டினீர்கள். கொலைகாரன் பிள்ளையைக் காப்பாற்றி இங்கு கொண்டுவந்து வைத்திருக்கிறீர்கள். மகதத்திற்கு மங்களகிரி மீதுள்ள ஆதிபத்திய அதிகாரத்தை ஒருதலைப்பட்சமாகத் தகர்த்து சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்டிருக்கிறீர்கள். இவ்வளவுக்கும் மேலாக இப்பொழுது எங்கள் நாடாகிய அங்கத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறீர்கள். இவைகளையெல்லாம் பார்த்துச் சக்கரவர்த்தி சந்தோஷப்படுவார் என்று நினைக்கிறீர்களா?" என்று குற்றப் பத்திரிகை வாசித்தார் விஜயகேசரி.

இத்தனையையும் சிறிதுகூட பதட்டப்படாமல் புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்த ஆஷா "உங்களுடைய எல்லா குற்றச்சாட்டுகளுக்கும் பதிலளிப்பதென்றால் அதற்கு இப்பொழுது நேரமில்லை. ஆனால் கடைசியாக நீங்கள் சொல்லிய இரண்டு விஷயங்களை மட்டும் நீங்கள் உடனடியாகத் திருத்திக் கொள்ள வேண்டும். எங்கள் நாடாகிய அங்கம் என்று சொன்னீர்களே, அங்கம் எப்படி உங்கள் நாடாகுமென்று எனக்குப் புரியவில்லை. நான்கு வருடங்களுக்கு முன்னால் அதன் சுதந்திரத்தை நீங்கள் பறித்துக் கொண்டீர்கள். அன்று நீங்கள் செய்த அதே காரியத்தைத்தான் இன்று நாங்களும் செய்திருக்கிறோம். இன்று நாங்கள் செய்தது தவறென்றால், அன்று நீங்கள் செய்தது எப்படி நியாயமாகுமென்பது எனக்குப்

புரியவில்லை. இரண்டாவதாக ஆஜாத்சத்ருவைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது உங்கள் சக்கரவர்த்தி என்று தெளிவாகக் குறிப்பிடுவது நல்லது! மங்களகிரியின் சக்கரவர்த்தி என்ற ஸ்தானம் பிம்பிசாரருடன் போய்விட்டது. மங்களகிரி இப்பொழுது சர்வ சுதந்திர நாடு, அதன் ராணியும், அங்கத்தின் சக்கரவர்த்தினியும் ஆஷா என்பதை நினைவில் வைத்துக் கொண்டு பேசுமாறு உங்களுக்கு யோசனை கூறுகிறேன்'' என்றாள் ஆஷா.

அவளுடைய பேச்சில் அகம்பாவமும், இறுமாப்பும், அதே சமயம் உறுதியும் தொனித்ததை விஜயகேசரி கவனிக்காமலில்லை.

அகம்பாவத்துடன் மங்களகிரி ஒரு சர்வ சுதந்திர நாடு, அதன் சக்கரவர்த்தினி நான்தான் என்று ஆஷா சொல்லிய பொழுது, விஜயகேசரி ஒரு கணம் மௌனமாயிருந்தார்,

''என்ன யோசிக்கிறீர்கள்? இப்பொழுது மகதத்தின் பிரதிநிதியாக நீங்கள் இங்கிருக்கிறீர்களே தவிர, ராஜப் பிரதிநிதியாக அல்ல. இதைத் தெரிவித்து ராஜகிருகத்திற்கு ஏற்கனவே ஒரு ஸ்ரீமுகம் அனுப்பிவிட்டேன்'' என்றாள் ஆஷா.

''அப்படியா? மலயகிரியில் சக்கரவர்த்தியைச் சந்தித்த பொழுது தங்களுடைய இந்தத் தீர்மானத்தை அவருக்குச் சொன்னீர்களா?'' என்று கேட்டார் விஜயகேசரி.

''இல்லை! எழுத்து மூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டிய விஷயங்களை வாய்வார்த்தையாக யாராவது சொல்லுவார்களா? இப்பொழுது நீங்கள் பேசிக் கொண்டிருக்கையில் ராஜகிருகத்தில் உங்களுடைய சக்கரவர்த்தி எனது பிரகடனத்தைப் படித்துப் பார்த்துக் கொண்டிருப்பார்'' என்றாள் ஆஷா.

''ராணி! மகதத்தைப் பகைத்துக் கொள்ளுவதினால் உங்களுக்குத் தீமையே தவிர நிச்சயம் நன்மையில்லை.

இருமுனைப் போராட்டத்தில் மகதம் ஈடுபட்டிருப்பதினால் இந்த சமயத்தில் எதையும் செய்யலாமென்று எண்ணி அசட்டுத் துணிச்சலோடு காரியங்களைச் செய்கிறீர்கள். சேதி அரங்கப் போர் முடிந்துவிட்டால் மங்களகிரியை மகதம் இலேசில் மன்னிக்காது என்பதை மறந்துவிடாதீர்கள்'' என்றார் விஜயகேசரி.

அப்பொழுது, ''வெற்றி! வெற்றி!மகத்தான வெற்றி'', என்று ஒருவன் முழங்கிக் கொண்டே சபையில் பிரவேசித்தான். வந்த மனிதன் ஆஷாவுடன் விஜயகேசரி இருப்பதைக் கண்டதும் ''ஓ! நீங்களா?'' என்று சொல்லிவிட்டு ஆஷாவை அர்த்தபுஷ்டியோடு பார்த்தான்.

''போர்முனையிலிருந்து தளபதி வந்திருக்கிறார். அவருடன் அவசரமாகப் பேசவேண்டியிருக்கிறது. என்னை மன்னிப்பீர்களா?'' என்று ஆஷா கூறவும், ''நல்லது நான் வருகிறேன்'' என்று சொல்லி விடைபெற்றுச் சென்றார் விஜயகேசரி.

வந்த மனிதன் சற்றுமுற்றிலும் பார்த்துவிட்டு யாரும் அருகில் இல்லையென்பதை அறிந்ததும் ஆஷாவின் கரத்தைப் பற்றி ''வா உன் அறைக்குப் போய் பேசுவோம்'' என்றான்.

ஆஷா வெடுக்கென்று உதறித் தனது கரங்களை விடுவித்துக் கொண்டு ''இது சபா மண்டபமென்பதை மறந்துவிட்டாய்!'' என்று சொல்லிக் கொண்டு நடந்தாள். அந்த மனிதனும் முகத்தைச் சுழித்துக் கொண்டு பின்னால் போனான்.

ஆஷா தனது அறையை அடைந்ததும் கதவை உட்புறம் தாழிட்டுக் கொண்டு ஒரு ஆசனத்தில் அமர்ந்தாள். அவளுடன் வந்த மனிதனும் அவள் அருகில் அமர்ந்தான்.

''ஜயசிம்மா! இது கேளிக்கைக்கும் உல்லாசத்திற்கும் நேரமில்லை. வெற்றி வெற்றி என்று முழங்கினையே அந்தவிவ

ரத்தை முதலில் சொல்லு!'' என்று கேட்ட வண்ணம் ஆசனத்தில் ஒரு கோடியில் நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

''ஆஷா! உன்னை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. நீ சிரித்துப் பேசினாலும் பயமாயிருக்கிறது. சிணுங்கிப் பேசினாலும் பயமாயிருக்கிறது. உனக்காக நான் என்னுடைய உயிரையே பணயமாக வைத்து சேவை புரிகிறேனென்பதை நீ உணர்ந்திருக்கிறாயா என்பதைக்கூட சிற்சில சமயங்களில் நான் சந்தேகிக்கிறேன். என்றான் ஜயசிம்மன் என்று பெயர் சொல்லி அழைத்த மனிதன்.

ஆஷா, ஒரு மௌனப் புன்முறுவலை உதடுகளில் பரவ விட்டுக் கொண்டு, ''என்னைப் புரிந்து கொண்டவர் யாராவது இருந்தால் அது நீ ஒன்றுதானென்று இதுவரையில் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். உனக்கே புரியவில்லையென்றால் வேறு யாருக்கு என்னைப் புரியப் போகிறது? ஜயசிம்மா, உன்னுடைய மகத்தான தியாகங்களை நான் உணர்ந்திருக்கிறேனா என்று கேட்டாயல்லவா? அதற்கு நான் பதில் சொல்லத்தான் வேண்டுமென்றால் சொல்லுகிறேன், ஆஷாவுடன் நெருங்கிப் பேசக்கூடியவர் இந்த நாட்டில் உன்னைத்தவிர வேறு யார்? ஆஷாவை நீ என்று ஒருமையில் அழைக்கும் உரிமை இந்த மண்டலத்தில் உன்னைத்தவிர வேறு யாருக்கு உண்டு? ஆஷாவுடன் ஒரே ஆசனத்தில் சேர்ந்து அமர அந்த ஆஜாத்சத்ருவினால் தான் முடியுமா? என்னிடம் எவருக்குமில்லாத விசேஷ உரிமை பெற்ற நீயா உன் சேவைகளை நான் உணருகிறேனா என்று கேட்கிறாய்?''

இப்படி வினவியவாறு ஆஷா கையிலிருந்த பூச்செண்டை அவன்மீது வீசியெறிந்தாள். மேலே விழுவதற்கு முன்னால் இரு கரங்களினாலும் அதைப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்ட ஜயசிம்மன், ''ஆ...ஹா...

என்னைவிடப் பெரிய பாக்கியசாலி இந்த வையகத்தில் வேறு யார் இருப்பார்கள்?'' என்றான்.

''ஒருவரும் இருக்கமாட்டார்கள். இருக்கவும் கூடாது. உலகத்தில் ஒரே ஒரு ஜயசிம்மன்தான் இருக்க வேண்டும்'' என்று ஆஷா சொல்லிய பொழுது, தேன் குடித்த நரியைப் போல மெய்மறந்து போய் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் ஜயசிம்மன்.

''ஆஷா என்னிடம் நீ எத்தனை கொள்ளை அன்பும் ஆசையும் வைத்திருக்கிறாய் என்பதை அறியாமல் ஏக்கத்தில் ஏதோ உளறிவிட்டேன். என்னை மன்னித்துவிடு. ஒரு சந்தோஷச் செய்தியை அறிவிக்கவே போர் முனையிலிருந்து நானே வந்தேன். அங்கம் முழுவதும் நம் வசப்பட்டுவிட்டது. வங்கத்தில் பாதிக்குமேல் நமது சேனைகள் ஊடுருவிச் சென்றுவிட்டன. புண்டரத்தை மகதப் படைகள் பூராவாக சுவீகரித்துக் கொண்டிருந்தாலும் பல நாள் நீடித்த போராட்டத்தின் பயனாக அவை மிக்க களைப்படைந்திருக்கின்றன. அவைகளை விரட்டி புண்டரத்தை நாம் சுவீகரித்துக் கொள்ள இதைவிட இன்னொரு அருமையான சமயம் கிடைக்காது. புண்டரத்தில் மகதப் படைகள் நிலைகொண்டுவிட்டால் பிறகு அவர்களை வெளியேற்ற முடியாதென்பதோடு அவை எப்பொழுதும் வங்கத்தையும் அங்கத்தையும் பயமுறுத்திக் கொண்டேயிருக்கும். நீ என்ன சொல்லுகிறாய்?'' என்றான் ஜயசிம்மன்.

''நான் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? நீ சொல்லித்தானே நான் எதையும் கேட்கிறேன். சேதியிலும் புண்டரத்திலும், வங்கத்திலும் பிரமாண்டமான போராட்டத்திலே மகதத்தை ஈடுபடுத்தியது என்னுடைய ராஜதந்திரம் என்று மந்திரிசார்வார்த்தர் எண்ணிக்கொண்டிருக்கிறார். இந்த அரசியல் சதுரங்க விளையாட்டுகளுக்கெல்லாம் சூத்திரதாரியாக இருப்பன் நீ என்பதை என் ஒருவனைத்தவிர வேறுயார் அறிவார்கள்? ஜயசிம்மா, நெருப்

புடன் விளையாடும் உன்னுடன் நானும் சேர்ந்து குதித்திருக்கிறேன். நமது அரசியல் விளையாட்டுகள் எத்தனை அபாயகரமானவைகளென்பதை நான் அறியாமலில்லை. அப்படியிருந்தும் உன்னை நம்பி என் கணவரையே எதிர்க்கும் துணிச்சல் எனக்கு எப்படி ஏற்பட்டதென்பதை இப்பொழுது நினைத்தாலும் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் ஏதோ ஒரு பயங்கரமான கனவு காண்பதைப் போல எனக்கு எல்லாம் தோன்றுகிறது'' என்றாள் ஆஷா.

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் அவளது மிருதுவான வலது கரத்தைப் பற்றித் தடவியவாறு ''வாழ்க்கையே ஒரு பெரிய கனவு என்பதை நீ கேட்டதில்லையா ஆஷா?'' என்று கேட்டுக் கொண்டு அவளுடைய கண்களை கூர்ந்து கவனித்தான் ஜயசிம்மன். பிறகு, ''வாழ்க்கை கனவு என்றாலும் நம் பரஸ்பர அன்பு வெறுங்கனவாகி விடக் கூடாது'' என்று அவன் சொல்லி வைத்தான்.

அவனிடமிருந்து தனது கையை விடுவித்துக்கொண்ட ஆஷா, ''கணவனுக்குப் பணிவிடை செய்து அவன் இன்பத்தைத் தவிர வேறு எதையும் சிந்தியாமலிருக்க வேண்டிய எனக்கு, நாடாளும் ஆசையை ஊட்டினாய். பலம் பொருந்திய ஒரு ஏகாதிபத்தியத்தையே எதிர்த்து நிற்கும் சக்தியைக் கொடுத்தாய். அங்கத்தையும், வங்கத்தையும் வாள்முனையில் ஜெயித்து மங்களகிரியின் புகழை ஓங்கச் செய்தாய். இப்பொழுது புண்டரத்தையும் என் காலடியில் சமர்ப்பிக்கிறேனென்கிறாய். உனக்கு நான் என்ன கைமாறு செய்தாலும் போதாது'' என்றாள்.

''ஆஷா என்னைப்பற்றி நீ இவ்வளவு தூரம் புகழுகிறாய். ஆனால் உன் புகழ்ச்சிக்கெல்லாம் உரியவன் நான் அல்ல என்பதை நினைக்கும் பொழுது உண்மையில் எனக்கு வெட்கமாய் இருக்கிறது. நான் ஏதோ அசகாய சூரத்தனம் செய்துவிட்டதாகக் கூறுகிறாய்.

அதற்கெல்லாம் காரணமாயிருந்தது என்ன தெரியுமா?'' என்றான் ஜயசிம்மன்.

''என்ன?'' என்று கேட்டாள் ஆஷா.

''அதை நான் சொல்லித்தான் நீ தெரிந்து கொள்ள வேண்டுமா ஆஷா? கவர்ச்சிமிக்க உன் இரு கருவிழிகளைக் கேள். அவை என் துணிச்சலின் காரணங்களைச் சொல்லும். பளபளக்கும் பட்டுப் போன்ற உன் கன்னங்களைக் கேள். ஜயசிம்மன் உன் நலனுக்காக உயிரையே தியாகம் செய்ய சித்தமாயிருக்கிறானென்பதை அவை சத்தியம் செய்து சொல்லும். உன் கோவை இதழ்களுக்குத் தெரியும் கடும் போராட்டங்களிலே என்னை ஊக்குவிக்கும் மாயா சக்தி என்ன என்பது. வானவில்லின் வர்ண ஜாலங்களைக் காட்டும் உன் சுந்தர மதிவதனம் எந்த நெருக்கடியிலும் எனக்குப் பக்கத் துணையாக நிற்கும் பொழுது எனது வெற்றிகளுக்கெல்லாம் உண்மையில் நான் காரணமென்று எப்படிச் சொல்ல முடியும்?'' என்றான் ஜயசிம்மன்.

''போதும் ஜயசிம்மா போதும்! இப்படிப் பேசிக் கொண்டு போனால் கோட்டை நம் கையைவிட்டுப் போய் விடும். எப்பொழுதோ பேசவேண்டிய விஷயங்களை இப்பொழுது நாம் பேசுகிறோம்'' என்று ஆஷா சொல்லியதும் ''எப்பொழுதோ பேச வேண்டிய விஷயமென்றால் எனக்குப் புரியவில்லையே ஆஷா'' என்றான் ஜயசிம்மன்.

''இது யுத்தகாலம் என்பதை மறந்துவிட்டாயா? நாம் காட்டும் ஏகாதிபத்தியக் கோட்டை உறுதியான அஸ்திவாரத்தில் சிறப்பாகக் கட்டி முடியவேண்டும். இடையில் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு பாதி கட்டிய கோட்டை அஸ்திவாரத்தோடு பொலபொல என்று விழுவதை நான் விரும்பவில்லை. புண்டரத்தைத் தாக்க இதுவே பொருத்தமான நேரம் என்று சொன்னாய். அந்த நல்ல காரியத்தை முதலில் செய்துமுடி. புண்டரம் நம்வசப்பட்டுவிட்டால் மகதத்தின் தென்பாதி எல்லைகளில் நமது ஆதிக்கம் நிலை பெற்றுவிடும். பிறகு நடத்தும் இடுக்கித் தாக்குதலில்

தென் பகுதியை சுலபமாக நாம் இணைத்துக் கொண்டுவிட லாம். இன்றே, இப்பொழுதே நீ போர்முனைக்குத் திரும்பி வேண்டியதைச் செய்வதுதான் நல்லது. ஓடுகிறவர்கள் பின்னால் விரட்டப்படும் வரையில்தான் ஓடுவார்கள். விரட்டுபவர்கள் சற்றுத் தயங்கினால் ஓடுபவர்கள் எதிர்த்து நிற்கத் தலைப்படுவர். அதே போல வங்கத்தில் முன்னேறும் நம் படைகள் சற்றுத் தயங்கினாலும் ஜயித்தவைகளையெல் லாம் நாம் இழக்க வேண்டியதாயிருக்கும். உடனே புறப் படு'' என்று சொல்லி எழுந்தாள் ஆஷா.

''நல்லது ஆஷா, நல்லது. உடனே போர் முனைக்குத் திரும்புகிறேன். புண்டரத்தின் மணிமுடியோடு மறுபடி உன்னை வந்து சந்திக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பிய ஜயசிம்மனைக் குளுமையாகப் பார்த்தாள் ஆஷா. அவளுடைய அந்த ஒரு பார்வை ஜயசிம்மனுக்கு பல யானைகளின் பலத்தை அளிப்பதைப் போல் இருந் தது.

அவன் அறையைவிட்டு வெளியே போனபிறகு, ஆஷா ஒரு வெற்றிப் புன்னகையுடன் நிலைக் கண்ணாடி முன்பு போய் நின்று தன்னைத்தானே பார்த்துக் கொண்டாள். கண்ணாடியில் பிரதிபலித்த தனது உருவத்தைப் பார்த்து ''ஆஷா! உன்னுடைய மயக்கும் விழிகள் ஜயசிம்மனை என்ன பாடுபடுத்திவைக்கிறதென்பதைப் பார்த்தாயா? மங்களகிரியை ஒரு மாபெரும் சாம்ராஜ்யமாகக் கட்டி யெழுப்பியவுடன் அதன் சக்கரவர்த்தினியின் அருகிலே அமரும் சந்தர்ப்பம் தனக்குத்தான் என்று கனவு காண்கிறான் அந்த முட்டாள். ஆணழகன் ஆஜாத்சத்ரு வுக்கே அப்பாற்பட்டவளாக இருக்கும் ஆஷாவை இவன் அறிந்து கொண்டது இவ்வளவுதான்'' என்று வாய்விட்டுச் சொன்னாள்.

ஆஜாத்சத்ருவை நினைத்த மாத்திரத்தில் கண்ணாடி யில் தெரிந்த தனது பிரதிபிம்பத்தின் அருகிலே ஆஜானு பாகுவாக ஆஜாத்சத்ருவும் நிற்பதைப் போல ஒரு

பிரமை தட்டியது அவள் மனதில். குப்பென்று முகம் சிவக்க ஒருகணம் அவள் தலையைக் குனிந்து கொண்டாள். திரும்பவும் கண்ணுடியைப் பார்த்த பொழுது ஆஜாத் சத்ருவின் உருவத்தை முன்பு பார்த்த இடத்தில் காணேம்.

''அவரைத்தான் பார்க்கும் பொழுதெல்லாம் அவமதித்து அலட்சியப்படுத்துகிறேனே! அவருக்கும் அவரது நாட்டுக்கும் நான் செய்துவரும் துரோகங்கள் ஒன்ரு? இரண்டா? மூன்ரு? அப்படியிருந்தும் அவர் நினைவு ஏன் இவ்விதமான நெகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறது'' என்று தனக்குள் எண்ணிய ஆஷா, கண்ணுடிக்குள் தெரிந்த தனது உருவத்தைப் பார்த்து, ''ஆஷா நீ மண்டலத்தையே ஒரு குடையின் கீழ் ஆளப்பிறந்தவள். யாருக்கும் அடிமையாகக் கட்டுப்பட்டு வாழப்பிறந்தவளில்லை. அசரீரி சொல்லிய பொய்யா மொழியை மறந்துவிடாதே! வீர பரம்பரையில் வந்த அழகன் ஆஜாத்சத்ருவிடமோ அல்லது உனக்காக உயிர்த் தியாகம் செய்யக் காத்திருக்கும் ஜயசிம்மனிடமோ மனதைப் பறிகொடுத்து ஒரு ''சாதாரண பெண்ணுகி''விடாதே! உன்னைக் கடுமையாக எச்சரிக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு மளமளவென்று அங்கிருந்து நந்தவனத்தை நோக்கி நடந்தாள் அவள்.

அன்று மாலை அந்தி மயங்கும் நேரத்தில் விஜயகேசரியைத் தேடிக்கொண்டு வந்தான் மாதுரி. வாசக நேயர்கள் மாதுரியை இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். மாதுரி வருகிருளென்ருல் மந்திரி சர்வார்த்தரிடமிருந்து ஏதோ ஒரு முக்கியமான செய்தி வருகிறதென்று அர்த்தம், அதேபோல அவள் ஒரு ஓலையைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:'

ஓம் சுத்த சக்தி.

உங்களுக்கு இந்தச் செய்தியை அனுப்ப நான் உயி ருடன் இருப்பதே பேராச்சரியம். தெய்வத்தின் அருளினுல் தான் மரணத்தின் தலைவாசலில் இருந்து மயிரிழையில் நான் உயிர் தப்பினேன். அந்தச் சம்பவத்தை இப்பொழுது நினைத்துப் பார்த்தால்கூட சரீரம் மயிர்க் கூச்சலிடுகிறது. இன்று காலை நீங்கள் அரண்மனைக்கு வந்தீர்களாம். உங் களோடு பேசும்பொழுது நானும் பக்கத்தில் இருக்க வேண் டும் என்பதற்காக என்னை அழைத்துவர ஆஷா ஆள் அனுப்பியிருக்கிருள். ஆனுல் அந்தச் சமயம் நான் வீட்டில் இல்லை. எங்கு இருந்தேன் என்பதைக் கேட்டால் நீங்கள் மூர்ச்சை போட்டு விழுந்துவிடுவீர்கள்.

''என்னைத் தேடிக்கொண்டு ஆஷாவின் ஆள் என் வீட் டுக்கு வந்த பொழுது ஆஷாவைத் தேடிக்கொண்டு நான் அரண்மனைக்குப் போய்க் கொண்டிருந்தேன். காலை நேரங் களில் அவள் சாதாரணமாக தன்னுடைய அறையில்தான் இருப்பது வழக்கம். ஆகையால் நேராக அங்கு சென்றேன். அறையில் ஆஷாவைக் காணும். பேசாமல் திரும்பிருக்கக் கூடாதா? கட்டிலின் அருகிலுள்ள மேசைமீது கிடந்த ஒரு ஓலை என் கவனத்தைக் கவர்ந்தது. அது போர்முனையிலிருந்து வந்ததாக இருக்கலாமென்று நினைத்துப் படித்துப் பார்க் கக் கையில் எடுத்தேன். அவ்வளவுதான். அறைக்கு வெளி யில் ''ஜல் ஜல்'' என்று மெட்டியின் சப்தம் கேட்டது. என் னுடைய சப்த நாடிகளும் ஒடுங்கிப் போய்விட்டன. ஆஷா இல்லாத சமயத்தில் அவளுடைய அறைக்குள் நான் நுழைந்ததே முதல் தவறு. இரண்டாவதாக அவளுடைய கட்டிலின் அருகில் நின்றது மிகப் பெரிய தவறு. அந்த நிலைமையில் என்னைக் கண்டால் அவள் என்ன செய்வா ளென்பதை நினைத்த மாத்திரத்தில் என் உடலிலுள்ள ஒவ்வொரு துளி இரத்தமும் சில்லிட்டுப் போய்விட்டது. வெள்ளம் தலைக்குமேல் போனபிறகு சாண் போனுலென்ன முழம் போனுலென்ன என்று எண்ணிக் கட்டிலுக்குப்

பின்னால் போய் மறைந்து கொண்டேன். அந்த நெருக்கடியில் நான் செய்யக்கூடியது வேறொன்றுமில்லை. சிறிதுநேரத்துக்கெல்லாம் ஆஷாவும் ஜயசிம்மனும் உள்ளே நுழைந்தார்கள்.

இதன்பிறகு ஆஷாவும் ஜயசிம்மனும் பேசிய விவரங்களை விரிவாக எழுதிவிட்டு, மேலும் அந்த ஓலை குறிப்பிட்டதாவது:—

''ஜயசிம்மனை பல சமயங்களில் ஆஷாவுடன் தனியாக நான் பார்த்திருக்கிறேன். இவனுக்கு மட்டும் ஆஷா பிரத்தியேகமாக ஏன் பேட்டி கொடுத்துப் பேசுகிறாளென்பது அப்பொழுதெல்லாம் எனக்கு விளங்காத புதிராக இருந்தது. இப்பொழுதுதான் ஆஷாவின் வாழ்க்கையில் ஜயசிம்மன் எத்தனை முக்கியமான பங்கு கொண்டிருக்கிறானென்பதை நான் அறிய முடிந்தது. அவன் போனபிறகு ஆஷா தன் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்துப் பேசியதைக் கவனிக்கையில், ஜயசிம்மனை தேவையானவரை உபயோகித்துக் கொண்டுவிட்டு பிறகு அவனை அவள் என்ன செய்யப் போகிறாளென்பதைத் தெளிவாக நான் உணருகிறேன். ஆஜாத்சத்ருவின் அழகும் வீரத் தோற்றமும் ஆஷாவின் மனதில் ஒரு ஏக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இதில் சந்தேகமேயில்லை. அதேசமயம் மண்ணாசை அவளிடம் இருந்து பெண்மையைப் பறித்துச் சித்தத்தைக் கல்லாக்கிக் கொண்டிருக்கிறது.

புண்டரத்தை உடனடியாகத் தாக்குவதற்கு ஏற்பாடு செய்ய ஜயசிம்மன் புறப்பட்டுப் போயிருக்கிறான். புதிதாகக் கிடைத்த வெற்றியில் ,அனுருத்தர் சற்று அசமந்தமாயிருந்தால் புண்டரம் எங்கள் கையைவிட்டுப் போய்விடும். அனுருத்தரை உடனே எச்சரிக்கை செய்து வையுங்கள்.''

ஓம் சுத்தசக்தி.

மேற்படி ஓலையை விஜயகேசரி படித்து முடித்ததும் அங்கம் முழுவதும் தங்கள் வசப்பட்டுவிட்டதை வெற்றி

வெற்றி என ஜயசிம்மன் முழங்கிக் கொண்டு வந்திருக்கிறு னென்பது அவருக்குப் புலப்பட்டது. புண்டரத்தைத் தாக்க ஜயசிம்மன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவிருப் பதை ஆஜாத்சத்ருவுக்கும் அனுருத்தருக்கும் உடனடியா கத் தெரிவிக்காவிட்டால் மிகப் பெரிய அபாயம் ஏற்படு மென்பதை அவர் உணர்ந்திருந்தார். இதற்குத் தேவை யான ஏற்பாடுகளை அவர் துரிதமாகச் செய்து கொண்டிருக் கையில், ராஜகிருகத்தில் ஆஜாத்சத்ருவும் நந்திவர்மனும் அனுருத்தரும் அதி முக்கியமான மந்திராலோசனை நடத் திக்கொண்டிருந்தார்கள். அங்க, வங்கப் போர்முனைகளின் நிலைமையையும், புண்டரத்தில் பரிபூரண வெற்றியீட்டி யதையும் தெரிவிப்பதற்காக அனுருத்தர் ராஜகிருகத்துக்கு வந்திருந்தார்.

''நந்திவர்மரும், அனுருத்தரும் ஏற்கனவே யோசித்து வைத்திருந்த ஒரு போர்த் திட்டத்தை நந்திவர்மன் ஆஜாத்சத்ருவுக்கு எடுத்துச் சொன்னுன். சேதி, புண்ட ரம், வங்கம் ஆகிய நாடுகள்மீது நமக்குப் பகையில்லை. அவை நம்மைத் தாக்க வருவதாக ஆஷாவும், உக்கிரசேனரும் கிளப்பிவிட்ட வதந்திகளை நம்பியே நாம் போரை ஆரம் பித்தோம். இந்த உண்மையை அம் மூன்று நாட்டு அர சர்களுக்கும் எடுத்துச் சொல்லி, போர் நிறுத்தத்துக்கு உடனே ஏற்பாடு செய்வோம். இம் மூன்றையும் சுதந்திர நாடுகளாக அங்கீகரித்து அவற்றின் உதவியோடு மங்கள கிரியின் கொட்டத்தை அடக்குவோம். மங்களகிரி மறுபடி தலையெடுக்க முடியாதபடி உறுதியான நடவடிக்கை எடுத்து நசுக்கிவிட்டால் அங்கமும், வங்கமும், புண்டர மும் பிறகு மகதத்துடன் இணைந்தவைகள் போலாகி விடும். இந்தச் சமயத்தில் இதுதான் விவேகமான நட வடிக்கையென்று எனக்குத் தோன்றுகிறது.''

இதுதான் அனுருத்தர் கூறிய திட்டம்.

''ஒரு பெண், மகதத்தின் தலைவிதியை எப்படி ஆட்டு விக்கிருளென்பதை நினைக்கும்பொழுது எல்லாம் ஒரு

கோரமான கனவு போலிருக்கிறது எனக்கு. ஆஷாவுக்குப் பயந்து இப்பொழுது சேதி யுத்தத்தை நாம் நிறுத்து கிறோம். அங்கத்துக்கும், புண்டரத்துக்கும் சுதந்திரம் அளிக்கிறோம். சுருக்கமாக உங்கள் யோசனை இதுதானே?'' என்று மனக்கசப்புடன் கேட்டான் ஆஜாத்சத்ரு.

''மாற்று யோசனை ஏதாவது இருந்தால் சொல்லுங் கள். ஆஷா வங்கத்தோடு நிற்பாளென்று எனக்குத் தோன்றவில்லை. அங்கத்திலும், வங்கத்திலும் அடைந்த வெற்றிகளை ஸ்திரப்படுத்திக்கொள்ள புண்டரத்தில் அவள் ஊடுருவ முயற்சிப்பது எப்படியும் தவிர்க்க முடியாது. அங் கத்திலும், வங்கத்திலும் நமக்கு ஏற்பட்ட பெருந் தோல்வி புண்டரத்திலுள்ள நமது சேனைகளுக்கு நின்று பிடிக்கும் மன உறுதியையும் உற்சாகத்தையும் அளிக்குமா என்பதைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். மங்கள கிரியையே நாம் நேரடியாகத் தாக்கப் புறப்படுகிறோமென் ருல் இரு முனைகளில் தோல்வி கண்ட நம் வீரர்கள் அத் தோல்விகளுக்கு வஞ்சம் தீர்க்க வேண்டுமென்ற துடிப் பில் ஆக்ரோஷத்தோடு தாக்குதல் நடத்த முன்வருவார் கள்'' என்ருர் அனுருத்தர்.

''நல்லது! நீங்கள் இருவரும் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். இரவு யோசித்து நாளைக் காலை என் முடிவைச் சொல்லுகிறேன்'' என்ருன் ஆஜாத்சத்ரு.

இரவில் யோசித்து மறுநாள் பதில் சொல்லுவதாக ஆஜாத்சத்ரு தனது சேனதிபதிகளுக்கு சொல்ல ஒரு முக்கிய மான காரணமிருந்தது. மலயகிரிக்குச் சென்றிருக்கும் கோசல மன்னன் விதூர்த்தன் எப்படியும் ராஜகிருகத் துக்கு வருவானென்றும், ஆஷாவிடம் அவனுக்கும் பகை இருப்பதினல் ஆஷாமீது நடவடிக்கை எடுப்பதில் அவன் யோசனையைக் கேட்பதும் நல்லதென்றும் ஆஜாத்சத்ரு கருதினன். அவன் எதிர்பார்த்ததைப் போலவே மறுநாள் விதூர்த்தன் தனது பரிவாரங்களோடு ராஜகிருகத்துக்கு

வந்து சேர்ந்தான். அவனை வரவேற்று உபசரிக்க மிகப் பெரிய தோரணையிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆஜாத்சத்ருவின் உத்தரவுப்படி தலைநகரம் இரவோடு இரவாகத் திருவிழாக் கோலம் பூண்டது. மகதம் காட்டிய அன்பு விதூர்த்தனைப் பரவசமடைந்து போகச் செய்தது.

''நீங்கள் காட்டும் இத்தனை அன்புக்கும் நான் எப்படிக் கைமாறு செய்யப் போகிறேனோ தெரியவில்லை. நாம் இருவரும் ஒரேமாதிரியான சூழ்நிலைமையில் தகப்பனை இழந்து அனாதையாகியவர்கள். பன்னெடுங் காலமாக நேசமுடன் வாழ்ந்து வந்திருக்கின்றன நம் இரு நாடுகளும். இந்த நட்பு என்றைக்கும் நீடிக்க வேண்டும்!'' என்று நன்றி தெரிவித்தான் ஆஜாத்சத்ருவுக்கு விதூர்த்தன்.

பிறகு, அவர்கள் வடகிழக்குப் பாரதத்தின் அரசியல் நிலைமை பற்றி விவாதிக்கத் தலைப்பட்ட பொழுது, அனுருத்தர் கூறிய யோசனைகளை ஆஜாத்சத்ரு எடுத்துச் சொல்லி, ''இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''சேதி யுத்தத்தை நிறுத்தாமலே மங்களகிரியின் மீது நீங்கள் படையெடுப்பு நடத்த விரும்பினால் நான் ஒரு பெரும் சேனையை அனுப்பி உதவத் தயாராக இருக்கிறேன். ஆஷாவைப் புண்டரத்தில் கால் ஊன்ற அனுமதிப்பது மகதத்துக்கு மட்டுமல்ல, கோசலத்துக்கும் அபாயகரமானதாகையால் மங்களகிரிமீது நடத்தும் போராட்டம் நம்முடைய பொதுவான போராட்டம். ஆகையால் எனது படை உதவியைப் பெறுவதற்கு நீங்கள் சற்றும் தயங்கத் தேவையில்லை. என்றாலும் அனுருத்தர் கூறுவதில் ஒரு நியாயம் இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. சேதியின்மீதோ அல்லது வங்கம், புண்டரத்தின்மீதோ மகதத்துக்கு எவ்விதமான பகையுமில்லை. அவர்களும் மகதத்திடம் பகை பாராட்டவில்லை. உக்கிரசேனர் செய்த விஷமமே யுத்தத்தைத் தூண்டிவிட்டது.

அதற்குப் பரிகாரமாக யுத்தத்தை நேசபாவத்துடன் நிறுத்துவது எல்லோருக்கும் நல்லது. உங்கள் நல்லெண்ணத்தில் சேதி நாட்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய அவசியமானல் நந்திவர்மருடன் நானும் சேதி எல்லைக்குப் போய் வருகிறேன்'' என்று பெருந்தன்மையோடு சொன்ஞன் விதூர்த்தன்.

விதூர்த்தன் யோசனைப்படியே செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. அனுருத்தரும் விதூர்த்தனும் சேதி எல்லைக்குப் புறப்படுவதின் முன்னுல் அவர்களுடைய வருகையையும், யுத்தம் நிறுத்தப்படவிருக்கும் தகவலையும் தெரிவிக்க விசேஷ தூதுவர்கள் போர்முனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அன்று நண்பகலே அந்த நாட்டு மன்னன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஆஜாத்சத்ருவின் சபா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டான். புண்டரத்தில் இருந்து சிறைப்பிடித்து வந்த அந் நாட்டு மன்னன், சேனுதிபதிகள் முதலியவர்களும் சபா மண்டபத்திற்கு கொண்டு வரப்பட்டார்கள். விதூர்த்தன் முன்னிலையில் ஆஜாத்சத்ரு அவர்களுக்கு விடுதலை அளித்ததுடன், உக்கிரசேனர் நிகழ்த்திய கோர நாடகத்தைச் சுருக்கமாக அவர்களுக்குச் சொன்ஞன்.

''கடந்தவைகளை நாம் மறந்துவிடுவோம். அங்கமும் புண்டரமும் இந்த நிமிடத்திலிருந்து சர்வ சுதந்திர நாடுகள். மகதத்துக்கும், கோசலத்துக்கும் இணைபிரியாத நண்பர்கள். உங்களுடைய சுதந்திரத்துக்குப் பங்கமில்லாத முறையில் மகத சாம்ராஜ்யத்தின் உறுப்புகளாக நீங்கள் இருப்பதாயின், மகதத்தின் உதவி உங்களுக்கு எப்பொழுதும் கிடைக்கும். சிறு நாடுகளான உங்கள் நாடுகளுக்கு மகதம் ஒரு உடன்பிறந்த அண்ணன் போலிருந்து ஆதரவு கொடுக்கும். விருப்பமில்லையென்ருல் நீங்கள் தனித்துத் துண்டித்துக் கொண்டிருப்பதிலும் எனக்கு ஆட்சேபனை இல்லையென்பதை விதூர்த்தர் முன்னிலையில் உறுதி கூறுகிறேன்'' என்ருன் ஆஜாத்சத்ரு.

இழந்த சாம்ராஜ்யம் திரும்பக் கிடைக்கின்றதென்ற மட்டில் புண்டரக மன்னன் மகதப் பேரரசின் ஒரு அங்கமாக இருக்க சற்றும் தயக்கமின்றி உடனே ஒப்புக் கொண்டுவிட்டான். அங்கத்தின் அரசன்தான் சற்றுத் தயங்கினான். அங்கம் இப்பொழுது மங்களகிரியின் ஆதிக்கத்துக்குப் போய்விட்டதென்ற தகவல் பாதுகாப்புக் கைதியாயிருந்த அவனுக்குத் தெரிய நியாயமில்லை என்றாலும் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டுக்குத் திரும்பினால் மக்கள் ஆதரவு தனக்கு எந்தமட்டும் இருக்குமென்பதை அவன் சந்தேகித்திருக்க வேண்டும்.

"என்ன யோசிக்கிறீர்கள் நண்பரே? அங்கத்தின் அரசைப் பிச்சை வாங்குவதுபோல என்னிடமிருந்து வாங்கிக் கொள்ளுவது அவமானமென்று தயங்குகிறீர்களா? இத்தகைய அபக்கியாதி உங்களுக்கு இருக்கக் கூடாதென்பதற்காகவே ஆண்டவன் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இப்பொழுது உருவாக்கிக் கொடுத்திருக்கிறான். மங்களகிரி ராணி ஆஷா, மகதத்திடமிருந்து அங்கத்தைப் பறித்துக் கொண்டிருக்கிறாள். நீங்கள் போர் செய்து உங்களுடைய ராஜ்யத்தை வாள்முனையில் திரும்ப ஜெயிக்கப் போகிறீர்கள். உங்களுக்குத் தேவையான படைகளை மகதம் கொடுத்துதவும். உங்களுடைய நாட்டை நீங்கள் திரும்ப வெற்றி கொண்ட பிறகு, மகத சாம்ராஜ்யத்தில் ஒரு உறுப்பாக இருப்பதா அல்லது தனித்திருப்பதா என்பதை நீங்களாகவே முடிவு செய்து கொள்ளுங்கள். ஆனால் நான் ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்லுகிறேன். அங்கத்தை ஆஷாவிடமிருந்து மகதப் படைகள் எப்படியும் விடுவிக்கப் போகின்றன. அந்தப் படைகளுக்கு நீங்கள் தலைமை வகித்துச் சென்றால் நீங்களே அதன் அரசனாக முடி சூட்டிக் கொள்ளலாம். இதற்கு நீங்கள் சம்மதிக்கா விட்டால் விடுதலையடைந்தபின்னர் அந்த நாட்டு மக்கள் தங்களுடைய அரசனைத் தாங்களாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். அங்கத்தை விடுவித்து முன்போல ஒரு சுதந்திர

நாடாக்கிய பிறகு, அதனுடன் எங்களுடைய தொடர்பு அற்றுப் போகும். என்ன சொல்லுகிறீர்கள்?'' என்றான் ஆஜாத்சத்ரு.

இந்த விளக்கம் அங்கத்தின் மன்னனுக்குப் பரம திருப்தியைக் கொடுத்தது. உடனே இந்த யோசனைக்கு அவர் சம்மதித்தார்.

''சேதி யுத்தமும் இதோ நிற்கப் போகிறது. வடமேற்குப் பாரதம் முழுவதும் ஒற்றுமையாக, கட்டுப்பாடாக அன்பினால் பிணைக்கப்பட்டு முன்னேறும் ஒரு புதிய சகாப்தத்தையே இன்று நாம் துவக்கி வைத்திருக்கிறோம். தப்பெண்ணங்களுக்கெல்லாம் இன்று ஆழக்குழி தோண்டி விட்டோம். மலயப்பர் அருளினால் ஒரு மறுமலர்ச்சியை நாம் கண்டோம். இந்த மறுமலர்ச்சியின் சிற்பியாக வருங் காலச் சரித்திரம் நமது நண்பர் ஆஜாத்சத்ருவைப் புகழட்டும்'' என்றான் விதூர்த்தன்.

காலம் சிறகுகளைக் கட்டிக்கொண்டு பறந்தது. ராஜகிருகத்தில் மகதம், கோசலம், அங்கம், புண்டரம் ஆகிய நான்கு தேச மன்னர்கள் சந்தித்துப் பேசிய இரண்டு வாரங்களுக்குள்ளாக சேதி யுத்தம் சுமுகமான முடிவுக்கு வந்துவிட்டது. இதற்கிடையில் வங்கம் முழுவதையும் ஆஷாவின் சேனைகள் ஆக்கிரமித்துக் கொண்டு புண்டரத்திலும் வெகுதூரம் ஊடுருவத் தலைப்பட்டதினால் வங்க மன்னன் வஜ்ரகாந்தன் புண்டரகத்துக்குத் தப்பியோடி அங்கிருந்து ராஜகிருகத்தை வந்தடைந்தான். ஆஜாத்சத்ருவும், விதூர்த்தனும் அனுப்பிய கூட்டு அழைப்பின்மீது சேதி நாட்டு மன்னனும் ராஜகிருகத்துக்கு வந்திருந்தான். ஒரு இராணுவ மந்திராலோசனைச் சபையாக அவர்கள் கூடி மங்களகிரியின் ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய ஒரு கூட்டுத் திட்டத்தைத் தயாரித்தார்கள்.

''மாவீரர்களென்று வையகம் போற்றும் முடி மன்னர்களாகிய நாம், ஒரு பெண்ணின் சாகசத்தை அடக்குவதற்காக இவ்வளவு பெரிய மகாநாட்டைக் கூட்டிப் பேச

வதை நினைக்கும்பொழுது உண்மையாகவே எனக்கு வெட்கமாயிருக்கிறது. ஆயினும் உண்மை நிலைமையை நாம் அலட்சியம் செய்வதற்கில்லை. ஆஷாவுக்குப் பின்னால் ஏதோ ஒரு சக்தி இயங்குகிறதென்ற சந்தேகம் எனக்கு வெகு காலமாக உண்டு. அந்தச் சக்தி கலிங்கமா அல்லது வேறு ஏதாவதா என்பது நிச்சயமாகத் தீர்மானிப்பதற்கில்லை. அவளுக்குப் பக்க பலமும் துணிச்சலும் அளிப்பது யாராக இருந்தாலும் அவளுடைய இலட்சியம் வடகிழக்கு பாரதம் முழுவதிலும் ஏக சக்ராதிபத்தியம் செலுத்துவது தானென்பதில் இனிச் சந்தேகத்திற்கிடமில்லை. அவளுடைய புண்டரக ஆக்கிரமிப்பு இந்தச் சந்தேகங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. மங்களகிரியின் இராணுவ பலத்தையும், செல்வாக்கையும் முறியடிக்க வேண்டுமென்பதில் நம்மிடையே கருத்து வேற்றுமை இல்லை. மங்களகிரியைக் கைப்பற்றி அதில் ஒரு பாதி சேதி நாட்டுடனும், இன்னொரு பாதி அங்கத்துடனும் இணைக்கப்பட வேண்டுமென்பதை நாம் ஏற்கனவே ஒப்புக் கொண்டிருக்கிறோம். புண்டரம், அங்கம், வங்கம் ஆகிய மூன்று போர் முனைகளிலும் அந்த நாட்டு மன்னர்களே தலைமை தாங்கி யுத்தத்தை நடத்தட்டும். அங்க, வங்கப் போர்முனைகளுக்குச் சேதி நாட்டுப் படைகள் உதவிபுரிகின்றன. புண்டரப் போர்முனையில் மகதப் படைகள் கட்டுப்பாடான தாக்குதலை நடத்தும். மங்களகிரியை நான் கவனித்துக் கொள்ளுகிறேன். யுத்தத்தின் போக்கை கவனித்துக் கொண்டு அவசியமானால் விதூர்த்தரின் உதவியை நாடுவோம். இந்த ஏற்பாடு உங்கள் எல்லோருக்கும் சம்மதம்தானா என்பதைச் சொல்லுங்கள்'' என்றான் ஆஜாதசத்ரு.

''சிறிது நேர விவாதத்திற்குப் பின்னர் அந்தத் திட்டத்தை எல்லோரும் ஒப்புக் கொண்டனர். பத்துத் தினங்களுக்குள் படையெடுப்புகளை ஆரம்பிப்பதென்ற தீர்மானத்தோடு மகாநாடு கலைந்தது. விதூர்த்தன் தனது உதவி

எந்த நேரம் தேவையாயினும் தயங்காமல் கிடைக்கு மென்ற உறுதிமொழி அளித்துவிட்டுக் கோசலத்துக்குத் திரும்பினான்.

''ஆமாம்! மங்களகிரியைச் சேதிக்கும், அங்கத்திற்கும் பங்கிட்டுக் கொடுப்பதாகச் சொன்னீர்களே, நமக்கு இந்த யுத்தத்தினால் என்ன இலாபம்? ராஜகுரு சோதிடம் சொல்லியதைப் போல அங்கம் நம் கையைவிட்டுப் போய்விட்டது. ரத்தம் சிந்திப் பிடித்த புண்டரத்தையும் அந் நாட்டு மன்னனுக்கே தத்தம் செய்தீர்கள். இப்பொழுது மங்கள கிரியையும் தாரை வார்க்கிறீர்கள். இதுவரை நடந்த யுத்தங்களிலும், இனி நடக்கப் போகும் யுத்தங்களிலும் பலியாகும் பல ஆயிரம் உயிர்கள் சாந்தியடைய வேண்டுமானால் மகதத்துக்கு எந்த ஒரு வகையிலாவது இலாபம் இருக்க வேண்டாமா?'' என்று ஆஜாத்சத்ரு தனிமையில் இருக்கும் பொழுது கேட்டார் நந்திவர்மர்.

ஆஜாத்சத்ரு லேசாகச் சிரித்தான். பிறகு, ''நந்திவர்மரே, தயவு செய்து இப்பொழுது உங்களுக்கு என்ன வயதாகிறது என்பதைச் சொல்லுவீர்களா?'' என்றான்.

''ஏன், ஐம்பது வயதாகப் போகிறது'' என்றார் அவர்.

''உங்கள் ஆரோக்கியத்தைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றான் ஆஜாத்சத்ரு.

''நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே'' என்று நந்திவர்மர் கூறவும், அதேசமயம் அங்கு வந்த அனுருத்தரைப் பார்த்து, ''நம் பிரதம சேனாதிபதி நந்திவர்மருக்கு என் போக்கு விநோதமாயிருக்கிறது. அங்கம், வங்கம், புண்டரம், மங்களகிரி எல்லாவற்றையும் பிறருக்கு நான் தானம் செய்கிறேனே என்று அவர் கவலைப்படுகிறார்'' என்றான்.

''கொடுக்க வேண்டிய காலத்தில் கொடுத்து, பிடுங்க வேண்டிய காலத்தில் பிடுங்கிக்கொள்ள வேண்டும். இந்த தகிடுதத்த வேலையைத்தானே ராஜதந்திரம் என்று

கௌரவமான சொல்லினால் நாம் வர்ணிக்கிறோம்?'' என்று முன்யோசனை இல்லாமல் பதிலளித்தார் அனுருத்தர்.

''அனுருத்தர் சொல்லியதைக் கேட்டீர்களா நந்தி வர்மரே! அனுருத்தர் என்னுடன் நெருங்கிப் பழகுவதினால் என்னுடைய மனப்பாங்கை நன்றாக அறிந்திருக்கிறார். இது நமக்கு கடுமையான சோதனைக் காலம். அந்தச் சோதனை ஆஷாவின் உருவத்திலும் உக்கிரசேனரின் உருவத்திலும் தோன்றி நம்மைப் படாதபாடு படுத்துகிறது. ஒருவரை ஒழித்துவிட்டோம். மற்றொருவரை...''

இதை ஆஜாத்சத்ரு சொல்லி முடிப்பதற்குள் ''என்னைக் கேட்டால், ஒழிக்க வேண்டுமென்ற சொல்லை ஆஷாவின் விஷயத்தில் உச்சரிக்க உங்களுடைய அந்தராத்மா இடம் தராதென்று கண்டிப்பாக நான் சொல்லுவேன். அடக்க வேண்டுமென்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் இல்லையா?'' என்று சொல்லிவிட்டு ஒருமாதிரியாக ஆஜாத்சத்ருவைப் பார்த்தார் அனுருத்தர்.

ஆஜாத்சத்ரு உடனே இதற்குப் பதில் சொல்லவில்லை. ''ஆஷாவை அடக்கி, அவள் ராஜ்யத்தை அவளிடமிருந்து பறிக்க வேண்டும் செருக்கு அடங்கிய ஒரு குடும்பப் பெண்ணாக அவள் மாறவேண்டும். இதுதான் உங்கள் இலட்சியம். ஆனால் இன்று நான் சொல்லுவதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். கருங்கல்தூண் உடையுமே தவிர வளைந்ததாக நான் கேட்டதுமில்லை, பார்த்ததுமில்லை'' என்றார் மீண்டும் அனுருத்தர்.

ஆஜாத்சத்ரு ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்து விடுபட்டவனைப் போல, ''அனுருத்தர் மனதில் என்ன கற்பனை செய்துகொண்டு பேசுகிறாரென்பது எனக்குத் தெரியும். என்னுடைய முதல் இலட்சியம் அவள் செருக்கை அடக்குவதுதான். என்னுடைய அடுத்த திட்டங்களைச் செயற்படுத்த வேண்டுமானால் முதலில் மங்களகிரி பிரிவினையாகி மறுபடியும் தலையெடுக்க முடியாதபடி சிதைய வேண்டும்.

அங்கம், வங்கம், புண்டரம், மங்களகிரி, உத்சலம், கலிங்கம், சேதி ஆகியவைகள் எல்லாம் மகதப் பேரரசின் கொடியின் கீழ் வருவதை உங்கள் இருவருடைய ஆயுட்காலத்திலும் கண்டிப்பாக நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். கோசலத்தையும் இணைத்து குருபாஞ்சாலம் வரை மகத எல்லைகள் விஸ்தரிப்பது நிச்சயத்திலும் நிச்சயம். நந்திவர்மரே, உங்களுக்கு இப்பொழுது ஐம்பது வயது தானே ஆகிறதென்று சொன்னீர்கள். உங்களுடைய தேக ஆரோக்கியத்தைக் கவனமாகக் கண்காணித்துக் கொண்டு வந்தீர்களானால், அறுபது வயது நிறைவதற்குள் மகத சாம்ராஜ்யம் அகண்ட பிரம்மாண்டமான நிலப்பரப்பில் வியாபித்திருப்பதை நிச்சயம் காண்பீர்கள். புலி பதுங்குவது பயத்தினால் அல்ல, குறி பார்த்துப் பாய்வதற்கு. இன்று நாம் இதர பல மன்னர்களின் கூட்டுறவைப் பெற்று அவர்களுக்குக் கிடைப்பதையெல்லாம் பகிர்ந்து கொடுப்பது எனது நீண்ட காலத் திட்டத்தின் ஒரு அம்சம்தான். முதலில் மங்களகிரிப் படையெடுப்பை நாம் துவக்குகிறோம். ஏற்பாடுகள் விரைவில் ஆரம்பமாகட்டும்'' என்றான் ஆஜாத்சத்ரு.

நான்கு தினங்களுக்குப் பிறகு ஒருநாள் காலை, ஆஜாத்சத்ரு காலைப் போஜனத்துக்கு வந்து உட்கார்ந்தான். அன்று நண்பகல் போர்முனைக்கு அவன் புறப்படுவது என்று ஏற்பாடாகியிருந்தது. ஆகையால் அன்று காலை போஜனசாலையில் ஜனகனும், சிற்றன்னைமார்களும் ஆஜாத்சத்ருவுடன் சேர்ந்து சாப்பிடுவதற்காகக் கூடியிருந்தனர். ஒருபுறம் ஜனகனும், மற்றொருபுறம் வசுமதியுமாக நடுவில் உட்கார்ந்த ஆஜாத்சத்ரு, ''அம்மா! உன் ஆசியினால் இதுவரையில் என்னுடைய திட்டங்களெல்லாம் வெற்றிகரமாக உருவாகிக்கொண்டு வருகின்றன. வெகு சீக்கிரத்தில் தென்மேற்குப் பாரதம் முழுவதிலும் மகதத்தின் கொடி கம்பீரமாகப் பறக்கப் போகிறது. ஒரு பாதியில் என் தம்பி ஜனகன் சிறப்போடு செங்கோல் செலுத்து

வான். அப்பொழுதும்கூட அம்மா நீ என்னுடன்தான் இருக்கப் போகிறாய். ஜனகனுடன் இல்லை'' என்றான்.

''குழந்தை! நீ வேறு, ஜனகன் வேறு அல்ல எனக்கு. அவன் நான் பெற்ற குழந்தை, நீ நான் பெறாத குழந்தை. என் கண்ணின் இரு கருமணி போன்றவர்கள் நீங்கள் இருவரும்'' என்று வசுமதி சொல்லிக் கொண்டிருக்கையில், ஜனகன் மேசை மீதிருந்த பலகாரங்களைத் தன்னுடைய கையில் பொறுக்கி எடுத்து ஆஜாத்சத்ருவின் தட்டில் வைத்து, ''சாப்பிடுங்கள் அண்ணா'' என்றான்.

அவன் வைத்த லட்டை ஆஜாத்சத்ரு கையில் எடுத்து வாயில் போட்டுக் கொள்ளப்போன சமயம், ''ஐயோ! நிறுத்துங்கள். அதைச் சாப்பிடாதீர்கள்! சக்கரவர்த்தி அதைச் சாப்பிடாதீர்கள்!'' என்று அந்தப் போஜனசாலையே கிடுகிடுத்துப் போகுமாறு கத்திக்கொண்டு அங்கு ஓடி வந்தார் நந்திவர்மர்.

ஆஜாத்சத்ருவும் மற்றவர்களும் பரபரப்புடன் எழுந்தார்கள். அருகில் ஓடிவந்த நந்திவர்மர் ஆஜாத்சத்ருவின் கையிலிருந்த லட்டை வெடுக்கென்று பிடுங்கி, ''சக்கரவர்த்தி! கண்ணிமைப்பொழுது நான் தாமதித்து வந்திருந்தால் மகத சாம்ராஜ்யம் மீளாத துயரத்தில் ஆழ்ந்து போயிருக்கும். கொடிய நஞ்சு, உங்கள் உயிரைக் குடித்திருக்கும். மலயப்பர்தான் தக்க தருணத்தில் என்னை இங்கு கொண்டுவந்து விட்டார். ஒரு கணம் நான் தாமதித்து வந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை நினைக்கும் பொழுது என் உடல் பதறுகிறது சக்கரவர்த்தி, உடல் பதறுகிறது. இந்த லட்டில் எத்தனை கொடிய நஞ்சு கலந்திருக்கிறதென்பதை இதோ பாருங்கள்'' என்று பரபரப்பில் பேச முடியாது பல பெருமூச்சுகளுக்கிடையில் பேசிய நந்திவர்மன், ஆஜாத்சத்ருவின் கையிலிருந்து பிடுங்கிய லட்டை அருகிலே கூண்டுக்குள் இருந்த ஒரு கிளிக்குப் போட்டார். ஆசையோடு அதைக் கொத்தித் தின்ற பச்சைக் கிளி, சில வினாடி நேரத்துக்குள் பயங்கரமாகக் கீச்சிட்டுக் கத்திக் கொண்டு செத்து விழுந்தது.

அந்தச் சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வசுமதி பதறிப் போனாள். ஜனகன் முகமோ கிட்டத் தட்டப் பீதியிலேயே பேயறைந்தது போலாகியது. ஆஜாத்சத்ரு தனது தம்பியையும், சிற்றன்னை வசுமதியையும், நந்திவர்மரையும் மாறி மாறிப் பார்த்தான். பிறகு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் தூக்கத்தில் நடப்பதைப் போலச் சாளரத்துக்கு நடந்துசென்று வெளியே பார்த்தான், சற்று நேரத்துக்கு முன்னால் ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப முனைந்த அவனுக்கு வாழ்க்கை திடீரென்று சூன்யமாகி விட்டதைப்போலிருந்தது.

சிறிது நேரம்வரை அங்கிருந்தவர்கள் ஒருவரும் ஒன்றுமே பேசவில்லை. பெரும் சூறுவளிக்கு முந்திய பயங்கர அமைதியைப் போல நிசப்தம் அங்கு குடி கொண்டிருந்தது.

வசுமதிதான் முதலில் பேசினாள். "குழந்தை ஆஜா! மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பதைப் போல எங்கள் வாழ்க்கையில் சதி செய்யத் தொடங்கிய விதி இன்னமும் எங்களை விடவில்லை. இப்படியெல்லாம் நடக்குமென்பதை எதிர்பார்த்தே விதர்ப்பத்துக்கு நாங்கள் போய்விடுகிறோமென்றேன். எங்களை நீதான் தடுத்து நிறுத்தினாய். இந்த அரண்மனையில் எங்களுக்கு எதிராக எவரோ ஒரு சிலர் இன்னமும் சதி செய்து கொண்டிருக்கிறார்கள்' மலயப்பர்மீது ஆணையாகச் சொல்லுகிறேன், ஆஜா! என்னை நம்பு! இந்த லட்டில் யார் நஞ்சு கலந்தார்களென்பது எனக்குத் தெரியாது. தற்செயலாகத்தான் ஜனகன் உனக்கு ஒரு லட்டை எடுத்துச் சாப்பிடச் சொன்னான். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைமை இப்பொழுது அவனையும் என்னையும் குற்றவாளிகளாக்கி இருக்கிறது" என்று தழுதழுத்த குரலில் அவள் சொல்லியபொழுது, அவள் கண்களில் இருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்தோடியது.

இவ்வளவு நேரமும் மௌனமாக நின்ற ஜனகன், "அண்ணா! உன்னைத்தான் அழைக்கிறேன் அண்ணா! இப்

படித் திரும்பிப் பார்!'' சற்றுக் கடுமையான குரலில் சொன்ஞன். அந்தத் தொனி ஆஜாத்சத்ருவையே ஒருகணம் அதிரச் செய்தது.

ஆஜாத்சத்ரு திரும்பியபொழுது, ''அண்ணு! உனக்கு உதவியாகவும், தம்பியாகவும் வாழமுடியுமென்று நான் நினைத்தேன். ஒரு சக்கரவர்த்திக்கு ஒரு தம்பி இருக்க முடியாது. இருக்கவும் கூடாதென்பதை இப்பொழுது திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டு விட்டேன். உன் வாழ்க்கை சிறக்க என் உயிர்த் தியாகம் அவசியம் போலிருக்கிறது. இப்பொழுதுள்ள மன நிலைமையில் நீ எங்களை நம்ப மாட்டாய். அரசை உன்னிடமிருந்து பறிக்க நாங்கள் மீண்டும் சதி செய்து தோற்றுவிட்டு அதிலிருந்து தப்பிக் கொள்ள ஏதேதோ சமாதானம் சொல்லுவதாக நீ நினைப்பாய். உன்னிடம் உயிர்ப் பிச்சையோ அல்லது அன்புப் பிச்சையோ கேட்க நான் தயாரில்லை. நாங்கள் நிரபராதிகள். உன் நல் வாழ்வில் என்னைவிட அதிக அக்கறை கொண்டவர்கள் வேறு யாருமில்லை. இந்த உண்மையை வெகு சீக்கிரத்தில் நீ தெரிந்து கொள்ளுவாய். நாங்கள் இதோ உன்னிடமிருந்தும், உலகத்திடமிருந்தும் விடைபெற்றுக் கொள்ளுகிஞேம். கீழே சிந்திக்கிடக்கும் நஞ்சு கலந்த பணியாரம் எங்கள் இருவரையும் அமைதியான உலகத்துக்கு அழைத்துச் செல்லட்டும்'' என்று சொல்லிய ஜனகன், கீழே உதிர்ந்து கிடந்த பணியாரத்தைப் பொறுக்கப் போஞன்.

சாளரத்தின் அருகில் நின்ற ஆஜாத்சத்ரு ஓடிவந்து அவனைத் தடுத்து நிறுத்திச் சேஞதிபதியைத் திரும்பிப் பார்த்தான். சேஞதிபதி நந்திவர்மரை அங்கே காணுமல், ''எங்கே அவர்? அம்மா, தம்பி! வீணுக நீங்கள் ஏன் உங்களை அலட்டிக் கொள்ளுகிறீர்கள்! பணியாரத்தில் நீங்கள் நஞ்சு கலந்ததாக யார் குற்றஞ் சாட்டிஞர்கள்? அப்படிக் குற்றஞ்சாட்ட யாருக்குத் துணிவு இருக்கும் அம்மா? ஒரு விஞடிக்கு முன்புதானே நானும் ஜனகனும் உன் கண்களின்

இரு மணிகள் போன்றவர்களென்று நீ சொன்னாய்? அதற்குள் அதை மறந்து என்னையும் ஜனகனையும் ஏன் அம்மா வேறுபடுத்திப் பார்க்கிறாய்? ஒஹோ .. இப்பொழுது தெரிகிறது உங்கள் போக்கின் காரணம். உங்கள் இருவரையும் ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு மௌனமாக காஸரத்துக்கு போனதைத் தவறாகக் கொண்டுவிட்டீர்கள். நம் மூவருக்கும் இந்த அரண்மனையில் எவ்வளவு பெரிய அபாயம் சூழ்ந்திருக்கிறதென்பதை எண்ணியே அப்படிப் பார்த்தேன். உண்மையாகவே எனக்கு நீ நஞ்சூட்ட விரும்பினால் பதில் பேசாமல் அதை அமுதமாக எண்ணி நான் சாப்பிடுவேன் அம்மா. அப்பாவுக்கு அடுத்தபடியாக நீதானே எங்களுக்குத் தாயும் தந்தையும்'' என்றான் ஆஜாத்சத்ரு.

''அண்ணா! எங்கள்மீது உனக்கு வெறுப்பை உண்டு பண்ண அடுத்தடுத்து முயற்சிகள் நடக்கின்றன. அவைகளை நினைத்தால்தான் எனக்கு துக்கமாகவும் கவலையாகவும் இருக்கிறது. இந்தப் பணியாரத்தில் நஞ்சு கலந்த துரோகிகள் யார் என்பதைக் கண்டுபிடிக்கும்வரையில் நான் கண் அயர மாட்டேன்'' என்று ஜனகன் சொல்லுகையில், ''இளவரசருக்கு அந்தச் சிரமம் வேண்டாம்'' என்று சொல்லிக்கொண்டு நந்திவர்மர் அங்கு வந்தார். அவருக்குப் பின்னால் ஒரு ஆளை இரண்டு வீரர்கள் கைகளைப் பிணைத்து அழைத்து வந்தார்கள்.

''நஞ்சு கலந்து சக்கரவர்த்தியைப் படுகொலை செய்ய முயன்ற பாதகன் இதோ இருக்கிறான். சமையல்காரன் வேஷத்தில் இவன் யாரென்பதை சுலபமாக நீங்கள் தெரிந்துகொள்ள முடியாது. இவனுடைய உண்மையான பெயரைக் கேட்டால் திகைத்துப் போவீர்கள். கொலைகாரன் உக்கிரசேனருடைய மகன் பிரம்மதத்தனே இந்தப் பாவி!'' என்று அறிவித்த நந்திவர்மன், ''யாரங்கே! வெளியில் நிறுத்தி வைத்திருப்பவர்களையும் இங்கே சக்கர

வர்த்தி முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்துங்கள்'' என்றார்.

''பிரம்மதத்தன்! பிரம்மதத்தன்!'' என்று ஆஜனும், ஜனகனும், வசுமதியும் ஏக காலத்தில் முணுமுணுத்தனர்.

கால்களில் விழுந்து வணங்கிக் கதறியழுத பிரம்மதத்தனை வாரி எடுத்துத் தழுவிக்கொண்டான் ஆஜாத்சத்ரு.

''தம்பி! அழாதே! அழுது புலம்பி மன்னிப்புக் கேட்கும்படியாக அவ்வளவு பெரிய குற்றம் எதையும் நீ செய்து விடவில்லை. உன்னுடைய நிலைமையில் இருந்தால் இன்று நீ செய்ததைத்தான் நானும் செய்திருப்பேன். பெற்று, வளர்த்து ஆளாக்கிவிட்ட அருமைத் தந்தையை இழந்த சோகம் உன்னை ஒரு கொலைவெறியனாக்கியது. அந்த வெறியிலே தன்னை மறப்பதும், தர்மத்தை மறப்பதும் மனித சுபாவம். இன்று நீ செய்ததற்கு மாறாக தகப்பனைக் கொன்ற என்னிடம் நீ அன்பு காட்டி, அடிமைச் சேவகம் செய்ய முன்வந்திருந்தால் அதுதான் மனித சுபாவத்துக்கு மாறுபட்டதாயிருக்கும். உலகில் ஆசை யாரைவிட்டது. ஆசைக்குப் பலியாகும் கோடானுகோடி மக்களிலே என் மாமனும் பலியானார். இன்று என்னையே கொலைசெய்ய முயற்சித்த உன்னை மன்னித்தது போல, அன்றும் என் தந்தையைக் கொலை செய்தவர் என் மாமன்தான் என்பது தெரிந்திருந்தால் அவரையும் மன்னித்திருப்பேன். மன்னிக்கும் பண்பினால்தான் மனிதன் மனிதனாகிறான். அதை இழக்கும்பொழுது மிருகத் தன்மையே மனிதனிடம் மேவிடுகிறது'' என்றான் ஆஜன்.

''உங்களைப் போன்ற ஒரு மகாத்மாவைக் கொலை செய்திருந்தால் கோடானுகோடி ஆண்டுகளுக்கு நான் நரகத்தில் விழுந்து கிடந்திருப்பேன். ஒரு மாபெரும் பாபத்திலிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள். உங்களுடைய உள்ளப் பாங்கை அறியாமல் மிருகத்தைவிடக் கேவலமாக நடந்துகொண்டு விட்டேன். என்போன்றவர்கள் இவ்வுல

கில் வாழத் தகுதியற்றவர்கள். தீய எண்ணங்களினுல் பாபப் பிண்டமாகிவிட்ட இந்தத் துன்மார்க்கனை உங்கள் புனித உடைவாளினுல் கொன்று, என் பாவங்களைக் கழுவி விடுங்கள். நான் மன்னிக்கப்படலாகாது. என்போன்றவர் களுக்கு என் வாழ்க்கை ஒரு படிப்பினையாக அமைய வேண் டும். முக மலர்ச்சியோடு நான் சாகத் தயாராயிருக் கிறேன். உள்ளத் தெளிவுடன் உயிரைப் பலியிட்டுப் பிரா யச்சித்தம் செய்துகொள்ள விரும்புகிறேன். என் விருப் பத்தை நிறைவேற்றுங்கள் சக்கரவர்த்தி''என்று மீண்டும் புலம்பினுன் பிரம்மதத்தன்.

''சக்கரவர்த்தியா? யார் யாருக்குச் சக்கரவர்த்தி, தம்பி! உனக்கும் ஜனகனுக்கும் நான் சக்கரவர்த்தியில்லை. ஜனகனுடன் இதுவரை இருவராயிருந்த நாம், இப் பொழுது உன்னுடன் மூவராகி விட்டோம். எங்களைப் போலவே இனி சின்னம்மாவுக்கு நீ மூன்ருவது பிள்ளை!'' என்று ஆஜன் கூறவும், வசுமதிதேவியார் பிரம்மதத்தனை அணைத்துக்கொண்டு, ''கடந்தவை கடந்தவைகளாகப் போகட்டும். ஜனகனைப் போலவே, நீயும் என் மூத்த மகன் ஆஜனுக்கு இணைபிரியாத தம்பியாயிரு. ஆமாம், மஞ்சு எங்கே?'' என்று கேட்டாள்.

''அவள், நகர எல்லையில் ஒரு குடியானவன் வீட்டில் தலைமறைவாக வாழ்கிருள் அம்மா!''என்று பிரம்மதத்தன் சொல்லவும், ''போ! உடனே போய் அவளையும் அழைத்து வா''என்ருள் வசுமதி.

''சேனுதிபதி! பிரம்மதத்தன் என் தம்பி! ஜனகனைப் போலவே அவனும் என்னுடன் இனி ஒரு சம பங்காளி. என் அருமைத் தாயின் சின்னமாக இருப்பவர்கள் அவனும் மஞ்சுவும்தான். அவர்கள் இருவரும் சின்னம்மாவுக்கு எங் களைப் போன்றவர்கள். சுமித்திரையை மறந்துவிட்டேனே! அவளைப் பாதுகாப்புடன் மங்களகிரிக்கு திருப்பி அனுப்பி

ளையுங்கள். அவள்மீது எவ்வித குற்றமுமில்லே. தன் எஜமானியின் கட்டளைப்படி கடமை உணர்ச்சியோடு நடந்து கொண்டவள் சுமித்திரை. உயிரையும் மதியாமல் ராஜாங்க சேவையில் துணிவோடு ஈடுபட்ட சுமித்திரை நமது பாராட்டுக்கு உரியவள். இன்று மாலே அவளே மங்களகிரிக்கு காவலுடன் அனுப்பி விடுங்கள். போகும்போது ஆஷாவுக்கு ஒரு செய்தி கொடுத்தனுப்புகிறேன். அதையும் சுமித்திரையே கொண்டு போகட்டும்'' என்று உத்தரவிட்டான் ஆஜன்.

பிறகு ஜனகன் பக்கம் திரும்பி, ''ஏன் தம்பி சும்மா நிற்கிருய்? பிரம்மதத்தனே உள்ளே அழைத்துப் போய் அவனுக்கு மாற்று உடை கொடு. அவன் மஞ்சுவை முதலில் அழைத்து வரட்டும். பிறகு எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவோம்''என்ருன்.

''என் குழந்தைகளுக்கு இன்று நானே ஏதாவது உணவு தயாரித்துக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டு வசுமதி கிளம்பிய பொழுது, ''ஆமாம்! அம்மாவுக்கு இப்பொழுது குடும்பம் பெருத்துவிட்டது. இனிப் பணியாட்களே நம்பிப் பயனில்லே. மூன்று நாட்டுப் பெண்கள் வந்து அன்பினுல் அம்மாவைத் திக்குமுக்காடச் செய்யும் பொழுதுகூட அம்மா குழந்தைகளுக்குத் தன் கையினுல்தான் பலகாரம் சுட்டுக்கொண்டு வருவாள்'' என்ருன் ஆஜன்.

இம் மாதிரியான கட்டத்தில்கூட ஆஜனிடம் ஹாஸ்யம் வருவதை வியந்துகொண்டே பிரம்மதத்தன் ஜனகனேடு உடை மாற்றிக்கொள்ளச் சென்ருன்.

அவர்கள் மறுபடி சாப்பிட உட்கார்ந்த பொழுது அவர்களுடன் மஞ்சுவும் இருந்தாள். சாப்பாடு முடிந்ததும் ''பிரம்மதத்தா! இன்று பகல் நான் மங்களகிரிமீது படையெடுப்பை ஆரம்பிக்கிறேன். ஜனகன் நிருவாகத்தைக் கவ

ணித்துக் கொண்டு தலைநகரிலிருக்கப் போகிறான். உனக்கு விருப்பமானால் நந்திவர்மருடன் அங்கப் படையெடுப்பில் நீயும் கலந்து கொள்ளலாம். இல்லாவிட்டால் நீயும் தலை நகரிலேயே இரு'' என்றான் ஆஜன்.

''நானும் போர்முனைக்குப் போகிறேன் அண்ணா! தலை நகரில் ஜனகன் மட்டும் இருந்தால் போதும். யுத்தத்தைப் பார்த்து நீண்ட காலமாயிற்று. நந்திவர்மனுடன் சென்றால் என் மனதுக்கும் சற்று சாந்தியாயிருக்கும்'' என்றான் அவன்.

''நல்லது, அப்படியே செய்'' என்றான் ஆஜன்.

பிறகு ஆஷாவுக்கு அவன் ஒரு செய்தியை எழுதி நந்தி வர்மரிடம் கொடுத்து, சுமித்திரை மூலம் மங்களகிரிக்கு அனுப்பி வைத்தான். நண்பகல் போஜனத்துக்குப் பின்னர் ஒரு பிரம்மாண்டமான சைன்யத்துக்குத் தலைமை தாங்கி ராஜகிருகத்திலிருந்து அவன் புறப்பட்டான்.

## அத்தியாயம் – 9

# பைங்கிளி பறந்தோடியது!

"என்னை மன்னிக்க வேண்டும் மகராணி! ஏதோ மனதில் தோன்றியதை மறைத்துக்கொள்ள முடியாமல் வாய்விட்டுச் சொல்லிவிட்டேன்" என்று கெஞ்சினுள் சுமித்திரை.

"என்ன சொன்னுயென்பதைத்தான் திரும்பச் சொல்லச் சொல்லுகிறேன்" என்று பொய்க் கோபத்துடன் சீறினுள் ஆஷா.

"உங்களையும், ஆஜாதசத்ருவையும் ஒருகணம் என் மனக் கண்களின் முன்னுல் சேர்த்து நிறுத்திவைத்துப் பார்த்தேன். அந்த ஆண் சிங்கத்துக்கு இந்தப் பெண் சிங்கம் எவ்வளவுபொருத்தமானதென்பதை எண்ணிப் பார்த்தபொழுது மனதில் தோன்றிய அந்தக் கற்பனை என்னை அறியாமலே வாயில் வந்துவிட்டது. நீங்கள் என்ன நினைத்துக் கொண்டாலும் சரி, அந்த ஆணழகனுக்காகப் படைக்கப்பட்ட பொற்சிலைதான் நீங்கள் என்ற கருத்தை என்னுல் மாற்றிக் கொள்ளவே முடியாது. யுத்த காலத்தில் நான் இதைச் சொல்லுவது இங்கிதக் குறைவாக இருக்கலாம். ஆயினும் உண்மை என்றைக்கும் உண்மைதான்" என்ருள் சுமித்திரை.

''சரிதான்! அவரை எப்படியும் கொலை செய்து விட வேண்டுமென்பதற்காக உன்னை ராஜகிருகத்துக்கு அனுப்பினேன். நீயோ போன இலட்சியத்தில் படுதோல்வி அடைந்தது மட்டுமல்லாமல், எனக்கு மாப்பிள்ளையைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறாய்! அவருடைய அன்பையும் பண்பையும் பாராட்டுகிறாய். என்னையே அவருக்கு அடிமைப்படுத்தி விடவும் இப்பொழுது திட்டமிடுகிறாய். நல்லது, சுமித்திரை நல்லது! இன்னும் சிறிது நேரம் உன்னுடன் பேசிக் கொண்டிருந்தால் அந்த ஆணழகனை நினைத்து நினைத்து என்னையும் ஏங்கச் செய்துவிடுவாய். உன் சேவைக்கு என் நன்றிகள். இனி நீ போகலாம்'' என்றாள் ஆஷா.

''அந்த ஓலை! அதை இன்னும் நீங்கள் படித்துப் பார்க்கக்கூட இல்லையே!'' நினைவுபடுத்தினாள் சுமித்திரை!

''ஓ! மகதச் சக்கரவர்த்தியார் அனுப்பிய ஓலை காதற் கடிதமாக இருக்குமென்று சந்தேகிக்கிறாயா? இந்தமாதிரிச் சந்தேகம் உனக்கு வேண்டவே வேண்டாம். அவருடைய நெஞ்சில் என்னை நினைத்தாலே வேம்பாகக் கசக்கும். தென்கிழக்குப் பாரதத்திலே ஒரு ஆஷா அல்லது ஒரு ஆஜாத்சத்ருவைத் தவிர, இருவருக்கும் கண்டிப்பாக இடமில்லையென்று நான் உறுதியாக நம்புவதை அவர் அறிவார். ஆனால் அசட்டுத்தனமான எண்ணங்களுக்கு மனதில் இடமளியாமல் நிம்மதியாகப் போய்த் தூங்கு. நீண்ட தூரப் பிரயாணத்தில் மிகவும் களைப்படைந்திருப்பாய்'' என்று ஆஷா சொல்லவும், அதற்குமேல் அங்கு நிற்கத் தைரியமில்லாது சுமித்திரை வெளியேறினாள்.

அவள் சென்ற பிறகு, ஆஜாத்சத்ரு அனுப்பிய ஓலையை ஆஷா நிறுத்தியும் கவனமாகவும் படித்தாள். அதற்கு முன்னரே ராஜகிருகத்திலிருந்து அவளுக்குப் பல பரபரப்பான செய்திகள் சுமித்திரையின் மூலமாகக் கிடைத்திருந்தன. சேதிப் போர்முனையில் மகதம் முழு மூச்சுடன் ஈடுபட்டிருப்பதினால் தெற்கில் தன்னைத் தட்டிக் கேட்க ஆள்

இல்லையென்று நினைத்துக் கொண்டிருந்த அவளுக்கு சேதி யுத்தம் எந்த நிமிடமும் திடீரென்று நின்று விடலாமென்று கிடைத்த செய்தி முதலாவது அதிர்ச்சியாயிருந்தது. அதை அடுத்து மகத, கோசல, அங்க, வங்க, புண்டர மன்னர்களுக்கிடையில் நடந்த மகாநாட்டைப் பற்றிய செய்திகளும், சேதி யுத்தம் நின்று சேதி மன்னனும் மற்றவர்களோடு கூட்டுச் சேர்ந்துவிட்ட செய்தியும் கிடைத்ததும் ஆஷாவின் சப்தநாடிகளும் ஒடுங்கிப் போய்விட்டன. மகதத்துக்கும் அதைச் சுற்றியுள்ள நாடுகளுக்குமிடையில் பரஸ்பரமான பகை நீடிப்பதையே பொறுத்திருந்தது, ஆஷாவின் சகல திட்டங்களும்! அந்தத் திட்டங்களின் அஸ்திவாரமே சிதைந்துவிட்டதை அறிந்ததும் அவள் அசந்து போய்விட்டாள். ஆஜாதசத்ருவின் தலைமையில் ஒரு பெரும் சைனியம் மங்களகிரிமீது படையெடுத்து வருவதையும், அதே நேரத்தில் புண்டரம், அங்கம், வங்கம் ஆகிய நாடுகள்மீதும் படையெடுப்புகள் நடைபெற இருப்பதையும் சுமித்திரை வாயிலாக அறிந்த பொழுது, மிகச் சாதுர்யமாகக் கட்டியதாக எண்ணிக் கொண்டிருந்த தனது கருங்கல் மாளிகை, மணல் வீட்டைப் போல பொலபொலவென்று உதிர்ந்து விழுவதைப் போல அவளுக்குத் தோன்றியது. இதை இப்பொழுது ஆஜாதசத்ருவிடம் இருந்து வந்த ஓலையும் ஊர்ஜிதப்படுத்தியது.

ஓலையைப் படித்துவிட்டு அதைச் சுற்றி வைத்த ஆஷா அடுத்தபடியாக என்ன செய்வதென்பதைப்பற்றி ஆலோசிக்கத் தொடங்கினாள். இந்தச் சமயம் பார்த்து மந்திரி சர்வார்த்தர் உள்ளே வந்தார்.

''மகாராணி! நடக்கக்கூடாத ஒரு காரியம் நடந்துவிட்டது. மங்களகிரிக்கு இது மிகவும் கெட்ட காலம் போலிருக்கிறது'' என்று ஆரம்பித்தார் அவர்.

ஆஷா ஒரு சோகப் புன்னகை செய்தாள். ''நடக்கக்கூடாதது என்று எதுவுமே இல்லை. சர்வார்த்தரே, நீங்கள் சொல்ல வந்திருக்கும் விஷயம் உங்களுக்குப் புதிதாக

இருக்கலாம். ஆனால் எனக்கு அது புதுமையில்லை. ஆஜாத் சத்ரு என்றைக்காவது ஒருநாள் பெரும் படைகளைத் திரட்டிக்கொண்டு போருக்கு வருவானென்பது எனக்குத் தெரியும். அதற்குள் நம்முடைய நிலைமையைப் பலப்படுத்திக் கொண்டு விடலாமென்று திட்டமிட்டேன். உக்கிர சேனனின் சாதுரியக் குறைவும், அவன் மரணமும் என் திட்டங்களுக்கு முதல் அதிர்ச்சியைக் கொடுத்தன. படையெடுப்பு நடத்த நினைக்கும் கடைசி நேரத்தில் ஆஜாத் சத்ருவை ஒழித்துக் கட்டிவிட தந்திரமாக ஒரு ஏற்பாடு செய்தேன். துரதிர்ஷ்டவசமாக அந்த முயற்சியும் தோற்று விட்டது. எந்த முடிமன்னர்களுக்கிடையில் பகையை வளர்த்து பிரித்துவைக்கச் சதிகள் செய்தேனோ அவர்கள் அஷ்டக்கிரகங்கள் கூடியதைப் போல இன்று ஒன்றுகூடி விட்டார்கள். அவ்வளவு பேர்களையும் தனித் தனியாகத் தீர்த்துக் கட்டிவிட பாரதம் முழுவதையும் தனது காலடியில் போட்டு மிதிப்பதுதான் ஆஜாத்சத்ருவின் இறுதி இலட்சியமென்பது எனக்குத் தெரியும். ஆனால் அதை மற்ற மன்னர்கள் உணரவில்லை. அதிர்ஷ்ட சக்கரம் இப்பொழுது ஆஜாத் சத்ருவின் பக்கம் சுற்றத் தலைப்பட்டிருக்கிறது. பல ஆயிரம் வீரர்களோடு மங்களகிரியைக் கைப்பற்ற ஆஜாத் சத்ரு வருகிறார். இன்னும் ஓரிரண்டு தினங்களில் அவருடைய படைகள் நம் எல்லையை அடைந்துவிடும்'' என்றாள் ஆஷா. துயரமும், ஏமாற்றமும், அவளுடைய குரலில் தொனித்தன.

''மகாராணி! நான் சொல்ல வந்தது மகதப் படைகளைப் பற்றியதல்ல. நம் ஜயசிம்மனைப் பற்றியது'' என்று சர்வார்த்தர் கூறவும், ''ஜயசிம்மனைப் பற்றியதா? அவனுக்கென்ன? புண்டரப் போர்முனையில் அல்லவா இப்பொழுது அவன் இருக்க வேண்டும்'' என்று பதட்டத்துடன் உட்கார்ந்திருந்த ஆசனத்தைவிட்டு எழுந்து நின்று வினவினாள் ஆஷா.

''ஆமாம் மகாராணி! அவன் புண்டரப் போர் முனைக்குத்தான் படைகளை நடத்திச் சென்றான். அவனை நமது

படைவீரர்களில் ஒருவனே சமயம் பார்த்திருந்து குத்திக் கொன்றுவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. சேனாதிபதியை ஒரு சாதாரண படைவீரன் எப்படிக் கொன்றான் ஏன் கொன்றான்? என்று நீங்கள் கேட்பீர்கள். அதை எப்படிச் சொல்லுவது என்று புரியாமல்தான் நான் தவிக்கிறேன்'' என்றார் சர்வார்த்தர்.

''ஏன் நடந்ததைச் சொல்ல என்ன தயக்கம்? ஜயசிம்மன் அந்த வீரனுக்கோ அல்லது அவன் குடும்பத்திற்கோ ஏதாவது கொடுமை இழைத்ததால் சமயம் பார்த்து அந்த வீரன் வஞ்சம் தீர்த்துக்கொண்டானா? நடந்ததை மறைக்காமல் சொல்லுங்கள்'' என்று ஆஷா கேட்டபொழுது, ''ஜயசிம்மன் மரணத்துக்குக் காரணமாயிருந்தது நமது மதிப்புக்குரிய மன்னரும், தங்களுடைய அன்புக் கணவருமான மலயத்வஜனின் படுகொலைதான் மகாராணி! மன்னர் எப்படி மரணமானார். அவரும், அவருடைய மூத்த புதல்வரும் எப்படி? யாரால்? ஏன் கொல்லப்பட்டார்கள்? என்ற ரகசியம் இப்பொழுது புண்டரப் போர் முனையில் வெளியாகி இருக்கிறது'' என்றார் சர்வார்த்தர்.

அதைக் கேட்ட ஆஷா சிறிது நேரம் சிலையாகச் சமைந்து போய் நின்றாள்.

அவளுடைய அனுமதியை எதிர்பாராமலே சர்வார்த்தர் மேலும் சொன்னார்.

''பாசறையில் ஜயசிம்மன் அவனுடைய கூடாரத்தில் படுத்து உறங்கும் பொழுது அவனை ஒரு வீரன் குத்திக் கொன்றான். கொலை செய்தவன் தற்பாதுகாப்பை முன்னிட்டு தலைமறைவாகிவிட எத்தனிக்காமல் ஜயசிம்மன் செத்துவிட்டானென்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்ட பின்னர் காவலாளர்களை எழுப்பி, அவர்களிடம் சரணாகதி அடைந்திருக்கிறான். கொலையாளியை உதவி சேனாதிபதி விசாரணை செய்தார். அந்த விசாரணையின் போது,

மன்னர் மலயத்வஜனையும், அவருடைய மூத்த புதல்வரை யும் நஞ்சில் தோய்ந்த அம்புக்குப் பலியாக்கிப் படுகொலை செய்தது தானே என்பதை அவன் ஒப்புக்கொண்டிருக்கி முன்.''

சர்வார்த்தர் இதைச் சொல்லிய பொழுது ராணி ஆஷா மனதில் இருந்த ஒரு பெரிய சுமை கீழே இறங்கி யதைப் போலிருந்தது. தாலிகட்டிய கணவனைத் தானே படுகொலை செய்து அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்டதாக நாட்டில் சிலர் பேசிக்கொண்டிருக்கையில். அதற்கு ஆதரவாக ஜயசிம்மன் மரணத்தறுவாயில் ஏதா வது உளறியிருப்பானே என்று ஆஷா உள்ளூர அஞ்சிக் கொண்டிருந்தாள். ''கொலை செய்தவன் நான்தான்'' என்று ஒரு இராணுவ வீரன் ஒப்புக் கொண்ட செய்தி ஆஷாவுக்கு பெருமளவு மனதிம்மதியைக் கொடுப்பதாக இருந்தது.

''அரசரை அவன் ஏன் கொல்ல வேண்டும்? இதற்கு அவன் என்ன காரணம் சொன்னான்?'' என்று அவள் விசா ரித்தாள்.

''ஜயசிம்மன் ஏவுதலின் மீது இந்தப் படுபாதகத்தை அவன் செய்தானும். வெகு சீக்கிரத்தில் அரசு தன் னுடைய கைக்கு வந்துவிடுமென்றும், அப்பொழுது பெரிய பதவி கொடுப்பதாயும் ஜயசிம்மன் ஆசை காட்டினனும். மன்னர் கொலையுண்ட பின்னர் அந்த ரகசியம் வெளிவந்து விடக் கூடாதென்பதற்காக கொலை செய்த இராணுவ வீரனையே தீர்த்துக் கட்டிவிட ஜயசிம்மன் முயற்சி செய் திருக்கிறான். ஆனல் ஜயசிம்மனிடம் அகப்படாமல் அவன் தப்பி ஓடிவிட்டானும். அன்று முதல் செய்நன்றி மறந்த ஜயசிம்மன் மீது வஞ்சம் தீர்க்க காத்துக் கொண்டிருந்த தாயும், அதற்கு இப்பொழுதுதான் சந்தர்ப்பம் கிடைத்த தென்றும், அந்த வீரன் விசாரணையில் சொன்னான். அவனை காவலுடன் உதவி சேனதிபதி இங்கு அனுப்பி வைத் திருக்கிறார்'' என்றார் சர்வார்த்தர்.

அவருக்கு ஜயசிம்மனைப் பற்றி எந்த மட்டில் தெரியு மென்பதை அறிவதற்காக "ஜயசிம்மன் மன்னரைக் கொல்ல எதற்காக விரும்ப வேண்டும்?" என்று கேட்டாள்.

"அதுதான் ஒருவருக்கும் புரியவில்லை. நீங்கள் கோபித்துக்கொள்ளாமலிருந்தால் என் மனதில் பட்டதைச் சொல்கிறேன்" என்றார் மந்திரி.

"சொல்லுங்கள்" என்று ஆஷா கூறவும், ஜயசிம்மன் தங்கள் மீது ஒரு கண் வைத்திருப்பதாக எனக்கு வெகுகாலமாய் சந்தேகம். அவன் தங்களைப் பார்க்கும் பார்வையிலிருந்து பிறந்ததுதான் இந்தச் சந்தேகமே தவிர இதற்கு வேறு ஆதாரங்கள் ஒன்றுமில்லை. அவனுடைய எண்ணங்களுக்கு மன்னர் ஒரு பெரிய முட்டுக்கட்டையென்று அவன் கருதியிருக்கலாம். மன்னரை அப்புறப்படுத்திய பின்னர் தனது வீரப்பிரதாபங்களினால் தங்களை வசப்படுத்திக் கொண்டுவிடலாமென்று அவன் எண்ணியிருக்கலாம்" என்றார் சர்வார்த்தர்.

"அவன் ஒரு முட்டாள். அவனைவிட நீங்கள் இன்னும் பெரிய முட்டாள். வீரத்திற்கு ஆஷா அடிமைப்படுவதாய் இருந்தால் அவள் அடிமைப்பட வேண்டியது ஜயசிம்மனிடமல்ல. ஊம், இறந்துவிட்டவனைப் பற்றி நாம்பேசுவானேன். உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி யோசனை செய்ய வேண்டும். ஆஜாத்சத்ரு எனக்கொரு ஓலை அனுப்பியிருக்கிறார்" என்றாள் ஆஷா.

"யுத்தப் பிரகடனம் செய்துதானே! அது எதிர்பார்த்ததுதான்" என்றார் மந்திரி.

"இல்லை! சமாதானத்துக்கு" என்றாள் ஆஷா.

"ஆச்சரியமாயிருக்கிறதே! யுத்தத்திற்கு இத்தனை முன்னேற்பாடுகளைச் செய்துகொண்டா அவர் சமாதானத் தூது அனுப்பியிருக்கிறார்" என்று கேட்டார் சர்வார்த்தர்.

"ஆம். கொஞ்சகாலமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் நம்பமுடியாத அதிசயங்களில் ஆஜாத்சத்ரு அனுப்பியிருக்கும் சமாதான நிருபமும் ஒன்று. பிரமாண்டமான படைகளைத் திரட்டிக்கொண்டு யுத்தம் செய்யவரும் அவர், படைகளுக்கு முன்னால் ஒரு சமாதானத் தூதையும் அனுப்பிவைத்திருக்கிறார். அவருடைய ஓலையை சுமித்திரை கொண்டுவந்திருக்கிறாள். மலயகிரியின் அருகிலே நம்நாட்டுக்கு இயற்கை எல்லையாக அமைந்திருக்கும் சரயூநதியின் நடுமத்தியிலே ஒரு படகில் தன்னைத் தனிமையில் சந்திக்க வருமாறு அழைத்திருக்கிறார்" என்றாள் ஆஷா.

"யுத்த காலத்தில் இப்படித் தனிமையில் போவது புத்திசாலித்தனமென்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார் சர்வார்த்தர்.

"ஆஜாத்சத்ருவை நீங்கள் யாரென்று நினைத்துக்கொண்டு பேசுகிறீர்கள்? பேச அழைத்தவர்களைச் சிறை பிடித்துப் போகும் பெருங்கோழையல்ல மகத மன்னர்! ஆஜாத்சத்ருவிடம் வேறு என்ன குறைபாடுகள் இருப்பினும் அவனைப் பேடியென்றோ, கோழையென்றோ யாரும் சொல்லிவிட முடியாது. தவிர ஆற்றின் கரையிலிருந்து வெகு தூரத்திற்கு அப்பால் தன்னுடைய சைன்யங்கள் நிற்குமென்றும், படகுக்கு உளவாளிகளை அனுப்பி அதில் அவரையும் அவரது மெய்ப் பாதுகாவலரையும் தவிர வேறு யாருமில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு பேச வரலாமென்றும் ஆஜாத்சத்ரு தெரிவித்திருக்கிறார். எங்களுடைய சந்திப்பு பல்லாயிரக்கணக்கானவர்கள் அநியாயமாக மாண்டுபோவதைத் தடுக்கக்கூடுமென்று அவர் கூறுவதைப் பார்த்தால் சமாதானத்திற்கு அவர் ஏதோ ஒரு திட்டத்துடன் வருவதாகவே தெரிகிறது. அவரைச் சந்தித்துப் பேசுவது விவேகமானதென்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள் ஆஷா.

"இப்பொழுது உருவாகிவரும் புதிய நிலைமையைக் கவனித்தால் தற்காலிகமாக ஒரு சமரசஉடன்பாடு செய்து

கொள்வது நல்லதென்றே எனக்கும் தோன்றுகிறது. காலம் இப்பொழுது நமக்கு அவ்வளவு சாதகமாயில்லை'' என்றார் சர்வார்த்தர்.

''அப்படியா? நல்லது. ஆஜாத்சத்ருவைச் சந்தித்து அவர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்போம். அவரைச் சந்திக்க சரயூநதி தீரத்திற்கு என்னுடன் நீங்களும் வருகிறீர்கள், புரிகிறதா? இப்பொழுது நீங்கள் போகலாம். எல்லைக்குப் புறப்படும் பொழுது சொல்லி அனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்தாள் ஆஷா.

ஆஜாத்சத்ரு, ஆஷாவுக்கு அனுப்பிய ஓலையில் குறிப்பிட்டிருந்த சரயூநதி வடபாரதத்திலுள்ள கங்கை, யமுனை ஆகியவைகளைப் போலவே புண்ணிய நதிகளில் ஒன்றாகும். யமுனை எப்படி கண்ணபரமாத்மாவுடன் நெருங்கிய தொடர்புடையதோ அப்படி இராமனுடனும் இக்ஷ்வாகு வம்சத்துடனும் நெருங்கிய தொடர்புடையது சரயூ நதி. இராம ராஜ்யமான அயோத்தியின் தெற்கு எல்லையாக அமைந்திருந்த சரயூநதி, புராண காலத்திய சரஸ்வதி நதியும் மற்றும் பல புண்ணிய நதிகளும் காலப் போக்கில் மேடு தட்டி மறைந்துவிட்டதைப் போலவே இன்று மறைந்துவிட்டது. ஒளட் என்று இன்று ஆங்கிலத்தில் கூறும் அயோத்தியில் ஓடும் ஒரு சிற்றாறையே புராண காலத்திய சரயூ நதி என்று சிலர் இன்று சுட்டிக்காட்டுகிறார்கள். இந்த வாய்க்கால் இன்று கங்கையுடன் சங்கமமாகிறது. பிம்பிசாரன், ஆஜாத்சத்ரு காலத்திலிருந்த சரயூ, கோசலத்தில் ஆரம்பித்து மகதத்தின் வழியாகத் தெற்கு நோக்கிப் பாய்ந்து மலயகிரியின் வழியாக மங்களகிரியில் நுழைந்த பிறகு அங்கத்தின் ஊடாக வங்காள விரிகுடாவில் சங்கமமாகியது. இந்த நதியைப்பற்றி ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு புராண வரலாறு ஏற்பட்டிருந்த காரணத்தினால் பொதுவாக வடகிழக்கு பாரத மக்களுக்கு கங்கைக்கு அடுத்தபடியான புனிதத்தன்மை வாய்ந்ததாக சரயூநதி விளங்கியதில் ஆச்சரியமில்லை.

ஆஷாவைச் சந்திக்க ஆஜாத்சத்ரு குறிப்பிட்டிருந்த மலயகிரிப் பிரதேசத்தில் சரயூநதி பெரிய மரக்கலங்கள் போய்வரும் அளவிற்கு அகலமும், ஆழமும் உடையதாக இருந்தது. அந்த நதியின் மேல்கரையிலே மகதப் படைகளும் தென்கரையில் மங்களகிரிப் படைகளும் முகாமிட்டிருந்தன. இரு கரைகளிலும் ஆயுத பாணிகளாகப் பல வீரர்கள் அடங்கிய படகுகள் ஏராளமாகக் காத்திருந்தன. நதியின் நடுமத்தியிலே மரக்கலமென்றோ அல்லது படகென்றோ இரண்டு விதமாகவும் வர்ணிக்க முடியாத ஒரு சிறு அரண்மனை மிதந்து கொண்டிருந்தது. அந்த அலங்காரப் படகு அல்லது மரக்கலத்தை அரண்மனை என்று வர்ணிப்பது தான் மிகவும் பொருத்தமாயிருக்கும்.

மந்திரி சர்வார்த்தருடன் ஆஷா சரயூ நதியின் தென் கரைக்கு வந்து சேர்ந்ததும் அவளுடைய மெய்ப் பாதுகாவலர்கள் இருவர் படகுகளில் அதி வேகமாகப் புறப்பட்டு நதியின் மத்தியில் மிதந்த 'அலங்கார மாளிகை'யை நோக்கிச் சென்றார்கள். அதே சமயம் எதிர்க் கரையிலிருந்தும் இரண்டு வீரர்கள் படகில் கிளம்பி வந்தனர். அந்த நால்வருமாகச் சேர்ந்து, 'அலங்கார மாளிகை"யில் ஒரு இடம் விடாமல் துருவிச் சோதனை போட்டுவிட்டுத் திரும்பினர்.

''படகோட்டி ஒருவனைத் தவிர அங்கு வேறு யாரும் இல்லை'' என்று ஆஷாவிடம் அவளுடைய மெய்ப் பாதுகாவலர்கள் அறிவித்தனர். அவள் மந்திரி சர்வார்த்தருடன் ஒரு அழகான படகில் ஏறி அலங்கார மரக்கலத்தை நோக்கிச் சென்றாள். அவள் புறப்படுவதற்கு முன்னரே ஆஜாத்சத்ருவும் ஒரு மெய்ப் பாதுகாவலனும் மறு கரையில் இருந்து கிளம்பி 'அலங்கார மாளிகை'யை அடைந்தனர். ஆஷா அங்கு வந்தபொழுது அவளை வரவேற்க ஆஜாத்சத்ரு மரக்கலத்தின் கீழ்த் தட்டில் தயாராகக் காத்திருந்தான்.

மரக்கலத்திற்கு வந்த ஆஷா, ''உங்களைக் காத்திருக்கச் செய்து விட்டதற்கு மன்னிக்க வேண்டும்!'' என்று

சொல்லிவிட்டு, குளுமையாக அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையிலே பழைய குரோதமும் அகங்காரமும் பிரதிபலிக்காமல், சாந்தமும் என்றும் கண்டிராத ஒரு கவர்ச்சியும் பிரதிபலிப்பதைக் கவனித்தான் ஆஜாத்சத்ரு.

''இந்த அலங்கார மரக்கலம் உங்களைச் சந்திப்பதற்காகவென்றே ராஜகிருகத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. இதில் நம்மையும், நாம் இருவரும் அழைத்து வந்திருக்கும் மெய்ப் பாதுகாவலர்களையும் தவிர வேறு யாருமில்லை என்பதை நீங்கள் உறுதிப் படுத்திக் கொண்டுவிட்டீர்களல்லவா?''என்று கேட்டான் ஆஜாத்சத்ரு.

''என்னுடன் வந்திருப்பவர் மெய்ப்பாதுகாவலர் அல்ல, எனது மந்திரி சர்வார்த்தர்'' என்று ஆஷா கூறிய பொழுது, ''ஓ! மந்திரி சர்வார்த்தர் என்பவர் இவர்தானா?'' என்று அர்த்தபுஷ்டியோடு ஒரு கேள்வியைப் போட்டான் ஆஜாத்சத்ரு. விஜயகேசரி மூலமாக எங்களுக்கு உளவு கூறுபவர், உங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கும் இதே சர்வார்த்தரென்று ஆஜாத்சத்ரு சொல்லிவிட்டால் தனது கதி என்ன ஆகும் என்பதை நினைத்த பொழுது சர்வார்த்தருக்கு நெஞ்சு அதி வேகமாக அடித்துக் கொண்டது. ''இவரை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?''என்று ஆஷா கேட்ட ஒரு கேள்வி அவருடைய பீதியை மேலும் அதிகரித்ததென்றே கூற வேண்டும்.

''தெரியாது! உங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் இவர்தானென்று விஜயகேசரி அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆயினும் நாம் இருவரும் மேல் தட்டுக்குப் போய்த் தனிமையில் பேசுவது நல்லதென்று நினைக்கிறேன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே?'' என்றான் ஆஜாத்சத்ரு.

அவனுக்குப் பதில் சொல்லாமல் அவள் மேல் தட்டுக்கு நடந்தாள். ஆஜாத்சத்ருவும் அவள் பின்னால் சென்றான்.

"ஆஷா! உங்களிடம் ஏதோ ஒரு பெரிய மாற்றத்தை நான் உணருகிறேன். ஆனால் அது என்ன மாற்றமென்பதைத் தான் என்னால் சொல்ல முடியவில்லை!" என்றான் மேல் தட்டை அடைந்தபிறகு ஆஜாத்சத்ரு.

"இப்பொழுது உங்களை நான் அச்சுறுத்தவில்லை; இல்லையா?" என்றாள் ஆஷா.

"என்னை எப்பொழுதுமே உங்கள் தோற்றம் அச்சுறுத்தியது கிடையாது. எந்த விதத்திலாவது உங்களிடம் எனக்கு அச்சம் இருந்ததென்றால்...!"

ஆஜாத்சத்ரு வார்த்தையை முடிப்பதற்குள், "சொல்லுங்கள் கேட்கிறேன். எந்த விதத்திலேனும் என்னிடம் உங்களுக்கு அச்சம் இருந்ததென்றால்... அது எந்த விதத்தில் என்பதை நானும் அறிந்து கொள்ளுகிறேன்..." என்றாள் ஆஷா.

"அவசியம் சொல்லத்தான் வேண்டுமென்றால் சொல்லுகிறேன். ஆனால் நாம் சொல்ல விரும்பும் விஷயம் இப்பொழுது நாம் சந்திக்கும் சூழ்நிலைக்குச் சிறிதும் பொருத்தமில்லை" என்றான் அவன்.

"பரவாயில்லை! எந்த வகையிலேனும் உங்களுக்கு என்னிடம் கொஞ்சம் பயம் இருந்ததென்றால் அதை நான் அறிவது நல்லதில்லையா?" என்று ஆஷா கேட்டபொழுது குறுகுறுத்த கருவிழிகளிலே குறும்புத்தனம் களிநடம் புரிந்தது.

"உங்கள் மயக்கும் விழிகளுக்கு நான் பலியாகக் கூடாதென்ற அச்சத்தைத் தவிர, வேறெந்த வகையிலும் உங்களிடம் நான் அஞ்சக் காரணம் இருந்ததில்லை. இந்த விஷயத்திலும் தெய்வம் எனக்குத் துணை நிற்குமென்ற தைரியம் எனக்கு உண்டு" என்றான் ஆஜன்.

ஆஷா இதற்கு உடனே பதில் சொல்லவில்லை. அவனைக் குளுமையாகப் பார்த்த வண்ணம் மௌனச் சிலையாக நின்றாள். "ஏன் மௌனமாகி விட்டீர்கள்? நான் சொன்ன

தில் தவறு ஏதுமில்லையே?'' என்று கேட்டபொழுது ''நான் ஒன்று கேட்கட்டுமா? என்னிடம் ஏதோ ஒரு மாதிரியான பயம் இருந்ததாகச் சொன்னீர்களே! அந்தப் பயம் இப்பொழுது தெளிந்துவிட்டதா அல்லது இன்ன மும் அது இருக்கத்தான் செய்கிறதா என்பதை நான் அறியலாமா?'' என்று கேட்டாள் ஆஷா. இதைக் கேட்ட பொழுது அவள் பார்த்த ஒரு பார்வை ஓராயிரம் விசுவா மித்திரர்களை அவளுக்கு அடி பணிந்து பூசை செய்யத் தூண்டும் அத்தனை சக்தி பெற்றதாயிருந்தது. ஆஜாத் சத்ருவின் நெஞ்சைப் பிளந்து அதற்குள் தன்னுடைய நினைவை எண்ணி யெண்ணி ஏங்கும் இடம் எங்கனும் ஒரு மூலையிலாவது இருக்கிறதா என்பதைத் துருவி ஆராய் வதைப் போலிருந்தது அவள் பார்வை.

சற்று முன் ஆஷாவை மௌனச் சிலையாக்கிய ஆஜன் இப்பொழுது அவள் எதிரில் தானே ஒரு மௌனச் சிலை யாகி நின்றான்.

ஆஷா கேட்ட கேள்வி, ஆஜாத்சத்ருவைக் குழப்ப மடையச் செய்தது என்னவோ உண்மை. மங்களகிரியின் விளிம்பிலுள்ள கானகத்தில் வேட்டையாடும் நெருக்க மான உடையில் ஆஷாவைச் சந்தித்த வினாடியிலிருந்து அவனுடைய இதயத்தில் அவள் ஒரு நிரந்தரமான இடம் பிடித்துக் கொண்டிருந்தாள். அவள் ஒரு அந்நியன் மனைவி என்ற காரணத்துக்காக அவளுடைய சௌந்தர்யத்தை அணு அணுவாக அலசி ஆராய்ந்து ரசித்த மனதை அவ னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவள் கணவனைப் படு கொலை செய்த பதித் துரோகி என்ற செய்தி எட்டிய பொழுது அவளிடம் அவனுக்குக் கடும் வெறுப்புத் தோன் றியது உண்மையே. அப்படி வெறுத்தபொழுதுங்கூட, ''கொள்ளை அழகை ஒன்று சேர்த்து ஒரு ஆஷாவைப் படைத்த கடவுள், அவளை இத்தனை கொடியவளாகவா படைக்க வேண்டும்?'' என்ற ஏக்கமும் அவனை ஆட்கொண் டிருந்தது. அடுத்தடுத்து தன்னை அவள் அவமதித்த சந் தர்ப்பங்களிலெல்லாம் அவளுடைய அகந்தையிலும் ஒரு

அழகைத்தான் அவன் கண்டு ரசித்தானேயன்றி ஆத்திர மடையவில்லை. தற்காலிகமாக ஏற்பட்ட சிறிதளவு கோபம் கூட அவளைப் பற்றிய சிந்தனையில் கரைந்து மறைந்து இடம் தெரியாது போய்விட்டது.

ஆஷாவின் அகந்தையை அடக்கிப் பணிய வைக்க வேண்டுமென்ற எண்ணம் முதல் முதலாக ஏற்பட்டது அங்கத்தையும், வங்கத்தையும் சுவீகரித்துக் கொண்டு புண்டரத்திலும் அவள் ஊடுருவத் திட்டமிட்டபிறகு தானென்று கூற வேண்டும். இந்த எண்ணம்கூட தற்பாதுகாப்பின் பொருட்டும், தன்மானம் பறிபோவதை முன்னிட்டும் ஏற்பட்டதென்றே கூற வேண்டும்.

அதே ஆஷா இன்று நேருக்கு நேராக நதியின் நடுவிலே, அலங்காரக் கப்பலிலே ஏகாந்தமாக ஆஜனுடன் நிற்கிருள். வேண்டுமென்றே சதி செய்வதைப்போல என்றைக்குமில்லாத ஒரு விசேஷ கவர்ச்சியோடு விளங்குகிருள். வழக்கமான அகந்தையும், கர்வமும் அழிந்துபோய் பெண்மை பூரணத்துவம் பெற்றுப் பூரித்து நிற்பதைப்போல மோகனப் புன்னகையுடன் சோபிக்கிருள். இப்படியானதொரு சூழ்நிலைமையிலே, ''என்னுடைய மயக்கும் விழிகளைப் பார்த்து இப்பொழுது நீங்கள் பயப்படவில்லையா? உங்கள் பயம் தெளிந்துவிட்டதா?'' என்று ஆஷா கேட்டபொழுது அவனுக்கு உடனே பதில் சொல்ல முடியாமல் ஆஜாத்சத்ரு தடுமாறியதில் என்ன ஆச்சரியம்?

ஆஜாத்சத்ரு முன்பு கேட்டதைப் போலவே, ''ஏன் மௌனியாகி விட்டீர்கள்? நான் கேட்டதில் தவறு ஒன்றுமில்லையே'' என்ருள் ஆஷா.

அப்பொழுதுதான் ஆஜாத்சத்ருவுக்கு சுய நினைவு திரும்பியது. ''என்ன கேட்டீர்கள்?'' என்று அவன் வினவியபொழுது, ''என்ன கேட்டேன் என்ற நினைப்பு இல்லாமலா மௌனச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தீர்கள்? விந்தையான மனிதராக இருக்கிறீர்கள்'' என்ருள் அவள். தன்னைப்

பற்றியே அவன் சிந்தனையிட்டுக் கொண்டிருப்பானென்று நினைத்த ஆஷாவுக்கு, அவன் பட்டுக்கொள்ளாமல் அளித்த பதில் பெரிய ஏமாற்றத்தை அளித்தது.

''என்னை விந்தை மனிதரென்று நீங்கள் வர்ணிப்பதே மிகப் பெரிய விந்தை ஆஷா. உங்களை விடவா நான் விந்தையானவன்? ஆஷா, உங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனிக்கும்பொழுது உங்களைப் போன்ற ஒரு விந்தையான பெண்ணை இவ்வுலகம் இதற்குமுன் பார்த்திருக்குமா என்பதையே சந்தேகிக்கிறேன். வடகிழக்குப் பாரதம் முழுவதிலும் இன்று இரத்த ஆறு ஓடச் செய்து கொந்தளிப்பை விளைவித்தது அழகுப் பதுமையாக நிற்கும் நீங்கள்தான் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. போகட்டும். நாம் எதைப் பற்றியோ பேசச் சந்தித்து, அர்த்தமின்றி ஏதேதோ பேசிக்கொண்டு போகிறோம். இதோ பாருங்கள் ஆஷா! நம் இருவருடைய பலப் பரிசோதனையும் பல லட்சம் மக்களின் உயிர்களைப் பழிவாங்கத்தான் வேண்டுமா? நமது தகராறை உயிர்ச்சேதமில்லாமல் சமரசமாகத் தீர்த்துக்கொள்ள முடியாதா?'' என்று கேட்டான் ஆஜன்.

''அழகாயிருக்கிறது உங்கள் கேள்வி! இதை ராஜகிருகத்திலிருந்துகொண்டு கேட்டிருக்க வேண்டும். படையெடுப்பு நடத்த சேனைகளோடு எல்லையில் வந்து இருந்துகொண்டு கேட்கவேண்டிய கேள்வியா இது?'' என்றாள் ஆஷா.

''தலைநகரிலிருந்துகொண்டு இதை நான் கேட்டால் மலயகிரியில் நீங்கள் சொல்லிய வார்த்தையையே திருப்பிச் சொல்லுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். மகதம் பேடிகள் நிறைந்த நாடு அல்ல என்பதைக் காட்டிக்கொண்டு சமரசத்துக்கு வழிதேடவே உங்களை அழைத்தேன். இந்தக் கடைசி நேரத்தில்கூட யுத்தத்தை நாம் தளர்த்த முடியும்'' என்றான் ஆஜன்.

"யுத்தத்தை தவிர்ப்பதில் எனக்கும் சந்தோஷம்தான் ஆனால் அது எங்கள் பலவீனத்தின் அறிகுறியல்ல. அங்கத்தையும், வங்கத்தையும் சுவீகரித்து புண்டரத்தில் பிரவேசித்திருக்கும் எங்கள் சேனைகளுக்கு மகதத்தைப் பற்றிய பயம் அறவே கிடையாது. இதை முதலில் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது" என்றாள் ஆஷா. இதைச் சொல்லுகையில் அவள் பழைய ஆஷாதேவியாக திடீரென்று மாறியதை ஆஜாத்சத்ரு கவனியாமலில்லை.

"ஆஷா நீங்கள் கனவுலகில் சஞ்சரிக்கிறீர்கள். இங்கு நாம் பேசிக் கொண்டிருக்கும் இதே சமயத்தில் அங்க, வங்கப் புண்டரப் போர்முனைகளில் பயங்கரமான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும். அம்மூன்று இடங்களிலுமுள்ள உங்கள் சைன்யங்களை இனி நீங்கள் திரும்பிப் பார்க்கப் போவதில்லை. இதை மறந்துவிடாதீர்கள். காலத்தைக் கடத்தாமல் என் சமரச யோசனைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள். உடனே நீங்கள் முடிதுறக்கத் தயாராயிருக்க வேண்டும். மங்களகிரியின் ராஜப் பிரதிநிதியாக உங்களை நியமிப்பது பற்றி நான் யோசிக்கத் தயாராயிருக்கிறேன். இதைக்கூட நான் ஒருவனாக முடிவுசெய்யக் கூடிய நிலைமையில் இப்பொழுது இல்லை. உங்கள் உயிரும், பல லட்சம் மக்களின் உயிரும் காப்பாற்றப்பட வேண்டுமானால் நீங்கள் முடிதுறப்பதற்குச் சம்மதித்தாக வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான் ஆஜன்.

"சரணாகதி அடையுமாறு கேட்பதைத்தான் சமரச உடன்பாடு என்று சொல்லுகிறீர்கள் போலிருக்கிறது? வரும்பொழுது நானும் சில சமரச யோசனைகளோடுதான் வந்தேன். ஆனால் உங்கள் யோசனைகளைக் கேட்டபிறகு, யுத்தம் செய்து பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு இப்பொழுது நான் வந்திருக்கிறேன்" என்றாள் ஆஷா.

"உங்கள் யோசனைகளையும் சொல்லுங்கள் கேட்கி றேன்'' என்றான் ஆஜன்.

''சொல்லிப் பிரயோசனமில்லை. அவைகளுக்கும், உங் கள் யோசனைகளுக்கும் வெகுதூரம்'' என்றாள் ஆஷா.

''நீங்கள் நினைப்பது தவறு. சமரசப் பேச்சுகளில் இப் படியான கட்டம் ஏற்படுவது சகஜம். ஒரு சமயம் உங்க ளுடைய யோசனைகளை நான் ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது'' என்றான் ஆஜன்.

''ஏற்றுக்கொள்ளும் நிலைமையில் நீங்கள் இருப்பதாக நான் நினைக்கவில்லை. என்னைக் கர்வபங்கம் செய்து எனது ராஜ்யத்தைச் சிதைக்க வேண்டுமென்ற ஒரே இலட்சியத் துடன் புறப்பட்டு வந்திருப்பவர் செவிகளில் என்னு டைய உருவான யோசனைகள் ஏறவே ஏறாது'' என்றாள் அவள்.

''எதற்கும் உங்கள் உள்திட்டங்களையும் சொல்லுங் கள் பார்க்கலாம்'' என்று ஆஜன் வற்புறுத்தவே ''மங்கள கிரியை மட்டுமல்ல; சமயத்தில் நாங்கள் ஜெயித்த மற்ற நாடுகளையும் மகதத்துடன் இணைத்துவிட நான் தயாராய் இருக்கிறேன். என்றைக்கும் நம்மிடையில் பிணக்குகள் ஏற்பட முடியாத ஒரு புதிய உறவு நமக்குள் ஏற்படவேண் டும்'' என்றாள் ஆஷா.

''அப்படியென்றால்'' என்று ஆஜன் கேட்கவும், ''என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்க ளுக்குப் பொருத்தமான மனைவி இவ்வையகத்தில் என்னைத் தவிர வேறுயாரும் இருக்க முடியாது. என்னை மணந்து, என் மகனை மகதத்தின் அடுத்த சக்கரவர்த்தியாவா னென்று பிரதிக்ஞை செய்துகொடுக்க நீங்கள் தயாராய் இருந்தால் பிறகு யுத்தத்திற்கும் இடமில்லாமல் போய் விடும். இதில் உங்கள் இலட்சியமும் நிறைவேறும். ஏங்கும் என் மனமும் திருப்தியடையும். மகதத்தின் செல்வமும் சிறப்பும் வளர்ந்தோங்கும். இம்மட்டோ? நாம் இருவரும்

சேர்ந்தால் இந்த மண்டலம் முழுவதையுமே ஜெயித்து விடலாம். இருவருடைய நன்மைக்கும் உகந்த யோசனை இது ஒன்றுதான். என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டாள் ஆஷா.

''என்னை மணந்துகொள். நீயும் வாழ்வாய், நானும் வாழ்வேன், இருவரும் சேர்ந்தால் 'இவ்வையகமே நம் காலடியில் கிடக்கும்'' என்று பொருள்படும் முறையில் ஆஷா சொல்லிய பொழுது ஆஜாத்சத்ரு வாய்விட்டுச் சிரித்தான்.

''இந்தச் சிரிப்பின் பொருள்'' என்று வினவினாள் ஆஷா. பொருளைப் புரிந்து கொண்டதைப் போல அவளுடைய கண்கள் குப்பென்று சிவந்து போயிருந்தன.

''ஆஷா! நான் மலயத்வஜன் இல்லை. உன் மோகனப் புன்னகையிலும், இனிய பேச்சுகளிலும் மயங்கி உயிரை உன்னிடம் பணயம் வைக்க! கணவனைப் படுகொலை செய்த பெண், மகதப் பேரரசன் தர்ம பத்தினியென்று வருங்காலச் சரித்திரம் வர்ணிப்பதற்கு ஒரு போதும் நான் சம்மதிக்கமாட்டேன். உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்குச் சபலம் தட்டுவது என்னவோ உண்மைதான். உன்னை நினைத்து இரவு பகலாக பல வாரங்கள் என் மனம் ஏங்கியதையும் வெட்கமின்றி நான் ஒப்புக்கொள்கிறேன். உணர்ச்சிகளுக்கு வசப்பட்டுத் தடுமாறும் அந்த ஆஜாத்சத்ரு வேறு. மகதப் பேரரசன் ஆஜாத்சத்ரு வேறு. எனது அந்தப்புரத்தில் எனது இனியவளாக நீ இருக்க முடியுமே தவிர மகத சிம்மாசனத்தை நீ நெருங்கவும் முடியாது'' என்றான் ஆஜன்.

இப்பொழுது ஆஷா நாணத்தை மறந்து வாய்விட்டுச் சிரித்தாள்.

''தகப்பனைக் கொன்று அரசைக் கைப்பற்றிய பித்ருத் துரோகி, என்னைப் பதித்துரோகி என்று வர்ணிப்பது புதுமையிலும் புதுமை. என் கணவரைப் படுகொலை செய்தது

யார் என்பதை கூடிய சீக்கிரம் உலகம் அறியத்தான் போகிறது. இப்பொழுது யார் என்ன சொல்லுகிருர்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலேயில்லே. ஆனுல் ஒன்று சொல்லுகிறேன். உங்கள் தகப்பனே நீங்கள் படுகொலே செய்தது எவ்வளவு உண்மையோ, அதைப் போன்றது தான் என் கணவரை நான் படுகொலே செய்ததாகக் கூறு வதும். உங்களுடைய தாசியாக ராஜகிருக அந்தப்புரத் தில் என்னே வைத்து ரட்சிப்பதாக நீங்கள் சொல்லுகிறீர் கள். உங்களுடைய இந்தத் துணிச்சலே நான் பாராட்டு கிறேன், ஆஷாவிடம் இப்படிப் பேச தைரியத்தை வர வழைத்துக் கொள்ளுவதற்கு உங்களால் முடிந்ததே, அதுவே பெரிய காரியம். உங்களுடைய அந்தப்புரத்தில் நான் தாசியாக இருப்பதா, அல்லது என்னுடைய அந் தப்புரத்தில் நீங்கள் ஒரு ஏவலாளராக இருக்கப் பிறந் திருக்கிறீர்களா என்பதை யுத்தம் தீர்மானிக்கட்டும். ஆஷாவை இன்னும் சரிவர நீங்கள் புரிந்து கொள்ளாத தற்கு அனுதாபப்படுகிறேன். விட்டில் பூச்சி விரும்பி நெருப்பில் விழுவதைப் போல உங்கள் கதை முடியவேண் டும் என்பது உங்களுடைய தலேவிதியானுல் அதை நான் எப்படித் தடுக்க முடியும்? நான் வருகிறேன். போர்முனே யில் மறுபடி சந்திப்போம்'' என்று சொல்லிய ஆஷா, கைலேஞ்சியை எடுப்பது போல தனது சட்டைக்குள் வலது கையை விட்டாள். ஆஜனுக்கு என்ன தோன்றி யதோ தெரியவில்லே. இதுவரை எட்டி நின்று கொண்டு பேசியவன் ஒரு பாய்ச்சலாகப் பாய்ந்து ஆஷாவின் இரு கரங்களேயும் உறுதியாகப் பற்றிக் கொண்டான். இதற் கிடையில் அவள் சட்டைக்குள்ளிருந்து வெளியிலெடுத்த கைலேஞ்சு கீழேவிழ அதற்குள்ளேயிருந்து பளபளவென்று பிரகாசிக்கும் ஒரு ஊசியும் விழுந்தது.

''சீச்சீ! இவ்வளவுதானு? நீங்கள் சட்டைக்குள் ஏதா வது ஆயுதத்தை மறைத்து வைத்துக் கொண்டு வந்திருப் பீர்கள் என்றல்லவா சந்தேகித்தேன்'' என்று சொல்லி அவளுடைய கரங்களேவிட்ட ஆஜன், கீழே விழுந்த

ஊசியை எடுக்கப் போனான். அப்பொழுது "ஐயய்யோ அதைத் தொடாதீர்கள்! தொடாதீர்கள்!!" என்று கத்தினாள் ஆஷா.

ஊசியை எடுப்பதற்குக் குனிந்தவன் அதை எடுக்காமல் நிமிர்ந்து ஆஷாவைக் கனிவாகப் பார்த்தான். பிறகு "இந்த ஊசியில் அப்படியென்ன இருக்கிறது?" என்று கேட்டான்.

"அதில் கொடிய நஞ்சு தடவியிருக்கிறது. அதைக் கையினால் தொடாமல் கைலேஞ்சியில் மறைத்து வைத்துக்கொண்டு உங்கள் மீது ஒரு சிறு கீறல் கீறினால் போதும். சில விநாடிகளில் இறந்துவிடுவீர்கள்" என்றாள் ஆஷா.

"அப்படி இருந்தும் என் மரணத்தை விரும்பும் நீ அந்த ஊசியைத் தொடாதபடி ஏன் என்னைத் தடுத்தாய்?" என்று விபரம் புரியாமல் கேட்டான் அவன்.

"நீங்கள் வழிக்கு வராவிட்டால் உங்களைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டுமென்பதற்காகவே இதைக் கையில் கொண்டு வந்தேன். சில விநாடிகளுக்கு முன்னால் அதை என் சட்டைக்குள்ளிருந்து வெளியில் எடுத்த பொழுது கூட உங்கள் கண்களிலிருந்து கெஞ்சுவதைப் போலப் பாவனை செய்து உங்கள் உடலில் கொடிய நஞ்சைப் பாய்ச்சுவிட வேண்டுமென்றுதான் திட்டமிட்டேன். ஆனால் வலுவில் நீங்களாக மரணத்தைத் தழுவ இருந்ததை ஏன் நான் தடைசெய்தேன் என்பது எனக்கே தெரியவில்லை. என் அந்தராத்மா என்னை அறியாமலே அலறியிருக்கிறது. என் வீரத்திற்குக் களங்கம் ஏற்பட்டுவிடாதபடி கடவுள் தான் கடைசி நேரத்தில் என்னைக் காப்பாற்றியிருக்கிறார். வாழ்ந்தால் நாம் கணவன் மனைவியாக வாழ வேண்டும், இல்லாவிட்டால் இருவரில் ஒருவர் வீரமரணம் அடைய வேண்டும். இரண்டும் எனக்கு இன்பம் தருபவைகளே. கோழைத்தனமாக வஞ்சகமாக உங்களுக்கு முடிவு கட்டி விட எண்ணிய என்னை என் அந்தராத்மாதான் இப்

பொழுது தடைசெய்திருக்கிறது. இனி இம்மாதிரியான கோழைத்தனத்திற்கு ஆஷா இடமளிக்கமாட்டாள். சாத்தான்களைப் போலச் சாரிசாரியாக எனது படைகள் பாய்ந்து வந்து மகதப் படைகளை ரத்த விளாருக அடிப்பதைக் காண விரும்புகிறீர்கள். இந்தக் காட்சியை நீங்கள் நிச்சயம் காண முடியுமென்று உறுதிகூறுகிறேன்'' என்று சொல்லிய ஆஷா, கீழே குனிந்து கைலேஞ்சியினல் நஞ்சு தடவிய ஊசியை எடுத்து ஓடும் நதியிலே வீசியெறிந்தாள். பிறகு திரும்பிக்கூடப் பார்க்காமல் மளமளவென்று கீழ்த்தட்டை நோக்கி நடந்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஆஷாவும், சர்வார்த்தரும் அவர்களுடைய படகில் ஏறி கரையை நோக்கிச் செல்லுவதை மேல்தட்டிலிருந்து இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ஆஜன். யுத்தத்திற்குச் சுலபமாக முடிவு கட்ட ஒரு அருமையான வாய்ப்பு இருந்தும் அதை இழந்து போர்முனையில் சந்திப்பதாக ஆஷா சொல்லிவிட்டுப் போனது ஆஜனுக்கு ஒரு கனவு போலிருந்தது. காதல் ஏமாற்றத்தில் கொடிய அரக்கிகளாகப் பெண்கள் மாறியதைப் பற்றிக் கதைகளிலும் காவியங்களிலும் படித்துள்ள ஆஜனுக்கு ஆஷாவின் போக்கு அதிசயத்திலும் பெரிய அதிசயமாயிருந்தது. ஆஷா மறுகரையை அடைந்து சர்வார்த்தருடன் குதிரையில் ஏறித் தலைமறையும் வரை ஆஜாத்சத்ரு நதியின் தென்கரை மீது வைத்த கண்களை எடுக்கவில்லை.

யுத்தத்தைத் தவிர்க்க வேறு வழியில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே ஆஜாத்சத்ரு ஆஷாவை தனிமையில் சந்தித்துப் பேசவிரும்பினன். சேதி யுத்தம் நின்றுவிட்டதும் பலமுனைத் தாக்குதல்களுக்கு மகதம் ஏற்பாடு செய்திருப்பதும், ஆஷாவின் மன உறுதியையும் பேராசையையும் தகர்த்திருக்குமென்று அவன் எதிர்பார்த்தான். சோதனைகள் சூழ்ந்த இந்த நேரத்தில் கூட அவன் வணங்காமுடியாகப் போர்முனையில் மறுபடி

சந்திப்போமென்று சொல்லிவிட்டுப் போனது அவனுக்கு ஓரளவு ஏமாற்றத்தை உண்டுபண்ணியது என்னவோ உண்மைதான். ஆயினும் அவள் சரணாகதி அடைய மறுத்தது மட்டுமல்லாமல் கோழைத்தனமாகக் கொல்ல நினைத்ததையும் கைவிட்டுப் போர் முனையில் சந்திப்பதாகச் சொல்லியது ஆஜாத்சத்ருவுக்கு உள்ளூர திருப்தியைத் தருவதைப் போலிருந்தது.

யுத்தம் என்று தீர்ந்துவிட்டவுடன் ஆஜாத்சத்ரு படைகளை வேகமாகப் பின் வாங்கச் செய்தான். அந்த இடத்தில் சரயூ நதியைக் கடந்து மங்களகிரியில் பிரவேசிப்பதை விட வடக்கே பின் வாங்கிச் சென்று சமணபுரியின் வழியாக மங்களகிரி படையெடுப்பை நடத்துவது தான் உசிதமென்று அவன் நினைத்தான். அதோடு தாங்கள் பின் வாங்குவதை எதிர்க்கரையில் இருப்பவர்கள் பார்த்து ஏமாந்து போவார்களென்றும் அதே சமயம் சமணபுரி வழியாகப் படையெடுப்புக்கு ஏற்பாடு செய்தால் சுலபமாக மங்களகிரியைத் தாக்கலாமென்றும் அவன் எண்ணினான்.

இந்தத் திட்டத்தின்படி மகதப் படைகள் சமணபுரியை அடைந்து அங்கிருந்து பாலைவனப் பிரதேசத்தைக் கடந்து மங்களகிரியை அடைய மூன்று தினங்கள் பிடித்தன. எந்த மணல் மேட்டின் மீதிருந்து கொண்டு மங்களகிரியை முதன் முதலாக ஆஜாத்சத்ரு பார்த்தானோ அதே மணல்மேட்டிலிருந்து கொண்டு இப்பொழுது அவன் மீண்டும் பார்த்த பொழுது கானக விளிம்புப் பிரதேசத்தில் ஜனநடமாட்டமேயில்லை. அம்மட்டல்ல. படைகள் தலைநகரான மங்களகிரியில் பிரவேசித்த பொழுதும் அவைகளுக்கு அங்கு எதிர்ப்பு சிறிதுகூட இல்லாதது அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. போர் முனையில் சந்திப்பதாகச் சொல்லிவிட்டுப் போன ஆஷா இவ்வளவு சுலபமாகத் தலைநகரைச் சரணடையச் செய்தது மிகப்பெரிய புதிராக இருந்தது. இதே சமயம் இதில் ஏதோ பெரிய சூது இருக்கவேண்டுமென்பதையும் அவனுடைய அந்தராத்மா கடுமையாக எச்சரித்துக் கொண்டிருந்தது.

தலைநகரில் புலன் விசாரித்த பொழுதுதான் அவனுக்குப் பல உண்மைகள் வெளியாயின. சமநிலப் பிரதேசமான மங்களகிரியைப் பாதுகாப்பது கடினமென்று எண்ணிய ஆஷா தெற்கே தவளகிரிக்குப் போய்விட்டதாயும் தவளகிரி பலமிக்க அரண்கள் சூழ்ந்த நகரமென்பதோடு அந்த அரண்களில் எத்தனையோ ரகசிய ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருப்பதாயும் ஆஜாத்சத்ரு கேள்விப்பட்டபின், தவளகிரியைச் சூழ்ந்துள்ள அரண்களை கிட்ட நெருங்குவதே ஆபத்தென்றும், பல்லாண்டுகளாகப் பிரயாசைப்பட்டு அதன் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாயும் விசாரித்ததில் தெரிந்தது.

''ஆஷாவின் படைகள் கிழக்குப் போர்முனையில் சிதறியிருக்கின்றன. நாட்டில் அதிகப் படைகள் இல்லை. இருப்பவர்களை வைத்துக்கொண்டு நேரடியான யுத்தத்தில் ஈடுபட முடியாதென்பது அவளுக்குத் தெரியும். ஆகையால் தான் தவளகிரி அரணுக்குள் பதுங்கிக் கொண்டு போராடத் திட்டமிட்டிருக்கிறுள். தவளகிரியை நாம் சுற்றி வளைத்து முற்றுகையிட்டால் நீண்டகாலத்திற்கு அவளால் நின்றுபிடிக்க முடியாது'' என்று ஆஜாத்சத்ருவுக்கு அவனுடைய தளபதிகள் யோசனை சொன்னுர்கள்.

''முற்றுகை போட்டுப் பல மாதங்கள் காத்துக்கிடக்கவா சொல்லுகிறீர்கள்? முடியாது! தவளகிரியில் ஆஷா என்ன ரகசிய ஆயுதங்கள் வைத்திருக்கிறுள் என்பதை பார்த்துவிடுவோம். அரணை நாம் தாக்கியே தீரவேண்டும். தவளகிரியை நோக்கிப் படைகள் முன்னேறட்டும்'' என்று உத்தரவிட்டான் ஆஜாத்சத்ரு.

அவன் சுலபமாக உத்தரவிட்டானே தவிர, அந்த உத்தரவை நிறைவேற்றுவது கடினமென்பதை தவளகிரியை நெருங்கிய பொழுதுதான் அவனுல் அறிய முடிந்தது. தவளகிரி ஒரு கோட்டை நகரம். அதன் நாற்புறங்களிலும் ஆழமானதும், அகலமானதுமான அகழிகளும், அகழிகளை அடுத்து பனைமர உயரத்திற்கு கருங்கல்லின்

லான மதிற்சுவருமிருந்தன. அகழிகளைக் கடப்பதோ அல்லது அதைத் தாண்டியிருக்கும் மதிற் சுவர்களைத் தகர்ப்பதோ இலேசான காரியமல்லவென்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அதுமட்டுமல்ல, அகழியைக் கூட நெருங்க முடியாதவாறு கோட்டைக்கு உள்ளிருந்து சரமாரியாக அம்புகளும், ஈட்டிகளும் எப்படி வருகின்றன என்று தெரியாமல் பாய்ந்து வந்து கொண்டிருந்தன. உருக்கிய ஈயம், பீச்சாங்குழல் கொண்டு மதில்மீதிருந்து பீச்சப்பட்டு மகதசேனையின் முன்னணிப் படைகளிலிருந்த பலர் வெந்து மாண்டார்கள். இன்னும் சில இடங்களிலே தீப்பந்தங்கள் திடீர் திடீரென்று வந்து விழுந்தன. இந்நிலைமையில் கோட்டைக்குள் உணவுப் பொருள்கள் செல்லவிடாமல் முற்றுகையிட்டுக் கொண்டிருப்பதைத் தவிர மகதப் படைகளுக்கு வேறு வழியொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. பல போர்முனைகளை அனுபவத்தில் பார்த்திருந்த ஆஜாத்சத்ருவுக்கு இந்தப் போர்முனை ஒரு சவால் விடுப்பதைப் போல அமைந்திருந்தது.

ஒருமாத காலம் இப்படியே ஓடி மறைந்தது. யுத்தப் போக்கில் எவ்விதமான மாற்றத்தையும் காணோம். அங்க வங்கப் போர்முனைகளிலிருந்து தனது படைகள் திரும்பி விடுமென்று ஆஷா காத்திருக்கவேண்டுமென்று ஆஜாத்சத்ரு நினைத்தான். ஆனால் அதற்கிடையில் அங்கம், வங்கம், புண்டரம் ஆகிய மூன்று இடங்களிலும் யுத்தம்வெற்றிகரமாக முடிந்து ஆஷாவின் படைகள் சிறைப்படுத்தப்பட்டு விட்டதாகச் செய்தி கிடைத்தது. இந்தச் செய்தி எப்படியாவது கோட்டைக்குள் எட்டினால் இன்று நின்றுபிடிப்பதில் பயனில்லை என்று தீர்மானித்து ஆஷா சரணடைந்து விடலாமென்று ஆஜாத்சத்ரு எண்ணமிட்டான். ஆனால் அவனுக்குப் போர்முனைச் செய்திகள் எட்ட வழி ஏது?

ஒருநாள் காலை ஆஜாத்சத்ரு கவலையுடன் தனது பாசறையில் அமர்ந்திருக்கையில், அநுருத்தர் முகமலர்ச்சியோடு அங்கு வந்தார்.

"உங்களைப் பார்த்தால் ஏதோ நல்ல செய்தியோடு வந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அதே சமயம் எந்தவிதமான நல்ல செய்திகள் கிடைக்கவும் வழியிருப்பதாகவும் தோன்றவில்லை. மற்றப் போர்முனைகளிலெல்லாம் யுத்தம் நின்று நாம் மட்டும் இங்கு செய்வதறியாமல் திணறிக் கொண்டு கிடக்கிறோம்" என்றான் ஆஜாத்சத்ரு.

"இல்லை சக்கரவர்த்தி! கோட்டைக்குள் இன்னும் சில விநாடிகளில் நாம் நுழையப் போகிறோம். அந்த சந்தோஷச் செய்தியைச் சொல்லவே வந்திருக்கிறேன்" என்று அனுருத்தர் சொல்லியபொழுது, "கோட்டைக்குள் நுழைவதா? அதெப்படி முடியும்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ஆஜாத்சத்ரு. அதேசமயம் அவர்களுக்கு சற்று தூரத்திற்கு அப்பால் ஒரு பேரிரைச்சல் கேட்டது. இப்பொழுது ஆஜாத்சத்ருவைப் போலவே அனுருத்தரும் திகைத்துப் போனார். தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்துவிட்டதைப் போல அவருக்குத் தோன்றியது. இருவரும் பாசறைக்கு வெளியே ஓடிவந்து எட்டிப் பார்த்தார்கள்.

உண்மையில் அனுருத்தர் நினைத்தது ஒன்று. நடந்தது வேறொன்று. அகழியையும் மதில் சுவர்களையும் தாண்டி தவளகிரிக்குள் பிரவேசிப்பது அசாத்தியமென்பதை அறிந்த மாத்திரத்தில் அவர் வேகமாகச் சிந்திக்கத் தலைப்பட்டிருந்தார். அகழிக்கும் கீழாக ஒரு சுரங்கப் பாதையை அமைத்து தவளகிரிக்குள் நுழைவதைத் தவிர வேறு வழியிருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை.

சுரங்க வழியை அமைப்பதுதான் ஒரே மார்க்கம் என்ற முடிவுக்கு வந்ததும் அவர் அந்த வேலையில் முழு மூச்சுடன் ஈடுபட ஆரம்பித்தார். தங்களுடைய பாசறையிலிருந்து தவளகிரிக்குள் ஒரு மறைவான இடம் வரை சுரங்கத்தைத் தோண்டி முடிக்க ஒருமாதகாலம் பிடித்தது. சுரங்கம் தயாராகியதும் அந்த சந்தோஷச் செய்தியைத்

தெரிவிக்க ஆஜாத்சத்ருவிடம் வந்த பொழுதுதான், அவர் முற்றிலும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

பேரிரைச்சலைக் கேட்டு அவர்கள் வெளியே வந்து பார்த்தபொழுது இரும்புச் சங்கிலிகளினால் பிணைக்கப் பட்ட மரப் பாலங்கள் அகழியின்மீது மெதுவாக இறங் கிக் கொண்டிருந்தன!

"அகழிமீது பாலம் போட்டு வழி விடுவதின் நோக்கம் என்ன? ஆஷாவின் படைகள் கோட்டைக்கு வெளியில் வந்து தாக்கப் போகின்றனவா?" என்றான் ஆஜாத்சத்ரு.

"நான் அப்படி நினைக்கவில்லை. யுத்தம் நடத்தும் அள வுக்கு உள்ளே படைகள் இருக்க முடியாது. பாலங்களைத் தொங்க விட்டதும் சரணாகதி அடைந்துவிட்டதாக எண்ணி நமது படைகள் அகழியை நெருங்குமென்றும் அப்பொழுது கோட்டைக்கு மேலிருந்து சுலபமாகத் தாக் குதல் நடத்தலாமென்றும் ஆஷா திட்டமிட்டிருக்கிறா ளென்று நினைக்கிறேன். எதற்கும் நாம் நேரடியாகக் கோட் டைக்குள் போவது விவேகமில்லை. உள்ளே செல்ல சுரங் கப் பாதையை அமைத்துமுடித்திருக்கிறேன். அதன்வழியாக உள்ளே நுழைவோம்" என்றார் அனுருத்தர்.

அவர் இதைச் சொல்லிக் கொண்டிருக்கையில் மதிற் சுவர்கள்மீது நூற்றுக் கணக்கான வீரர்கள் தோன்றி ஆயுதங்களை அகழிக்குள் விட்டெறிந்தார்கள். பிறகு, தாங் கள் நிராயுதபாணிகள் என்பதைக் காட்ட இரண்டு கைகளையும் உயரே தூக்கிக் காட்டினார்கள்.

"ஆஷா யுத்தம் செய்யும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டாள். இதில் சந்தேகமே இல்லை" என்று அனுருத்தரே இப்பொழுது சொல்லத் தொடங்கினார்.

"எனக்கு என்னவோ ஆஷா இத்தனை சுலபமாக சரணாகதி அடைவாளென்பதை நம்ப முடியாமலிருக்கிறது. எதற்கும் ஒரு பகுதிப் படைகளை அனுப்பிப் பார்ப்போம்" என்றான் ஆஜாத்சத்ரு.

அதன்படியே மகத முன்னணிப் படையொன்று பாலத்தின் வழியாக உள்ளே அனுப்பப் பட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் மகத வீரர்கள் கோட்டைக்கு மேல் ஏறி 'அபாயமில்லை!' என்று சமிக்ஞை கொடுக்கவும், ஆஜாத்சத்ருவும், அனுருத்தரும், இன்னொரு பகுதிப் படையினரும் கோட்டைக்குள் நுழைந்தார்கள். அவர்கள் தலைவாசலில் முதல் முதலாகச் சந்தித்தது சுமித்திரையைத்தான்.

ஆஜாத்சத்ருவைக் கண்டதும் சுமித்திரை அவனருகில் வந்து ஒரு ஓலையைக் கொடுத்தாள்.

''எங்கள் ராணி ஆஷாதேவியார் இப்பொழுது மங்களகிரி ராஜ்யத்தில் இல்லை. நேற்றுக் காலையே அவர் நாட்டிலிருந்து வெளியேறிவிட்டார். இந்தச் செய்தியை நீங்கள் படிக்கும்பொழுது அவர் மகாநதியைத் தாண்டி கலிங்கத்தில் பிரவேசித்திருப்பார். அவருடைய உத்தரவின் படியே எங்களுடைய படைகள் யுத்தத்துக்கு ஒரு முடிவு கட்டுகின்றன. இதோ தங்களிடம் எங்கள் ராணியார் கொடுக்கச் சொல்லிய ஓலை'' என்று சொல்லி சுமித்திரை அந்த ஓலையைக் கொடுத்தாள். அதில் ஆஷா, பின்வருமாறு சுருக்கமாக எழுதியிருந்தாள்......

''எல்லாப் போர்முனைகளிலும் எனது படைகள் சிறைப்பட்டு விட்ட செய்தி கிடைத்தது முதல் தவளகிரியில் நின்று பிடிப்பதிலே அர்த்தமில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். வெளியிலிருந்து அவ்வப்போது எனக்குத் தகவல் கிடைக்க ஒரு சுரங்கப் பாதை இருக்கிறது. அதற்குப் போட்டியாகத் தவளகிரியில் பிரவேசிக்க நீங்களும் ஒரு சுரங்க வழியை கிட்டத் தட்ட அமைத்து முடித்துவிட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். இருபதினாயிரம் மகத வீரர்களுடன் ஐநூறு பேர்களை வைத்துக் கொண்டு நான் போர் புரிவதில் பயனில்லை. ஆகையால் தக்க முறையில் மீண்டும் உங்களைச் சந்திக்க முடியுமென்ற நம்பிக்கையோடு நான் வெளியேறுகிறேன். ஆஷா தோற்று ஓடவில்லை

அவளை யுத்தத்தில் நீங்கள் ஜயிக்கவில்லை. சாதகமான வேறு ஒரு சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டே ஆஷா யுத்தத்தை ஒத்தி வைத்திருக்கிறாள். இதை மட்டும் மறந்துவிடாதீர்கள். வருகிறேன்.''

ஆஷா.

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும், ''இதை நான் எதிர்பார்த்தேன். சரணாகதி அடைந்தால் அவள் ஆஷா அல்ல! அகண்ட மகத சாம்ராஜ்யத்தைக் கட்டி யெழுப்ப மீண்டும் நாம் திக்கு விஜயத்துக்கு கிளம்பும் பொழுது ஆஷாவை மறுபடி கலிங்கத்திலோ அல்லது ஆந்திரத்திலோ சந்திக்க நேரிடலாம். அனுருத்தரே! மங்களகிரி சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்ததைக் காட்டிலும் ஆஷா உயிரோடு தப்பித்து விட்டதுதான் எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. யுத்தம் செய்து போரில் அவள் இறந்திருந்தால் பேரழகியான ஒரு வீராங்கனை மடிந்துவிட்டாளே என்ற ஏக்கம் என்னை என் உயிருள்ளவரையில் வதைத்துக்கொண்டேயிருக்கும். அந்த ஏக்கம் என் மனதைவிட்டு ஒருபோதும் அகலாது. இப்பொழுது அவள் உயிருடன் இருக்கிறாள். மீண்டும் போர்முனையில் அவளைச் சந்திக்கலாமென்ற எண்ணமே என்னுடைய திக்கு விஜயங்களுக்கும் வெற்றிகளுக்கும் அடிகோலுவதாக இருக்கும். தோல்வி லும் வெற்றி கண்டவள் ஆஷா. எவருக்கும் சிரம் வணங்காத அந்த எழிலரசி நீடூழி வாழட்டும். அவளை எந்தப் போர்முனையிலும் எதிர் பாராதவிதமாகச் சந்திக்க முடியுமென்ற எண்ணம் எனது வருங்கால யுத்தத் திட்டங்களுக்கெல்லாம் தூண்டுகோலாக அமையட்டும். வாழ்க ஆஷா!'' என்று கோஷித்தான் அஜாதசத்ரு.

எதிரியையும் அவன் வாயார வாழ்த்துவதைக் கேட்டு ஒன்றும் புரியாமல் எல்லா வீரர்களும் ஒரே குரலில்,

''வாழ்க ஆஷா! வாழ்க ஆஷா!''என்று பூமியும் வானமு அதிரும்படியாக வாழ்த்தொலி செய்தார்கள்.

(முற்றும்)

(குறிப்பு: ஆஜாத்சத்ருவின் வாழ்க்கையின் ஒரு பகுதி சித்தரிக்கும் 'ஆஷா' சரித்திர நவீனம் இத்துடன் முடிகிற ஆஷா இதன் பிறகு என்ன ஆனுள்? ஆஜாத்சத்ருவின் ஆட் யில் மகதப் பேரரசு வடக்கே இந்திரப் பிரஸ்தத்திலி தெற்கே மகாநதி தீரம் வரையில் எப்படி விஸ்தரி ஆஷாவை ஆஜாத்சத்ரு மீண்டும் சந்தித்தாளு? உறவு கொண்ட கோசலத்தையே ஆஜாத்சத்ரு ஏன், படி ஆக்கிரமித்துக் கொண்டான்? இவை போன்ற கேள்விகளுக்கு வாசக நேயர்கள் விடையறிய விரும்புவ இயற்கை. இன்னொரு சந்தர்ப்பத்தில் ஆஜாத்சத்ரு வா கையின் பிற்பகுதியை ஆராய்வோம்.)

★

கிருஷ்ணை பட பச